# PARAMESHVARA COLLEGE CENTENARY SOUVENIR

## பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர்





**Parameshvara College**
**Thirunelveli, Jaffna - 2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் Foundation.

# பரமேஸ்வராக் கல்லூரி
# நூற்றாண்டு விழா மலர்

**Parameshvara College Centenary Souvenir**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரி
# நூற்றாண்டு விழா மலர்

## Parameshvara College Centenary Souvenir

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை

**Parameshvara College Old Boy's Association - Colombo**

**2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர் |
| வெளியீடு | : | பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை |
| பதிப்பு | : | 2022 |
| அச்சு | : | குமரன் அச்சகம்<br>39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6 |

| | | |
|---|---|---|
| Title | : | Parameshvara College Centenary Souvenir |
| Published by | : | Parameshvara College Old Boy's Association - Colombo |
| Year of Publication | : | 2022 |
| Printed by | : | Kumaran Press (Pvt) Ltd.<br>39, 36th Lane, Colombo - 6 |

ISBN 978-624-6289-00-3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பரமேஸ்வராக் கல்லூரிக் கீதம்

திருவள ரறிவின் திருந்தொளி நிரம்புந்
திறலின் செயலினன் எனவே
தருபுகழ் ராமநாதனின் தவத்தால்
தண்தமிழ் ஆங்கிலம் முதலாய்
வருமொழி பலவும் சிவநெறி மரபும்
வழிவழி நிலவியே மலரப்
பரவிடும் அருளால் திசைமுழுதாளும்
பரமேஸ்வரமெனப் பணிவோம்

- வித்துவான் வேந்தனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி லீலாவதி இராமநாதன் (மனைவி) திருவாளர் சேர். பொன். இராமநாதன் திருமதி சிவகாமசுந்தரி நடேசபிள்ளை (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


**ஆசிச் செய்திகள்**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் 1

சிறீ துர்க்காதேவி தேவஸ்தானம் 2

சிறீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம் 4

பரமேஸ்வரா ஆலய நிர்வாக சபை 6

**வாழ்த்துச் செய்திகள்**

திரு. த.பேரின்பநாயகம், ப.மா.ச.கொழும்பு, தலைவர் 7

பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம் 9

பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம் 12

திருமதி அம்பிகை சிவஞானம், அதிபர் இராமநாதன் கல்லூரி 13

வட மாகாண ஆளுநர் திரு ஜீவன் தியாகராஜா 15

யாழ் அரச அதிபர் திரு மகேசன் 16

யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.முத்து இராதாகிருஷ்ணன் 18

பதிப்பாளர் பதிவோசை - ப.மா.ச.கொழும்பு 19

நூற்றாண்டு விழா மலர்க் குழு அங்கத்தவர்களின் அறிமுகம் 21

செயலாளரின் செயலோசை - திரு.ச.சிவலோகநாதன் 26

பொருளாளரின் நிதியோசை - திரு. த.மஹாலிங்க ஐயர் 28

மலர்க்குழு ஒருங்கிணைப்பாளரின் இதயவோசை - இளஞ்சேய் வேந்தனார் 31

**கட்டுரைகள் - கல்லூரி வரலாறு**

நூற்றாண்டு காணும் திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரி 39
- *கலாநிதி ஆறு திருமுருகன்*

பரமேஸ்வராக் கல்லூரி 46
- *பல்கலைப் புலவர் மூதறிஞர் க.சி.குலரத்தினம்*

மறைந்தும், மங்காத புகழுடன்.... 58
- *கலாநிதி மைதிலி விசாகரூபன்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பரமேஸ்வராக் கல்லூரி அமைக்கப்படின்
தொடர்ச்சியும் பேணமுடியும்... 62
- *பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை*

Legislative Council Debates 64
- *(Speech by Sir Pon.Ramanathan)*

Sir Ponnambalam Ramanathan Efforts to.... 73
- *Ramanathans Mission to England Compiled by Mr.T.Perinbanayagam*

***Photo of Sir Pon Ramanathan Drawn by Leaders on Horse Carriage*** 80

பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு ஒரு வரலாற்றுக் குறிப்பு 81
- *திரு.ச.சிவலோகநாதன்*

பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழா நிகழ்வுகள் 83
- *திரு.ச.சிவலோகநாதன்*

**கட்டுரைகள் - தாபகர் இராமநாதன்**

தன்னலங் கருதாத தகைசால் வள்ளல் 89
- *பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்*

இளைய தலைமுறையும் சேர். பொன் இராமநாதனும் 92
- *திருமதி. செல்வநாயகி ஸ்ரீதாஸ்*

ஆன்மீகவாதியான அரசியல்வாதி 99
- *கலாநிதி செ. திருநாவுக்கரசு*

Sir.P.Ramanathan – The Colossus 106
- *Compiled by Dr.Krishnaanandasivam*

பெருமாட்டி லீலாவதி இராமநாதன் 108
- *பேராசிரியர் ப. சந்திரசேகரன்*

பொன். இராமநாதன் 110
- *வித்துவான் வேந்தனார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரப் பதிவு 111
- *திரு.ச.சிவலோகநாதன்*

இந்துக்களின் சீர்திருத்தச் செம்மல் சேர்.பொன்.இராமநாதன் 113
- *பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (இலக்கிய வழி)*

**கட்டுரைகள் - கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்களின் அனுபவம்**

சைவப்பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் 119
- *பல்கலைப் புலவர் மூதறிஞர். க.சி.குலரத்தினம்*

Sir Arunachalam Mahadeva 122
- *(From Wikipedia)*

பல்துறை விற்பன்னரான பண்பாளர் சுப்பையா நடேசபிள்ளை 123
- *பேராசிரியர் வி.சிவசாமி*

Principal Mr. Sivapathasundram 132
- *(Colombo - O.B.A)*

பகுத்தறிவாளனாக வாழ்ந்த அதிபர் சிவபாதசுந்தரம் 136
- *திரு. செ.சண்முகலிங்கம்*

எம். ஞானப்பிரகாச மாஸ்டர் 138
- *(பாடசாலை பழைய மாணவர்கள்)*

பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியாரின் தமிழ்ப்பணி 141
- *திருமதி கலையரசி சின்னையா*

சாஸ்திர சீலர் சீதாராம சாஸ்திரிகள் 150
- *டாக்டர். பரமேஸ்வரா ஐயர் அம்பிகாபதி (லண்டன் அம்பி)*

Sellathurai Master 152
- *(Colombo - O.B.A)*

வித்துவான் வேந்தனார் 153
- *திரு.ச.சிவலோகநாதன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான் வேந்தனாரின் தமிழ் இலக்கிய ஆளுமை 157
- *திரு.ச.சர்வானந்தன்*

Mr. Eliyappa Ketheeswaranathan 159
- *Mr. K. Mahendran*

கனகசபை மாஸ்டர் 161
- *திரு.ச.சிவலோகநாதன்*

R. S. மாஸ்டர் 163
- *ஆசிரியர் இரத்தினசிங்கம்*

பரமேஸ்வரா ஆசிரியர் வைத்தியநாத ஐயர் 165
- *(நினைவு மலர்ப் பதிவு)*

***Photos of Principals and Teachers*** 167

**கட்டுரைகள் - பழைய மாணவர் அனுபவம்**

ஒரு மாணவியின் பரமேசுவராக் கல்லூரி நினைவலைகள் 172
- *திருமதி லோகநாயகி பத்மநாபன்*

மலரும் நினைவுகள் 175
- *டாக்டர் பரமேஸ்வர ஐயர் அம்பிகாபதி (லண்டன் அம்பி)*

Experiences of Parameshvara College Old Boys 179
- *Old Boys*

பரமேஸ்வரன் ஆலயத்தில் 180
- *திரு.மு.சி.சிவபாதசுந்தரம்*

***Photos of Prefects, Football Teams Etc*** 183



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுரைகள் - கல்லூரி பல்கலைக்கழகமாகுதல்**

Ceremonial Inauguration of the Jaffna.... 193
- *Mr.T.Perinpanayagam*

***Selected Photos of Jaffna Campus Opening by Prime Minister Srimavo Bandaranake*** 197

**கட்டுரைகள் - 'பரமேஸ்வரா வித்தியாலயம்' - பெயர் மாற்றம்**

பரமேஸ்வராக் கல்லூரி, பரமேஸ்வரா வித்தியாலயமாதல் 201
- *ப.மா.ச.கொழும்பு (2013)*

வள்ளல் சேர். பொன். இராமநாதன் 204
- *திரு. கனக நமநாதன்*

பரமேஸ்வரா வித்தியாலயம் உருவான கதை 213
- *திரு. நல்லையா விஜயசுந்தரம்*

திருநெல்வேலி யா/ பரமேஸ்வரா வித்தியாலயம் 219
- *திரு.யோகராசா தயாளன்*

***Photos of School Renaming etc*** 222

பாடசாலை சம்பந்தப்பட்ட மேலதிக படங்கள் 245



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

ஸ்தாபிதம் : 1966

19 .10.2021

## அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு...

யாழ்ப்பாண வரலாற்றில் கல்விப் பணியில் தனக்கென ஓர் இடத்தைக் கொண்ட பரமேஸ்வராக் கல்லூரி இன்று தனது நூற்றாண்டு மலரை வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். கல்விப் பணிக்காக அனைத்தும் அர்ப்பணம் செய்து வாழ்ந்து காட்டியவர் 'சேர் பொன் இராமநாதன் வள்ளல்'. சமயப் பராம்பரியத்துக் கல்வியைக் கற்றுக்கொள்ள பரமேஸ்வராக் கல்லூரியும் இராமநாதன் கல்லூரியும் உருவானது. இன்று அது மாற்றம் பெற்று பல்கலைக்கழகமாக மாறிவிட்டது. வள்ளலின் பெருந்தன்மை எல்லோருக்கும் கல்வி கொடுத்து, கல்வியின் ஊடாக மனிதனை மனித நேயத்தோடு வாழ வழிசமைக்கப்படுகின்றது. இதை உணர்ந்த வள்ளலால் பரம்பொருளாம் பரமேஸ்வரரின் பெயரினால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி பல வளர்ச்சிகளைக் கண்டிருப்பது தமிழ் சைவமக்களுக்கு பெருமையைத் தருகின்றது. இந்த நூற்றாண்டு மலர் நிறைவாக வெளிவர ஆசீர்வதிக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka. T.P No : 021 - 3213151

பதிவிலக்கம்:- HA/5/JA/193

E.Mail:- Thurkaiammantemple@gmail.com

Face Book:- tellidurga@gmail.com Fax:- 021 2241909 திகதி: 28.05.2022

## ஆசிச்செய்தி

## செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் வழங்கிய பிரார்த்தனை உரை

*"பரம்பரம் சோதி பரனே போற்றி சிந்தனைக்கரிய சிவமே போற்றி......"*

*(திருவாசகம்)*

பரமேஸ்வராக் கல்லூரி நித்திய பிரார்த்தனையிலும், இராமநாதன் கல்லூரி நித்திய பிரார்த்தனைக் கூட்டத்திலும் தவறாது பாடப்படுகின்ற மேற்குறித்த திருவாசக வரிகள் அகத்தில் பசுமையாகப் பதிந்துள்ளது. ஒப்புரவாளர், சைவப்பெரியார் சேர்.பொன். இராமநாதன் அவர்கள் இரண்டு கல்லூரிகளின் பிரார்த்தனைக் கூடத்திலும் மேற்குறித்த திருவாசகத்தை தவறாது பாடவேண்டும் என கட்டளை பிறப்பித்தார், 1921 முதல் 1974ஆம் ஆண்டு வரை பரமேஸ்வராக் கல்லூரியில் ஒலித்த திருவாசகம் வீண்போகவில்லை. எம் மண்ணின் உயர்கல்வி நிலையமாகப் பரமேஸ்வராக்கல்லூரி வளாகம் இன்று திகழ்கின்றது.

நூற்றாண்டு விழாவைச் சந்திக்கும் பரமேஸ்வராக்கல்லூரி, பல்கலைக்கழகமாகத் திகழ்கின்ற போதும் பரமேஸ்வரா பழைய மாணவர்கள் ஒன்றுகூடி - தாம் கற்ற கல்லூரிக்கு நன்றிக் கடனாக நூற்றாண்டு மலர் வெளியிடுவது பெருமைக்குரிய விடயமாகும். பரமேஸ்வரா நூற்றாண்டு மலர் வெளிவருவதற்கு அயராது உழைத்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள். செயற்கரும் செய்கையாக பரமேஸ்வரா பழைய மாணவர்கள் இப்பெருங்கைங்கரியத்தை நிறைவேற்றுகிறார்கள்.

நூற்றாண்டு விழா காணும் பரமேஸ்வராக் கல்லூரிக்கும் சிறியேனுக்கும் என்ன தொடர்பு என்ற கேள்வி எழலாம். சிறியேன் பரமேஸ்வரா கல்லூரியின் சகோதர பாடசாலை ஆகிய இராமநாதன் கல்லூரியில் ஆரம்பகல்வி கற்றவன். இரு கல்லூரிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயங்களையும் நன்கு அறிந்தவன். அந்தவகையில் பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மீது என்னை அறியாத ஆர்வம் உணர்வு பூர்வமாக உள்ளது. யான் இராமநாதன் கல்லூரி மாணவனாகக் கற்கும் போது கல்லூரி விழா அரங்கில் பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபருக்கும் ஆசனம் ஒதுக்கப்படும். அதிபர் அமரர்.மு.ஞானப்பிரகாசம் கழுத்தில் உருத்திராட்ச மாலையோடு, அழகுபொழிவோடு அரங்கில் காட்சியளிப்பார், ஆண்டு தோறும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் இராமநாத வள்ளலின் குருபூசை நாளில் பரமேஸ்வராக் கல்லூரியில் இருந்து இளைஞர்கள் இராமநாதன் அவர்களின் உருவப்படத்தை திருத்தொங்கல் கட்டி தோளில் காவிய வண்ணமாக காங்கேசன்துறை பெருவீதி வழியாக எமது கல்லூரியை வந்தடைவார்கள். திருவாசகப்பாடல்கள் ஒலிக்க இராமநாத வள்ளலின் திருவுருவம் கல்லூரிக்கு வருகை தரும் காட்சி இன்னும் மனதில் பசுமையாக உள்ளது. இரண்டு கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து நடாத்துகின்ற விழாப்பொலிவு நெஞ்சை உருக்கும், ஊர்வலம் நடந்து வந்த மாணவர்கள் விழா முடிந்ததும் இணுவில் புகையிரத நிலையத்திற்கு சென்று புகையிரதத்தில் ஏறி கொக்குவில் புகையிரத நிலையத்தில் இறங்குவது வழக்கம். இவை எல்லாம் இன்று கனவாகிப் போய்விட்டது. 1974ஆம் ஆண்டிற்கு பின் பரமேஸ்வரா ஊர்வலம் நின்றதால் இராமநாத வள்ளலின் விழா சோபை இழந்து விட்டது. என் செய்வோம். ''எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். ''ஒரு பொல்லாப்பும் இல்லை ' என்ற யோகர்சுவாமிகளின் வார்த்தையை உச்சரித்து அமைதி கொள்வோம்.

பரமேஸ்வராக் கல்லூரியில் ஆற்றல் மிக்க அறிஞர்கள் பணி செய்தார்கள். வித்துவச் சபை அன்று கௌரவமாக விளங்கியது. பல்துறை விற்பன்னர்கள் பரமேஸ்வராவை அலங்கரித்தார்கள். தமிழ், வடமொழி, ஆங்கிலம், இலத்தீன் எனப் பல மொழிவல்லுனர்கள் பரமேஸ்வராக் கல்லூரியை மேன்மைப்படுத்தினார்கள். சர்வகலாசாலை வருவதற்கு முன்பே சர்வகலாசாலையைப் போல் பரமேஸ்வராக் கல்லூரி திகழ்ந்தது. தமிழ் அறிஞர் சு.நடேசபிள்ளை முதல் வித்துவான் வேந்தனார் வரை எத்தனை எத்தனை தமிழ் அறிஞர்கள். சீதாராம சாஸ்திரிகள், கணபதி ஐயர், நவநீத கிருஷ்ணபாரதியார் என வடமொழி வல்லுனர்கள் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். விளையாட்டுத்துறையிலும் பரமேஸ்வரா அன்று சாதனை படைத்தது. இப்பெருமைகளை இரைமீட்பது போல் உள்ளம் மீட்பதற்கு நூற்றாண்டு மலர் உதவும் என்பதில் ஐயமில்லை. இம்மலர் சிறக்க இதய பூர்வமான வாழ்த்துகளை தெரிவித்து இப்பார் உள்ளவரை பரமேஸ்வராக் கல்லூரி பெருமை நிலைத்து நிற்க பார்வதி பரமேஸ்வரனை வேண்டி அமைகிறேன்.

*கலாநிதி.ஆறு.திருமுருகன்*
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை,
பேரவை உறுப்பினர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்
SRI PONNAMBALAVANESWARAR DEVASTHANAM

Tel : 011-2431252, 011-2447837
Web : www.sriponkovil.com

38, Sri Ramanathan Mawatha,
Colombo-13, Sri Lanka.

# ஆசிச்செய்தி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த இருநூறாவது அகவை ஆண்டான - நாவலர் ஆண்டிலே - அப்பெருமானோடு தொடர்புபட்ட வகையில் அமைந்த செய்தியினை, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவை முன்னிட்டு வெளிவரும் மலரின் இந்த வாழ்த்துச் செய்தியிலே நினைவுகூருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். சைவத் தமிழ் உலகிற்கும் தமிழ்ப் பாரம்பரியத்திற்கும் பெருவெளிச்சத்தைக் காட்டியது நாவலரின் வருகை. நாவலர் பெருமான் பிறந்து கால் நூற்றாண்டு தாண்டி இருபத்தொன்பதாவது வருடங்களின் பின் பிறந்த ஒருவரை, சைவத் தமிழ் உலகிற்கு நாவலர் பெருமான் கரங்கள் சுட்டிக்காட்டியது நாம் செய்த தவப்பேறு எனக்கூறின் மிகையில்லை. சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் மறைவுக்குப் பின் சட்ட சபையில் ஏற்பட்ட இடைவெளிக்குத் தகுந்தவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே என்று, 22.05.1879 அன்று அத்தனை ஆயிரம் பேர் கூடிய சபையில் நாவலர் பெருமான் எடுத்த தீர்மானத்தை வேறு என்னவென்று சொல்வது! ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் - சேர்.பொன்.இராமநாதன் - இருவரும் பிறந்த சூழலுக்கும் வாழ்ந்த வாழ்க்கை முறைக்கும் எந்த வகையிலும் தொடர்பில்லை. எண்ணங்கள் மட்டும் ஒருமித்த திசையிற் பயணித்தது. இருவருங் கண்டகனவு இன்று நமக்கான அடையாளமாக, கௌரவம் மிக்கதோர் இடமாக, பார்போற்றும் வகையிலே பிரசித்தி பெற்று நிற்கிறது. நாவலர் பெருமானின் சிந்தனையில் முகிழ்த்த செயல் வீரராக வலம் வந்த சேர்.பொன். இராமநாதன் அவர்கள், 1913ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி பெண்களுக்கான கல்வி காலத்தின் தேவை என்பதை நிலைநிறுத்தி, யாழ்ப்பாணம், மருதனார்மடம் மகளிர் கல்லூரியை ஆரம்பித்தார். அதுவே இன்று இராமநாதன் மகளிர் கல்லூரியாகச் சிறப்புற்று நிற்கிறது. 1921ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22ஆம் திகதி ஆண்களுக்காக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வராக் கல்லூரியைத் திருநெல்வேலியில் ஆரம்பித்தார். பிரித்தானியக் குடியேற்றக் கால யாழ்ப்பாணத்தில், சைவப் பண்பாட்டினையும் சமயத்தையும் பேணுவதை நோக்கமாகக் கொண்டு இயங்கிய நிறுவனம் இதுவெனக் கூறின் அது மிகப்பொருந்தும்.

பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டுமென்ற தேசத்தின் இரு பண்பாளர்களினதும் சிந்தனை மெல்ல முகிழ்க்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் ஆசிரியப் பயிற்சிப் பாடசாலையாகவும் - பின்னர், லண்டன், மெட்ரிக்குலேசன், கேம்பிரிட்ஜ் தேர்வுகளை நடத்தும் பாடசாலையாகவும் - பின்னர், தரம் 10 இற்கான தேர்வுகளும் - தொடர்ந்து பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வுகளும் இங்கு நடத்தப்பட்டன. இப்பாடசால 36 ஏக்கர் (150,000 சதுர மீற்றர்) பரப்பளவு நிலத்தில், மேலும் விரிவாக்கம் பெற்றது. ஒரு சிவன் கோவிலும் இதன் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டில் இவ்வளாகம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் புதிதாக உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண வளாகத்திற்காக இலங்கை அரசினால் கையகப்படுத்தப்பட்டு இன்று பார் போற்றும் யாழ். பல்கலைக்கழகமாக நிமிர்ந்து நிற்கிறது. 'நல்ல எண்ணங்களே நம் வாழ்வை வலிமை உடையதாக்கும்' என்ற உன்னத உண்மையை மனத்திருத்தி, பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு மலர் வெளியீடு சிறப்புற்றமையப் பரமேஸ்வரனின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்தி அமைகின்றேன்.

**டி.எம்.சுவாமிநாதன்**
முன்னாள் அமைச்சர், அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்,
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

## சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதன்

நமது முன்னோர் தமது வாழ்க்கையை அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருடார்த்தங்களாக இனங்கண்டனர். சைவப் பெருவள்ளலார் வழிவந்த குடும்பமும் இதன் வழி ஒழுகியே செழிப்புடன் வாழ்ந்தனர். சைவப் பெருவள்ளலாரிடம் பூரண கல்வியும், நிறைந்த செல்வமும் கிடைக்கப்பெற்றன. தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று சிந்திக்காது, 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயரிய சிந்தனையினால் உந்தப்பட்டு சமுதாயம் பற்றியும் சிந்தித்தார். இதனால் தமது கல்வியும், செல்வமும் தந்த பலனை பல்வேறு பணிகள் மூலம் விட்டுச்சென்றுள்ளார். கொழும்பில் வாழ்ந்தாலும் தமிழ்மக்கள் வாழும் பிரதேசமே அவரது இதயத்தில் நிறைந்திருந்தது.

கொழும்பில் கருங்கல்லால் இவர் அமைத்த பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயமும், யாழ்ப்பாணத்தில் இவர் அமைத்த பரமேஸ்வரன் ஆலயமும் இவரது சமயத்தொண்டின் எச்சங்களாகும்.

இருந்தும், வள்ளுவர் கூறியது போல் ''கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்ற பிற'' என்ற கருத்திற்கமைய, இராமநாதன் கல்லூரியும், பரமேஸ்வராக் கல்லூரியும் அவர் விட்டுச்சென்ற கல்விக் கனிகளாகும். பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாக உயர்ந்து, ஊர் நடுவில் பழுத்த நற்கனிகளை ஈனும் விருட்சம் போன்று காட்சிதருகிறது. இது வள்ளலாரின் தன்னலமற்ற பெரும்பணியை எடுத்துக்காட்டுகின்றது.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்'' என்றார் வள்ளுவர். சைவப் பெருவள்ளலார் மறைந்தாலும் அவர் விட்டுச்சென்ற பணிகள் அவரை நமது சமுதாயத்தின் யுகபுருஷனாக்கிவிட்டன. நல்லை நாவலரும் சைவப் பெருவள்ளலாரும் எமது சமுதாயம் பெற்றெடுத்த என்றும் அழியாத செல்வங்களாகும். இவர்களது தன்னலமற்ற பணியால் தான் இன்று எமது சமுதாயம் செழிப்புற்று மேன்மை பெற்றுள்ளதோடு சர்வதேச அரங்கிலும் புகழீட்டியுள்ளது. இதனால் இத்தகைய பெருமைக்குரியவர்களைப் போற்றுவதும், அவர்கள் காட்டிய வழி ஒழுகுவதும் நாம் அவர்களுக்குச் செய்யும் நன்றிக்கடனாகும்.


***பேராசிரியர். சி. க. சிற்றம்பலம்***
M.A, Ph.D, D.Litt (Hon)
தலைவர்
பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர் சபை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்

**PARAMESHVARA COLLEGE**
**OLD BOY'S ASSOCIATION COLOMBO**
**No. 1A, Alexandra Terrace, Colombo - 06. Tel/FaX: 011 2597043**
**Email: parameshvara2208@gmail.com**

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவைக் கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படுகின்ற நூற்றாண்டு விழா மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியைக் கொடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். பரமேஸ்வராக் கல்லூரி வள்ளல் சேர்.பொன் இராமநாதனால் 1921ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு அதன் நூற்றாண்டு நாளினை, 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி கண்டுள்ளது. இந்த நூற்றாண்டு நினைவு நாளினை நாட்டின் நிலைமை கருதி எங்கள் பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை இணைய வழி மெய்நிகர் கலந்துரையாடல் நிகழ்வாக 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி நடாத்தினோம். அன்றைய தினம் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கல்விமான்களும், பழைய மாணவர் சங்கத்தினரும் பரமேஸ்வராக் கல்லூரியின் வரலாறு சம்பந்தமான விடயங்களை ஆவணப்படுத்தி ஒரு நூற்றாண்டு விழா மலரை வெளியிட வேண்டும் என்று தீர்மானம் எடுத்தனர். இந்த மலர்க்குழுவிற்கு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் தலைவராகவும், பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை செயலாளர் திரு சிவலோகநாதன் அவர்கள் செயலாளர் ஆகவும் 14 விழாக்குழு அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டனர். இதன் பிரகாரம் விழா மலருக்கு வேண்டிய ஆக்கங்கள், கட்டுரைகள், படங்கள் போன்றவை சேகரிக்கப்பட்டு ஒரு மலராக வெளிவரவுள்ளது.

நான் பரமேஸ்வராக் கல்லூரியில் பத்து ஆண்டுகள் (1947-1957) கல்வி கற்ற ஒரு பழைய மாணவன் என்ற பெருமையுடையவன். நான் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் என்னுடைய கற்றல் நடவடிக்கைகளுக்கு மேலாக விளையாட்டுத் துறையிலும் என்னுடைய திறமையைக் காட்டினேன். நான் உதைபந்தாட்ட அணியின் தலைவனாக பந்து காப்பாளராக (Goal Keeper) இருந்து வட மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற (SECOND ELEVEN) உதைபந்தாட்டப் போட்டிகளில் 1952, 1953, 1954ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக வெற்றிவாகை சூடி பாடசாலைக்குப் பெருமை சேர்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு 1955ஆம் ஆண்டு துடுப்பாட்ட அணியின் தலைவனாகவும் (Cricket Captain). பிரம்மா இல்லத் தலைவராகவும் இருந்தேன்.

நான் கல்லூரியை விட்டு விலகும் வரை கல்லூரியின் தலைமை மாணவ தலைவனாகவும் (Head Prefect) இருந்தேன்.

நான் பரமேஸ்வராக் கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர வகுப்பில் சித்தி எய்திய பின் பொலிஸ் திணைக்களத்தில் உப பொலிஸ் பரிசோதகராக இணைந்து படிப்படியாக பிரதிப் பொலிஸ்மா அதிபராக உயர்வு பெற்றேன். நான் பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றும் பொழுது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றேன். இவற்றுக்கெல்லாம் என்னுடைய கல்லூரியும், அதிபர் திரு சிவபாதசுந்தரம் அவர்களும், என்னைக் கற்பித்த ஆசிரியர்களும், அவர்கள் கற்றுத் தந்த ஒழுக்கமும் வழிகாட்டல்களுமே காரணமாகும். சேர். பொன். இராமநாதன் பரமேஸ்வராக் கல்லூரியை ஸ்தாபித்ததன் நோக்கம் யாழ்ப்பாணத்துச் சிறார்கள் சைவ சமய ஒழுக்க நெறியோடு சேர்ந்த ஒரு கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காகவே. இப்பொழுது பரமேஸ்வராக் கல்லூரி யாழ்பல்கலைக்கழக வளாகமாக உயர்வு பெற்று நிற்கின்றது.

நான் கடந்த பதினாறு வருடங்களாக பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத் தலைவராக இருக்கின்றேன். என்னுடைய முயற்சியாலும் பழைய மாணவர்களின் உதவியோடும் திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் உள்ள பாடசாலையை, சேர். பொன். இராமநாதனின் குருபூசைத் தினமான 19-11-2012 அன்று ''பரமேஸ்வரா வித்தியாலயம்'' எனப் பெயர் சூட்டினோம்.

பரமேஸ்வாரக் கல்லூரியின் பெயர் என்றும் நிலைத்து நிற்க, எங்களால் வெளியிடப் படுகின்ற நூற்றாண்டு விழா மலர் ஒரு சான்றாக விளங்க, எல்லாம் வல்ல பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றேன்.

**த. பேரின்பநாயகம்**
தலைவர்
பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## எங்கள் செழுங்கலை நியமத்தின் தாய் ஊற்று பரமேஸ்வராக் கல்லூரி

ஈழத் தமிழர்கள் மிக நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியமும் அதன் தொடர்ச்சித்தன்மைமிக்க கல்வித் தலைமுறையும் உலகத்தினரால் மெச்சும் தன்மைமிக்கது. இந்த நீண்ட கல்வித் தொடர்ச்சிக்கும் ஞானச்சிறப்புக்கும் வித்துவமேன்மைக்கும் நிலைக்களனாக நிற்பவை எமது முன்னைய தலைமுறையினர் ஆக்கிவைத்த பெருஞ்செயல்கள். அவர்கள் இட்ட விதையில் முளைத்த விருட்சங்கள் தரும் நிழலில்தான் நாம் இன்று இளைப்பாறுகின்றோம். கூடிக்குலாவி அறிவைப் பகிர்ந்து தலைமுறைக் கையளிப்புச் செய்கின்றோம். இத்தகைய விருட்சங்கள் எல்லாவற்றுக்கும் தலைவிருட்சமாகவிருப்பது பரமேஸ்வராக் கல்லூரி. ஈழத் தமிழர்களின் தேசபிதா என அழைக்கத்தக்க செயற்கரிய செயல்கள் ஆற்றிய சேர். பொன். இராமநாதன் எனும் 'காலம் எமக்காய் தந்த பெரும் விளக்கு' ஏற்றிய ஞானப் பெருஞ்சுடர்களில் ஒன்றாய்த் திகழ்வது பரமேஸ்வராக் கல்லூரி. அச்சுடரின் ஒளியைப் பெற்று ஏற்றப்பெற்ற பெருஞ்சுடர்தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் எங்கள் தமிழ்த் தலைமுறையின் செழுங்கலை நியமம்.

வள்ளல் பெருமகனார் ஆண்கல்விக்கெனவும் அவர் தம் ஆளுமை விருத்திக்கெனவும் ஆக்கிய ஆரம்பப் பாடசாலை பின்னர் இரண்டாம் நிலைப் பாடசாலையாக மாற்றம் பெற்று காலத்தேவை கருதி ஓர் சர்வகலாசாலை அமையும் பூகோளப் புள்ளியானது வரலாற்று நியதி. இத்தகைய வரலாற்றுப் பெருமைமிக்க பரமேஸ்வராக் கல்லூரி 2022ஆம் ஆண்டு தனது நூற்றாண்டைக் கொண்டாடுகின்ற நிகழ்வுக்கு அதன் ஞானவீச்சின் மையப்புள்ளியிலிருந்து வாழ்த்துச்செய்தியைப் பகிரக் கிடைத்த வாய்ப்பைப் பெருவாய்ப்பாகக் கருதுகின்றேன்.

பரமேஸ்வராக் கல்லூரி குறித்தும் அதன் வரலாறுகள் குறித்தும் எங்கள் தலைமுறை அறிந்து வைத்திருக்கும் விடயங்கள் மிகச் சொற்பமானவை. ஆனால் அறியவேண்டியவை ஏராளமுள்ளன. இராமநாதப் பெருந்தகையின் கல்விச் சிந்தனையின் வடிவமாக முகிழ்ந்த இரு கல்லூரிகளும் இலங்கைத் தமிழர்களின் கல்வி வரலாற்றில் தனித்த அத்தியாயங்களைக் கொண்டவை. சைவத் தமிழ் பண்பாட்டின் நிலைக்களன்களாக விளங்கவேண்டும் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிருப்போடு அவை ஆக்கப்பெற்றன. இக்கல்லூரிகளின் தாபகத்திலும் நிர்வாகத்திலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலூம் பங்குபற்றிய மனிதர்கள் ஈழத்தமிழர்களின் உயர் ஆளுமைகளாகத் திகழ்ந்தவர்கள் என்பது வரலாறு பல தடவைகள் அழுத்தமாகப் பதிந்து வைத்திருக்கும் செய்தி.

இந்த வாழ்த்துச் செய்தியை எழுதும் கணத்தில் எனக்கு சேர். பொன். இராமநாதனின் கல்விச் சிந்தனைகளுள் ஒன்று ஞாபகத்துக்குள் வருகின்றது. அதாவது ''கல்வி என்பது ஓர் இறுக்கமான அச்சிலே வார்த்தெடுக்கப்படவேண்டிய பொருளன்று. கல்வியின் பொருளும் கல்வி முறைமையும் காலத்துக்குக் காலம் சந்ததிக்குச் சந்ததி வேறுபட்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் நிலவிய கருத்துக்களும் வழக்கங்களும் மறைந்து வேறு கருத்துக்களும் வழக்கங்களுக்கும் இடமளித்துள்ளன. காலப்போக்கிலே இலங்கையின் வடபாகத்திலும் மேற்குப் பாகத்திலும் அங்கு வாழும் மக்களுடைய நன்மைக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகம் தேவைப்படும். அந்நிய கல்விமான்கள் வற்புறுத்திய விசயங்களையும் கல்வி முறைகளையும் அடிப்படைகளாகக் கொள்ளாது வேறு விசயங்களையும் கல்வி முறைகளையும் அடிப்படைகளாகக் கொண்டவைகளாக இவை தேவைப்படும். இப்பல்கலைக்கழகங்கள் எவ்வெவ்விடங்களில் அமைக்கப்படுகின்றனவோ அவ்வவ்விடங்களில் உள்ள நகரங்களின் அல்லது மாவட்டங்களின் பெயர்களைக் கொண்டவையாக இருக்க வேண்டும்.'' என பல ஆண்டுகளுக்கு முன்னர் அவர் சிந்தித்த சிந்தனையே இதுவாகும்.

அவரது தூரநோக்குச் சிந்தனையில் இலங்கையின் வடபாகத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்க வேண்டும் எனும் சிந்தனைத் தெளிவு இருந்தது. அந்த சிந்தனைதான் பின் செயலாகி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என நிமிர்ந்தது. அதன் மையமாக அவர் அமைத்த பரமேஸ்வராக் கல்லூரி அமைந்ததும் அதன் ஆத்ம இயக்கு சத்தியாக அவர் தாபித்த பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயம் அமைந்ததும் பெரும்பேறான செயல்கள். இன்று இம்மூன்று நிறுவனங்களும் ஏதோவொரு வகையில் தங்கள் வரலாற்றில் ஒரு தடத்தைப் பதிக்கும் காலத்தருணம் அண்மைய நாட்கள். பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டைக் கொண்டாடப் பல்கலைக்கழகம் தன் ஐம்பதாண்டை நெருங்கிக்கொண்டுள்ளது. பரமேஸ்வரன் ஆலயம் மீள்நிர்மாணிக்கப்பெற்று மகாகும்பாபிடேகத்துக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றது. அது மட்டுமன்றி இராமநாதன் ஐயா அவர்களின் பெயரைத் தாங்கிய எமது பல்கலைகழகத்தின் நுண்கலைக்கல்லூரி சேர் பொன்.இராமநாதன் ஆற்றுகை மற்றும் காண்பியப் பீடமாக தரமுயரும் அந்த வரலாற்றுத் தருணமும் இன்னும் சில நாள்களில் இடம்பெறவிருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது சிந்தனைகள் விரியவேண்டும். எமது தலைமுறையினர் என்ன நோக்கங்களுக்காக கல்விச்சாலைகளையும் ஆன்மீக மையங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவினார்களோ அந்த உண்மை நோக்கங்கள் எய்தப்படவேண்டும். குறிப்பாக 1960களில் பாடசாலைகளை இலங்கை அரசாங்கம் பொறுப்பெற்றுக்கொண்டபோது சைவத் தமிழ் நிறுவனங்களினால் பராமரிக்கப்பட்ட பாரம்பரிய தனித்துவமிக்க பல பாடசாலைகள் அரசாங்க கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. இதனால் அவற்றின் தனித்துவங்கள் பல விழுங்கப்பட்டு அடைமானம் வைக்கப்பட்ட நிலைதோன்றியது. ஆனால் மிசனரிகளினால் உருவாக்கப்பட்ட பல முன்னோடிப் பாடசாலைகள் அரை அரச பாடசாலைகளாக மாறித் தமது தனித்துவத்தை தக்க வைத்துக்கொண்டன. இதுவொரு முன்னுதாரணமான செயற்பாடாகும்.

இன்று ஈழத்தை மையப்படுத்திய ஈழத்தமிழர்களின் கல்விப்பாரம்பரியம் சற்று பின்னடைந்துள்ளதாக கருத்துக்கள் வெளிவரும் சந்தர்ப்பத்தில் அதனை மீட்டெடுக்கும் உபாயங்கள் குறித்தும் சிந்திக்கப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் நாம் சேர். பொன். இராமநாதனின் எண்ணத்தில் உருவான இராமநாதன் கல்லூரி மற்றும் பரமேஸ்வராக் கல்லூரி என இரண்டையும் மீட்டுருவாக்கம் செய்யும் பொறிமுறைகள் குறித்துச் சிந்திக்கவேண்டும். சேர்.பொன்.இராமநாதன் பெயரால் செயற்படும் ஒரு முகாமைத்துவ சபையின் கட்டுப்பாட்டுக்குள் இக்கல்லூரிகள் கொண்டுவரப்பட்டு அவை தனித்து வமாக நிர்வகிக்கப்படவேண்டும். சைவத் தமிழ் கல்விச் செழுமைக்கான மாதிரிப் பாடசாலைகளாக இவை மாறவேண்டும். பரமேஸ்வராக் கல்லூரி நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீளத் தாபிக்கப்பட்டமை இவ்விடயத்தை சாத்தியமாக்கலாம் என்பது குறித்து எமக்கு தரும் நம்பிக்கைச் செய்தியாகும். இம்முயற்சியில் எமது பல்கலைக்கழகமும் இது தொடர்பில் தன் பங்களிப்பை நல்கத் தயாராகவுள்ளது. குறிப்பாக எமது கல்வித்துறையும் எதிர்காலத்தில் பீடமாகத் தரமுயர்ந்து தானும் தன் தரத்தை உயர்த்தும் போது இம்மாதிரிப் பாடசாலைகளின் கொள்கை வகுப்பாக்கங்களிலும் நிர்வாகத்திலும் பங்குகொள்ள முடியும்.

வரலாறு என்பது தானாக நிகழ்வதில்லை. யாரோ ஒரு சில மனிதர்களின் சிந்தனையினால் உருவாக்கப்படுவது. ஈழத்தமிழர்களின் கல்வி வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்த வேண்டிய சந்தியில் நாம் பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டைக் கொண்டாடுவது காலச் சந்தர்ப்பம். இந்த சந்தர்ப்பம் செயற்கரிய சிந்தனைகளுக்கு வடிவம் கொடுக்கும் தருணமாக அமையட்டும். இச்சிந்தனைகள் கருக்கொள்ள களம் தந்த பரமேஸ்வராக் கல்லூரிச் சமூகத்தினருக்கு எனது நன்றிகளைப் பதிவுசெய்து பரமேஸ்வராக் கல்லூரியின் எதிர்கால முன்னேற்றத்துக்கு எல்லாம்வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களைப் பதிவு செய்கின்றேன்.

*பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா*
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## கல்லூரியாக இருந்து பல்கலைக்கழகமாக

நாடறிந்த முன்னணித் தேசிய தலைவரும் கொடையாளியும் ஆன்மீகவாதியுமான சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் நிறுவப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடை கின்றேன். மேலும் இந்நூற்றாண்டு விழாக்காலத்தில் பரமேஸ்வரா வளாகத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற இடம்பெற்று இருப்பது பெருமன நிறைவைத் தரும் நிகழ்வாகும்.

1921இல் நிறுவப்பட்ட இக்கல்லூரி, 1974இல் காலத்தின் தேவை கருதி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக மாற்றப்பட்டு 01.01.1978இல் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக சிறப்புற செயற்பட்டு வருவது தமிழ் மக்களுக்கு கிடைத்த பெரும் பேறாகும்.

இக்கல்லூரி நிறுவுனரின் தூர நோக்கு நிறைவேற்றப்பட்டு வருவதும், அவர் எதிர்பார்த்த பணிகள் சிறப்புற விரிவடைந்து வருவதும், அவர் பரப்புரை செய்த பண்பியல்புகள் கட்டிக் காக்கப்படுவதும் பாராட்டக்குரியன. கல்லூரியாக இருந்த பொழுது பிரதேச மக்களும் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்ட நிலையில் இலங்கை மக்கள் யாவரும் பயனுறும் பண்பு ஏற்பட்டுள்ளமை பெரும் வளர்ச்சியின் அடையாளமாகும்.

பரமேஸ்வராக் கல்லூரி இன்று இல்லை என்ற நிலையையும், கவலையையும நீக்க இப்பெயரில் சகல வசதிகள் கொண்ட ஒரு கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்பது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்றது. இக்கோரிக்கை என்றோவொரு நாள் நிறைவேறும் என்பது நிச்சயம், அதற்கான முயற்சிகள் தொடர வேண்டும். நூற்றாண்டு நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற எனது வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/RAMANATHAN COLLEGE
# CHUNNAKAM

**Principal:**
**Mrs.Ambikai Sivagnanam**
B.A, PGDE(Distinction), DSM (Merit)
M.Ed, SLPS I

**Deputy Principal:**
**Mrs.S.Vakeesan**
B.Sc (Hons), PGDE
M.Ed SLPS III

Census No: 09167 T.P – 0212241762 School ID No: 1010001
E.mail: chu.ramanathan21@gmail.com

## இராமநாதன் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களினால் யாழ். பரமேஸ்வராக்கல்லூரி 1921.08.22 ஸ்தாபிக்கப்பட்டது. ஆண்களுக்கெனத் தனித்துவம் பேணும் வகையில் சைவத்தமிழ் கலாசார வளர்ச்சியை உறுதி செய்யக்கூடிய ஓர் பாடசாலையாக எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு தன் தனித்துவத்தை இழந்துவிடாது நூறு ஆண்டுகளை நிறைவு செய்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வேளையில் யான் உவகை கொள்வதோடு, வாழ்த்தினையும் தெரிவிக்கின்றேன்.

யா/இராமநாதன் கல்லூரியின் அதிபர் என்ற வகையில் இந்நூற்றாண்டு மலருக்கு வாழ்த்து வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

திருநெல்வேலி பரமேஸ்வராவித்தியாலயம், ஆரம்பப் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டு முதல் தலைமை ஆசிரியராக சிவபாதசுந்தரம் அவர்கள் நியமிக்கப்பட்டார். இப் பாடசாலை 1922 தரம் உயர்த்தப்பட்டு முதலாவது அதிபராக சேர்.அருணாசலம் மகாதேவா அவர்கள் நியமிக்கப்பட்டு 1946இல் இக்கல்லூரி வெள்ளிவிழா மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. 1962ஆம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்டு 1974ஆம் ஆண்டு சேர்.பொன். இராமநாதனின் மருமகனாகிய திரு. சு.நடேசப்பிள்ளை அவர்களின் வேண்டுதலின் படி அப்போதைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களினால் பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்றது.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் முயற்சியால் உருவான பரமேஸ்வராக்கல்லூரி திரு. த.பேரின்பநாயகம், திரு. ந.விஜயசுந்தரம், திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம், பரமேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகியோரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பினால் புத்துயிர் பெற்றுள்ளது. அவர்களை இத்தருணத்தில் நன்றியோடு வணங்குகின்றேன்.

தொடர்ந்து ஆரம்பப்பாடசாலையாக இருந்து பல்கலைக்கழகமாக வளர்ச்சியடைந்திருக்கும் காலகட்டத்தில் தன்னலமற்ற பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களை பாராட்டுகின்றேன். அத்துடன் இந்நினைவுமலரின் குழுவின் தலைவர் செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் என்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். நன்றியுடன் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

வெள்ளிவிழா, பொன்விழா, தமிழ்விழா, சேர்.பொன் இராமநாதன் குருபூசை தினவிழா, பவளவிழா ஆகியவற்றைக் கண்டு நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில் நூற்றாண்டு நினைவு மலருக்கான வாழ்த்துச் செய்திகளுடன் மலரினை வெளியிடுவதையிட்டுப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இந்நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் பரமேஸ்வராக் கல்லூரி பல துறைகளிலும் வளர்ந்து கலை, கலாசாரத்தை வளர்த்தெடுக்க அரும் தொண்டாற்ற வேண்டும் எனவும் இப்புனிதமான கல்விப்பணி வளர்ந்து பல சாதனைகளைப் படைத்து உயரவேண்டுமென எல்லாம் வல்ல பரமேஸ்வரனின் பாதார விந்தங்களைப் பணிந்து அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

*'வாழ்க பரமேஸ்வராக் கல்லூரி*
*வளர்க அதன்பணி''*

**திருமதி அம்பிகை சிவஞானம்**
அதிபர், யா/இராமநாதன் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No:

அலுவலகம்
කාර්යාලය
Office — 021 221 9375

தொலைநகல்
ෆැක්ස්
Fax — 021 221 9374

இணையதளம்
වෙබ් අඩවිය
Website — www.np.gov.lk

எமது இல
අපේ අංකය
Our Ref.

உமது இல
ඔබේ අංකය
Your Ref.

ஜீவன் தியாகராஜா
ජීවන් ත්‍යාගරාජා
Jeevan Thiagarajah

ஆளுநர்-வட மாகாணம்
ආණ්ඩුකාර-උතුරු පළාත
Governor-Northern Province

செயலகம்
කාර්යාලය
Secretariat

பழைய பூங்கா, கண்டி வீதி,
சுண்டிகுளி, யாழ்ப்பாணம், இலங்கை

පැරණි උද්‍යානය, නුවර පාර,
චුන්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව

Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka


திகதி
දිනය
Date — 17/02/2022

# Greetings From Hon. Governor-Northern Province

The initiative taken by the great statesmen Sir. P.Ramanthan, for boys school where Hindu Tradition could be fostered and come forward to purchase 25 acres of land in Thirunelvely together with 420 acres of paddy land in Killinochchi to generate income for the maintenance of the school had been very fruitful to the community in producing many eminent personnel.

This is the great opportunity for us to praise all the principals and teachers who had been responsible, since its inception from 22nd August 1921, for fulfilling the vision of Sir. P.Ramanathan. It is a history to note that the school started with primary classes and in a very short period in 1922 rose its standard with post primary classes. All those who had been instrumental for this great effort are to be felicitated at this moment. The school taken over by the government under nationalization of schools also allowed the vision of Sir Pon.Ramanathan too establish a fully-fledged university.

Tremendous hard work done by the Old Boys' Association to the reestablishment of Parameswara College is greatly appreciated. The college should be proud to produce many scholars and I wish the school all the success in its efforts in fulfilling Sir Pon Ramanathan's vision and promoting Hindu Culture amongst youngsters.

**Governor**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - යාපනය
DISTRICT SECRETARIAT – JAFFNA

எனது இல. / මගේ අංකය / My No. JK/GA/GREE/03/2020(21) உமது இல. / ඔබේ අංකය / Your No. திகதி / දිනය / Date 2022/01/31

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ். பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டினை முன்னிட்டு வெளிவரும் வரலாற்று ஆவணத்திற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1920களில் கல்வித்துறையில் சுதேச, ஆன்மீக, விழுமியங்களை பேணும் வகையில் சைவத்தமிழ் பாரம்பரியத்தை பேணக்கூடிய கல்வி முறைமையொன்றின் தேவையுணர்ந்து, இலங்கைத் தேசிய இளைஞர் பேரணியின் தலைவர் திருவாளர் பொன்.இராமநாதன் அவர்களின் முயற்சியில் சைவத்தமிழ் கலாசார வளர்ச்சியை உறுதி செய்யக்கூடிய ஓர் ஆண்கள் பாடசாலை நிறுவப்பட வேண்டும் என்னும் நோக்கில், 1922ஆம் ஆண்டு ஆவணி மாதம் இருபத்தி இரண்டாம் திகதி திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம், ஆரம்பப் பாடசாலையாக நிறுவப்பட்டது. அதன் தலைமை ஆசிரியராக மதிப்புக்குரிய சைவ அறிஞர்.சு.சிவபாதசுந்தரம் அவர்கள் சிறப்பான கடமையாற்றியிருந்தார்.

சுமார் அரை நூற்றாண்டுக்கும் மேலாக இப்பாடசாலையானது யாழ்ப்பாணத்தில் பல சிறப்புமிக்க ஆளுமைகளை உருவாக்கக் காரணமாக அமைந்ததுடன், சைவத்தமிழ்ப் பாரம்பரியம் கொண்ட சமூக உருவாக்கத்திற்கும் அடித்தளமிட்டிருந்தது. இப்பாடசாலை 1962இல் தேசியமயமாக்கப்பட்டு, அரச பாடசாலையாகத் திகழ்ந்ததுடன், 1974இல் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகமொன்றை ஆரம்பிப்பதற்கு வரலாற்றுச் சிறப்புமிகு இப்பாடசாலை, அதன் ஸ்தாபகர் சேர்.பொன் இராமநாதன் அவர்களின் மருமகனாகிய திரு.சு.நடேசப்பிள்ளை அவர்களின் சிபார்சின்படி வழங்கப்பட்டதுடன், அப்போதைய கௌரவ பிரதமரான திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் இப்பாடசாலை ஓர் பல்கலைக்கழகமாக மாற்றம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை ஈடுசெய்யும் வகையிலும், புகழைப் பேணும் வகையிலும் 2021ஆம் ஆண்டில் வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் திருநெல்வேலியில் இயங்கி வந்த திருநெல்வேலி சைவத்தமிழ்ப் பாடசாலை யா/பரமேஸ்வரா வித்தியாலயமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய சிறப்புமிகு பரமேஸ்வராக் கல்லூரி தொடர்பான வரலாற்று ஆவணத்தை நெறிப்படுத்தி வெளியீடு செய்ய முனைந்திருக்கும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரை பாராட்டுவதோடு, மலரும் வரலாற்றுச் சிறப்பு ஆவணம் அரிய தகவல்களையும் கொண்டு சிறப்புற அமைய என் நல்வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**க.மகேசன்**
யாழ்ப்பாண அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

வட இலங்கையில் கல்விச் செயற்பாடுகள் கிறிஸ்தவ சமய மாற்றத்துடனான மிஷனரிமாரின் கையில் இருந்த போது சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வகையில் கல்விச்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற முனைப்பு மக்களிடம் ஏற்பட்டது. இதன் ஒரு அங்கமாகவே உடுவிலில் மிஷனரிமாரினால் அமைக்கப்பட்ட பெண்களுக்கான உடுவில் மகளிர் கல்லூரிக்கு மாற்றாக மருதனார்மடத்தில் இராமநாதன் கல்லூரி என்ற பெண்களுக்கான கல்லூரி 1913 இல் நிறுவப்பட்டது. சைவத்தையும் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் நிறுவக்கூடிய வகையில் இக்கல்லூரி சிறப்புற்றது. இதன் தொடர்ச்சியாக இலங்கை தேசிய இளைஞர் பேரவையின் அணி கீரிமலையில் கூடி ஒரு தீர்மானம் எடுத்தனர். சேர். பொன். இராமநாதன் தலைமையில் கூடிய இவ்வணி சைவத் தமிழ் கலாசாரத்தை அதன் வளர்ச்சியை உறுதி செய்யும் முகமாக ஆண்களுக்கான ஒரு பாடசாலையை நிறுவுவதற்கு தீர்மானித்தது. இதற்கான முன் முயற்சியின் விளைவாக 1922 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 இல் திருநெல்வேலியில் இப்பெருங் கல்லூரி பரமேஸ்வரா என்ற திருநாமத்துடன் தொடங்கியது. ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் தரம் உயர்த்தப்பட்டு ஆரம்ப இடைநிலை வகுப்புகள் உள்ளடங்கலாக முழுமையான கல்லூரியாக பரிணாமம் பெற்றது. இந்தப் பாடசாலையும் பரமேஸ்வரன் ஆலயமும் எனது மனதில் பசுமரத்தாணி போன்று பதிந்துள்ளது. இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்களில் நானும் ஒருவன். எனது தந்தை முத்துக்குமாரு அவர்களும் இங்குதான் கல்வி கற்றார். 1967ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு வரை எனது ஆரம்ப இடைநிலை கல்வியை சிறப்பாக கற்க இப்பாடசாலை இடம் தந்தது. 1974ஆம் ஆண்டில் வடபுலத்தின் முதல் பல்கலைக்கழகமாக - யாழ்ப்பாண பல்கலைக்கழகமாக இப்பாடசாலை மாற்றப்பட்ட போது இங்கிருந்து வெளியேற வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆயினும் 1982இல் மீண்டும் பல்கலைக்கழக மாணவனாக மீளவும் இங்கே பட்டக் கல்வியை கற்கவும் பட்ட மேல் கல்வியைத் தொடரவும் வாய்ப்பை வழங்கியது. இத்தகைய பின்னணியில் நூற்றாண்டு விழா கொண்டாடும் பரமேஸ்வராக் கல்லூரிக்கு வாழ்த்துரை வழங்கக் கிடைத்தமை பெரும் பேறாகும். இன்று திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியின் பெயரை நிலைநிறுத்த வேண்டும் என்ற வகையில் ஏற்கனவே இருந்த வகை 3 (Type 3) பாடசாலை வகை 2 (Type 2) பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு 19.11.2012 முதல் பரமேஸ்வரா வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கி இன்று நூற்றாண்டு விழாவிற்கான அடையாளமாக இருக்கின்றது. சைவமும் தமிழும் கல்விச் சிறப்பும் பெற்ற பரமேஸ்வரா என்ற நாமம் கல்வி உலகு உள்ளவரை சிறப்பாக பெருமையுடன் புகழ் பெற்றதாக இருக்கும். பரமேஸ்வராவின் புகழ் பெருகட்டும்.

**முத்து.இராதாகிருஷ்ணன்,**
வலயக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சேர் பொன் இராமநாதப் பெருவள்ளலால் உருவாக்கப்பட்ட, பரமேசுவராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா ஆண்டில், அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளையினரான நாம், இம் மலரினைப் பதித்து வெளியிடுவதில், மட்டில்லா மகிழ்வடைகிறோம். எமது பரமேசுவராக் கல்லூரி, 1974ஆம் ஆண்டில் பல்கலைக்கழகமாக அரசினால் கையகப்படுத்தப்பட்ட போது, அதற்கு ஈடாக பரமேசுவராவின் பெயரில் ஒரு பாடசாலை நிறுவப்படவில்லை. எம் கல்லூரி பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு, பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு பயன் தருவது எமக்கு மகிழ்ச்சியே ஆயினும், நாங்கள் கற்ற எங்கள் கல்லூரி தன்னை ஈகை செய்துதான் பல்கலைக்கழகம் உருவாகியது என்பது, பழைய மாணவர்களாகிய எம்மெல்லோரிற்கும் மாறா வருத்தமே. இந்தச் சூழ்நிலையில், எம் கல்லூரி அன்னையின் புகழ் மறைந்திடாதிருந்திட, எம் கல்லூரியின் பெருமைகளை, எம் வருங்கால தலைமுறையினரும் அறிந்திட, 2006ஆம் ஆண்டு நாம், ''பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை'' இனை தோற்றுவித்தோம்.

எமது சங்கத்தின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக, பல போராட்டங்களின் பின்னர், திருநெல்வேலியில் இயங்கி வந்த ''இந்து தமிழ் கலவன்'' ஆரம்பப் பாடசாலையை, ''பரமேசுவரா வித்தியாலயம்'' என பெயர் மாற்றம் செய்திட, அரசால் 25-04-2012 இலிருந்து அனுமதி அளிக்கப்பட்டது. இப் பெயர் மாற்றத்தினை, இராமநாதன் நினைவு தினமான 19.11.2011 அன்று, நாம் பெரும் விழாவாகக் கொண்டாடினோம்.

இன்று எமது கல்லூரித் தாயின் நூற்றாண்டினை உலகெங்கும் வாழும் எமது கல்லூரி பழைய மாணவர்களின் அனுசரணையுடன் கொண்டாடுகின்றோம். இதனையொட்டி, நூற்றாண்டு விழா மலர் ஒன்றினையும் பெருமகிழ்வுடன் வெளியிடுகின்றோம். இம் மலரின் உருவாக்கத்தில் உழைத்திட்ட மலர்க்குழு உறுப்பினர்களுக்கும், எமக்கு அறிவுரைகள் தந்து உதவிட்ட மலர்க்குழு தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களுக்கும், இவ்வாறு மலர் ஒன்றை வெளியிடல் வேண்டுமென்று முன்மொழிந்து எம்மை ஊக்குவித்து உதவிட்ட திரு இளஞ்சேய் வேந்தனார், மற்றும் குமரன் பதிப்பகத்தாருடன் இக்கட்டான காலப் பகுதியில் தொடர்பு கொண்டு ஆவணங்களை பதிவேற்றிட உதவிய பேராசிரியை சுபதினி ரமேஸ் ஆகியோரிற்கும், எம் நன்றியினை இவ்விடத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இம் மலரின் உருவாக்கத்தில் பல்வேறு வகைகளிலும் உதவிட்ட எம் பழைய மாணவர்கள், பரமேசுவராக் கல்லூரி நலன் விரும்பிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள் அனைவர்க்கும் எங்கள் அன்பான நன்றிகள். இம் மலரிற்கு கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தும், படங்கள் அனுப்பியும், நிதியுதவிகள் தந்தும் உதவிட்ட அனைத்து பழைய மாணவர்களுக்கும் எங்கள் பணிவான நன்றிகள். இம் மலரினை நாட்டின் அசாதாரண நிலையிலும் அழகுற அச்சிட்டுத் தந்த குமரன் பதிப்பகத்தாருக்கும் எங்கள் சிறப்பான நன்றிகள்.

இந்த நூற்றாண்டு விழா மலர், வருங்காலத்தில் பரமேசுவராக் கல்லூரியின் வரலாற்றினை அறிந்திட முனைவோரிற்கும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், திருநெல்வேலியில் இயங்கி வரும் ''பரமேசுவரா வித்தியாலய'' மாணவர்களுக்கும், எம் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பது திண்ணம்.

நன்றி

பரமேசுவராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை
31-07-2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர்க் குழு அங்கத்தவர்களின் அறிமுகம்

**தலைவர்** : **செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்,** தலைவர் ஸ்ரீ துர்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை இயக்குனர், இந்து ஆய்வு நிலையம், அகில இலங்கை இந்துமாமன்றம், முன்னாள் அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்

உறுப்பினர் : **திரு த. பேரின்பநாயகம்.** பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் **தலைவர்.** இலங்கை காவல் துறையின் புதிதாக நிறுவப்பட்ட போக்குவரத்துக்கான பிரதி பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு பெற்று எமது கல்லூரிக்கு பெருமை தேடித்தந்தவர். தற்போது இவர் போக்குவரத்துக் கல்வி நிறுவனம் எனும் நிறுவனத்தின் ஸ்தாபகராகவும் போக்குவரத்து விடயமான பல கருத்தரங்குகள், வகுப்புக்கள் நடாத்துவதுடன், இது விடயமாக பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். 2019ஆம் ஆண்டு, இலங்கை சனாதிபதியினால் இவர் **''லங்காதிலகர்''** எனும் பட்டம் அளித்து கௌரவிக்கப்பட்டுள்ளார்.

உறுப்பினர் : **திரு ரீ கணணாதலிங்கம்** அவர்கள் - **உப தலைவர்,** பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை, முன்னாள் இலங்கை சுங்கத் திணைக்கள பிரதிப் பணிப்பாளரும் ஆவார்.

உறுப்பினர் : **திரு எஸ் சிவலோகநாதன் - செயலாளர்,** பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை, ஓய்வு பெற்ற புடைவைக் கைத்தொழில் திணைக்கள பிரதிப் பணிப்பாளரும் ஆவார்.

உறுப்பினர் : **திரு. ரீ மஹாலிங்க ஐயர், பொருளாளர்,** பரமேசுவரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை, ஓய்வு பெற்ற முன்னாள் தொலைத்தொடர்பு பொறியியளாளர், U.A.E - Abu Dhabi

உறுப்பினர் : **திரு ரீ எஸ் சிவசுப்பிரமணியம்,** பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர், ஓய்வு பெற்ற மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டாளர்.

உறுப்பினர் : **பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள்,** யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர் : **பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை** அவர்கள் - யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர். யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலய நிர்வாக அங்கத்தவரும் ஆவார்

உறுப்பினர் : **கௌரவ D.M. சுவாமிநாதன்** அவர்கள் - முன்னாள் அமைச்சரும், பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலின் அறங்காவலரும், சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் குடும்ப வாரிசும் ஆவார்.

உறுப்பினர் : **திரு இளஞ்சேய் வேந்தனார்** - இவர் பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர். இலண்டனில் கணக்காளராகப் பணிபுரிபவர். இந்த நூற்றாண்டு விழா மலர்க் குழு ஒருங்கிணைப்பாளராயும் உள்ளார்.

உறுப்பினர் : **பேராசிரியர் சுபதினி ரமேஸ்** அவர்கள், யாழ் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறையின் முன்னாள் தலைவராகவும், மொழியியல் பேராசிரியராகவும் விளங்குகிறார். ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு மேலாக கற்பித்தலை மேற்கொண்டு வரும் இவர் பல முதுகலைமாணி, கலாநிதிப்பட்ட ஆய்வுகளுக்கு வழிகாட்டியாகவும் இருந்து வருகிறார்.

உறுப்பினர் : **திருமதி இரஞ்சனாதேவி கலா பரமேஸ்வரன்** - முன்னாள் பரமேசு வராக் கல்லூரி பழைய மாணவி, யாழ்பாணப் பல்கலைக்கழக நூலக உதவியாளராக பணியாற்றியுள்ளார்.

உறுப்பினர் : **திருமதி கலையரசி சின்னையா** அவர்கள். முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ் மொழி பேராசிரியராகக் கடமையாற்றிய இவர், தனது ஆரம்பக் கல்வியை பரமேசுவராக் கல்லூரியில் பயின்றவர். அத்துடன் இவர் பரமேசுவராக் கல்லூரியின் புகழ்பெற்ற காலம்சென்ற வித்துவான் வேந்தனார் அவர்களின் புத்திரியுமாவர்.

உறுப்பினர் : **திரு கனக நமநாதன்** - இவர் ஓர் சட்டத்தரணியும் பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ் கிளையின் தலைவருமாவர்.

உறுப்பினர் : **திரு யோக தயாளன்** - அதிபர், திருநெல்வேலி பரமேசுவரா வித்தியாலயம். இப்பாடசாலையே எமது சங்கத்தின் பெரு முயற்சியால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட கல்லூரியாகும்.

உறுப்பினர் : **திரு ஆர். சிவசுப்பிரமணியம்** அவர்கள் - இவர் ஓய்வு பெற்ற பொறியியலாளரும், பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழு அங்கத்தவருமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Centenary Vilazh Malar Committee Members

## பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர்க் குழு உறுப்பினர்கள்



செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்
தலைவர்



**பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பான உறுப்பினர்கள்**

திருவாளர்கள்- ச.சிவலோகநாதன், மஹாலிங்க ஐயர், ரீ. எஸ். சிவசுப்பிரமணியம், T. பேரின்பநாயகம், ரீ. கணநாதலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சிறிசற்குணராஜா
யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்



பேராசிரியர்
பொன். பாலசுந்தரம்பிள்ளை



கௌரவ டீ. எம். சுவாமிநாதன்



திரு இளஞ்சேய் வேந்தனார்



பேராசிரியர் சுபதினி ரமேஸ்



திருமதி இரஞ்சனாதேவி
கலா பரமேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி கலையரசி
சின்னையா



திரு. கனக. நமநாதன்



திரு. யோக. தயாளன்



திரு.ஆர். சிவசுப்பிரமணியம்

**Parameshvara College Old Boys Association - Colombo**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா
# மலர்க் குழுச் செயலாளரின் செய்தி

பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு தொடக்க நாள் தினமான 22-08-2021 அன்று, இக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையால் பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர் ஒன்றினை நாம் அச்சிடுவது சாலச் சிறந்தது என ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டது. எமது பரமேசுவரா நூற்றாண்டு விழா மலர் பிரசுரிக்கப்படல் வேண்டும் என முன் மொழிந்தவர் பழைய மாணவரான திரு இளஞ்சேய் வேந்தனார். ஆரம்பம் முதல் இன்று வரை அயராது இதற்கான ஆக்க பூர்வமான செயற்பாடுகள் அனைத்திலும் பங்குபற்றிய பெருமை இவருக்கே உரியது.

பின்னர் 12-09-2021ஆம் திகதி நடாத்தப்பட்ட பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் 16 பேர் அடங்கிய விழா மலரக் குழு அங்கத்துவர்கள் தெரிவு செய்யப் பட்டனர். இவ்விழா மலரின் வடிவமைப்பு விடயமாக இவ்விழாக் குழுத் தலைவர் மிகச் சிறந்த ஆலோசனைகளை ஆரம்பத்திலேயே வழங்கி இருந்தமையினால், அது எமது முயற்சிக்கு பேருதவியாக இருந்தது என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பரமேஸ்வராக் கல்லூரி 53 வருடங்கள் பாடசாலையாகவும், 47 வருடங்கள் பல்கலைக்கழகமாகவும் இயங்கியபடியால், எமது கல்லூரி பழைய மாணவர்களையும், பல்கலைக்கழக நிர்வாகத்தினரையும் ஒன்றினைத்து மலர்க் குழு அமைத்தோம். அவர்களின் விபரங்கள் இம் மலரின் பிறிதொரு பகுதியில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

இந்த நூற்றாண்டு விழா மலர் அச்சிடுவதற்கான செலவை ஈடு செய்வதற்காக இலங்கை வாழ் பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்களும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற கல்லூரி பழைய மாணவர்களும் பெருமனத்துடன் நன்கொடை வழங்கினர். 2022-07-01 வரை இலங்கை ரூபா 1,337,874/- எமது கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் வங்கிக் கணக்கில் வைப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் பொருளாளர் அறிக்கையில் தரப்பட்டுளளது. நன்கொடையாளர்களுக்கு எமது பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்க விரும்புகிறேன். அத்துடன் இம் மலரில் பிரசுரிப்பதற்காக நல்ல தரத்திலான கட்டுரை ஆக்கங்கள் மற்றும் அரிதான படங்கள் ஆகியவற்றைத் தந்துதவியோரிற்கும் எமது நன்றிகளை தெரிவிப்பது எமது கடமை.

இந்த நூற்றாண்டு விழா மலரை அச்சிடும் பொறுப்பை வெள்ளவத்தையில் உள்ள குமரன் பதிப்பகத்தாரிடம் ஒப்படைத்து விட்டோம். அண்மைக் கால இலங்கையின் அன்னியச் செலவாணி பற்றாக்குறை எமது பதிப்பகத்தாரையும் பாதித்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிடத் தேவையான கடதாசி வகைகளின் பற்றாக் குறையும், அதன் கொள்வனவு விலையும் வெகுவாக அதிகரித்துள்ளன.

எமது மலர் அச்சிடல் விடயமாக பேராசிரியர் திருமதி சுபாதினி ரமேஸ் அவர்கள் மலர் குழு சார்பாக, குமரன் பதிப்பகத்தாருடன் தொடர்பு கொண்டு மலர் வெளிவர ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்துள்ளார். திரு இளஞ்சேய் அவர்களும் இம் மலரினை பூர்த்தி செய்வதில் பெரும் பங்காற்றியுள்ளார். இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன், சேர் பொன் இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு விடயமாக திரு வைத்திலிங்கம் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட இரு பாகமுள்ள நூலை, மீள்பதித்து ஒரு நூலாக அச்சிடுவதற்கும் எமது பழைய மாணவர் சங்கம் விரும்பியது. இதற்காக 1,200 பக்கங்கள் கொண்ட 300 பிரதிகள் அச்சிடுவதற்கு, இலங்கை ரூபா 752,000/- தேவை என 2021 ஒக்டோபர் மாதமளவில் தெரிவித்தினர். எனினும் இன்றைய நிலவரத்தில் இது ரூபா 11.3 இலட்சமளவில் தேவைப்படுவதனால், தற்போதைக்கு இதனை அச்சிடுவதை பின் போடுவதென தீர்மானித்துள்ளோம். நூற்றாண்டு மலர் வெளியீடுகள் நிறைவுற்ற பின்னர், இது குறித்து ஆராயப்படும் என்பதனை அறிவிக்க விரும்புகிறேன்.

இவ்விழா மலரை அச்சிட்டு வெளியிடுவதற்கு எமக்கு ஒத்தாசை வழங்கிய சகல நல்ல உள்ளங்களுக்கும் அயராது உழைத்த விழா மலர் குழு உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை இத்தருணத்தில் பதிவிடக் கடமைப்பட்டுள்ளேன்.

***ச. சிவலோகநாதன்***
செயலாளர், நூற்றாண்டு விழா மலர் குழு
26-07-2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்

**PARAMESHVARA COLLEGE**
**OLD BOY'S ASSOCIATION COLOMBO**

No. 1A, Alexandra Terrace, Colombo - 06. Tel/FaX: 011 2597043
Email: parameshvara2208@gmail.com

# பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொருளாளரின் அறிக்கை

பரமேசுவராக் கல்லூரி நூற்றாண்டு விழாவை ஒட்டி ஓர் நூற்றாண்டு விழா மலர் அச்சிட்டு வெளியிடுவதற்கான தீர்மானம் 2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதமளவில் எமது பழைய மாணவர் சங்க கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இம் மலரை அச்சிடுவதற்கான பொறுப்பை வெள்ளவத்தையில் அமைந்துள்ள குமரன் பதிப்பகத்தாருக்கு விலைமனு கோரலுக்கு அமைவாக வழங்கப்பட்டது. 2021 ஒக்டோபர் மாதத்தில் 48 கலர் படங்கள் அடங்கலாக 256 பக்கங்கள் கொண்ட 300 பிரதிகள் அச்சிடுவதற்கு இலங்கை ரூபா 335,000/- செலவாகும் என அறிவித்தார்கள். பின்னர் 2022 மாசி மாதமளவில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சனைகள், இந்த செலவை 20 சதவீதமாக உயர்த்தியது. இறுதியாக 2022 ஆடி மாதமளவில் இச் செலவு ரூபா 496,000/-ஆக உயர்ந்தது.

அத்துடன், சேர் பொன் இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு விடயமாக திரு வைத்திலிங்கம் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட இரு பாகமுள்ள நூலை, மீள்பதித்து ஒரு நூலாக அச்சிடுவதற்கும் எமது சங்கம் விரும்பியது. இதற்காக 1,200 பக்கங்களைக் கொண்ட 300 பிரதிககள் அச்சிடுவதற்கு, ரூபா 752,000/-தேவை என 2021 ஒக்டோபர் மாதமளவில் அறிவித்தனர். இன்றைய நிலவரத்தில் இது 11.3 இலட்சமளவில் தேவைப்படுவதனால், தற்போதைக்கு இதனை அச்சிடுவது இல்லை எனத் தீர்மானித்துள்ளோம். நூற்றாண்டு மலர் வெளியீடுகள் நிறைவுற்ற பின்னர் இது குறித்து ஆராயப்படும் என்பதனை அறிவிக்க விரும்புகிறேன்.

இதற்கான நன்கொடைகளை வழங்குமாறு எமது பழைய மாணவர்களுக்கு வெகுஜன ஊடகங்கள் வாயிலாக அறிவித்தோம். அதற்கமைவாக இவற்றை அச்சிடுவதற்கு கல்லூரி பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் மனமுவந்து அனுப்பிய நன்கொடை கள் (2022-07-01 வரை) இலங்கை ரூபா. 1,337,874/= . அவற்றின் விபரங்கள் இவ் அறிக்கையின் இறுதியில் தரப்பட்டுள்ளன. இவற்றை தந்துதவிய சகலருக்கும் பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் சங்கத்தின சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இது வரை குமரன் பதிப்பகத்தாருக்கு முற்பணமாக ரூபா 255,000/- வழங்கியிருக்கின்றோம்.

எமது கல்லூரி நிலப்பரளவில் ஸ்தாபிக்கப்பட்ட பரமேஸ்வரன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நடைபெறும் தினமான 2022-07-06ஆம் திகதிக்கு முன்னர் இந்த நூற்றாண்டு விழா மலரை அச்சிட்டு வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதும், எதிர்பாராத பாரிய பின்னடைவுகளால் அன்றைய தினத்திற்கு முன்னர் வெளியிட முடியாமல் போனதை ஒட்டி கவலை அடைகின்றோம். எவ்வாறாயினும், இம் மலரை விரைவில் அச்சிட்டு வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதன் தொடர்ச்சியாக சேர் பொன் இராமநாதனின் நூலையும் மீள்பதிப்பு செய்வதற்கு முயற்சி செய்வோம் என இத்தருணத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

**த. மஹாலிங்க ஐயர்**
பொருளாளர்
பரமேசுவராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்கொடைகள் அனுப்பியவர்களின் விபரங்கள்

| | பெயர் | நாடு | இலங்கை-ரூபா |
|---|---|---|---|
| 1 | திரு. த. பேரின்பநாயகம் | இலங்கை | 25,000 |
| 2 | திரு. ரீ. கணநாதலிங்கம் | இலங்கை | 10,000 |
| 3 | திரு. ச. சிவலோகநாதன் | இலங்கை | 10,000 |
| 4 | திருமதி மீரா ஆர்னல்ட்- தந்தை திரு சண்முகநாதன் சார்பாக | ஐக்கிய இராஜ்ஜியம் | 50,000 |
| 5 | திரு உதயகுமார் | அவுஸ்திரேலியா | 7,500 |
| 6 | திருமதி கலையரசி சின்னையா | அவுஸ்திரேலியா | 30,000 |
| 7 | திரு சாரா ஜெயரத்தினம் | அவுஸ்திரேலியா | 15,000 |
| 8 | திருமதி இரஞ்சனா பரமேஸ்வரன் | அவுஸ்திரேலியா | 18,750 |
| 9 | திரு த. மஹாலிங்க ஐயர் | இலங்கை | 10,000 |
| 10 | திரு ரீ. எஸ். சிவசுப்பிரமண்யம் | இலங்கை | 10,000 |
| 11 | திரு. ரீ. ஸ்ரீதரன் | ஐக்கிய அமெரிக்கா | 440,184 |
| 12 | திரு. புவனேந்திரன் | ஐக்கிய இராஜ்ஜியம் | 25,000 |
| 13 | திரு. பிரேம்குமார் | ஐக்கிய இராஜ்ஜியம் | 55,840 |
| 14 | திரு இளஞ்சேய் வேந்தனார் | ஐக்கிய இராஜ்ஜியம் | 30,400 |
| 15 | திரு ரகுராஜ் | ஐக்கிய இராஜ்ஜியம் | 100,000 |
| 16 | திரு. கே. மகேந்திரன் | இலங்கை | 10,000 |
| 17 | திரு. கு. சச்சிதானந்தம் | ஐக்கிய இராஜ்ஜியம் | 30,000 |
| 18 | டாக்டர். அம்பிகாபதி ( அம்பி) | ஐக்கிய இராஜ்ஜியம் | 100,000 |
| 19 | திரு எஸ் அருளானந்தன் | ஐக்கிய இராஜ்ஜியம் | 30,200 |
| 20 | திரு உமாகாந்தன் | இலங்கை | 10,000 |
| 21 | ஓர் நலன்விரும்பி | இலங்கை | 10,000 |
| 22 | திருமதி லோகநாயகி பத்மநாதன் | ஐக்கிய இராஜ்ஜியம் | 50,000 |
| 23 | திரு கனக நமநாதன் | இலங்கை | 50,000 |
| 24 | திரு D.M. சுவாமிநாதன் | இலங்கை | 200,000 |
| 25 | திரு எஸ். சர்வானந்தன் | இலங்கை | 10,000 |
| | **01-07-2022 வரை வழங்கப்பட்ட நன்கொடைகள்** | மொத்தம் | 1,337,874 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் ஒருங்கிணைப்பாளர் செய்தி

## பரமேசுவராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலராக்கப் பணியினில்...

பரமேசுவராக் கல்லூரி தனது நூற்றாண்டு நிறைவினை இவ்வாண்டு கொண்டாடுகின்றது. சேர். பொன் இராமநாதப் பெருவள்ளலால், அவரின் மனைவி திருமதி லீலாவதி அம்மையாரின் விருப்பில் அமைக்கப்பட்ட, இப்புகழ் பூத்த கல்லூரியின் பழைய மாணவன் நானென பெருமையுடன் கூறிக் கொள்வேன். 22.08.1921 ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில், இக்கல்லூரியின் இறுதிக் காலப்பகுதியில் (1963-1970), என் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். இக் கல்லூரியின் விசாலமான வகுப்பறைகள், அகன்ற நீண்ட தாழ்வாரங்கள், பெரிய விளையாட்டு மைதானம், மரவேலைப் பகுதி, சிற்பப் பகுதி, நாயர் சிற்றுண்டிச் சாலை, மரங்களிற்குக் கீழ் கற்கள் வட்டவடிவில் போடப்பட்டு இயற்கைச் சூழலில் கல்வி கற்றல் போன்ற என்னோரன்ன வசதிகள், வாய்ப்புக்களை அனுபவித்து, சிறு வயதிலேயே என் ஆளுமையை வளர்த்துக் கொள்ள, இக்கல்லூரி பேருதவி புரிந்துள்ளது. இக் கல்லூரியில் என் தந்தையார் வேந்தனார் அவர்கள் 22 வருடங்கள் கல்வி கற்பித்துள்ளார்.

பரமேசுவராக் கல்லூரியின் நூற்றாண்டினைக் கொண்டாட வேண்டுமென்ற என் விருப்பை, நான் 2020 ஆவணி, யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனத்தின் போது, யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் சிலருடன் பகிர்ந்து கொண்டேன். பின்பு, 18-08-2021 அன்று, பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்க - கொழும்புக் கிளைச் செயலாளர் திரு. ச. சிவலோகநாதன் அவர்கள், 22.08.2021 வரவுள்ள நூற்றாண்டு தொடக்க நாளை முன்னிட்டு பத்திரிகைகளுக்கு அவரால் அனுப்பி வைக்கப்பட்ட இரு கட்டுரைகளை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

இப் பின்னணியில் 22.08.2021 பரமேசுவராக் கல்லூரி நூற்றாண்டு தினத்தன்று, நான் திரு சிவலோகநாதனிற்கு தொலைபேசி அழைப்பு விடுத்துக் கதைத்தேன். அப்போது அவர், எமது பரமேசுவராக் கல்லூரியின் நூற்றாண்டு பற்றி, தான் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்த கட்டுரைகள், ஒரு பத்திரிகையிலும் வரவில்லை என்றும், எந்தப் பத்திரிக்கையும் பரமேசுவராக் கல்லூரி நூற்றாண்டு தொடக்க தினம் பற்றிக் குறிப்பிடவில்லை எனவும் கவலையுடன் கூறினார்.

உடனடியாக அவரை, அவரின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை உறுப்பினர்களுக்கு, ஒரு மெய்நிகர் கலந்துரையாடலில் கலந்து கொள்ள அழைப்புக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டேன். ஒரு மணி இடைவெளியில் பழைய மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் - கொழும்புக் கிளை உறுப்பினர்கள் ஆறு பேரும் நானும் ஒரு மெய்நிகர் கலந்துரையாடலை நிகழ்த்தினோம். அக்கலந்துரையாடலின் போது, பரமேசுவராக் கல்லூரி நூற்றாண்டு விழா நடாத்தப்பட வேண்டும், நூற்றாண்டு விழா மலர் வெளியிடல் வேண்டும், இவற்றை கொழும்பு பழைய மாணவர் சங்கம் பொறுப்பேற்று நடத்த வேண்டுமென வேண்டுகோள் விடுத்தேன். உடனடியாக சங்கத் தலைவர் திரு பேரின்பநாயகமும், கலந்து கொண்ட மற்றைய உறுப்பினர்களும் ஏகமனதாக அதனை ஏற்றுக் கோண்டனர். இதன் தொடர்ச்சியாக 24.08.2021லும் ஒரு மெய்நிகர் கலந்துரையாடல் நிகழ்த்தி, தொடர்ந்து பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளையினர், யாழ் பல்கலைக்கழகம் சார்ந்த சிலர், கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோருடன் ஒரு மெய்நிகர் கலந்துரையாடல் 29.08.2021 நடாத்தப்பட்டது. அங்கு மலர் வெளியீடு சம்பந்தமான ஒரு மலர்க்குழு அமைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

பரமேசுவராக் கல்லூரி நூற்றாண்டினை பொது மக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கில், செயலாளர் திரு ச. சிவலோகநாதனால் முன்னர் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு பிரசுரிக்கப்படாதிருந்த கட்டுரையை, ஈழநாடு பத்திரிகையில் 28.08.2021 வர ஒழுங்குகள் செய்தோம். கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களிடம் நூற்றாண்டு பற்றிய ஒரு கட்டுரையைப் பெற்று, அதனை 5.09.2021 தினக்குரல் பத்திரிகையில் வர வழி செய்தோம். இதற்கு எமது பாடசாலை பழைய மாணவர் பாரதி அவர்கள் உதவி புரிந்தார்கள். இப் பத்திரிகைக் கட்டுரைகள் மூலம், பரமேசுவராக் கல்லூரி நூற்றாண்டு பற்றி, எம் மக்கள் அறிந்திட வாய்ப்பேற்பட்டது.

இதன் பின்னணியில் நாம் 29.09.2021 ஒரு மலர்க் குழுவை நியமிக்க, மெய்நிகர் நிகழ்வொன்றை நிகழ்த்தினோம். அன்று கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களைத் தலைவராகத் தெரிந்தோம். 16 உறுப்பனர்கள் மலர்க் குழுவில் இணைக்கப்பட்டார்கள். இம் மலர்க்குழுவின் ஒருங்கிணைப்பாளராக நான் கடந்த 10 மாதங்களாக செயற்பட்டு வருகின்றேன். இம் மலர்க்குழு 29-09-2021 இலிருந்து 24-07-2022 வரை பல மெய்நிகர் கலந்துரையாடல்களை நிகழ்த்தி, இம் மலரின் ஆக்கப் பணியில் உழைத்தது.

இந்த மலர்க்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்ற கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள், 29-09-2021 நடந்த முதல் மலர்க்குழுக் கூட்டத்திலேயே, இவ் விழா மலரின் வடிவமைப்பு பற்றி விரிவாக எடுத்துக் கூறியியிருந்தார். இதனை அடித்தளமாகக் கொண்டு விழா மலரிற்கான ஆக்கங்களை பெற்று மலரை அச்சிடும் பொறுப்பை, இம் மலர்க் குழுவில் அங்கம் வகிக்கும் கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் ஐவரிடம் கொடுத்தோம். அவர்களும் ஐப்பசி 2021 இல், கொழும்பில் உள்ள குமரன் பதிப்பகத்தாரிடம் இவ்விழா மலர் அச்சிடும் பொறுப்பைக் கொடுத்தார்கள். அன்றிலிருந்து பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத் தலைவர் திரு பேரின்பநாயகம், செயலாளர் திரு சிவலோகநாதன், உப தலைவர் திரு கணநாதலிங்கம் ஆகியோர் பல கட்டுரைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியும், பெற்றும் விழா மலரிற்கான தொகுப்பைச் செய்தனர். மேலும், கல்லூரி ப.மா.ச கொழும்புக் கிளைத் தலைவர் திரு.பேரின்பநாயகம் அவர்கள், தன்னிடமிருந்த, பாடசாலை பல்கலைக்கழகமாதல், திருநெல்வேலி இ.த.க பாடசாலை, பரமேஸ்வரா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டமை போன்ற நிகழ்வுகளின் அரிய படங்களை எமக்குத தந்துதவியிருந்தார். பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்களிடம், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை சம்பத்தப்பட்ட படங்கள், கட்டுரைகள் என்பன செயலாளர் திரு சிவலோகநாதனால் கோரப்பட்டன. சிலர் படங்கள் அனுப்பி உதவினார்கள். குறிப்பாக இலண்டனில் இருந்து பாடசாலை பழைய மாணவரான திரு பிரேம்குமார், டாக்டர் அம்பிகாபதி ஆகியோர், தரமான படங்கள் சிலவற்றை தந்து உதவினார்கள். நாட்டின் 'கோவிட்' சூழல், அரசியல் குழப்பங்கள் இவற்றிக்கிடையில், பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளையினர், இந்த ஆக்கங்களை எடுக்க மிகவும் சிரமப்பட்டார்கள். இந் நிலையில் இவ் விடயங்களில் மிகவும் கருத்துடன் செயற்பட்டு வந்த திரு.சிவலோகநாதன் அவர்கள் டிசம்பர் 2021 தொடக்கத்தில் அவுஸ்திரேலியா நாட்டுக்குச் சென்று, அங்கேயே தங்க வேண்டி ஏற்பட்டது. எமக்கு மலர் அச்சிட நிதித் தேவையும் இருந்தது. அவுஸ்திரேலியா சென்றுவிட்ட செயலாளர் அவர்கள், எமது நிதித் தேவை பற்றி கவலைப்பட்டு, தை 2022இல் எம்முடன் தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். இதன் காரணத்தினால், நாம் உலகெங்கும் பரந்து வாழும் எம் பழைய மாணவர்களிடம் இந்த நூற்றாண்டு விழா மலர், சேர் பொன் இராமநாதனின் வரலாற்று நூல் மீள்பதிவு இவற்றிற்கான நிதி கேட்டு, காணொளிப் பதிவுகள், ஒலி நாடாக்களை பகிர்ந்து கொண்டோம். தை 31, 2022 இற்கிடையில், எமக்கு இலங்கை ரூபா 11 இலட்சத்திற்கும் கூடுதலான நிதி கிடைத்தது. இந்தக் காரணத்தினால், பழைய மாணவர் சங்க அங்கத்தினர், சற்று சுறுசுறுப்புடன் மலரிற்கான ஆக்கங்களைப் பெற்றுத் தொகுத்து, அவற்றை குமரன் பதிப்பகத்தரரிடம் கையளித்தார்கள். எமக்கு மாசி 2022 இறுதியில் மலரின் முதல் நகல் கிடைத்தது. துரதிட்டவசமாக, நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களினால், நாம் பல தடைகளை எதிர் கொள்ள வேண்டி வந்தது. பழைய மாணவர் சங்கத்திற்கும் குமரன் பதிப்பகத்தாரிற்கும் இடையிலான, ஆவணப் பரிவர்த்தனை தடைப்பட்டது.

இப் பின்னணியில், நாம், எம் மலர்க்குழு உறுப்பினரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறை பேராசிரியருமான திருமதி சுபதினி ரமேஸ் அவர்களை, மலர்க் குழு சார்பாக, குமரன் பதிப்பகத்தாருடன் தொடர்புகொண்டு உதவும்படி கேட்டோம். அவரும் பெருமனதோடு ஒத்துக் கொண்டார். அத்துடன் யாழ் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் இருந்து, இந்த விழா மலரின் ஆக்கங்களுக்கு, பயனுள்ள சில ஆவணங்களை, குறிப்புக்களை எமக்குப் பெற்றுத் தந்தார். மேலும் கடந்த 5 மாதங்களாக மலராக்கப் பணியில் மிகவும் ஈடுபாட்டுடன் பங்குகொள்வதுடன், இம் மலரின் தமிழ் - ஆங்கில எழுத்துப் பிழைகளைப் பார்க்கச் சிலரை நியமித்தும் உதவியுள்ளார். இன்று இம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் வெளிவர பெரும் பங்கினை அவர் எமக்கு வழங்கியுள்ளார் என்பது மிகையில்லை. சேர். பொன். இராமநாதனால் உருவாக்கப்பட்ட பரமேசுவராக் கல்லூரி, கடந்த 48 வருடங்களாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக இயங்கி வருவதை நாமெல்லோரும் நன்கறிவோம். யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகம், பரமேசுவராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர் உருவாக்கத்தில் எமக்கு கணிசமான உதவியை வழங்கவில்லையே என்ற குறை எமக்கிருந்தது. இதனை அப் பல்கலைக்கழகத்தில் மாணவியாக, பேராசிரியராக கடந்த 40 வருடங்களாகச் செயற்படும் திருமதி சுபதினி ரமேஸ் அவர்களின் பங்களிப்பு, குறைத்துள்ளது என்றே கூறலாம்.

இவ் விழா மலரை பூர்த்தி செய்யும் பணியில், கடந்த இரு மாதங்களாக கொழும்பு பழைய மாணவர் சங்க செயலாளர் திரு சிவலோகநாதன், அங்கத்தவர் திரு T.S. சிவசுப்பிரமணியம், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியை திருமதி சுபதினி ரமேஸ், இவர்களுடன் பாடசாலையின் பழைய மாணவனாக, மலர்க்குழு ஒருங்கிணைப்பாளராக, இந்த மலரின் தமிழ் ஆக்கங்களை இறுதியாகப் பிழை பார்த்து நிறைவு செய்யும் பணியில், நானும் பங்கு கொண்டதில் மன நிறைவடைகின்றேன்.

பரமேசுவராக் கல்லூரி 1921 தொடங்கி, படிப்படியாக வளர்ச்சி அடைந்து, 1934-59 காலப்பகுதியில், வட மாகாணத்தின் தலை சிறந்த பாடசாலையாகத் திகழ்ந்துள்ளது. கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, சமயம், தமிழ் விழாக்கள் என பல துறைகளில் கோலோச்சி நின்றது. பெரும் பெரும் புகழ்பெற்ற வித்துவான்கள், பண்டிதர்கள் இப்பாடசாலையின் அதிபர்களாக, ஆசிரியர்களாக இருந்து பெரும் பணி ஆற்றியுள்ளார்கள். சைவ-வேத - தமிழ் விற்பன்னர்கள் பலர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு ஆசிரியர்களாக நியமிக்கப் பட்டுள்ளார்கள். இவர்களின் ஆசிரியப் பணியினால் பல தலைசிறந்த கல்விமான்களை, ஒழுக்க சீலர்களை பரமேசுவராக் கல்லூரி உருவாக்கி, எமது இனத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளது.

யாழ்ப்பாணத்தில், திருநெல்வேலியில் 1921- 1974 வரை, 53 வருடங்கள் இயங்கி, பல்லாயிரக்கணக்கான நன் மாணாக்கர்களை எமது சமூகத்திற்குத் தந்திட்ட இக்கல்லூரி, 1974ஆம் ஆண்டு பல்கலைக்கழகமாக அரசினால் எடுக்கப்பட்டபோது, அது 'இராமநாதன் பல்கலைக்கழகம்' என்ற பெயரில் இயங்கி இருக்கலாம் என்ற ஆதங்கம் எம்மில் பலருக்குண்டு. மேலும் பரமேசுவராக் கல்லூரி 1974ஆம் ஆண்டு மூடப்படும்போது, இப் பாடசாலையின் பெயரில் ஒரு மாற்றுப் பாடசாலை அமைத்துத் தந்திடாமல் அரசு நடந்து கொண்டது, மாற்றாந்தாய் மனப்பான்மையினைக் காட்டுவது போல் நம்மில் பலர் உணர்ந்தோம். இக் குறையினைத் தீர்த்திட, 2012 ஆம் ஆண்டில், திருநெல்வேலியிலுள்ள ஓர் ஆரம்பப் பாடசாலையை, 'பரமேசுவரா வித்தியாலயம்' எனப் பெயர் மாற்றம் செய்து, அதன் திறப்பு விழாவைச் சிறப்பாக செய்த கொழும்பு பழைய மாணவர் சங்கமும், அதன் தலைவர் திரு பேரின்பநாயகம் அவர்களும் மிகவும் பாராட்டிற்குரியவர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூற்றாண்டு நிகழ்வுகளில், பரமேசுவராக் கல்லூரியின் வளமிக்க - வசதிமிக்க - அழகுமிக்க - 25 ஏக்கர் நிலப்பரப்பிலமைந்த கட்டடங்களை, கடந்த 48 வருடங்களாக பல்கலைக் கழகமாக பாவித்து அதில் படித்து பட்டம் பெற்றோர், ஈடுபாட்டுடன் கலந்து சிறப்பிப்பார்களென எதிர்பார்த்தோம். ஆனால் அவ்வெண்ணம் பெரிதாக நிறைவேறவில்லை என்றே கூறவேண்டியுள்ளது. ஒரு பாடசாலை மூடப்பட்டு 47 வருடங்களின் பின்னர், அதன் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் பெரும்பான்மையினோர் காலமாகி விட்ட நிலையில், பழைய மாணவர்களாக உள்ளோர் 60-90 வயது இடைப்பட்டவர்களாக உள்ள பின்னணியில், இந்த நூலை நாம் பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளையினரின் பெயரில் வெளியிடுகின்றோம். இச் சங்கத்திலுள்ள பெரியவர்கள், தம் சக்திக்கேற்பட்ட வகையில், பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்களின் விபரங்களைப் பெற்று. முடிந்தவரை அவர்கள் பற்றிய கட்டுரைகளில் எடுக்கக்கூடியதை எடுத்தும் தாமும் எழுதியும் இம் மலரை வெளியிடுகின்றார்கள். இம் மலராக்கப் பணியில் கொழும்பு பழைய மாணவர் சங்க செயலாளராகவும், விழா மலர்க் குழு செயலாளராகவும் உள்ள திரு. சிவலோகநாதன் அவர்களின் பணி மிகவும் விதந்துரைக்கப்பட வேண்டியதாகும். பாடசாலை ஆசிரியர்கள் பலரினைப் பற்றிய கட்டுரைகள் பெறமுடியாதவிடத்து, அவரே பலரைப் பற்றி சிறு சிறு குறிப்புகளாகத் தந்து உதவியுள்ளார்.

கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர், தம் பாடசாலையான பரமேசுவராக் கல்லூரியை விட்டு விலகி 60 வருடங்களுக்கும் மேலான நிலையில், 47 வருடங்களின் முன்னர் மூடப்பட்ட தம் பாடசாலையின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடவும், விழா மலர் வெளியிடவும் முன்வந்துள்ளார்கள். தமது எண்பது வயதினைத் தாண்டிய முதுமைப் பிராயத்திலும், மனதில் உறுதியுடனும், உள்ளத்தில் உணர்வுடனும், இதயத்தில் நன்றியுடனும் தம் கல்லூரி அன்னைக்கு விழாவெடுக்க முன்வந்து, தமது உழைப்பையும், ஒத்துழைப்பையும் வழங்கிய, பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினர்க்கு, என் இதயத்து நன்றிகள். அவர்களுடன் நானும், என் கல்லூரி அன்னைக்கு, என் தந்தையின் புகழ் பரவிட வித்திட்ட பரமேசுவராக் கல்லூரிக்கு, அதன் நூற்றாண்டு விழா மலராக்கப் பணியினில், ஒருங்கிணைப்பாளராக இருந்து, பணியாற்றக் கிடைத்ததை, இறையருளின் செயலாகக் கருதி நன்றி கூறுகின்றேன்.

இந்த நூற்றாண்டு விழா மலர் ஆக்கப் பணிகளில், தம் கருத்துக்களை வழங்கி உதவிட்ட மலர்க் குழுவினருக்கும், அதன் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களுக்கும், ஆக்கங்கள் எழுதியும், எடுத்தும் தந்த அன்புள்ளங்களுக்கும், படங்கள் பெற்றுத்தந்த பழைய மாணவர்களுக்கும், நிதியினைத் தந்துதவிய பரமேசுவராக் கல்லூரி ஆதரவாளர்களுக்கும், தமிழ், ஆங்கில எழுத்துப் பிழைகளை திருத்தம் பார்த்து உதவிய அன்பர்களுக்கும், நூலினை நாட்டின் அசாதாரண சூழ்நிலையிலும், நேரகாலத்தில் அழகாக அச்சிட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திட்ட குமரன் அச்சகத்தினர்க்கும், இந்த நூற்றாண்டு ஆக்கப் பணியில் எம்முடன் இதயசுத்தியுடன் ஈடுபட்ட அனைத்து நல்லிதயங்களுக்கும், நன்றியினை அன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த நூற்றாண்டு விழா மலரினை, ஒரு தரமிக்க ஆவணப் பதிப்பாக வெளியிட நாம் விரும்பினோம். ஆனால் நாட்டு நிலைமைகள், 'கோவிட்' பாதிப்பின் பிற் தடங்கல்கள், போன்ற பல பின்னடைவுகளினால், முடிந்தவரை எம் சக்திக்குட்பட்டு ஒரு தரமான விழா மலராகக் கொடுத்துள்ளோம். இவ்விழா மலர் வருங்காலத்தில், பரமேசுவராக் கல்லூரியின் வரலாற்றை, அதன் தாபகரான சேர் பொன் இராமநாதனின் வரலாற்றினை, இப் பாடசாலைக் கட்டட அமைப்பினை தீர்மானித்து வழிநடத்திய திருமதி லீலாவதி இராமநாதனின் வரலாற்றினை, ஆராய்ந்திட விரும்புவோரிற்கு. ஒரு உந்து சக்தி கொடுக்கும் நூலாக இருக்கும் என்பதே என் கணிப்பு. நன்றி!

**அன்புடன் வேந்தனார் இளஞ்சேய்** AFA, MIPA
மலர் குழு ஒருங்கிணைப்பாளர்
தலைவர் - வேலணை ஒன்றியம் - பிரித்தானியா (VO - UK)
தலைவர் - இலண்டன் ஆங்கிலோ தமிழ் சங்கம்
பழைய பெற்றோர் ஆசிரியர் சங்கம் (LATA - OPTA)
தலைவர், தாபகர் - வேந்தனார் கலைச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரி வரலாறு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு காணும் திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரி

*''பரம் பரஞ்சோதி பரனே போற்றி*
*சிந்தனைக்கரிய சிவமே போற்றி''*
*- திருவாசக வரிகள்*

1921 ஆம் ஆண்டு தொடக்கம் 1974 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் தினமும் காலை பிரார்த்தனைக் கூட்டத்தில் ஒலித்த இந்த வரிகள் அற்புதமானவை. சேர். பொன்னம்பலம் இராமநாதன் தான் நிறுவிய இராமநாதன் கல்லூரியிலும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் இந்த பாடல்களை நித்திய பிரார்த்தனையில் பாடவேண்டும் என்று கட்டளை விதித்திருந்தார்கள். அதன் பிரகாரம் இரண்டு கல்லூரிகளிலும் காலை பிரார்த்தனைக் கூட்டத்தில் தவறாமல் திருவாசகத்தின் உடைய இந்த பாவரிகள் பாடப்பட்டு தென்னாட்டுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்ற வரிகளோடு காலைப் பிரார்த்தனைக் கூட்டம் நிறைவு பெறுவது வழக்கம்.

1913ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரி இணுவிலிலே மிகப் பிரமாண்டமாக திறந்து வைக்கப்பட்டது. இணுவிலிலே செம்மண் பிரதேசத்தில் சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில் எல்லா வசதிகளோடும் கூடிய பெண்களுக்கான விடுதிச்சாலையுடன் நிறைவான ஒரு பாடசாலையாக இராமநாதன் கல்லூரி உருவாக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. பிரித்தானிய கவர்னர் முதல் பல பிரித்தானிய பெரும் அதிகாரிகள் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்ட விழாவில் சேர் பொன்னம்பலம் இராமநாதனின் கல்விச் சேவையைப் பாராட்டி இந்து சாதனம் என்று வெளிவந்து கொண்டிருந்த Hindu Organ என்று ஆங்கிலத்திலும் வெளிவந்த சைவபரிபாலன சபையின் பத்திரிகை, சிறப்பு மலராக இராமநாதனின் இராமநாதன் கல்லூரி திறப்பு விழாவை பெருமைப்படுத்தியது. 'பெண்களுக்காக விடுதிச்சாலையோடு இத்தகைய நவீன பாடசாலையை உருவாக்கிய இராமநாதன், ஏன் ஆண்களுக்கு ஒரு விடுதிச்சாலையோடு கூடிய ஒரு உன்னதமான கல்லூரியை உருவாக்கக்கூடாது' என்று இந்துசாதன ஆசிரியர் தன்னுடைய ஆசிரிய கருத்திலே கருத்து வெளியிட்டார்கள். 1913 ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரி திறப்பு விழாவில் வெளியிடப்பட்ட இந்துசாதனத்தின் கருத்தை ஆமோதித்து சேர் பொன்னம்பலம் இராமநாதன் இறைவனுடைய அருளினாலே விரைவில் ஆண்களுக்கும் இப்படி ஒரு பாடசாலையை நான் கட்டுவேன் என்று உறுதி அளித்தார்கள். அதன் பிரகாரம் ஆண்களுக்கான பாடசாலைக்கு நிலம் தேடுகின்ற நிகழ்ச்சி ஆரம்பமாகியது. நல்லைநகர் நாவலர் பெருமானோடும் நாவலர் வழி வந்தவர்களுடனும் மிகுந்த தொடர்புடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுக்கு, அவரது தூய பணிகளுக்கு நாவலர் குடும்பத்தவர்கள் நிலம் தேடும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இராமநாதன் அவர்களுக்கு உதவும் முகமாக நாவலர் குடும்பத்தவர்கள் ஆகிய மணியகாரன் முத்துக்குமாரு என்ற பெரியவர் ஆறுமுகநாவலரின் தாய்வழி உறவினர் சுப்பிரமணியம் என்ற பெரியார் ஊடாக அத்திக்குளம் என்ற பெயரில் சுமார் இருபத்திஆறு ஏக்கர் நிலப்பரப்பை திருநெல்வேலியில் ஆண்களுக்கான கல்லூரி அமைப்பதற்காக வாங்குவதற்கு ஒழுங்கு செய்தார்கள். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நிமிர்ந்து நிற்கும் அந்த வளவு 26 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட பனைவளம் நிறைந்த செம்மண் தோட்டவளமும் நிறைந்த ஒரு நிலமாகும். இந்த வளவுக்குள்ளே பெயர் குறிப்பிட முடியாத பற்றற்ற ஒரு முனிவரின் சமாதியும் அந்த காலத்தில் இருந்ததாக அறிஞர் கா.சி. குலரத்தினம் அவர்கள் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இருபத்தி ஆறு ஏக்கர் நிலத்தை வாங்கியே சேர் பொன் இராமநாதன் அவர்கள் 1916ஆம் ஆண்டு சுபவேளையில் ஆண்களுக்கான கல்லூரிக்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.

இராமநாதன் கல்லூரியை இணுவிலிலேயே அமைத்தபோது அங்கு கல்லூரி அமைப்பதற்காக இந்தியாவில் இருந்தும் கொழும்பில் இருந்தும் வந்த கட்டடக் கலைஞர்கள் மீண்டும் அழைக்கப்பட்டு கூடாரங்கள் திருநெல்வேலியில் அமைத்து அவர்கள் தங்கியிருந்து இந்தப் பாடசாலையை உருவாக்கினார்கள். 1916ஆம் ஆண்டு தொடக்கம் 1921ஆம் ஆண்டு வரை இந்த பிரமாண்டமான பாடசாலைக் கட்டுமான வேலைகள் சிறப்பாக நடைபெற்றன.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுடைய பாரியார் லேடி லீலாவதி இராமநாதன் அவர்கள் அவுஸ்திரேலியாவைச் சொந்த இடமாகக் கொண்டவர். அவர் அவுஸ்திரேலியாவில் தான் கற்ற கல்லூரிகளின் தோற்றத்தை அடிப்படையாக வைத்தே இராமநாதன் கல்லூரியின் பிரதான கட்டடடத்தையும் பரமேஸ்வராக் கல்லூரியின் பிரதான கட்டடத்தையும் தானே முன்நின்று வரைபடம் வரைவித்து செயல்படுத்தினார் என்பது உண்மை. அந்த வகையிலே கட்டட நிபுணர்கள், பொறியியலாளர் அத்தனை பேரோடும் தானே இரவு பகலாக நின்று இந்த பரமேஸ்வராக் கல்லூரியினுடைய முகப்புத் தோற்றத்தை அவுஸ்திரேலியாவில் விக்ரோறியா பகுதியில் தான் படித்த கல்லூரியின் தோற்றம் போல அமைத்த பெருமை லேடி இராமநாதன் அவர்களையே சாரும். அவருடைய முயற்சியினாலேயே இரவு பகலாக இந்தப் பாடசாலைத் திருப்பணி வேலை நிறைவு பெற்று, இராமநாதன் கல்லூரியில் எப்படி மேல் மாடியில் சிவகாமி அம்மன் சமேத நடராஜப் பெருமானுடைய கோயில் இருந்ததோ, அதேபோல பரமேஸ்வராக் கல்லூரியினுடைய தேக்கம் பலகைகளால் அமைக்கப்பட்ட இந்த மேல் மாடியிலே கோயில் அமைக்கப்பட்டது. கீழே அதிபர் அலுவலகம், மற்றும் பல்வேறு வசதிகள், விடுதிசாலை, மிகப் பெரிய மாட்டுத் தொழுவம், விவசாயச் செய்கை எல்லாம் அமைந்தன. பரமேஸ்வராக் கல்லூரி அமைந்திருக்கின்ற இந்த வளாக நிலத்திலே ஐந்து கிணறுகள் உருவாக்கப்பட்டிருந்தன. அந்த 5 கிணற்றிலும் 26 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை மரங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழை மரங்கள், கரும்பு போன்றவை நாட்டப்பட்டு மற்றும் விவசாய உற்பத்திக்கான சகல நீர் வளமும் சீமெந்து வாய்க்கால் போன்றவை உருவாக்கப்பட்டு லேடி இராமநாதன் அவர்கள் அவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். பரமேஸ்வராக் கல்லூரிக்கு இராமநாதன் தன்னுடைய பெயர் வைக்க வேண்டாம் என்றும், இது முற்று முழுதாக லேடி இராமநாதன் அவர்களுடைய முயற்சி என்று பாராட்டிய போதிலும் லேடி இராமநாதன் இந்தப் பாடசாலைக்கு தன்னுடைய பெயரை வைப்பதற்கு சம்மதிக்கவில்லை. எல்லாமே சிவன் சொத்து என்று எவ்வேளையும் உச்சரித்துக் கொண்டிருந்த இராமநாதன் இறுதியாக இந்தப் பாடசாலைக்கு பரம்பொருளாகிய சிவபெருமான் உடைய பெயரிலேயே பரமேஸ்வரா கல்லூரி என்ற பெயரை சூட்டுவது ஆக முடிவு செய்தார்கள். மிக பெருமையோடு பரமேஸ்வரா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில ஆண்டுகளிலேயே மாணவர் தொகை அதிகரித்து சிறப்பாக இயங்கத் தொடங்கியது. சேர் பொன்னம்பலம் இராமநாதன் 1930 ஆம் ஆண்டு அமரத்துவம் அடைந்தபோது இந்தப் பாடசாலையின் முதல் அதிபராக அவரது சகோதரனுடைய புதல்வர் மகாதேவா அவர்கள் பதவியேற்று மிகச் சிறப்பாக இக்கல்லூரியை வளப்படுத்தினார்கள். அதைத் தொடர்ந்து இராமநாதனின் இறப்புக்குப் பின்னால் லேடி இராமநாதன் அவர்கள் இந்தப் பாடசாலையுடன் இரண்டு பாடசாலை களின் நிர்வாகத்தையும் சிறப்பாக இயக்கினார்கள். அந்த வேளையில் சேர் பொன் இராமநாதனின் மருமகராகிய சுப்பையா நடேசபிள்ளை அவர்களிடம் பரமேஸ்வராக் கல்லூரியினுடைய அதிபர் முகாமைத்துவப் பொறுப்பு கையளிக்கப்பட்டது. அவர் இராமநாதன் உடைய கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். பரமேஸ்வராக் கல்லூரியின் திறப்பு விழாவின்போது சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இது ஒரு வெறும் பாடசாலையாக மட்டுமல்ல பல்கலைக்கழக நிலையில் எதிர்காலத்தில் ஒரு உன்னத வளர்ச்சி பெற வேண்டும். சர்வதேச கல்வி தொடக்கம் எங்கள் கீழைத்தேய பண்பாட்டை பிரதிபலிக்கின்ற கல்லூரியாக ஒரு உயர் கல்லூரியாக இந்தக் கல்லூரி வளர வேண்டும் என்று அவர்கள் உரையாற்றினார்கள். அவரது வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து நடேசபிள்ளை அவர்கள் இந்த பரமேஸ்வராக் கல்லூரியில் மதுரைப் பண்டிதர் வகுப்பு, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மற்றும் தொழிற் கல்வி வழங்குகின்ற விசேட பயிற்சி நிலையம் போன்றவற்றை பரமேஸ்வராக் கல்லூரியில் நிறுவியது மட்டுமல்ல, இராமநாதன் அவர்களுடைய விருப்பத்திற்கு அமைய சமஸ்கிருதம், லத்தீன் மற்றும் தமிழ் சிறப்புக் கல்வியை கற்கக்கூடிய பல்வேறு பாடவிதானங்களை இங்கே ஒழுங்கு செய்தார்கள்.

சிவாச்சாரிய குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் வேத பாராயணத்தை கற்று சைவக் கிரியை நெறிமுறைகளை நன்றாகக் கற்க வேண்டும் என்பதற்காக கார்த்திகேய ஐயர் அவர்களுடைய ஆலோசனைக்கமைய இந்தியாவிலிருந்து வேதபாராயணம் கற்பிக் கக் கூடியவர்களை அழைத்து குருகுல கல்வியையும் இராமநாதனுடைய சிந்தனைக்கு அமைய பரமேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பித்தார்கள். இந்தச் சூழ்நிலை தொடர்ந்த போது பரமேஸ்வராக் கல்லூரி வளாகம் நிரம்பி வழிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆரம்பித்த நாள் முதல் ஒரு பல்கலைக்கழகம் போல அன்று முதல் செயற்பட்டதற்கு பல்வேறு சான்றுகள் இன்றும் பேசப்படுகிறது. மதுரைப் பண்டித வகுப்பு என்பது சாதாரணமான ஒன்றல்ல. மதுரை பண்டித வகுப்புக்கான நேர்முகப் பரீட்சை பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்று மிகச் சிறந்த மாணவர்கள் மதுரை பண்டித வகுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு கற்பிப்பதற்காக இந்தியாவிலிருந்து நவநீதகிருஷ்ண பாரதியார் தொடக்கம் பல்வேறு கல்விமான்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கும் இருப்பிட வசதிகள் யாவும் செய்யப்பட்டு இந்த வகுப்புக்கள் நடைபெற்றன. அதேநேரம், இராமநாதன் கல்லூரியில் பெண்களுக்கான ஆசிரிய பயிற்சிக் கலாசாலை சிறப்பாக நடைபெற்ற வேளையில் பரமேஸ்வராக் கல்லூரியிலூம் ஆண்களுக்கான ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டு இந்திய அறிஞர்களும் இலங்கை அறிஞர்களும் பயிற்றுவிப்பாளர்களாக, பேராசிரியர்களாகப் பணியாற்றினார்கள். எனவே பல்துறை சார்ந்த கல்வி வளம் கொண்ட ஒரு உன்னத கலைக் கூடமாக பரமேஸ்வராக் கல்லூரி திகழ்ந்தது. இந்தியாவில் இருந்து விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கான அத்தனை பொருட்களும் தளபாடங்களும் கப்பலில் கொண்டுவரப்பட்டு பரமேஸ்வராக் கல்லூரியினுடைய விஞ்ஞானத் துறை வளர்ச்சிக்கு முகாமையாளர் நடேசன் வித்திட்டார்.

விஞ்ஞானத் துறையும் பரமேஸ்வராக் கல்லூரியில் மிக எழுச்சி பெற்றது. இந்த நிலையிலே அறிஞர் சிவபாதசுந்தரம் என்கின்ற பேரறிஞர் அதிபராக நியமிக்கப்பட்டு விஞ்ஞானத்துறை வளர்ச்சிக்கான பல்வேறு செயற்பாடுகள் உருவாக்கப்பட்டன. விஞ்ஞானத்துறை வளர்ச்சியின் ஒரு அடையாளமாக மிகப் பெரிய விஞ்ஞான கண்காட்சி ஒன்றை பரமேஸ்வராக் கல்லூரி ஐம்பதுகளில் நடாத்தியதை, யாழ் குடாநாட்டில் இருக்கின்ற பாடசாலை மாணவர்கள் எல்லோரும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். விளையாட்டுத் துறையிலும் பரமேஸ்வராக் கல்லூரி சாதனையை நிலைநாட்டி யாழ் மாவட்டத்தில் சிறந்த உதைபந்தாட்ட அணி ஆகவும், யாழ் மாவட்டத்தில் சிறந்த தேகப்பயிற்சி அணிநடை அணியாகவும் பரமேஸ்வராக் கல்லூரி 50 களில் தேர்ந்தெடுக்கப்பட்டமை பெருமையாகப் பேசப்பட்டது. இதே சூழ்நிலையிலே ஆண்டு தோறும் மிகப் பெரிய அளவிலே தமிழ் ஆராய்ச்சி மகாநாடு போல தமிழ் விழாவை நடத்துவதற்கு நடேசபிள்ளை அவர்கள் முயற்சி செய்தார்கள். மிகப் பெரிய வெற்றியாக பாடசாலை முன்றலில் பெரிய பந்தல் அமைக்கப்பட்டு இந்திய அறிஞர்கள் அழைக்கப்பட்டு மூன்று நாட்கள் பெருந்தமிழ் விழா பரமேஸ்வராக் கல்லூரியில் நாற்பதுகளின் பிற்பகுதிகளிலும் 50 களின் ஆரம்பத்திலும் தொடர்ந்து இடம் பெற்றன. ரா. பி. சேதுப்பிள்ளை முதல் பல்வேறு அறிஞர்கள் இந்த தமிழ் விழாவில் பங்குபற்றினார்கள். யாழ்ப்பாணமே திரண்டு வந்து பரமேஸ்வராக் கல்லூரியின் தமிழ் விழாவை இரசித்துப் பாராட்டினார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்தும் கொழும்பில் இருந்தும் வெளிவந்த பத்திரிகைகள் மட்டும் அல்ல இந்தியாவில் தமிழ் நாட்டில் இருந்து வெளிவந்த பத்திரிகைகள் கூட திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி தமிழ் விழா பற்றிய சிறப்புக்களை வெளியிட்டு ஈழத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். இந்த விழாக்களில்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்ற அறிஞர்கள் பிரபல்யம் பெறுகின்ற வாய்ப்புப் பெற்றனர். இந்திய அறிஞர்களுக்கு ஈடாக இவர்கள் கருத்துக்களை ஆற்றி, பலரது பாராட்டுக்கு ஆளானார்கள். ஈழத்திருநாட்டிலே மிக உன்னதமான அறிஞர்கள் இருக்கிறார்கள் என்ற செய்தியை பரமேஸ்வராக் கல்லூரி தமிழ் விழாக்கள் ஊடாக இந்திய அறிஞர்கள் அறிந்து இந்தியாவிலே ஈழத்து அறிஞர்களுடைய பெருமையைப்பற்றி கட்டுரைகளாக வரைந்து பெருமைப்படுத்தினர். பரமேஸ்வராக் கல்லூரி, ஈழநாட்டிலே மிக முக்கியத்துவம் உடைய கல்லூரியாகத் திகழ்ந்தது.

நடேசபிள்ளை அவர்கள் சிறந்த முகாமைத்துவத்தோடு இருந்தபோது 1960ஆம் ஆண்டு பாடசாலைகள் தேசியமயமாக்கின்ற முயற்சி ஆரம்பித்தபோது, இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியும் எதிர்பாராதவிதமாக அரச பாடசாலைகளாக அரசாங்கத்திடம் கையளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த நிலையிலேதான் பரமேஸ்வராக் கல்லூரியினுடைய வேகம், வளர்ச்சி சற்று தளர்ச்சியை நோக்கி சென்றது என்று அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். பெருந்தொகையான மாணவர்கள் கற்ற பாடசாலை அரச பாடசாலையாக மாற்றப்பட்டபோது அனைத்து மாணவர்களும் உள்வாங்குகின்ற சூழ்நிலை உருவானது. அதற்கு முன்பு பரமேஸ்வராக் கல்லூரியில் மாணவரை சேர்ப்பது என்றால் எழுத்துப் பரீட்சை, நேர்முகப்பரீட்சை எல்லாமே கருத்தில் கொள்ளப்பட்டது. அரச பாடசாலைகளாக ஏற்ற பின்பு எல்லா மாணவர்களும் சேரலாம் என்ற சூழ்நிலையில் கல்வித்தரம் குறைந்த மாணவர்களும் பரமேஸ்வராக் கல்லூரியில் இணைந்த பின்பு புலமை சார்ந்த மாணவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களுடைய விடுகைச் சான்றிதழ்களை எடுத்து வேறு பாடசாலைகளை நாடத்தொடங்கினார்கள். இதனால் பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்களுடைய தொகை திடீரென 700 மாணவர்களாக குறையத் தொடங்கியது. என்றாலும் பரமேஸ்வராக் கல்லூரியினுடைய பாரம்பரிய நிகழ்ச்சிகள் யாவும் நடைபெற்றன.

நடேசபிள்ளை அவர்களுடைய மறைவுக்குப் பின்னர் முற்று முழுதாக அரச பாடசாலையாக நிர்வகிக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி 1974ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்துக்கு வழங்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவெடுத்தபோது அதை பல்கலைக் கழகத்துக்கு கொடுப்பதற்கு பரமேஸ்வராக் கல்லூரி அதிபர், பெற்றோர், பழைய மாணவர்கள் சம்மதித்ததன் விளைவாக பல்கலைக் கழகம் அமைப்பதற்காக கல்லூரி ஒப்படைக்கப் பட்டது. திடீரென பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திற்கும், நல்லூர் செங்குந்தா வித்தியாலத்திற்கும், ஸ்ரான்லி கல்லூரிக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு மிகப் பிரமாண்டமான நூல் நிலையப் புத்தகங்கள் இராமநாதன் கல்லூரி, முத்துத்தம்பி வித்தியாலயம் போன்றவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அசையா பொருட்களை தவிர்த்து அசையும் பொருட்கள் யாவும் அரச பாடசாலைகளுக்கு இரவு பகலாக மாற்றப்பட்டு யாழ்ப்பாண வளாகம் என்ற பெயரில் கொழும்புப் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் 26 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் இயங்கத் தொடங்கிய யாழ் வளாகம் காலப்போக்கில் (1978இல்) யாழப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்றது.

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்ற காலத்தில் திருநெல்வேலி வாழ் மக்கள் சற்று கவலை அடைந்தனர். தாங்கள் இரசித்த தங்கள் கிராமத்தினுடைய எழுச்சிமிக்க பாடசாலை இனிமேல் பரமேஸ்வரா என்ற பெயரோடு இயங்காது என்று கவலை அடைந்தனர். திருநெல்வேலி ஒரு அமைதியான கிராமம் ஆக முன்பு காட்சியளித்தது. நல்ல தண்ணீர், நல்ல விவசாய பூமி. பல்கலைக்கழகம் உருவான பின்பு அது ஒரு நகரமாக மாற்றம் பெறத் தொடங்கியது.

இன்று பல்கலைக்கழகம் வானுயர்ந்த கட்டிடங்களோடு நிற்கின்றது. பரமேஸ்வராக் கல்லூரி என்கின்ற ஒரு உன்னத கலைக்கோயிலை உருவாக்கிய இராமநாதன் அவர்களுடைய கனவு இன்று நனவாகி விட்டது. ஆரம்பத்தில் பரமேஸ்வரா கல்லூரியின் பிரதான மண்டபத்தின் மேல் மாடியில் இருந்த சிவன் கோவில் லேடி இராமநாதன் அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே தனியான ஒரு கோயிலாக பரமேஸ்வரா கோயில் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. கார்த்திகேயக் குருக்கள் அவர்களுடைய தலைமையிலே இராமநாதன் கல்லூரி சரித்திர ஆசிரியர் இந்தியாவைச் சேர்ந்த கணபதி ஐயர் அவர்களோடு வேத பாராயணங்களோடு மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றதை இந்துசாதன பத்திரிகை விபரித்திருக்கின்றது. இன்று பல்கலைக்கழக வளாகத்தில் பரமேஸ்வரன் கோயில் தனிக் கோயிலாக எழுவதற்கு வித்திட்டவர் லேடி இராமநாதன் அவர்கள். பரமேஸ்வராக் கல்லூரி ஆரம்பத்தில் 3 இல்லங்களாக விடுதிச்சாலையையும் விளையாட்டுப் போட்டிக்கு 3 இல்லங்களாக பெயர் சூட்டப்பட்டது. 3 இல்லங்கள் சூரியன் இல்லம், சந்திரன் இல்லம், இந்திரன் இல்லம் என்று 3 இல்லங்கள் செயற்பட்டன. மாணவர் தொகை அதிகரித்துச் சென்ற காரணத்தால் இல்லங்கள் 6 இல்லங்களாக நாற்பதுகளின் பிற்பகுதியில் வளர்ச்சி பெற்றது. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் பரமேஸ்வரா என்று இல்லங்கள் ஆறாக விரிவடைந்தது. இராமநாதன் கல்லூரியிலும் மாணவர் தொகை அதிகரித்த காரணத்தால் 6 இல்லங்கள் அங்கே செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆறு இல்லங்கள் பரமேஸ்வராவில் இருந்த காலத்திலே விடுதிச் சாலை நிரம்பி வழிந்த காரணத்தினால் சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்குச் சொந்தமாக இருந்த இராமநாதபுரத்திலிருந்து விடுதிச் சாலைக்குத் தேவையான நெல், தேங்காய், பால், தயிர் போன்றவை யாவும் வாரம்தோறும் வேலையாட்கள் கொண்டு வந்து சேர்த்தார்கள். அதே நேரத்திலே பரமேஸ்வரா மாட்டுத் தொழுவத்திலே இந்தியாவில் இருந்து கப்பலில் கொண்டு வந்த பெரிய இன மாடுகள் சுமார் 30க்கும் மேல் அந்த மாட்டுத் தொழுவத்திலே பராமரிக்கப்பட்டன. இந்தியாவிலிருந்து பல பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக பரமேஸ்வராக் கல்லூரி விடுதியில் தங்கியிருந்தமை குறிப்பிட்டுக் கூறவேண்டும். காரணம், பெரிய தமிழ் விழாக்களின் போது பார்வையாளர்கள், விருந்தினர்கள் அனைவருக்கும் மத்தியானம் அன்னதானம் விதம் விதமாக வழங்கப் பட்டதை பலர் பெருமையோடு கூறுவார்கள். இத்தகைய பரமேஸ்வராக் கல்லூரி இன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டைச் சந்தித்திருக்கிறது. 22.08.1921 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரிக்கு 100 வயது நிரம்பி விட்டது. இந்த 100 வயது நிரம்பிய பரமேஸ்வராக் கல்லூரியை ஸ்தாபித்த இராமநாத வள்ளல் அவர்களும் பரமேஸ்வராக் கல்லூரியினுடைய வளர்ச்சிக்கு அயராது உழைத்த லீலாவதி இராமநாதன் அம்மையார், இராமநாதன் உடைய மருகர் சுப்பையா நடேசபிள்ளை அவர்களும் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். உண்மையிலே இராமநாதனுக்கு நினைவுச்சிலை வைத்தது போல லேடி இராமநாதன் அவர்களுக்கும் பல்கலைக்கழக வளாகத்திலே நினைவுச் சிலை வைக்க வேண்டும். ஏனென்றால் அவர் அவுஸ்திரேலியாவில் தன்னுடைய சொத்துக்கள் அத்தனையையும் விற்று, கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர் என்பது வரலாறு. எனவே இன்றைய நாளிலே அப்பெருமக்களை நினைவு கூர்ந்து உயர் கல்லூரியாகி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மிளிர்ந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு, மூலமாக இருந்த பரமேஸ்வராக் கல்லூரியின் சரித்திரத்தை என்றும் தன் வரலாற்றோடு சேர்ந்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன்**

***(இக்கட்டுரை பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு தினமான 22-08-2021இனை முன்னிட்டு தினக்குரல் 05.09.2021 பத்திரிகையில் வெளிவந்துள்ளது.)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரி

உலகத்துக்குக் கருத்தாவும் முழுமுதற் கடவுளுமாய சிவபெருமானை, செம்பொன் அம்பலவனை இராமநாதன் அவர்கள் பரமேஸ்வரன் என்றே வழங்கி வணங்கி வந்தனர். உலகம் யாவும் பரமேஸ்வரப் பெருமானின் சொத்து. நாமெல்லோரும் பரமேஸ்வரப் பெருமானின் குழந்தைகள், உடமைப் பொருள்கள் என்பதே இவருடைய கோட்பாடு.

கொழும்பில் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயப்பணி செய்து முடித்ததும், அடுத்த ஆண்டிலே யாழ்ப்பாணத்து இணுவிலில் இராமநாதன் கல்லூரியைப் பெரு நிலப்பரப்பில் தக்க பாதுகாப்புத் தரவல்ல சுற்று மதிலோடு கட்டினார். பெண்கள் பயில்வதற்குக் கலைக்கூடம் அமைத்ததும் ஆண்கள் பயில்வதற்கு வசதியாக ஒரு பெரிய வித்தியாலயம் அமைத்தல் வேண்டும் எனக் கருதினார். அக்காலத்தில் வட மாநிலத்தில் வாலிபர்களுள் ஒரு சாரார் இந்து வாலிபர் மாநாடுகள் நடத்தி ஒரு எழுச்சி விழா எடுத்தார்கள். ஆங்கிலப் பெரியாருள் ஒருவராய 'இவான்ஸ் வென்ஸ்' என்பார் இங்கே வந்து இளைஞர் தம் பொறுப்பையும் கடமையையும் வற்புறுத்திப் பேசினார்.

இதே வேளையில் இராமநாதன் அவர்கள் தாம் வணங்கும் பரமேஸ்வரன் திருநாமத்தை முன்னிட் டுப் பரமேஸ்வரா வித்தியாலயம் அமைப்பதற்குத் தீர்மானித்தார். நல்ல சுற்றுப்புறச் சூழலமைந்த பாரிய நிலந்தேடிய வேளையில் இவருக்கு உற்ற துணையாகப் பின் திரிந்தவர் யாழ்ப்பாணம் மணியகாரன் முத்துக் குமாரு என்பவராவர். மணியகாரன் முத்துக்குமாரு முதலானோர் பின் தொடர இராமநாதன் அவர்கள் முதலில் தென்கோவையில் இருபாலை வீதியில் பாரிய நிலப்பரப்புக் கிடைத்தது. அதனை விலைக்கு வாங்கியபின், அதனிற் பார்க்க வசதியான நிலந் தேடிய வேளையில், உதவிக்கு வந்தவர் சுப்பிரமணியம் என்னும் பெரியாராவர். இவரை அக்காலத்தவர் பெரியவர் என்றே செல்லமாக வழங்குவதற்குக் காரணமாயிருந்த வரன்முறை, இவர் ஆறுமுக நாவலர் அவர்களின் தாயார் வழியில் வந்தவராவர்.

வேதவனத்தார் என்னும் பெரியவர் ஒருவர் முற்காலத்து திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரின் குடும்பத்தவராவர். அவர் வழியில் வந்த சுப்பிரமணியம் என்னும் பெரியவரே பரமேஸ்வராக் கல்லூரி அமைந்த பெரு நிலப்பரப்பை பன்னூற்றுக் கணக்கான பனை மரங்களோடு வாங்க வழி காட்டியவர்.

பரமேஸ்வராக் கல்லூரி அமைந்த வளவு, இன்று வளாகமாக மாறியுள்ளது. இங்கே ஐந்து கிணறுகள் உட்பட இது இருபத்தைந்து ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பாகும். இதனிடையே தெற்கு வடக்காகப் போகும் றெயில் பாதைக்கு மேற்குப் புறத்திலும் இந் நிலப்பரப்பு வியாபித்துள்ளது. - திருவாத்தி மரங்கள் நிறைந்த அத்திக் குளமும் அருகிலமைந்திருந்தது. இந்நிலப்பரப்பின் ஒரு மூலையில் முற்றுந் துறந்த யோகியர் ஒருவரின் சமாதியும் இங்கே உண்டென்பர். செம்பாட்டுப் பூமி எனவும் இது வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. செம்பாட்டுப் பூமியின் பண்பாடு பழைமையானது. இதைப்பற்றிப் பொன்னம்பலப் புலவர் பாடியுமுள்ளார்.

*"நீருடைத்தாகியும் நெருங்கிப் பற்பல*
*ஆருடைத்தாகியும் உயர்ந்த வித்தியப்*
*பேருடைத்தாகியும் பிறங்கு பல்வகைச்*
*சீருடைத்தாயது திருநெல்வேலியே."*

இராமநாதன் அவர்கள் திருநெல்வேலியில் தாம் அமைத்த கல்லூரியைப் பரமேஸ்வர வித்தியாலயம் எனவே வழங்க விரும்பினார். இது நாளடைவில் பரமேஸ்வராக் கல்லூரி எனவே வழங்கலாயிற்று. பரமேஸ்வரா கல்லூரியின் நோக்கம், மாணாக்கர் ஆன்மிக அறிவுத்துறை பயின்று உத்தம மனிதராக உருவாதல் வேண்டும் என்பதேயாம். கெட்ட சூழலிலிருந்து பிள்ளைகளை நல்ல சூழலுக்கு இட்டுச் செல்வதே கல்வியின் நோக்க முமாகும். நல்ல பாதையை அமைத்துத் தந்தவரும் இறைவனேயாவர்,

அவர் பரமேஸ்வரர். அவர் அமைத்தருளிய பாதை சைவநெறி. உண்மையானதும் மனிதரை உருவாக்குவதானதுமான கல்வியே எமக்கு வேண்டியதாகும். மாணாக்கர் அறியாதனவற்றை அறிய வைப்பது மாத்திரம் கல்வியாகாது. அவர்கள் நன்னடை நடக்கப் பழக்குவது கல்வியாகும். அதற்குக் குருகுலவாசமே நல்லது. ஆசிரியர்களும் மாணாக்கர்களும் உடனுறைந்து பயில்வதே கல்வி முறையில் தரமானது. பழைய முனிவர்களின் மூதுரைகளை மாணாக்கர்கள் உணர்ந்து நடைபயில்வதற்கு உடனுறைதல் இன்றியமையாதது. தாவரவுணவு உட்கொண்டு சாத்துவிக வாழ்வு வாழ்தல் மனித மேம்பாட்டுக்கு உதவுவது.

நூறு மாணாக்கர்கள் வசதியாகத் தங்கியிருப்பதற்கு விடுதியும், அவர்கள் குளிர்மையாக உறைவதற்கு உறுதியாகக் கிடுகுகொண்டு மேய்ந்த வீடுகளும் இராமநாதன் அமைத்துச் சைவப் பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரம் அவர்களை விடுதி மேற்பார்வையாளராகவும் நியமித்தார். சைவப் பெரியாரே தலைமையாசிரியராகவும் இருந்தார். கல்லூரியின் முதல் அதிபராய் நியமனம் பெற்றவர் சேர். அருணாசலம் அவர்களின் மைந்தரும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்து முதுமாணிப் பட்டதாரியுமான மகாதேவா அவர்களாவர். பரமேஸ்வராக் கல்லூரி 22-8-1921 ஆம் நாளில் ஆரம்பமாயிற்று. தலைசிறந்த ஆங்கிலேயர், இந்தியர், இலங்கையர் ஆசிரியர்களாயிருந்தனர். அக்காலத்தில் மிகப் பெரியது என மதிப்பிடப் பெற்ற நூலக வசதியும் இக்கல்லூரிக்குக் கிடைத்தது. தமிழ், வடமொழி, ஆங்கில மொழிகளில் ஆயிரக்கணக்கான நூல்கள் ஏட்டுச் சுவடிகள் வசதியாக இருந்தன.

மாணாக்கர் ஆசாரசீலராய் வருதல் வேண்டும். தூய உடை தரித்து, திருநீறு பூசி, சந்தனப் பொட்டிட்டு வருதல் வேண்டும் என்பது இறுக்கமான கட்டுப்பாடாகும். காலையில் மாணாக்கர்கள் தம்மைப் பரமேஸ்வரனிடம் ஒப்படைத்து வழிபட்டுத் திருவருட் பிரசாதம் பெறுவதற்கு வசதியாக அன்று பெரிய கட்டடத்தின் மேன்மாடியின் வடக்குப் பாகத்தின் நீண்ட மண்டபம் பிரார்த்தனை மண்டபமாயிருந்தது. அங்கே தெற்கு நோக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கேடகத்தில் ஐம்பொன்னாலாய சோமாஸ்கந்த மூர்த்தி எழுந்தருளியிருந்தார். அவருக்குக் காலை, மாலை பூசை செய்வதற்குச் சரவணபவன் என்னும் சிவப்பிராமணர் இருந்தார்.

வேதாகமங்கள் நன்கறிந்த திருவுடை அந்தணராய அவருடன் உரையாடுவதற்காக சிவயோக சுவாமிகள் நேரத்தோடு வந்து காவல் நின்று உரையாடியவாறு அழைத்துப் போதல் வழக்கமாயும் இருந்தது. சரவணபவக் குருக்கள் பூசை ஏற்பதன் முன்நாளில் அராலிக் குருக்கள் என வழங்கிய ஒருவர் இருந்தார் என்ப. அக்காலத்தில் சர்வேஸ்வர ஐயர், துரைசாமி சாஸ்திரிகள், சிதம்பர சாஸ்திரிகள் ஒருவர் பின் ஒருவராய்ச் சமஸ்கிருத ஆசிரியர்களாய் இருந்தனர். இன்னும் பாடவகைகள் கற்பித்த ஆசான்களுள் பலர் அந்தணப் பெருமக்களாயே இருந்தனர். அவர்களுக்கு மத்தியில் காவியணிந்த உருத்திர கோடீசுவரர் என்னும் துறவியொருவர் விடுதிச் சாலையில் ஒரு புறத்தில் வாழ்ந்து சமய பாடம் போதித்து வந்தார். ஆசார சீலரான உருத்திர கோடீசுவரர் குழந்தையுள்ளம் கொண்டவர். அவர் பிள்ளைகளுக்கு ஆசாரம் போதித்து நல்வழி காட்டி வந்தார். அவர் பிற்காலத்தில் பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயிலடியில் நிலவிய கலா நிலையத்தில் வாழ்ந்தவராவர்,

பரமேஸ்வராக் கல்லூரிக் கட்டடம் அழகானது, உறுதியானது. போதியளவு நீளம் அகலம் உள்ளது. கட்டடத்தில் தேக்கம் பலகைகள் தீராந்திகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேல்மாடிப் படிகள் மேல் மாடித் தளம் யாவும் உறுதியான தேக்க மரத்திலானவையேயாம். வகுப்பறைகள், தளபாடங்கள் தனிமேசைகள், தனிக் கதிரைகள் - யாவும் தேக்கினாலானவையாம். ஒவ்வொரு வகுப்பறையிலும் தனித்தனி அலுமாரிகள் இருந்தன. இராமநாதன் அவர்கள் இடையிடை வருகைதந்து, பிரார்த்தனை மண்டபத்தில் உரை யாற்றுவார். அவர் முன்னர் இராமநாதன் கல்லூரிப் பிரார்த்தனையின்போது மாணாக்கியர் மனங்கொண்டு பாராயணம் செய்வதற்கென்று திருமுறைப் பாடல்களில் ஒரு தொகுப்புத் தயாரித்திருந்தார்கள். அதில் திருவாசகத்தில் போற்றித் திருவகவலில் வரும் சில அடிகளையும் சேர்த்திருந்தார்.

*'பரம் பரஞ்சோதி பரனே போற்றி*
*சிந்தனைக் கரிய சிவமே போற்றி*
*நித்தா போற்றி நிமலா போற்றி*
*அருவமும் உருவமும் ஆனாய் போற்றி*
*அடியொடு நடுஈறானாய் போற்றி*
*வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி*
*வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி*
*தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி*
*நீரிடை நான்காய் நிகழ்த்தாய் போற்றி*
*பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி*
*மூவா நான் மறை முதல்வா போற்றி*
*உரை யுணர் விறந்த ஒருவ போற்றி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
அஞ்சேல் என்றிங் கருளாய் போற்றி
போற்றி போற்றி ஜய ஜய போற்றி '',

''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'

இவ்வாறமைந்த தொகுப்பில் பஞ்சபுராணப் பாடல்கள் கலந்திருக்கும். இறுதியில் ''நாதவிந்து கலா தீதமோ நம'' எனத் தொடங்கும் திருப்புகழ் பாடப்பெறும். மாணாக்கர் பின்தொடர்ந்து பாடுவதற்குப் பண்ணோடு அடியெடுத்துக் கொடுப்பதற்குத் தமிழ்நாடு இராமநாதபுரத்து ஓதுவார் குடும்பத்தைச் சேர்ந்த முத்துசுவாமி என்பவர் நீண்ட காலம் இங்கே பணியாற்றினார். அவர் அலுவலகத்தில் ஊழியராயும் கடமை புரிந்தவராவர்.

பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருந்த பரமேஸ்வரப் பெருமானுக்கு விசேட நாள்களில் அபிடேக தீபாராதனை சிறப்பாக நடைபெறும் ஆண்டுதோறும் ஆறுமுறை அபிடேகம், நாயன்மார் குருபூசைகள், சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை முதலிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. சிறப்பு வழிபாட்டு நாள்களில் விநியோகிப்பதற்குப் பழநிப் பஞ்சாமிர்தம் பெரிய தகரங்களில் வந்திருக்கும். வளவில் வானுறவோங்கி வளர்ந்திருந்த தேக்க மரத்திலைகளைக் கழுவிக் கையிலேந்தி வரிசை யாய் நிற்கும் மாணாக்கர்களுக்கு ஓரகப்பை அமுதம் போன்ற பஞ்சாமிர்தங் கிடைக்கும்.

நவராத்திரி நாள்கள் பகலிரவாகக் கலை நிகழ்ச்சிகளோடு கொண்டாடப்பெறும். பண்ணிசைக் கச்சேரி, பக்திப் பிரசங்கம், பரத நாட்டியம், நாடகம் முதலியன அருமையாக வழிபாட்டு முறையில் நடைபெறும். மகா நோன்பு, வாழை வெட்டுதல், ஏடு தொடக்குதல் யாவும் பழைய மரபு தவறாமல் நடைபெறுதல் வழக்கம்,

பரமேஸ்வராலயத்தில் ஆசார அநுட்டானம் நுட்பமாகக் கவனிக்கப் பெற்றனவாதலால், மாணாக்கர் துடக்கு என்னும் ஆசௌச விதியைக் கட்டாயமாகக் கவனிக்க வேண்டியவராயினர். அவர்கள் பிரார்த்தனை மண்டபத்துக்குத் தெற்குப் பகுதியில் ஒதுக்கப்பட்டிருந்த வகுப்பறையொன்றில் வழிபாட்டு நேரத்தில் கட்டாயமாகக் கூடியிருத்தல் வேண்டும் என்பது கட்டளை, அவர்கள் அங்கே அமைதியாக இருந்து பாடல்களைக் கேட்டு வந்தனர்.

இலங்கைப் பல்கலைக்கழகம் அமைவதற்கு முன்னர், பரீட்சார்த்தமாகவும் முன்னோடியாகவும் அமைந்தது இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி. அங்கே லண்டன் இன்ரர் ஆற்ஸ், இன்ரர்சயன்ஸ், பி. ஏ. பி. எஸ் சி. பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் வாய்ப்பு நிலவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைவதற்குப் பூர்வாங்கமாக அமைந்தது பரமேஸ்வராக் கல்லூரி. இங்கேயும் லண்டன் பரீடசைகளுக்கு ஆயத்தஞ் செய்வதற்கு வசதி வாய்ப்பு இருந்தன.

பரமேஸ்வராக் கல்லூரி ஒரு காலத்தில் பல்கலைக்கழகம்போல நிலவியது. இங்கே ஒரு புறத்தில் சித்த ஆயுர்வேத வைத்தியம் பயிலவும் வகுப்புகள் நடைபெற்றன. இன்னும் பண்டிதர்களாயினோர் - ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கு வசதி வாய்ப்பளித்த பரமேஸ்வர பண்டித ஆசிரிய பயிற்சிக் கல்லூரியும் நிலவியது. நாளடைவில் பண்டிதர்களை உருவாக்கும் கலாசாலையாயும் இது நிலவியது. இங்கே ஆண்டுதோறும் முப்பதுக்குக் குறையாத தொகையினர் பண்டிதர்களாய் உருவானார்கள்.

பகல் முழுவதும் சுண்ணாம்புக் கட்டடத்துள் படித்தவர்கள் இரவில் ஓலைக் கொட்டிலில் நித்திரை கொள்ளுமாறு விடுதிச்சாலை அமைந்திருந்தது. விடுதிச்சாலை நிலம் சாணியால் மெழுகப் பெற்றிருந்தது. ஆசிரியர்கள் சிலர் விடுதிச்சாலையிலே தங்கியிருந்தமையால் மாணாக்கர் குருகுலக் கல்வி முறையில் படித்தார்கள்.

மாணாக்கர்களுள் சிங்களவர்களும் இருந்தார்கள், ஒரு காலத்தில் பர்மா நாட்டு இளைஞர்களும் இங்கே படித்தார்கள். ஆசிரியர்களுள் மூர், கோடன் பியஸ், மஸ்காரோ போன்ற ஐரோப்பியரும் இருந்தார்கள், சிங்களவருள் குருப்பு என்பார் ஒருவர் இருந்தார். அன்று பரமேஸ்வராக் கல்லூரிக்கு எங்குமில்லாத வகையில் அமைந்த இரண்டு அமைப்புக்கள் நன்கு பயன்தந்தன, கல்லூரியிலமைந்த ஆய்வு கூடமும், நூலகமும் மிகப் பெரியவை. பல்கலைக் கழகத்துக்குப் போதுமான அளவில் அவை அமைந்திருந்தன. நூலகத்து நூல்கள், ஏடுகள் யாவும் இராமநாதன் அவர்கள் காலத்துக்குக் காலம் தேடியவை. அவை பெரிய அலுமாரிகளிலும், விறாக்கிகளிலும் நிரை நிரையாக அடுக்கப்பெற்றிருந்தன. மாணாக்கர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் அமைதியாக இருந்து நூல்களையும் சஞ்சிகை களையும் செய்தித் தாள்களையும் கருத்தூன்றிப் படித்துணர்வதற்கு நல்ல வசதி நிலவியது.

மாணாக்கர் வசதிக்காக இராமநாதன் அன்பளிப்புச் செய்த நூல்கள், ஏடுகள் ஆயிரக்கணக்கானவை: தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பழைய நூல்களும் இருந்தன. புதிய நூல்களும் இருந்தன. பிரித்தானிய கலைக்களஞ்சியத் தொடரில் பல்வேறு காலங்களில் வெளிவந்த பதிப்புக்களும் இருந்தன. இலங்கைச் சட்ட சபையின் அறிக்கைகள், பரிபாலன அறிக்கைகள் யாவும் இருந்தன. ''புக் ஒவ் பொலெட்ஜ் '' என்னும் பொது அறிவு நூல் வரிசைகள் இருந்தன. பிரித்தானிய பாராளுமன்றப் பேச்சுகள் அடங்கிய தொகுதிகள் இருந்தன. பேச்சாற்றல் வாய்ந்த ஆங்கிலேயர் படங்களும், செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் படங்களும், சைவம் வளர்த்த சான்றோர் படங்களும் இராமநாதனை உருவாக்கிய பெரியவர்கள் படங்களும் சித்திரமாடத்தைச் சிறப்பித்தன. இராமநாதன் பெருஞ் செலவிலமைத்த விஞ்ஞான ஆய்வு கூடம், அன்று இலங்கையில் முதற்தரமான தாயிருந்தது. ஆய்வுக்கு வேண்டிய உலோக வகைகள், உப்பு வகைகள், காடி வகைகள், கார வகைகள் பெருந் தெகையாய் இருந்தன. உலோக வகைகளுள் பெறுமதி வாய்ந்த தங்கம் மெல்லிய காகிதக் கனத்தில் கிடைத்தது. ஆய்வு கூடக் கருவிகள் யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியணியாயிருந்தன. ஆய்வுக்கு உதவியாக உயிர் வாயுச்சாடிகளும் இருந்தன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணாக்கர் தம்பு தட்சணாமூர்த்தி என்பார் ஆய்வு கூடப் பொறுப்பாளியாய் இருந்தார். லண்டன் இன்ரசயன்ஸ் வகுப்பும் இங்கே நடைபெற்றது. எல்லா வசதிகளும் ஒருங்கமைய உருவான பரமேஸ்வராக் கல்லூரி பிற்காலத்தில் இராமநாதன் இந்துப் பல்கலைக்கழகம் என நிலவலாம் என அக்காலத்து அறிவாளிகள் தீர்க்கதரிசனம் கூறியதும் உண்டு

ஆரம்ப காலத்தில் பரமேஸ்வராக் கல்லூரி மாணாக்கர் மூவேறு இல்லங்களாய் அணிவகுத்திருந்தார்கள். சந்திர இல்லம், சூரிய இல்லம், இந்திர இல்லம். என ஒரு காலத்தில் அவை இயங்கின, நாளடைவில் அவை பிரம்மா, விஷ்ணு, ருத்திர, மகேஸ்வர, சதாசிவ, பரமேஸ்வர என்னும் இல்லங்களாய் அமைந்தன.

இவ்வாறமைந்த இல்லங்கள் விளையாட்டுத்துறை, கலைத்துறை என்பனவில் ஓரளவு போட்டி மனப் பான்மையுடன் நடந்து கொண்டன. ஆனால் வழிபாட்டு வரன் முறையில் குருபூசை விழாக்கள், நவராத்திரி வேளை என்பன பயபக்தியுடன் கொண்டாடப் பெற்றன. நவராத்திரி வேளைகளில் பேச்சு, நாடகம் முதலியன ஓரளவு போட்டி மனப்பான்மையில் நடைபெற்றன. விளையாட்டுப் போட்டிகளில் ஒவ்வொரு இல்லத்தினரும் குறிக்கப்பட்ட நேரத்துள் கொட்டில்கள், அலங்காரப் பந்தல்கள் அமைத்தல் முதலியனவற்றில் போட்டி யிட்டுப் பந்தல் போட்டியில் பரிசு பெறுவதில் முந்தியடித்தும் இயங்கினர், விளையாட்டுத் துறையில் பரமேஸ்வராக் கல்லூரி உதைபந்தாட்டம் என்னும் புற்போல் ஆட்டத்தில் குடாநாட்டில் தனிப் புகழ் பெற்று இருந்தனர். வெற்றி தோல்வியைக் கருதாது ஆட்டத்தில் பொது மக்களுக்கு விருந்து செய்தலையே கருதினர்.

வடக்கில் காசி என்னும் புனித நகரில் இந்துப் பல்கலைக்கழகமும் அதைச் சேர்ந்த விசுவநாதர் ஆலயமும் போல, இங்கே பரமேஸ்வராக் கல்லூரியும், பரமேஸ்வரா ஆலயமும் அமைந்திருந்தன. அரிது அரிது அரியவற்றைப் போல ஆக்குவார் என்று ஆன்றோர் அதிசயித்தனர்.

**பரமேஸ்வராலயம் அமைந்தமை**

பரமேஸ்வராக் கல்லூரி அமைந்த 1921 ஆம் ஆண்டு முதல் 1928 ஆம் ஆண்டு வரையும் மாணாக்கர்களின் வழிபாடு, கல்லூரி மேல் மண்டபத்திலேயே நடைபெற்று வந்தது. ஓரளவு ஆகம அடிப்படையில் ஓர் ஆலயம் அமைத்தல் வேண்டும் என்று இராமநாதன் அவர்கள் சிந்தித்துவந்தார்.

பரமேஸ்வரப் பெருமானின் கிருபா கடாட்சத்தை நம்பி, அவரை முன்னிட்டுக் கல்லூரிக்குப் பெயர் வைத்த பிரபு அவர்கள், அப்பெருமான் எழுந்தருளுவதற்கு வசதி யான, விசாலமான கற்கோயில் எடுப்பதற்குரிய நாளை எதிர்பார்த்திருந்தார்.

ஆகமங்கள் வல்ல அந்தணப் பெரியார்களையும் சிவாசாரியர்களையும் கலந்து உரையாடி வந்தரர். ஆலயத்துக்கு வேண்டிய கருங்கற்களைப் பெறுவதற்குத் தமக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கமான வியாங்கொடை சிங்களப் பெரியார்களோடும் பேசியிருந்தார், அன்று 1926ஆம் ஆண்டில் நல்லதொரு நாள் திருக்கோயிலுக்கு அத்திபாரம் அமைக்கும் நாள். கல்லூரி வளாகம் வாழை தோரணங்களால் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. வடக்குத் தெற்காக நீளம் அகலம் உள்ள ஆழமான அத்திபாரக் குழி வெட்டப்பெற்று இருந்தது. அர்ச்சகர் சரவணபவ குருக்கள், கல்லூரி அதிபர் இராமநாதன் வாமதேவா, ஆலோசகர் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், அந்தண ஆசிரியர்கள், நம்பிக்கைக்குரிய தம்பு தட்சிணாமூர்த்தி முதலானோர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வேளையில் காலந்தவறாமல் சேர். இராமநாதன் அவர்கள் தமது எச்.71 (H 71) இலக்கமுள்ள பெரிய மோட்டார் வண்டியில் வந்திறங்கினார்.

வழமையான தலைப்பாகை, நீண்ட கோட், உத்திரியம் முதலானவற்றை நீக்கி, பட்டு வேட்டியும் சால்வையும் அணிந்து, பொன்மயமான மேனி பளபளக்க வந்த அவரின் பிடரியில் ஒரு சிறு குடும்பியைக் கண்ட மாணாக்கர்கள் அதிசயப்பட்டார்கள். நாளாந்தம் சிவபூசை செய்யும் பிரபு, சிரசே நம என்று தலையைத் தொட்ட பின் சிகாய நம எனத் தொடுமிடம் வேண்டும் எனக் குடுமி வைத்திருந்தாராம். இது சைவப் பண்பாடு.

உரிய முகூர்த்தத்திலே சங்கு, சேமக்கலம், மேளம் முழங்க, அந்தணர்கள் இருக்கு ஓத, திருமுறை வல்லார் பண் தவறாமல் ஓதல் செய்ய, ஆசிரியர்கள் சிலர் அரஹர எனச் சொல்ல இராமநாதன் அவர்கள் மெதுவாக இதழ்களை அசைத்து பரமேஸ்வரா என்று கூறி அத்திபாரத் திரவியங்களை இட்டமை கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அன்று தொடக்கம் நாள்தோறும் கட்டட வேலைகள் நடைபெற்று வந்தன.

பள்ளித் தலமனைத்தும் கோயில்கள் செய்வோம் என்னும் சைவத் தமிழ் மக்களின் தாரக மந்திரத்தை நன்கறிந்தவர் இராமநாதன். அவர் கொழும்பில் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், இணுவிலில் இராமநாதன் வித்தியாலயம், திருநெல்வேலியில் பரமேஸ்வர வித்தியாலயம் கட்டியவர். அவருடைய நாளாந்த வேண்டுகோள் ' திரிகரண சுத்தியும், காரிய சித்தியும் அருள்வாய் '' என்பதாகும். காரிய சித்தியோடு போதிய வருவாயும் பெற்றிருந்தவர் இராமநாதன்.

பாரிய கருங்கற்கள் வியாங்கொடையிலிருந்து புகைவண்டி மூலம் வந்து, பரமேஸ்வராவின் அயலில் ரெயில்வேப் பாதையோரத்தில் குவிந்தன. பதிவான இரும்புச் சில்லுகள் பூட்டிய நீண்ட இரும்பு வண்டிகளை ஏரிபெருத்த எருதுகள் இழுத்து வந்தன. சில சமயம் நான்கு எருதுகள் முன்னிழுப்ப தொழிலாளர் பலர் பின் தொடர்ந்து தள்ளிக் கொடுத்தனர்.

சில வேளைகளில் இரும்பு வண்டி மண்ணிற் புதையுண்டு போதலும் வழக்கம். அவ் வேளைகளில் மாணாக்கர்கள் கைகொடுத்தல் வேண்டும் என்று அதிபர் வாமதேவா சுற்று நிருபம் அனுப்புவார். மாணாக்கர்கள் மாடுகளை அவிழ்த்து விட்டு, நீண்ட வடந்தொடுத்துத் தேரிழுத்தாற் போல இழுத்துக் கொடுப்பார்கள். நன்று நன்று என்று ஆசிரியர்கள் வாழ்த்துவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேளைகளில் இராமநாதன் கொழும்பிலிருந்து வருவார். அவர் பரமேஸ்வராவின் அருகில் புகைவண்டியை விட்டு இறங்குவதற்கு றெயில்வேத் திணைக்களம் வசதி செய்து கொடுத்தது. இன்று விமானங்களில் ஏறவும் இறங்கவும் அசையும் படிக்கட்டுகள் அமைந்தாற்போல அன்று இராமநாதன் அவர்களுக்கென்றே மரப் படிகள் அமைந்த சாதனம் வண்டியில் தயாராயிருந்தது. வேண்டியபோது றெயில் வே ஊழியர்கள் அதனைப் பொருத்திவிடுவர்.

பரமேஸ்வரன் ஆலயம் பெருமளவில் சிற்ப ஓவிய வேலைப்பாடுகளில்லாவிட்டாலும் பெரிதாய் அமைந்தது. வடக்குத் தெற்காகப் போதிய நீளமும் அகலமும் உள்ள ஒரே மண்டபம் அழகானது. இருபக்கங்களிலும் தனித்தனி பன்னிரண்டு பாரிய தூண்கள் நிற்பது அழகிய வளைவுகள் அமைந்துள்ள ஒடுக்கமான உட் பிரகாரமும் உள்ளது.

### முதற் கும்பாபிஷேகம்

பரமேஸ்வரம் 1928 ஆம் ஆண்டில் ஓரளவு கட்டி முடிக்கப் பெற்றது. இதற்குள் இராமநாதன் அவர்களுக்குச் சட்ட சபையில் பெரும் பிரச்சினைக்குரிய விடயம் பெரும் பளுவாயிருந்தது. முன்னர் 1835 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பெற்ற சட்ட சபை முற்றாக நீக்கப்பட்டுப் புதிதாக அரசாங்க சபை நிறுவப்படுவதற்கான பூர்வாங்க அலுவல்களுள் டொனமூர்த் திருத்தம் சட்ட சபையில் விவாதிக்கப்படலாயிற்று.

லாவகமாக டொனமூர்த் திட்டம் இலங்கைக்கு உதவாதது. இலங்கையருக்கு ஓரளவு சுதந்திரம் வேண்டாம். முற்று முழுதான பூரண சுயராச்சியமே வேண்டியது என்று முழு மூச்சாகப் பேசிய இராமநாதன் தமது தள்ளாத வயதில் இங்கிலாந்துக்கும் போக வேண்டியிருந்தார். அதற்காக ஒரு நினைவேடும் தயாரித்து அச்சிட்டிருந்தார்.

இப்பால் - கும்பாபிடேகத்துக்குரிய முன்னேற்பாடுகளைக் கவனிக்குமாறு நல்லூரைச் சேர்ந்த தம்பையாக் குருக்கள் என வழங்கும் - கார்த்திகேயக் குருக்கள் அவர்களிடம் கேட்டிருந்தார். பிரதிட்டை, ஆவாகனம், அபிடேகம், அலங்காரம், ஆராதனை, நிவேதனம், வேதபாராயணம், திருமுறையோதல், பல விதமான தானங்கள் கொடுத்தல் சமயாராதனை முதலியன யாவும் யாதும் குறைவு படாமல் நடைபெறுதல் வேண்டும். பரமேஸ்வரப் பெருமானின் பிரீதியும், இராமநாத வள்ளலின் திருப்தியும் கிடைத்தல் வேண்டும்.

எனவே கும்பாபிடேகம், பிராயச்சித்தம், பெருஞ்சாந்தி முதலிய கிரியைகளில் மந்திரலோபம், கிரியா லோபம், பாவனாலோபம் முதலியன இருத்தலாகர் சாதாரணமாக நாளாந்தம் நிகழும் பூசனைகளில் குறைவுகள் உண்டானால் நைமித்திய பூசனை விழாவில் நிவர்த்தி செய்து கொள்ளலாம். ஆனால் கும்பாபிடேகம் முதலிய பெரிய விழாக்களை குறைவில்லாமலே நடத்துதல் வேண்டும், இவ்வாறாயின் பல்வேறு வகையான அபிடேக அர்ச்சனை ஆராதனைத் திரவியங்களையடுத்து நிகழவேண்டிய 'தான வகைகளில் சொர்ணதானம், வஸ்திரதானம், கோதானம், அன்னதானம் முதலானவற்றுக்கும் வேண்டியவை கொள்ளல் வேண்டும், இவற்றையெல்லாம் கருத்திற்கொண்ட கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் திரவியங்கள் சம்பந்தமான பெரியதொரு பட்டியலைத் தயாரித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வராக் கல்லூரி அதிபரும், இராமநாதன் அவர்களின் மைந்தனுமான வாமதேவா அவர்களிடம் கொடுத்தார்கள்.

அதிபர் வாமதேவா இராமநாதன் அவர்களின் மைந்தர்களுள் ஒருவர் நன்னித்தம்பி என்னும் பெருஞ் செல்வரின் மகள் செல்லாச்சி வயிற்றிற் பிறந்தவர், மானிப்பாய் இந்துக் கல்லூரித் தாபகர் சங்கரப்பிள்ளை அவர்களின் புதல்வி அன்னபூரணி என்பாரை மணந்தவர். யாழ்ப்பாணத்தவரின் கல்வி அபிவிருத்தியில் அதிக கவனம் எடுத்துவந்தவர். முற்கோபியாயிருந்தும் பின் இரக்கம் காட்டும் தன்மையவர். 'சிவகுமாரன், செல்லாச்சி, இராம்சிங், பாலசுந்தரம் ஆகிய பிள்ளைகளைப் பெற்றவர். அருமை மகள் செல்லாச்சிக்கு அக்காலத்திலேயே தக்க முறையில் சங்கீதக் கலையைக் கற்பித்து இசைக் கலையைப் பரப்பி வந்தவர். செல்லாச்சி என்னும் பெயர் இராமநாதன் குடும்பத்தில் பரம்பரையாக இடம்பெற்று வந்தது.

பெரிய பட்டியலைப் படித்த அதிபர் வாமதேவா அவர்கள், கோயிற் குருக்களாய சரவணபவ ஐயர் அவர்களிடம் பட்டியலைக் கொடுத்து. இதனைச் சுருக்கமாகச் செய்யவியலாதோ எனக் கேட்டார். பவுண் என்னும் நாணயம். பத்துப் பதினொரு ரூபா விற்ற காலம் அது. செட்டிமாரின் புடைவைக் கடைகளில் பட்டு, பீதாம்பரமும் மலிவான காலம் அது. எனினும் பட்டியலிற் கண்டவற்றைச் சிக்கனப்படுத்தலாம் என்று சரவணபவ குருக்கள் வேறொரு பட்டியலைத் தயாரித்துக் கொடுத்தார். அதில் பொற்காசுக்குப் பதிலாக வெண் பொற்காசுகளும், பட்டுப் புடவைகளுக்குப் பதிலாக, பருத்திப் புடவைகளும் இடம் பெறுவனவாயின. தானங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தன. இன்றியமையாத சில தானங்களையே கோயிற் குருக்கள் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறாக அதிபர் வாமதேவா அவர்கள் இரண்டு பட்டியல்களையும் சேர்த்துக்கொண்டு தமக்கும் தந்தையாருக்கும்' நம்பிக்கைக்குரியவரும் கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடப் பொறுப்பாளருமான இரத்தினம் என வழங்கிய தம்பு தட்சிணாமூர்த்தி அவர்களை அழைப்பித்து இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டார், தட்சிணாமூர்த்தி அவர்களை மட்டிட்டுப் பரமேஸ்வராக் கல்லூரிக்கு இட்டுக் கொண்டு வந்தவர் முதல் அதிபராய் இருந்த அருணாசலம் மகாதேவா அவர்களாவர்.

இந்த இக்கட்டான நிலையில் தட்சிணாமூர்த்தி அவர்கள் இரண்டு தரம் யோசித்து 'ஐயா இதனை எஜமானிடம் கேட்டுச் செய்தலே நல்லது' என்று இதமாகக் கூறினார். உடனே வாமதேவா அவர்கள் இவரையும் அழைத்துக்கொண்டு காரில் புறப்பட்டு இராமநாதன் கல்லூரியில் அப்பாவைக் காணப் போனார்.

போனதும் அப்பா! இந்த வைபவத்தில் ஏன் அதிக பணச் செலவு செய்ய வேண்டும். சுருக்கமாகச் செய்தால் என்ன?' என்று கேட்டார். உடனே இராமநாதன் அவர்கள் உள்ளம் பூரித்துப் புன்முறுவலோடு. மகனே! நாங்கள் பரமேஸ்வரப் பெருமானுக்குச் செய்யும் கும்பாபிடேக வைபவத்தில், மந்திரலோபம், கிரியா லோபம், திரவியலோபம் சிறிதளவும் இருத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாகச் செய்பவர்களும் இருக்கிறார்கள். நாங்கள் இருபது லட்சம் செலவழித்துப் பொன்னம்பலவாணேசுவரருக்குக் கோவிலெடுத்தோம். நாட்டில் நங்கையர்களுக்கும் நம்பியர்களுக்கும், நல்ல முறையில் கல்லூரிகள் கட்டினோம், சிவபெருமான் எமக்குத் தந்த செல்வத்தில் நாம் அவர் பணியில், உலோபித் தன்மை காட்டாமல் பெரிதாகவே செய்தல் வேண்டும், எங்கள் ஆஸ்தானத்துக்குரிய பெரிய குருக்கள் கார்த்திக்கேயர், எங்கள் கௌரவத்தை நன்கறிந்தவர். அவர் தயாரித்த பட்டியல் நல்லது. எங்கள் ஆலயத்தில் நாளாந்த பூசை செய்யும் கோயிற் குருக்கள் கும்பாபிடேகஞ் செய்தலாகாது. கும்பாபிடேகத்திற்குப் பிரதம குருக்கள் வெளியிலிருந்தே வருதல் வேண்டும். நாங்கள் திரவியங்களை மேலதிகமாக வாங்குதலை விட்டுக் குறைவாக வாங்குதலாகாது. இறைபணி நிற்கும்போது தாராளமான மனப்பான்மை வேண்டும். முன்னர் சேர, சோழ, பாண்டிய, பல்லவ, விஜய நகர வேந்தர்கள் சென்ற வழியில் நாமும் சைவப் பண்பாடு நிலவச் செய்தல் வேண்டும். அன்பு மகனே! மனங்கோணாது எல்லாவற்றையும் நிறைவாகச் செய்வாயாக'' என்று இதமாகக் கூறினார். கேட்டு நின்ற மைந்தன் மகாதேவா மனமுருகி, மெய்ப்பாடுற்று, ''ஆம் அப்பா'' என்றார்.

பின்னர் இராமநாதன் அவர்கள் தமது நம்பிக்கைக்குரிய தெட்சிணாமூர்த்தி அவர்களை அருகழைத்து, '' தட்சிணாமூர்த்தி! எம்பெருமான் பரமேஸ்வரன் எழுந்தருளப் போகும் இப்புதிய ஆலயத்துக் கர்ப்பக்கிருகம் வெப்பம் அதிகமுள்ளதாய் இருக்கும். சுவர்களின் சுண்ணாம்புச் சூட்டைத் தணிப்பதற்கு ஒரு வழியுண்டு. பெருமளவில் சந்தனக் கட்டைகள் வாங்கி நீரில் ஊறவிட்டு அரைத்துச் சந்தனக் குழம்பு கொண்டு சுவர் முழுக்க அப்புதல் வேண்டும், விளங்கிற்றா? '' என்று கூறி இருவரையும் வழியனுப்பினார்.

இப்பால் 1928ஆம் ஆண்டில் முதற் கும்பாபிடேகம் நடைபெற்றபோது, மண்டபத்தினுள்ளும் வெளியில் அலங்காரப் பந்தலுக்குள்ளும் பல குண்டங்கள் அமைத்து வேத விற்பன்னர்கள் பலர் கூடியிருந்து வேத மந்திரங்களைக் கூறியும் சாமவேத கானம் பாடியும் கிரியைகள் செய்வாராயினர், வந்திருந்த அந்தணர்கள் வரிசையில் நகுலேஸ்வரக் குருக்கள், மாவிட்டபுரத்துக் குருக்கள், அச்சுவேலிக் குருக்கள், நீர்வேலிக் குருக்கள் முதலானவரோடு திருநெல்வேலி சபா நடேசக் குருக்கள் ஆனந்த நடேசக் குருக்கள், குஞ்சிதபாதக் குருக்கள் முதலானோர் இருந்தார்கள். வந்தவர்களை வரிசையறிந்து இருக்கு ஓதவும், சாமம் பாடவும் வைத்தவர் பரமேஸ்வரக் கல்லூரி சமஸ்கிருத ஆசிரியராய துரைசாமி சாஸ்திரிகள் ஆவர். அந்தணர் சிலர் சாமவேதம் பாடியபோது, இராமநாதன் கல்லூரி ஆசிரியர் கணபதி ஐயர் அவர்கள் அருமையாக வீணை தடவினார். அதே வேளையில் பரமேஸ்வராக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் மாணாக்கரின் அபிமான ஆசிரியர் நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள் தாமும் ஒரு குண்டத்தருகில் இருந்து தீவளர்த்தமை பெருவிருந்தாயிருந்தது. தமிழாசிரியர் நவநீத கிருஷ்ண பாரதியார் ஒரு குண்டத்தின் அருகில் கெம்பீரமாயமர்ந்து மந்திரங்கள் ஓதி ஆகுதிகள் செய்து கொண்டிருந்தார். இன்னும் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் சிவத்திரு கணபதி ஐயர் அவர்கள் அற்புதமான வயலின் வாசிக்க, மாணாக்கியர் திருமுறையோதி எல்லோரையும் பரவசப்படுத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிடேசத்தின் பின் கிரமந் தவறாமல் மண்டலாபிடேகங்கள் நடைபெற்ற பின் 8ஆம் நாளன்று மாணாக்கர்களுக்குப் பெருவிருந்தாக மாகேசுர பூசை செய்தார்கள். முன்னர் கல்லூரி மண்டபத்தில் பிரார்ர்த்தனை செய்தவர்கள். இப்போது வரிசையாக ஆலயஞ் சென்று வணங்கி வலம்வருவாராயினர்.

ஒருமுறை இறை வழிபாட்டின் போது உரிய வேளையில் அங்கே வந்திருந்த கிழவனார், மெல்லென எழுந்து பரமேஸ்வரன் பாதார விந்தங்களைப் பணிந்து போற்றி முத்திநெறி என்னும் பொருளைப் பீடிகையாகக் கொண்டு பேசியபோது, திரிகரணசுத்தியும் காரியசித்தியும் அருள்வாய் என்ற தொடரையும் விளக்கினார்கள்.

தாம் தினமும் தமது ஆன்மார்த்த வழிபாட்டின்போது ஓதும் வகையில், பரம் பரம்ஜோதி பரனே போற்றி! எனத் தொடங்கும் அடிகளை அருமையாக இனிய குரலிற்பாடி விளக்கினார். அந்த அற்புதமான பேரொளிப் பிழம்பில் தம் மனத்தை லயிக்கச் செய்து அவனருளாலே அவர் பேசினார் என்று கருதக்கூடியதாயிருந்தது. நினைக்கவும் தொழவும் எட்டாப் பெருங்கருணைப் பிழம்பைப் பரசிவம் என்றும் மகேஸ்வரன் என்றும் வாயினிக்கப் பேசினார். முதல், இடை, இறுதி எங்கும் பரமேஸ்வரமயமாயிருக்கும் ஒரே ஆனந்த மயமான ஒரு நிலையைச் சுருக்கமாகப் பேசினார். ஐம்பெரும் பூதங்களும் ஐந்து தன்மாத்திரைகளும் பரிணாமம் அடைவதையும் மும்மூர்த்திகளின் நிலையையும், கருணையினால் பரமேஸ்வரன் செய்தருளும் பஞ்சகிருத்தியங்களின் நடைமுறைகளையும் விளக்கினார். தொழுவார்க்கே அருள்புரியும் சிவபெருமான் நாம் செய்யும் பிழையுளவேற் பொறுத்தருளிப் பேறும் நல்குபவர் என்றார். இரக்கமே உருவான அவரிடம் நாம் பணிவோடு வாங்கி எமக்குத் தேவையானவற்றை நிறைவாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

கூனர் இல்லறஞானியாய சனசமகாராசன்போல, அண்மைக்காலத்து இல்லற ஞானியாயிருந்த இராமநாத வள்ளல், அந்தணர்களுக்குக் கொடுத்த கோதானம், வஸ்திரதானம், சொர்ணதானம் முதலானவை அளவிடற்கரியவையாகும். தானமும் தருமமும் தாம் செயலரிது.

### பரமேஸ்வரன் கிருபை, சிவன் இடபாரூடர்

இராமநாதன் அவர்களுக்குக் குபேர சம்பத்துக் கிடைப்பதற்குப் பரமேஸ்வரன் திருவருள் நிறையக் கிடைத்தது. எதற்கும் பரமேஸ்வரா, பரமேஸ்வரா என்று வாயார வாழ்த்தும் வரப்பிரசாதி இவர். இவருக்கு முதுசொம் என்னும் பாரம்பரியத்தாலும் சீதனம் என்னும் வரதட்சணையாலும், தேடிய தேட்டம் என்னும் ஈட்டத்தாலும் பெருஞ் செல்வம் கிடைத்தது. தென்னிலங்கையில் நாத்தாண்டியா, லுணுவில, மீரிகம மூதலிய இடங்களில் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான தென்னந்தோட்டமும், வட இலங்கையில் கிளிநொச்சியில் நானூறு ஏக்கருக்கும் அதிகமான ' தானியலட்சுமி' என்னும் நெல் வயலும், கொழும்பில் சுகஸ் தான் முதலாய மனைகளும், தமிழ்நாட்டில் பழநி மலையடிவாரத்தில் குறிஞ்சிமனை நிலமும் இன்ன பிறவும் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் கட்டோடே கனத்தோடே ஆண்டு அனுபவித்து வந்த இராமநாதன் அவர்கள், கண்ணோடே கருத்தோடே பெருங்கருணைத் தடங்கடலாய பரமேஸ்வரப் பெருமானை நினைந்துருகி வழிபட்டு வந்தார். இந்திரபோகம் என இவருக்கிருந்த பெருஞ் சிறப்பை புலவர்கள் வெகுவாகப் புகழ்ந்து பாடியதும் உண்டு.

இராமநாதன் அவர்களுக்குப் பரமேஸ்வரப் பெருமான் திருவருளால் எல்லாம் நிறைய இருந்தன. யாதும் குறைவில்லை என்னும் கருத்தில் பாடிய புலவர்களுள் அல்வாயூர் மு செல்லையா என்பாரும் ஒருவர். அவர் பாடும்போது, சந்திரன் தேய்வதுண்டு, ஆம்பல் குவியதுண்டு, இந்திரன் சாபம் பெற்றதுண்டு, இராமநாதன் அவர்களுக்கு ஏதும் குறைவில்லையே என்பர்.

பரமேஸ்வரன் கிருபா கடாட்சத்தால் இராமநாதன் அவர்கள் செய்த தருமமும் இவருக்கு இரண்டு முறை தலைகாத்தது. தருமம் தலைகாக்கும் என்பது பழமொழி. எல்லாம் பரமேஸ்வரன் தந்தவை. எல்லாம் பரமேஸ்வரன் சொத்து. தாம் பரமேஸ்வரனின் அடிமை. பரமேஸ்வரன் தம்மை ஆட்கொண்டமை உண்மை , பரம்பரம் சோதி பரனே போற்றி என்று பாடித் துதிக்கும் பழக்கம் இவருக்கு இளமையிலேயே வரக் கண்ட இவரை இவர் தந்தையார் 'கிழவனார்' என்றே அழைத்தல் வழக்கம் என்பது நினைவுகூரத் தக்கதாம், பரமேஸ்வரன் எனப் பணிவோம் என்றே இவர் மாணாக்கர்களுக்குப் பாட அடியெடுத்துக் கொடுத்துத் தாமும் பாடி மகிழ்பவராவர். முதலில் சோமாஸ்கந்த மூர்த்தத்தைக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் வணங்கிய போதும் பரமேஸ்வரா என்பதே மந்திரமாக ஒலித்தது. கல்லூரிக்கும் பரமேஸ்வராக் கல்லூரி என்றே பெயர் வைத்தமையும் தெரிந்ததே.

**பல்கலைப் புலவர் மூதறிஞர் க.சி. குலரத்தினம்**

*(இக் கட்டுரை 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற பரமேஸ்வரன் ஆலய கும்பாபிஷேகம் மலரில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும், மங்காத புகழுடன் நூற்றாண்டு காணும் பரமேஸ்வராக் கல்லூரி : (1921 – 2021)

யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலியிலே சுமார் இருபத்தைந்து (25) ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பிலே ஆண்பாலாருக்கான பாடசாலையாக பரமேஸ்வரா வித்தியாசாலை சேர்.பொன். இராமநாதனால் ஆரம்பிக்கப்பட்டது. கல்வியறிவினையும் பண்பாட்டினையும் ஊட்டும் அருங்கலைக் கூடமாகவும் சைவநெறி மரபினையும் தமிழ்ப் பண்பாட்டினையும் பேணிக்காக்கும் அரணாக அமையும் வகையிலும் சைவப்பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்கள் 22.08.1921 பரமேஸ்வராவை ஆரம்பித்தார். இந்த ஆண்டு இப் பாடசாலையின் நூற்றாண்டாகும்.

இலங்கையின் கல்வி அபிவிருத்தி தொடர்பில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஆற்றிய பணிகள் மதிப்பிடுதலுக்கு அப்பாற்பட்டவை. தீர்க்கதரிசனமாக அவர் ஏற்படுத்திய கல்விசார் வளங்களே தமிழர் தம் உயர்கல்வி மையமாக இன்று உயர்ந்து நிற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உதித்தெழ அடிநாதமாக அமைந்தன. எனினும், இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் மௌனமாகப் புதையுண்டு கிடக்கும் அந்தப் பரமேஸ்வராக் கல்லூரியை நினைவு கூர்வதற்கும், அக்கல்லூரி தமிழுக்கும், சைவத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் ஆற்றிய பணியைப் பற்றிப் பிற் சந்ததியார் அறிந்து கொண்டாடவும், ஊக்கம் பெறவும் வாய்ப்பற்றுப் போய் விட்டது. பரமேஸ்வராவில் 1947இல் கல்வி கற்ற பழைய மாணவி என்ற புளகாங்கிதத்தோடு இப்பாடசாலை பற்றி நூல்களினூடாக நானறிந்தவற்றை பரமேஸ்வராவின் நூற்றாண்டு நினைவாக இங்கு பகிர்ந்து கொள்கிறேன். இது கற்றோரும், உற்றோரும் இக்கல்லூரியை மீள நினைந்து இன்புறத் தூண்டும்.

பரமேஸ்வராக் கல்லூரியானது அழகானதும் உறுதியானதும் போதிய நீள அகலம் கொண்ட விசாலமான மாடிக்கட்டடத் தொகுதியை உள்ளடக்கிய ஒரு பௌதிகக் கட்டமைப்பாகும். மேல் மாடிக்குச் செல்வதற்கான படிகள் மற்றும் மேல் மாடித்தளம் அத்துடன் மேல் மாடியில் அமைந்த பரந்த மேடை என்பன பர்மா தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்ட தேக்கம் மரத்தினால் முற்றிலும் உருவாக்கப்பட்டவை. பரமேஸ்வரர் ஆலயக் கட்டட வேலைகள் பூர்த்தியாகும் வரை தற்போதைய இராமநாதன் மண்டபம் பிரார்த்தனைக்குரிய இடமாக அப்போது இருந்துள்ளது. இராமநாதரால் இம்மண்டபத்தில் அமைக்கப்பட்ட அந்த மேடை தற்போது இல்லை. மேடை அகற்றப்பட்டு அந்த இடத்தில் யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைகள் கிளையின் அலுவலகம் தற்போது அமைக்கப் பட்டுள்ளது.

இப்பாடசாலை காற்றோட்ட வசதியுள்ள அகன்ற வகுப்பறைகள், விசாலமான மண்டபம், பரந்த விளையாட்டு மைதானம், சிலாலயம், நூலகம், எனச் சகல வசதிகளோடும் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டமை பெருமைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கமற்றவர்கள் கற்ற கல்வி பயனற்றது என்பதை அன்றே உணர்ந்த சேர். பொன். இராமநாதன் ஆன்மீக அறிவுத்துறையில் உத்தமமான மாந்தர்களை உருவாக்க வேண்டும் என்பதை உயரிய நோக்கமாகக் கொண்டு பரமேஸ்வராக் கல்லூரியை அமைத்தார். இதற்கேற்ற பொறிமுறையாகக் குருகுலக் கல்வி முறையை இப்பாடசாலையிலும் அதற்கான சூழலை உருவாக்கியிருந்தார்.

மாணவர்களும் ஆசிரியர்களும் உடனுறைந்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடியவாறு விடுதிச் சாலையை அமைத்திருந்ததாக அறியப்படுகின்றது. விடுதியானது மண்ணால் அமைந்திருந்தது இதன் தரையைப் பசுவின் சாணத்தினால் மெழுகிக் கிடுகினால் கூரையினை வேய்ந்து ஒரு பாரம்பரியமான கற்றல் சூழலுடைய தன்மையுடன் காணப்பட்டிருக்கின்றது. இவ்விடுதியின் காப்பாளராக அப்போது தலைமை ஆசிரியராக விளங்கிய சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் தொழிற்பட்டார்.

மாணாக்கர் ஆசாரசீலராகத் தூய உடையணிந்து திருநீறு பூசிச் சந்தனப் பொட்டிட்டுப் பாடசாலைக்கு வருதல் வேண்டும். காலை மாலை வேளைகளில் வழிபாட்டிற்கென அமைந்த இடத்தில் மாணவர்கள் தினமும் பரமேஸ்வரனை வழிபடவேண்டும் என்பன இக்கல்லூரியின் வழமையான நடைமுறையாகும். இதன்படி பண்டிதர் மாணிக்க தியாகராஜரை (1877) அழைத்து வந்து தினந்தோறும் காலையில் சைவநற்சிந்தனைப் பேச்சுக்களை நிகழ்த்துவித்துள்ளார். இதற்காக இராமநாதனவர்கள் தாமே நேரடியாகப் பண்டிதரிடம் சென்று அவரை தமது வாகனத்தில் அழைத்து வந்துள்ளார். பிரசங்கம் முடிந்த பின்னர் பண்டிதரை அவரது இல்லத்திற்கு தானே கொண்டு போய்ச் சேர்ப்பித்துள்ளார். இது பல காலம் நடந்துள்ளது என வண்ணைச் சிலேடை வெண்பா (1989) தரும் செய்தி, பரமேஸ்வராவின் கல்வி முறையில் ஆன்மிகத்தைச் செறிய வைத்த சேர். பொன். இராமநாதனின் முயற்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

பரமேஸ்வராவின் ஆன்மிகக் கொள்கை அதன் மகுட வாசகமான '' திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்'' என்பதன் மூலம் நன்கு புலப்படுகின்றது.

இக்கல்லூரியின் முதலாவது அதிபராகச் சேர். அருணாசலம் அவர்களின் மகனார் மகாதேவா நியமிக்கப்பட்டிருந்தார்.

வழிபாட்டுடன் வித்தியாரம்பம் செய்யும் நோக்கில் சோமாஸ்கந்த மூர்த்தியை எழுந்தருளச் செய்து பூசை வழிபாடுகளின் பின்னர் கல்லூரிக்கான கட்டட வேலைகள் 1920களில் ஆரம்பிக்கப்பட்டன. இன்றும் கூட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முக்கிய நிகழ்வுகள் பலவும் பரமேஸ்வரர் ஆலயத்தில் ஆரம்பிக்கப்படும் வழமையானது பரமேஸ்வராக் கல்லூரிப் பாரம்பரியத்தின் நீட்சி என்றே கருதத் தோன்றுகிறது.

சேர். பொன். இராமநான் அவர்கள் கொழும்பில் வசித்த போதும் பரமேஸ்வராக் கல்லூரியின் கட்டட வேலை மேற்பார்வை, கணக்குப் பரிசோதனை மற்றும் திருத்தப் பணிகள் முதலானவற்றின் பொருட்டு அவ்வப்போது நேரடியாகக்கல்லூரிக்குப் பிரசன்னமாகியுள்ளார் என ஈழகேசரி ஆண்டு மடல் கட்டுரையொன்றின் மூலம் அறிய முடிகின்றது. இதன்படி கொழும்பிலிருந்து புகைவண்டியில் வரும் இவர், தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வராச் சந்தியையும் கே.கே.எஸ் வீதியிலுள்ள நாச்சிமார் கோயிலையும் இணைக்கும் இராமநாதன் வீதியை ஊடறுக்கும் புகையிரதக் கடவையை அண்டிய பகுதியில் புகையிரதத்தை நிறுத்தி அதிலிருந்து இறங்கி நேரடியாகப் பாடசாலைக்கு வந்து சென்றுள்ளார் என அறிய முடிகின்றது.

இவ்வாறு புகையிரத்திலிருந்து இறங்கும் போது அதற்குரிய வசதியாக தற்காலிக படிகளும் பொருத்தப்பட்டதாக அறியப்படுகிறது. யாழ்ப்பாணத்திற்குப் புகையிரத சேவையை ஏற்படுத்திக் கொடுத்த பெருமகனாருக்கு இத்தகைய ஒரு மரியாதை வழங்கப்பட்டிருந்தமை சாலவும் பொருத்தமானதே. பரமேஸ்வரன் ஆலயக் கட்டடப் பணிக்கான கருங்கற்கள் வியாங்கொடையிலிருந்து புகைவண்டியில் கொண்டு வரப்பட்டு இப்பகுதியில் இறக்கப்பட்டு பின்னர் கட்டடப் பணிக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என மூதறிஞர் க.சி. குலரத்தினத்தின் கையெழுத்துப் பிரதிகள் வாயிலாக அறிய முடிகின்றது.

முப்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இங்கு கற்பித்துள்ளனர். இந்தியாவிலிருந்து வந்த ஆன்மிகவாதிகளும் மற்றும் ஆங்கிலேயர்களும் கூட அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் இங்கு பணியாற்றியுள்ளனர். சேர். இராமநாதன் காலத்தில் இப்பாடசாலையில் கற்றல் கற்பித்தல் பணிகள் உன்னத நிலையில் இருந்துள்ளமை பற்றி 1937 ஆண்டின் ஈழகேசரி பத்திரிகையில் குறிப்புக்கள் உள்ளன.

இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன. 18.01.1922ஆம் திகதியிலிருந்து இலண்டன் மற்றிக் வகுப்புக்களும் மற்றும் விஞ்ஞான இடைநிலைப் பரீட்சை வகுப்புக்களும் ஆரம்பித்து நடாத்தப்பட்டன என்பதை 05.01.1922இல் வெளியாகிய இந்து ஓகன் பத்திரிகை குறிப்பிடுகின்றது. 1924இல் பரமேஸ்வராக் கல்லூரி இலண்டன் பல்கலைக்கழக பட்டப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்யும் கல்லூரியாகவும் செயற் பட்டுள்ளது. 1952களில் இக்கல்லூரியில் கிறிஸ்தவ, பௌத்த மாணவரும் கல்வி கற்றுள்ளனர் எனவும் இந்து ஓகன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. மதுரைப் பண்டிதர் பரீட்சை வகுப்புக்களுக்கான தயார்ப்படுத்தல்களும் இப்பாடசாலையில் இடம் பெற்றுள்ளது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாக இயங்கியுள்ளது. இவ்வாறு அக்காலப்பகுதியில் கல்விப் பணியின் உச்சத்தைத் தொட்ட இக்கல்லூரி 1925 பங்குனி 06 மற்றும் 13ஆம் திகதிகளில் வெளியாகிய அரசாங்க வர்த்தகமானிப்படி இலங்கையின் கல்விக்கும் பொறுப்பான நிறுவனமாக இலங்கை அரசால் அங்கீகாரம் பெற்ற செய்தி பதிவாகியது.

26.11.1930இல் சேர். பொன். இராமநாதன் அவர்கள் மறைந்தார். இதன் பின்னர் ஹரிசன் என்னும் இயற்பெயருடைய லேடி லீலாவதி இராமநாதன் அம்மையார் இப் பாடசாலையின் சகல பொறுப்பையும் தாமே ஏற்றுக் கல்லூரியை வழிநடத்தினார். 1953இல் லேடி இராமநாதனின் மறைவுக்குப் பின்னர் சேர். இராமநாதவள்ளலின் மகளாகிய சிவகாமசுந்தரியும் அவரது கணவராகிய சு.நடேசபிள்ளையும் இக் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தினர். இவர்கள் இராமநாதன் தொடங்கிய பணியைக் காத்துவந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974.10.06 பரமேஸ்வராக் கல்லூரியைக் கேந்திர நிலையமாகக் கொண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் இந்துப் பண்பாடு மற்றும் தமிழ்க் கற்கைகளின் மத்திய நிலையமாக உயர்த்தும் இராமநாதனின் நோக்கை உள்வாங்கி ஆரம்பிக்கப் பட்டது. இலங்கையின் முன்னாள் பிரதமர் அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் நேரில் வருகை தந்து பரமேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு நிகழ்த்தி யாழ். வளாகத்தை ஆரம்பித்து வைத்தார். பின்னர் 1979இல் இவ்வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டது. இந்நிலையில் பரமேஸ்வராக் கல்லூரியின் எச்ச சொச்சங்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைக்கு மாற்றப்பட்டன.

பரமேஸ்வராக் கல்லூரி மறைந்தாலும் அதனைக் கேந்திர நிலையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளளவும், பரமேஸ்வராவும் மங்காப் புகழ் பெறும். இப்பல்கலைக்கழகம் சிறப்பிக்கப்படும் போதெல்லாம் பரமேஸ்வராவும் சிறப்பிக்கப்படும். நூற்றாண்டைக் கடந்தும் மங்காப் புகழோடு சேர்.பொன். இராமநாத வள்ளலின் இப்பணி போற்றப்பட்டுக் கொண்டேயிருக்கும். சைவ மரபினையும் தமிழ்ப் பண்பாட்டையும் நோக்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் சேர். இராமநாத வள்ளலுக்கு இப்பல்கலைக்கழகம் செய்யும் அஞ்சலியாகச் சென்று சேரும்.

**கலாநிதி (திருமதி) மைதிலி விசாகரூபன்**
சிரேஷ்ட உதவி நூலகர் - தரம் 01
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*(இக்கட்டுரை 04.12.2021 தினக்குரல் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பரமேஸ்வராக் கல்லூரி அமைக்கப்படின் தொடர்ச்சியும் பேணமுடியும்...

யாழ்ப்பாணப் பரமேஸ்வராக் கல்லூரியின் 100வது ஆண்டு விழா மலருக்கு கட்டுரை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரியில் நான் கல்வி கற்காது இருந்தாலும் இக்கல்லூரியின் செயற்பாடுகள் பற்றி 1950களில் இருந்து நன்கு அறிவேன்.

இக்கல்லூரி 1921ஆம் ஆண்டு சைவப் பெருவள்ளலும் புகழ்பூத்த அரசியல்வாதியாக இருந்த சேர். பொன்னம்பலம் இராமநாதனால் நன்கு திட்டமிட்டு நிறுவப்பட்டது. இக்கல்லூரி யாழ்ப்பாண நகரின் எல்லையில், விசாலமான நிலப்பரப்பில், சிறந்த உட் கட்டமைப்புகளுடன் அமையப்பெற்றது. மேலும் சைவப் பிள்ளைகள் தங்களுடைய பண்பாடு மற்றும் ஆன்மிகப் பின்புலத்துடன் நவீன கல்வியை கற்க வேண்டுமென்ற கொள்கையையும் சேர். பொன்னம்பலம் இராமநாதன் கொண்டிருந்தார். நிறுவுனரின் இலட்சியங்களுக்கு ஏற்ப இக்கல்லூரி 1922இல் இருந்து 1974வரை இயங்கியது.

இலங்கை அரசாங்கம் 1974இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தை அமைத்து பரமேஸ்வராக் கல்லூரியை 1974 யூலையில் பொறுப்பேற்றது. இத்தீர்மானத்துக்கு மக்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்கள் நிலவியபொழுதும் பல்கலைக்கழக வளாகம் அமையப்பெறுவதைப் பெரும்பான்மை மக்கள் வரவேற்றனர். இக்கல்லூரியை சேர். பொன்னம்பலம் இராமநாதன் நிறுவிய பொழுது இக்கல்லூரி ஒரு நாள் பல்கலைக்கழகமாக வரவேண்டுமென்ற தூரநோக்கைக் கொண்டிருந்தார். இவரது கனவு கல்லூரி நிறுவி 52வது வருடத்தில் நிறைவேறியது. மேலும் இவ்வளாகம் 01.01.1979இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்டது. சேர். பொன்னம்பலம் - இராமநாமதனின் பல்கலைக்கழகக் கனவு 1958ஆம் ஆண்டுக் காலத்திலேயே நிறைவேறி இருக்கவேண்டும்.

1958இல் அன்றைய பிரதமராக இருந்த கௌரவ S.W.R.D. பண்டாரநாயக்க, வித்தியோதையா, வித்தியாலங்காரா பௌத்த பிரிவெனாக்களைப் பல்கலைக்கழகங்களாக தரம் உயர்த்தினார். அப்பொழுது தமிழ் மக்களுக்கு இந்துப் பல்கலைக்கழகமொன்றை கொடுக்க முன்வந்தார். இந்நிலையில் தமிழர்களில் ஒரு பிரிவினர் இந்து பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் வேண்டுமென்றும் இன்னொரு பிரிவினர் இந்துப் பல்கலைக்கழகம் வேண்டாம், தமிழ்ப் பல்கலைக்கழகம், திருகோணமலையில் வேண்டும் என்று நின்றனர். முரண்பட்ட கோரிக்கைகளாலும் ஒற்றுமையின்மையாலும் ஒரு பல்கலைக்கழகமும் கிடைக்காது போயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958இல் தமிழர் ஒற்றுமையாக, அரசு தர முன்வந்த இந்துப் பல்கலைக்கழகத்தை ஏற்றிருந்தால் 1958இல் பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாக மாற்றம்பெற்று, வித்தியோதையா, வித்தியாலங்காரா பல்கலைக்கழகங்கள் போல் வளர்ச்சி கண்டு இருக்கும். ஏனைய மதத்தவர்களும் அவர்க்குரிய பல்கலைக்கழகங்களை காலக்கிரமத்தில் பெற்றிருப்பர்.

1961இல் அரசாங்கம் தனியார் மற்றும் சமய நிறுவனங்களால் நடத்தப்பட்ட பாடசாலைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் பல பாடசாலைகள் பெரும் பாதிப்புக்குள்ளாயின, 1960க்கு முன்னர் சிறப்பாக இயங்கிய பரமேஸ்வராக் கல்லூரி, அரசு பொறுப்பேற்றதன் பின்னர் படிப்படியாகத் தனது முன்னணி நிலையை இழந்தது 1970களில் மாணவர் எண்ணிக்கை குறைந்து, சிறப்பாக இயங்க முடியாத நிலையும் ஏற்பட்டது. இதுவே இக்கல்லூரியைப் பல்கலைக்கழக வளாகமாக மாற்றக் காரணமாக இருந்தது என்று கூறுவர் உளர்.

1974இல் இக்கல்லூரியை பல்கலைக்கழக வளாகமாக மாற்ற பல தரப்பினரும் உடன்பட்டது சரியாக இருப்பினும், இக்கல்லூரிக்குப் பதிலாக பரமேஸ்வராக் கல்லூரி என்ற பெயரில் புதியதொரு கல்லூரி பொருத்தமான இடத்தில் அமைக்க அன்று கோரிக்கைவிட்டு இருக்க வேண்டும். கோரிக்கை விடாதது பெரிய வரலாற்றுத் தவறாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட பின்னர் குறிப்பாக கடந்த நான்கு தசாப்தங்களில் பெரும் எண்ணிக்கையான மத்திய தர குடும்பங்கள் திருநெல்வேலி-கோண்டாவில் பகுதிகளில் குடியேறியுள்ளனர். இப்பகுதிகளில் குடியேறிய குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி கற்க அயலில் தரமான பாடசாலை இன்மையால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். காலம் கடந்தாலும் திருநெல்வேலி - கோண்டாவில் பகுதியில் புதியதொரு பெரிய கல்லூரி அமைக்கப்படவேண்டும். இதற்குப் பரமேஸ்வராக் கல்லூரி எனப்பெயர் சூட்டப்படவேண்டும். இம்முயற்சி வெற்றிபெறுமிடத்து, அது பரமேஸ்வராக் கல்லூரியின் தொடர்ச்சியும், கல்விப் பாரம்பரியமும் தொடர்ந்தும் பேண வழிவகுக்கும்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் வந்தாறு மூலை வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பொழுதும், அதற்குப் பதிலாக புதிய வந்தாறு மூலை மகாவித்தியாலயம் அமைக்கப்பட்டு இருப்பதைக் காணலாம். இதனை முன்னுதாரணமாகக் கொண்டு பரமேஸ்வராக் கல்லூரியை மீளவும் அமைக்கமுடியும். முயற்சித்தால் இலக்கை அடைய முடியும்.

**பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை PhD. (Durham)**
வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Legislative Council Debates
## Parameshvara College, Jaffna

June 18, 1925

The first reading of "An Ordinance to declare the Constitution of Parameshvara College, Jaffna, and to incorporate the Board of directors of the said College' stood in the name of the Hon. Sir P.Ramanathan, Kt., K.C., C.M.G. (Northern Province, Northern Division).

THE HON. SIR PONNAMBALAM RAMANATHAN, KT., K.C., C.M.G. (Northern Province, Northern Division) :- I rise, Sir, to move the first reading of an Ordinance to declare the constitution of Parameshvara College and to incorporate the Board of Directors of the said college. The draft Bill was duly published in the Government Gazette of March 6 and March 13 last. It has thus been in the hands of the Members of the Council and before the public for over four months.

"The College was founded in August, 1921, in consequence of the earnest desire of Hindu parents in and out of Ceylon, who feel that the kind of education that is being given to their boys and girls in the English schools established by the Government, or conducted by the private associations with the help of the Government grants, is not at all satisfactory. They want something more than a knowledge of the perishable things of life, too much of which is pressed on the attention of students as if there was nothing else worth considering and attaining. The result of this one-sided system of education are painfully manifest in all parts of the British Empire and elsewhere. The great difficulties experienced by administrators in governing the people of Europe, the United States of America, and other places, is the fact that the curriculum of studies prescribed in the universities and school of the West , except in theological circles, are confined to the things that relate to the perishable side of life. Everywhere the complaint is that boys and girls are not as they were some fifty years ago. Formerly there was some peace reining in their hearts. They respected their elders in their



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

homes and societies, and the rulers of the country in Councils of State and on political platforms. They were willing and ready to put in practice the principles they had been taught at their homes and schools. They loved to be self-controlled, obedient, thoughtful, and helpful to others. They spurned selfishness and irreligion. There is now a vehement desire for the gratification of the senses at any cost, an extraordinary regard for pleasure, and the proportionate contempt for duty. The principles which make life a thing of beauty and joy for ever have all been forgotten.

During the last five or six decades the old methods of instruction have disappeared, especially as to ethics and religion. Even teachers in great colleges do not know how to teach God and morality, owing to fierce controversies which have been raised round them, and which have discredited them in the eyes of those who have succeeded from ancient traditions. People want to know who God is, what is God doing for us, how are we to know God, and what is our duty towards God. They also want to know what to know what is Ethics or Morality, on what it is founded, what is the reason of the difference between things which are permitted things and things which are not permitted, and what relation does pleasure bear to duty. Such questions, if not answered intelligibly, produce a doubtful and controversial state of the mind, which ultimately leads to materialism and atheism. If one believes that there is nothing beyond what we perceive by the senses, and that there is no life after death, the conclusion is easily reached that one should seize every opportunity to please oneself in every plane of the senses. The meaning of pleasing or enjoying is to gratify every desire or passion that creeps into the mind. The result of a life like that of butterflies, dogs, cats, cattle and other animals, which have no codes of religion and ethics, and which have no power to hear and understand them.

Such boys and girls, men and women, are satisfied with the things immediately before them, and care not to aim high or live holily. They do not know the radical difference between virtue and vice, or the right and wrong, nor for the existence of the grand spiritual forces called Religion and Morality. They think that they may do whatever their likes and dislikes prompt them to do, if only they were not detected, taken up by the police, tried in a court of justice, and shut up in jail. They feel that, provided they avoid detection and punishment, they may easily pass for respectable people. To them I would say that Religion consists of those principles and practices


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

which relate to communion with God and the attainment of actual knowledge of God, and that the chief obstacles to such union and such knowledge are indulgence in selfishness, unrestrained gratification of sensual desires, and the preference of pleasure to duty.

" Now Sir, parents in this country, and indeed in all other civilized countries, greatly regret the evil days that have fallen upon them, and are earnestly craving that the ancient traditions which have prevailed among us and produced really good men and women, really good citizens, may be taught in our schools, under the protection of the Government.

" Some sixty years ago, Professor Huxley assured his large audience in the United Kingdom that he could not commend the education imparted in its schools and colleges, for the simple reason that it could not convert a bad boy or girl into a good boy or girl. His testimony has been found to be true by succeeding generations. They have watched the course of events which have made for disorder and spiritual ruin, and they are anxious that something must be done at once to enable youngsters to learn and live the right life.

" Right thought, right speech, and right action still exist among a limited number of men and women in Christendom and other fields of religion. They are most anxious that the youth of the country should save themselves from the perils of selfishness and sensuousness combined, called worldliness, and that, while the nature of the perishable things that surround us should be taught to their children, a serious effort should be made to inculcate also some of the principles relating the imperishable things known as God and Souls, and to teach the part which Evil plays in the destruction of humanity.

"Hindu, Buddhist, Christian, and Mohammedan sages have all taught the principles of imperishable or eternal life in order to save human beings from the dangers of worldly life. They emphatically assert that the Life-Eternal is not something high up in the skies, but is attainable in our own hearts, admist our worldly surroundings, and that a knowledge of the principles and practices of Eternal Life is the only safeguard against the corruptions which beset our path on earth. Therefore, our duty is clearly to bring afresh within the reach of our children the great traditions which have been crowded out of our schools and colleges by the advent of what is called 'modern civilization'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" I have thought for many years that it was my duty to help Hindu parents in this country and India to attain their heart's wish. This is the reason , why Parameshvara (College) Vidyalayam was founded. Vidyalayam means a house of learning, and Parameshvara means the Most High. Thus Parameshvara College means the house of learning of the Most High. Any student who is admitted there will be given facilities to know something more of life than the perishable side of it. He would know that the sprit within the mortal body, and God within and beyond us, are the only imperishable things which we should labour hard to attain, at least as hard as we labour for the perishable things of the body. In our endeavour to attain the Imperishable, we have first to discover the individual Sprit which is in the body, and then come to know God who is in the Sprit. The Sprit is therefore called the Temple of God. Unless boys and girls are taught these truths early in life, and helped to prefer the principles and practices which relate to the discovery of the Sprit in the body,and God in the Sprit, they would be engulfed in the vortices of selfishness and sensual desires. They would naturally sink more and more into corruption, and become terrible sufferers here and in the lives to come.

" The chief aim of Parameshvara College is to save our boys in this way and to make good citizens of them. By reminding them of our Spiritual Traditions, we hope to make them real assets to us and the British Empire. Our Late Governor, Sir William Manning, attached the highest importance to Spiritual Traditions. He spoke of them just before departing from the Island. He attended a function at Zahira College, Maradana in March last, and addressed those who were assembled there as follows:

' Now, one passage of the speech of the Head Master struck me as being one not only of great importance, but one as bearing very largely upon the desirability of education under Muslim precepts, and that is this. There is now in Ceylon the means of educating the Muslim youth without the sacrifice of belief and ideas sacred to Islam. I can only tell you how I agree with that sentiment. You have hitherto not had a secondary school where your children will be educated without the sacrifice of belief and ideals which are sacred to your religion. Now this being the sole Muslim secondary school at present in existence in this Island, I can only hope that it will receive your support. My own opinion is that the Muslim community is worthy of a great school. That feeling should be cherished and encouraged in every way by the Government


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of this country. I very sincerely hope that the Muslim youth of this country will be trained in the tenets of the Islamic faith, and will obtain in this college that education which will enable him to become prosperous and worthy and that, when in later days they recognize the benefits they have received from this college, they will exercise that great tenet of your religion which is Charity and will come forward in their more prosperous days to help all that appertains to Muslim education'

" How broad, Sir, are these views! How good of this staunch Christian Governor to speak so sympathetically of the religious ideals of the Muslims, and to lay the foundation stone for a building to be raised for the glorification of such ideals! How different is the conduct of some other educationists among us, who think that they should support their own religion only , and that every other religion on the face of the earth must be undermined and damned! These narrow-minded persons believe that God does not exist in the heart of every man, and that, when some non-Christian religionist is addressing himself to God who is within and beyond him, he is worshipping the devil. This hatred of other religions and opposition to the works of other religionists, have had a most degrading effect. There is only one God for all nations. He is the only Lord of all hosts who can be worshipped by human beings. The methods of worship in the case of great religions of the world may be different, but the object worshipped is identically the same.

Having founded the Parameshvara College, it was necessary to incorporate the Board of Directors who are administering it, and I have come to this Council with the draft of an Ordinance for that purpose. It sets out the aims and policy of the college and the course of studies that will be imparted there. I regret to say that some intolerance has been towards the spiritual side of the education described in some clauses of this Ordinance. I say that anyone who oppose this policy is an enemy to humanity. If he is a genuine Christian this people will not oppose it, because Jesus said:" This is Eternal Life- knowledge of God and the spirit that is in the body. " It is the principles of such knowledge that should be imparted in everyday school and college. I believe that there are many Christian schools where such principles are taught., and I do not see why any Christian should grow impatient when such principles are taught in Parameshvara College. I consider that it is essential to the welfare of a student to know these principles, and therefore there is a special clause in the Ordinance about them.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is said that the education imparted in schools should enable an outgoing student to find a livelihood for himself. Between the ages of six and fourteen there is time enough only to make him read write, and work simple sums in arithmetic, but the training for a clerkship or other vocation for earning a living wage is possible only in later years, say, between fourteen and nineteen. The education that is required to gain a livelihood , so as to keep body and soul together, requires a knowledge of such things as are taught ordinarily in our schools, but Education in the proper sense of the term implies something that is systematically neglected by our educationists. I am sure that Honourable Members will agree with me that the more important side of Education is the training of boys and girls to lofty ideals of Character, perfection in work, heartfelt devotion to God, and loyalty to the King. This is expressly declared in the draft Ordinance before us to be the policy of Parameshvara College.

What is meant by lofty character?

Man is in bondage to evil, and the most urgent problem in life is to extricate the soul from evil and its subtle corruptions. If the instruments of knowledge and action, given to the soul by God, be not carefully trained and strengthed in early life to prefer always the needs of the soul to the carvings of the body, they will not be able to resist the promptings of evil to do the very things they should not do in the interests of the soul. If these instruments fail to protect the little heaven of love and light that is in every man, and to develop them successfully, first into neighbourly love, and then into philanthropic love, and then to Godly love, they are said to be possessed of " bad character ". The marks or features or characteristics of our inner being, having suffered disfigurement by evil, are spoken of as low or wicked. But if our instruments of knowledge, the chief of which are the five senses, the mind, attention, recollection of sound doctrine, right reason, and determined will, do not deviate from the path of duty laid down for us by sanctified sages, we are said to be possessed of " high or lofty character".

It will thus be seen that the formation of good character requires sense control, mind control, abundant study and thoughtful action. In every country we have a small percentage of men who are congenitally gifted with good character, with a strong predisposition to avoid evil and follow the dictates of duty. This congenital gift is the


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

result of the past lives lived according to law, but there is a much larger percentage of people who wish to be good, and yet are unable to struggle against the impulses of evil. What is the kind of education to be given to them that will lead them out of the mazes of wickedness? Is the nature of evil and its subtle ways ever explained to them? Is God's design as to the uplifting of fallen people ever unfolded to them, at home or at school, in the early part of their live

Has anybody taught them that pain, poena or punishment was ordained by God as a remedial measure against evil? In Western countries, on both sides of the Atlantic Ocean, there are famous preachers who confound evil with pain, who say that evil and pain are identically the same. They teach that passion and animal desires in man are so deeply rooted in human nature that it is impossible to efface them, and that all we can do is to wisely direct the higher desires and endeavour to find peace in the culture of one's personality. Can this wise direction of the higher desires and this cultivation of character be effected under the present system of education which thrusts aside religion and ethics?

Until our boys and girls are taught to realize the great truth, that indulgence in any desire, not permitted by law, conduces to debase one's character and brings about spiritual ruin: until they learn that the desire for gratifying each of the five senses should be carefully limited and controlled, lest the mind, running promiscuously with the senses, be spoilt by the mire of sensualism: until it is strongly impressed upon our boys and girls that an impure mind becomes the ally of evil, and the enemy of the soul; until they clearly understand what the principles and practices of Eternal Life are, and how such truths only can free the soul from the beguilements of evil, they would continue to be creatures of sorrow and mischief to themselves and to the society to which they belong.

So far as regards the formation of high character.

What is perfection in work? This is absolutely necessary for self-improvement and social improvement. Every Official Member who has a seat in this Council, by virtue of his being a head of a department, will bear testimony to the fact that he earned his position by laboring hard to excel in the work entrusted to him. Whether it is thinking or speaking or writing, or whether it is supervising, directing or organizing, his one desire was to do his very best. From this point of view of excelling in work, he has


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

known what officers working under him as assistants or clerks are excellent workers , what officers are indifferent workers, and what officers are bad workers. Perfection in work is not to be obtained except by taking infinite pains, and endeavouring to complete and polish up in every detail the work in hand.

Excellence in hand work is a prelude to perfection. In fact the great design of God which we see prevailing in the constitution of all bodies- mineral, vegetable, animal and human- we observe that every cell and every aggregate of cells is beautifully made and well correlated. We have to copy the example of God in regard to the works entrusted to us in this life. We should not draw any distinction between what are called little things and great things that come to our hands. In the case of everything, our duty, is to turn out excellent work, and we shall have our reward, which is steadfastness of purpose, poise, purity of heart, and prosperity in peace.

These qualifications lead us nearer and nearer to God. We become devoted to God. We are not satisfied with lip service to God. We feel degraded when the mind wonders in the act of worshipping God. The habit of giving our whole attention to perfection of worship begets feeling, all the while, that God exists, mercifully rewards us for works of loving kindness, and punishes us for our works of hate. Without a full acknowledgement of God and a constant fear of wrong doing , there can be no Extrication of the Soul from Evil. The more and more the power of evil is resisted by us, declines in us, the more clearly shall we see the reality and greatness of God.

I need not say much about the principles ideals of loyality to the King set forth in the Ordinance of the school and college still make much of this virtue. If the throne and its surroundings are disturbed, there will be confusion in society which could grow in great dangers will stare us in the face. I am glad that Parameshvara College is not a single school or college in Ceylon which objects to loyalty to the King. In the draft Ordinance relating to Parameshvara College it Is laid down as a stern duty, to be observed by students, teachers and the Board of Directors.

In matters relating to the administration of this college, I have often consulted the Director of education. He consented to be appointed in the Trust Deed as one of its Directors, when I explained to him that, if he were a member of the Board, he would be of great use to the other Directors, and guide them in the solution of many an educational and administrative question. But now that his name is mentioned in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the draft Ordinance, he thinks that neither he nor the Divisional Inspector of the Schools of the Northern Division should hold office on the Board. I cannot appreciate this change of attitude towards the college, but, of course, if he persists, I shall have to strike off his name.

Section 10 of the Ordinance lays down clearly that, in addition to the usual curriculum of studies, the religious traditions of the Hindus should be carefully taught to every Hindu boy there. There are some Christian teachers in the college, and boys belonging to any religion are admissible there. The Hindu religion inculcates that the souls of boys and girls and men and women, of whatever faith or race, are all children of one and the same God: that parents as well as teachers are trustees of God: and God exists in the heart of every human being: and that all the affairs of this world must be interpreted in terms of the prevailing power and grace of God. When our thoughts, divorced from the limitations of the body and its surroundings, are thus established in God, our sages declare that we have passed from the kingdom of earth to the kingdom of God, from the things of perishable life to imperishable life or the Life Eternal.

I move, Sir. The first reading of the Ordinance to incorporate Parameshvara College.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sir Ponnambalam Ramanathan Efforts to Maintain Justice and Fair Play with Cruel Attrocities Caused to the Sinhala People by the British Regime

### Ramanathan's Mission to England – His Return

*In my opinion, no man has risen to the ideal of what a representative of the people should be as Mr. Ramanathan has done.*

- Sir Frederick Downmost

Ramanathan sailed for England by *M. M. Paul Licata* on 30th October, 1915. Needless to say, the journey was a perilous one. Bubbles were seen rising up to the surface of the sea, and the Captain explained it was due to the breaking up of an iceberg. The ship went in a zig-zag course and the passengers were told that there were rocks underneath. It was only when steamer reached England that the Captain told the truth. The bubbles were from a German oil tanker which had been sunk and the zig-zagging was due to the ship's being chased by submarines.

Ramanathan reached England after a long and anxious voyage. While at sea he had not idled – Ramanathan was never known to idle – but had put his time to the most profitable use. He had prepared his case for presentation at Westminister. When he landed in England, he had his case ready. He also published a history of the riots under the title "Riots and Martial Law in Ceylon, 1915" for the benefit of the British public and its rulers, had a number of personal interviews with Mr. Bonar Law, the Secretary of State for the Colonies, and other Ministers of State, got into close touch with leading Members of Parliament and other prominent personalities, and gave the widest publicity to the foul misdeeds of their agents in the Island.

As a result of his representations, Ceylon hit the headlines in practically all the newspapers in England. Much popular indignation and resentment was aroused at the sensational happenings. Questions were asked in Parliament; the Governor and the Brigadier-General were recalled immediately. Of his work in England, he has given us the following account:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"This is an eventful story which cannot be briefly told. But it may be mentioned that, on arriving in London, I corresponded with the Secretary of State and found him immersed in office, in Parliamentary and War duties, which taxed him to the utmost extent. He deputed the Permanent Under-Secretary of State Sir and the Governor-Elect of Ceylon to meet me. Sir John Anderson gave me a most kindly, patient and long hearing, with assurances of careful consideration and relief after arriving in Ceylon and assuming duties as Governor. Then, on the invitation of a Member of Parliament, who is also a Member of the Privy Council, I met several Members of Parliament in the House of Commons, and addressed them there and answered all the questions put to me. I wrote, printed and published a book of over three hundred pages full of facts, explaining the true state of affairs in Ceylon. I spoke again at another private meeting of Members of Parliament and other influential gentlemen and ladies assembled in the central buildings, Westminister, under the Chairmanship of Sir T.F. Victor Buxton, Bt. I did not leave England until I had the assurance of my friends and supporters that they fully understood the local situation, and would take charge of it and leave nothing undone to get redress.

"My protest in Council and the Colonial Office has borne good fruit. None of the debt-bonds, compulsorily taken by the Military Commissioners, has been enforced; the compensation assessed by the Officers of the Government, which I complained of as excessive and unjust in its incidence, has been reduced by 70 per cent. And this reduced amount has been distributed amongst a vast number of men, whose burdens have become proportionately less and comparatively small; a large number of persons sentenced by Courts-Martial and the ordinary Courts have been released and long sentences considerably reduced; the very heavy compensation insistently demanded of Moratuva has also been reduced by 33 per cent; and for these and other reliefs, we have to thank Mr. Bonar Law and Sir John Anderson chiefly.

"Great as the calamity was that befell us, we should consider it a blessing in disguise. The ignorant masses know now the consequence of taking the law into their own hands for avenging their wrongs, real or fancied; and the officers of the Government who acted in excess of their powers know now their duties better, as also the relation which they bear to the people as His Majesty the King's servants,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

charged with the duty of serving the people and guiding them by ways that are not cruel, contemptuous or oppressive."

The Sinhalese people loved and honoured him, for he had served them with selfless gallantry and single-minded in their hour of dire need. Mr. (late Doctor) C.W.W. Kannangara, speaking of this aspect of Ramanathan's service to the people (Sinhalese) said, "When the fair name of the Sinhalese had been traduced, when the whole Sinhalese race was about to be wiped out of existence by a muddle-headed Government, it was Ramanathan the Tamil, who raised his mighty voice and fought on behalf of the Sinhalese. All praise be to him that he discharged his duty by his countrymen manfully. His name will ever be inscribed in the loving hearts of a grateful people."

E.W. Perera said of him: "It was Sir Ramanathan who fought manfully and strenuously for the Sinhalese, who though not of his (the speaker's) blood, yet feeling as a child of the country for his mother-land, did all he possibly could as the one Ceylonese member to vindicate the Sinhalese and help them in their great agony and in their great travail."

Ramanathan's return to Ceylon from England on 17th February, 1916, was marked by uproarious acclamation and nation-wide rejoicing. A leading English paper, "The Ceylonese", said in its issue of 21st Feb. 1916:

"The town of Colombo wore a most animated appearance yesterday morning, when a very large section of the permanent population turned out to witness the return of the Hon. Mr. P. Ramanathan from England. The Ceylonese Member had left for England in November last on some important work, the nature of which is well known enough now. And the gratitude of the people of Ceylon showed itself in a very marked manner by the memorable reception he received yesterday. The 'P. & O. Malwa' by which he was travelling from England was the centre of much interest ever since it became known that he had left England, and there was a large local comment during the few days when that steamer was in the Danger Zone in the Mediterranean. When it became known a very few days ago that Mr. Ramanathan had survived the perils of the sea and was on his way home, it became the general consensus of opinion that he should receive a welcome. A committee of young men met a few days ago and


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

discussed all the arrangements in detail. That they had deliberated well was evidenced yesterday by the grand Tamasha which was witnessed by all Colombo yesterday.

"The 'Malwa' was expected in Colombo at 8 O'clock yesterday morning. But almost as soon as daylight came on, the people started coming into the Fort in the hope of seeing Mr. Ramanathan.

As hour by hour passed and the steamer was not sighted, the crowd increased and the Fort was the centre of much animation. The committee were all dressed in white and wore rosettes. The carriage which was to bear Mr. Ramanathan to his residence from the jetty was brought to the Fort quite early. It was decorated all over with lovely flowers-eucharis, lilies, roses and other choice flowers being used in the decorative scheme. The carriage was really transformed from an ordinary landau into a type of what was so lately seen in miniature in the grounds of Queens's House. When the news got out a little before noon that the vessel was being sighted, the excitement increased. The people commenced flocking towards the jetty to get a sight of the steamer, but here the police inrterfered; no one was allowed on the jetty without a pass from the Principal Collector of Customs and this is an unobtainable thing as far as the general public are concerned. Therefore, the landing jetty was the quietest part of the whole Fort yesterday. We need say little with regard to the pig-headedness on the part of the Police. There could have been no harm whatever in allowing the public on the jetty yesterday. Shortly after the steamer had moved into the harbor and when the doctor had granted the pratique, the following members of the committee went on board: - Messrs. A.E. Goonesinghe, A.W.P. Jayetilleke, R.E.W. Perera and P.N. Jayenetti. All this time the crowd was getting larger and larger. Nearly an hour elapsed before the people were enabled to have a look at their idol. When the Ceylonese Member made his appearance from the landing jetty, there was an uproarious outburst of cheering that could have been heard many hundreds of yards away and it must have been gratifying to Mr. Ramanathan that his appearance was the cause of such an outburst of applause. It ought to have been mentioned that a large number of placards bearing such slogans as 'Long Live the Ceylonese Member,' 'Honour to whom honour is due,' 'Young Lanka welcomes the Grand Old Man of Ceylon' ect., were very prominent throughout the Fort – some on rickshaws, some on carriages and some were even carried by some young men. Mr. Ramanathan was then conducted to Sukhastan, his



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

residence, and the procession was formed up. First came the long line of school boys bearing flags. They were followed by native musicians and native dancers. Behind the native dancers, came Mr. Ramanathan's carriage, in which the Ceylonese Member rode in stately solitude. Before the procession started, the horse was taken out from between the shafts and the carriage was drawn all the way by thirty members off the Committee. The task was performed with great pride and willingness. The procession was nearly a quarter of a mile long and excited great attention on the road along which it followed. The whole Fort turned round to see the procession, and traffic was completely disorganised for over twenty minutes. Needless to say, the Police were very much in evidence. It seemed as if the whole Police force had turned out to take care of those who were forming the procession. There was certainly an abnormal number of Police Officers and men in the procession. Admirable order was kept. The route taken was along Norris Road past the Technical College and Railway Stores, along the Tram road to the Maradana Junction and then through Symond's Road, Dean's Road and Ward Place to Sukhastan.

It was nearly 4.30 p.m. when the procession arrived at Sukhastan. Filled with enthusiasm, the monster crowd too entered the compound, eager to demonstrate their joy at seeing the Ceylonese Member. The whole premises were full and loud cheering was heard all around. At home the usual blessing ceremony according to oriental fashion was held as soon as Mr. Ramanathan alighted from the landau. The native dancers from Ratnapura, Kandy, etc., who had specially been brought down to Colombo entertained the crowds. Mr. Ramanathan, coming to the compound a little while afterwards, briefly addressed the multitude. The gathering round the Hon. Member was so great that the pressmen present found it almost impossible to approach the speaker or take down a verbatim report of his speech. To put in a nutshell, Mr. Ramanathan said that it was an inspiration to those who tried to do their duty by their country to see themselves honouured in the way he (the speaker) had been honoured. It was not a time for him to speak of the work he had done in England. Their first sentiment should be loyalty to the British Throne (applause) and then they could all do their duty to the best of their powers.

"A member of the Ramanathan reception committee interpreted the speech into Sinhalese and the people demonstrated their appreciation of it by listening in silence.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The speech over, those present in the compound enjoyed themselves by listening to the native music and witnessing the oriental dancers from the Up-county. In a few words, the whole scene at Sukhastan yesterday afternoon was a scene of great animation. There was a garden party too at which a very large and fashionable gathering was present. Refreshments were served in abundance and a very enjoyable and convivial time was spent by all.

"At 7 p.m. there was a brilliant display of fire-works at the Sukhastan premises and this was the last item of yesterday's gay doings to honour the Ceylonese Member on his return to the Island. The scenes yesterday at the jetty, along the streets and at Sukhastan from the time the procession started created many impressions which would be long remembered by those who witnessed them."

The following account was given by Mr. A.E. Goonesinghe, many years after:

"Sir Ponnambalam Ramanathan, who had collected a lot of material on the sordid activities of the Englishmen in the name of Martial Law, repaired to England, braving the seas at the time the first World War was on. We also demanded the appointment of a Royal Commission to inquire into the brutal activities of the English in Ceylon.

"The Young Lanka League had arranged to give him a reception, when the ship he was travelling in arrived in the harbor. All the leaders were against our according him this reception. I had arranged for Kandyan dancers, bands, etc., to conduct him in procession from the jetty to his residence.

On the day he arrived, some prominent Ceylonese politicians boarded the ship and I was told that they were going to advise Sir Ponnanbalam not to participate in the procession arranged in his honour. Hearing this, I arranged for a number of young men to go on board the ship and speak to him and tell him what they had done.

"Amoung us was Lionel Kotelawala – now Sir John Kotelawala – quite an insignificant young man at that time. About six of us went on board the ship to meet Sir Ponnanbalam. We had printed hand-bills giving details of the route, etc., but the mischief had already been done, because the leladers were ahead of us.

"When Sir Ponnambalam came out of the cabin, I went to him and presented the hand-bill. He at once said, 'This is impossible; you must understand that the country is under Martial Law, and if anybody should throw a stone at the procession, there is bound to be serious trouble.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"This is what the leaders had told Sir Ponnambalam and he was adamant. I did not accept his refusal as final. We left the ship before anybody else and going into the jetty where several hundreds of people had assembled, I made a passage through the crowd from the jetty to the road where a decorated car was ready to be drawn by the members of the Young Lanka League. I ordered that nobody should be allowed to enter this passage other than Sir Ponnambalam.

"No sooner had Sir Ponnambalam arrived at the jetty than I garlanded him and took him through this passage which I had asked the future Minister of Transport, Sir John Kotelawala, to be in charge of.

"I then led Sir Ponnambalam to the landau. He hesitated, but when the music started, the bands began to play and the Kandyan dancers started to perform, Sir Ponnambalam was impressed and he quietly went in and sat down.

"The passage for the leaders was blocked. I had arranged this. It was some time before they emerged from the jetty. The procession started.

"Thousands of people followed it. I sat on the dicky, and twenty-four young men drew the carriage to Sukhastan, Ward Place, the residence of Sir Ponnambalam.

"A beautiful painting of this procession was later presented to Sir Ponnambalam by a lady, who had travelled on the ship.


"The history of Martial Law in Ceylon cannot be concluded without mentioning the part played by that great man Sir Ponnambalam Ramanathan, who stood like a colossus alone in the Legislative Council and vindicated the honour and dignity of the Sinhalese nation. I was present in the gallery on that day in September 1915, when Sir Ponnambalam spoke for several hours. With tears in his eyes, he described the brutalities committed by Englishmen with impunity under the name of British justice. He said it was not justice but downright murder by the ruling race and it was an act of misgovernment for the ruling race to ignore all these atricities.

"Up jumped Sir Reginald Stubbs, the then Colonial Secretary, and said that Sir Ponnambalam was accusing the government of misgovernment and wanted the word withdrawn. Sir Ponnambalam refused and enumerated one by one the acts of misgovernment.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"No Sinhalese who had heard Sir Ponnambalam in defence of the Sinhalese people in the Legislative Council that day will ever raise his hand, or say anything against the Tamil race. The actions of the Sinhalese in 1958 against the Tamils make me ashamed as a Sinhalese, and I decried them then and ever after. This hatred and contempt engendered by designing politicians against our own brothers the Tamils must cease."

**Uproarious receiption accorded to Ramanathan on his return from his successful mission in England in 1915.**



**Source :** *Sir Ponnambalam Ramanathan* (1971) by Mr.M.Vaithilingam, former Principal Chavakachcheri Hindu Collage, Jaffna.

**Note :** The above article is reproduced to enlighten the minds of the people of Sri Lanka, how graceful and grateful of the great leader Sir. Ponnambalam Ramanathan acted at the National crises without racial and religious prejudices.

A lesson for the present and future generations of Sri Lanka.

by T.Perinbanayagam
President
Old Boys Association of Parameshwara College
Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு 22–08–2021

### ஒரு வரலாற்றுக் குறிப்பு

1920ஆம் ஆண்டளவில், இலங்கை தேசிய இளைஞர் பேரணி சேர். பொன். இராமநாதனின் தலைமையில் கீரிமலையில் கூடி, சைவத் தமிழ் கலாசார வளர்ச்சியை உறுதி செய்யக் கூடிய ஒரு பாடசாலை ஆண்களுக்காக நிறுவப்படவேண்டும் எனும் தீர்மானத்தை முன்வைத்தது. இதற்கு முன்பாக 1913ஆம் ஆண்டு, பெண்களுக்காக சுன்னாகத்தில் இராமநாதன் கல்லூரி நிறுவப்பட்டிருந்தது. அச்சமயத்தில் சட்டசபை உறுப்பினராக இருந்த சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் உடனடியாகவே ஓர் இந்துமதக் கல்லூரியை நிறுவும் பொருட்டு திருநெல்வேலியில் 25 ஏக்கர் நிலமும், இப்பாடசாலை பராமரிப்பிற்கு தேவையான வருமானத்தைக் கொடுப்பதற்காக கிளிநொச்சியில் 400 ஏக்கர் நெல் வயல் காணியையும் கொள்வனவு செய்தார். 1921ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆம் திகதி திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம் ஆரம்பப் பாடசாலையாக ஸ்தாபிக்கப் பட்டது. அதன் முதல் தலைமை ஆசிரியராக மதிப்பிற்குரிய சைவ அறிஞர் சிவபாதசுந்தரம் அவர்கள் நியமிக்கப்பட்டார். 1922 ஆம் ஆண்டு, இப்பாடசாலை தரம் உயர்த்தப் பட்டது. அதன் முதலாவது அதிபராக சேர். அருணாசலம் மகாதேவா நியமிக்கப்பட்டார். 1946ஆம் ஆண்டு இக்கல்லூரியின் வெள்ளிவிழா மிக விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. 1950ஆம் ஆண்டு தமிழ் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெற்றது ஒரு குறிப்பிடப்பட்ட அம்சமாகும். 1956ஆம் ஆண்டு மறைந்த அதிபர் எஸ். சிவபாதசுந்தரத்தின் தலைமையில் பரமேஸ்வரா இலட்சிய ஜயந்தி விழா 3 நாட்களாகக் கொண்டாடப்பட்டது. இந்தியாவில் இருந்து பேரறிஞர்கள் வரவழைக்கப்பட்டு அரிய சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. பின்னர் 1962ஆம் ஆண்டு பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டன.

**யாழ் பல்கலைக்கழகம்:** சேர் பொன் இராமநாதனின் மருமகனாகிய திரு. சு.நடேசபிள்ளை அவர்களின் முன்னைய வேண்டுதலின்படி, 1974ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள், இப்பாடசாலையை ஒரு பல்கலைக்கழகமாக மாற்றம் செய்தார். அங்கு கல்விகற்ற மாணவர்கள் அப்பிரதேசத்திலுள்ள வேறு பாடசாலைகளுக்கு மாற்றப்பட்டனர். அக்கால கட்டத்தில் இருந்துவந்த அசாதாரண அரசியல் சூழல் காரணமாக, பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் இழந்த கல்லூரிக்கு ஈடு செய்யும் முகமாக எதுவும் செய்ய முடியாமற் போயிற்று.

2006ஆம் ஆண்டளவில் கல்லூரி நலம்விரும்புவோருடன் தொடர்பு கொண்டு, பரமேஸ்வராக் கல்லூரியின் தலைசிறந்த பழைய மாணவராகிய ஓய்வு பெற்ற பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. பேரின்பநாயகம் அவர்களின் வழிகாட்டலில் பழைய மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் மீண்டும் மீளமைக்கப்பட்டது. எமது சங்கத்தின் முக்கிய குறிக்கோளானது எப்படிப்பட்டாவது திருநெல்வேலியில் மீண்டும் பரமேஸ்வராக் கல்லூரியை இயங்கவைப்பதேயாகும். 2010ஆம் ஆண்டு எமது கல்லூரி ஸ்தாபகர் சேர்.பொன் இராமநாதனின் சிலைக்கு மாலை அணிவித்து யாழ் பல்கலைக்கழக மண்டபத்தில் கௌரவ அதிதியாக உயர் கல்வி அமைச்சர் எஸ். பி. திசாநாயகா அவர்களையும், அமைச்சர் டக்லஸ் தேவானந்தா அவர்களையும் வரவழைத்து ஓர் பொதுக்கூட்டம் நடாத்தினோம். அக் கூட்டத்தில் எமது சங்கத்தின் கோரிக்கையாக திருநெல்வேலியில் இயங்கிவரும் தமிழ் சைவக் கழவன் பாடசாலையை பரமேஸ்வரா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யுமாறு வேண்டினோம். இதற்கு அப்பாடசாலை பெ. ஆ. சங்கமும் விருப்பம் தெரிவிப்பதாவும் அறிவித்தோம். இதன் பின்னர் 2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் வடமாகாண சபையின் கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், பெயர் மாற்றத்துக்கான அங்கீகாரத்தை அளித்துள்ளார்கள். சேர். பொன். இராமநாதனின் குருபூசை தினமாகிய 2012-11-19 ஆம் திகதி இப்பெயர் மாற்றம் உத்தியோகபூர்வமாக இடம்பெற்றது.

சேர். பொன்னம்பலம் இராமநாதனின் முயற்சியால் உருவான பரமேஸ்வரா கல்லூரி திருநெல்வேலியில் மீண்டும் மலரச் செய்வதற்காக எமது சங்கத் தலைவர் திரு. த. பேரின்ப நாயகத்தின் அயராத உழைப்பும், விடாமுயற்சியின் பெறுபேறாக, **பரமேஸ்வரா வித்தியாலயம்** 2012-11-19ஆம் திகதி பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அத்தினம் அமரர் இராமநாதனின் குருபூசை தினமாக இருந்ததும் ஒரு விசேட அம்சமாகும்.

இப் பெயர் மாற்றத்தின் பின்னணியில், எமது சங்கத் தலைவர் திரு.பேரின்பநாயகம் அவர்களின் பணி போற்றுதலுக்குரியது. எமது கல்லூரியின் பழைய மாணவனான இவருக்கு, 2019ஆம் ஆண்டில், இலங்கை ஜனாதிபதியின் உயர் விருதான **'லங்கா திலகர்'** என்ற பட்டம், இவரின் நீண்ட கால சேவைக்காக வழங்கப்பட்டது. இதன் மூலம் அவர் பெருமை பெற்றதுடன், எமது பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இப்பெயர் மாற்றத்துக்காக முன்னின்று செயற்பட்ட இ.த.க. பாடசாலை அதிபர் திரு. ந.விஜயசுந்தரம், மற்றும் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம், பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ் கிளைத்தலைவர் திரு கனக. நமநாதன் ஆகியோரின் பங்களிப்பையும் இத்தருணத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

**ச.சிவலோகநாதன்**
செயலாளர்
பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
- கொழும்புக் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழா நிகழ்வுகள்

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக தமிழ் விழாவை நடாத்துவதற்கான அரிதான சந்தர்ப்பத்தை பரமேஸ்வராக் கல்லூரி பெற்றுக் கொண்டமை எமது கல்லூரி பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

**முதலாவது தமிழ் விழா** மதுரையில் நிகழ்ந்தது. 'உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் துறைவாய் நுழைந்தோர்' அனைவரும், முதலாவது விழா மதுரையம்பதியில் நடந்தது மிகவும் பொருத்தமானதேயென மகிழ்ந்தனர்.

**இரண்டாவது தமிழ் விழா** பூர்வீகச் சோழரின் தலைநகராகிய திருவாரூரிற் கொண்டாடப் பட்டது.

**மூன்றாவது தமிழ் விழா** சேரமண்டலத்தைச் சேர்ந்த கோயம்புத்தூரில் நிகழ்ந்தது.

**நான்காவது தமிழ் விழா,** 1951 ஆம் ஆண்டு, ஏப்ரல் 29, 30 மற்றும் மே 1ஆம் திகதிகளில் இலங்கை யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரி முன்றலில் நடாத்தப் பட்டது. தமிழ் விழாவின் நிகழ்ச்சித் தொகுப்பு பின்வருமாறு அமைந்திருந்தது: இக் குறிப்பு 22-04-1951 அன்று பிரசுரமான ஈழகேசரி நாளிதளில் இருந்து பெற்றுக் கொள்ளப் பட்டவை என குறிப்பிடக் கடமைப் பட்டுள்ளேன்.

இவ்விழாவை சிறப்புற நடாத்துவதற்கு, பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு சுப்பையா நடேசபிள்ளை அவர்களின் தலைமையில் இலங்கையில் சிறந்து விளங்கிய பல்துறை விற்பன்னர்கள் 52 பேர் அடங்கிய ஓர் செயற்குழு உருவாக்கப்பட்டது. இதன் விசேட அம்சமானது இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையக மற்றும் தலைநகர் கொழும்பு வாழ் உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதே ஆகும். விழாத் தலைவராக சென்னை ''சுதேசமித்திரன்'' ஆசிரியர் திரு ஸி. ஆர்.ஸ்ரீநிவாசன் அவர்களும், இலக்கியப் பகுதி தலைவராக சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும், விஞ்ஞானப் பகுதி தலைவராக புது டில்லி தேசீய பௌதிக ஆராய்ச்சிச்சாலை அதிபர் டாக்டர் கே. எஸ். கிருஸ்ண ஐயர் அவர்களும் சரித்திரப் பகுதி தலைவராக பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு சுப்பையா நடேசபிள்ளை அவர்களும் பொறுப்பேற்று மிகவும் ஆக்கபூர்வமாக நடாத்தி வைத்தனர் என பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப நாள் நிகழ்வாக 29-04-1951 (ஞாயிற்றுக் கிழமை) காலை எட்டு மணிக்கு தமிழ் ஏட்டுச் சுவடிகள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. இதன்போது அந்நாளில் மிகப் பிரபலமான குழிக்கரை திரு. பிச்சையப்பா அவர்களின் குழுவினரது நாதஸ்வர இசை நடைபெற்றது. தமிழ் விழா நிகழ்வுகளை இந்தியாவில் இருந்து வருகை தந்த டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் திறந்து வைத்தார். அத்துடன் இவ்விழாவிற்கென அமைக்கப்பட்ட கலைக் காட்சிக் கூடத்தை சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் திறந்து வைத்தார்கள். அன்று மாலை பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்களின் தலைமையில் இலக்கியப் பகுதி விழா நடைபெற்றது. இந் நிகழ்வில், தூத்துக்குடி சுவாமி தனிநாயகம் அடிகளார் அவர்கள் '' சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு'' எனும் தலைப்பிலும், வித்துவான் ஏ பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் ''கம்பன் காட்டிய தமிழ் நாகரீகம்'' எனும் தலைப்பிலும் பேருரை ஆற்றினார்கள். அத்துடன், முது தமிழ் புலவர் மு. நல்லதம்பி அவர்கள் ''கண்ணீர் பெருக்கிய கலித்தொகை'' எனும் தலைப்பிலும், சென்னை ''தமிழ் முரசு ''இதழாசிரியர் திரு ம. பொ. சிவஞானகிராமணியார் ''சிலம்பு கூறும் செய்திகள்'' எனும் தலைப்பிலும் மிகவும் அருமையான பேருரை வழங்கினார்கள்.

மறுநாள், ( 30-04-1951) அன்று காலை விஞ்ஞானப் பகுதி நிகழ்வுகள் இந்தியாவில் இருந்து வருகை தந்த டாக்டர் சேர். கே. எஸ். கிருஸ்ணன் ஐயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. முதலாவதாக சென்னை லேடி வெலிங்டன் பயிற்சிக் கல்லூரி பௌதிகப் பேராசிரியை திருமதி ஈ. து. இராஜேஸ்வரி அம்மையார் அவர்கள் ''காட்சி மூலம் கல்வி'' எனும் தலைப்பில் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, ''வாழ்க்கையும் உளத்தத்துவமும்'' எனும் தலைப்பில் இலங்கைப் பல்கலைக்கழக கல்விப்பகுதி விரிவுரையாளர் திரு அ. ச. அருணந்தி அவர்கள் உரையாற்றினார்கள். இறுதியாக, இலங்கை பல்கலைக்கழக பௌதிகவியல் பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம் அவர்கள் ''மக்களும் விஞ்ஞானமும்'' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

அன்றைய தினம் மாலை 3.00 மணிக்கு திரு சு. நடேசபிள்ளை தலைமையில் சரித்திரப் பகுதி உரைகள் நடைபெற்றன. வித்துவான் திரு டி. பி. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் '' தமிழ் பண்பாட்டின் வளர்ச்சி'' எனும் தலைப்பில் உரையாற்றினார். அடுத்து கொழும்பு ஸாகிராக் கல்லூரி ஆசிரியர் திரு. ஏன். எம். கமால்தீன் அவர்கள் ''இஸ்லாமியரும் தமிழும்'' எனும் தலைப்பில் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி அதிபர் பேராசிரியர் சீ. எஸ். ஸ்ரீநிவாசாச்சாரியார் அவர்கள் ''தென் இந்தியாவும் இலங்கையும்'' எனும் தலைப்பில் ஓர் சிறந்த சொற்பொழிவை நிகழ்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக, ''தமிழ் கலை'' எனும் தலைப்பில், பெங்களூரைச் சேர்ந்த கலை விமர்சகர் திரு ஜி. வெங்கடாசலம் அவர்கள் உரையாற்றினார்.

இறுதி நாளான 01-05-1951 அன்று காலை இலக்கியப் பகுதியின் தொடர்ச்சி நடைபெற்றது. ''இக்கால இலக்கியம்'' எனும் தலைப்பில் சென்னை விவேகானந்தாக் கல்லூரி பேராசிரியர் அ.சீனிவாசராகவன் அவர்கள் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலை தலைமைத் தமிழ் பண்டிதர் , பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ''தமிழ்'' எனும் தலைப்பில் ஓர் உரை ஆற்றினார். பின்னர், சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் ''திருக்குறள்'' எனும் தலைப்பில் உரையாற்றினார். ''சமய இலக்கியங்கள்'' எனும் தலைப்பில் இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி மகேஸ்வரி மகாதேவா அவர்கள் அடுத்து உரையாற்றினார். இறுதியாக, ''வாழும் இலக்கியம்'' எனும் தலைப்பில் யாழ் பரமேசுவராக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் வித்துவான் க. வேந்தனார் அவர்கள் உரையாற்றினார்.

அன்றைய தினம் மாலை 3.00 மணிக்கு சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு தி. ச. அவினாசலிங்கம் அவர்கள், பங்கு பற்றிய சகல அறிஞர்களுக்கும், பாராட்டுப் பத்திரங்கள் வழங்கிக் கௌரவித்தார். அதனைத் தொடர்ந்து விஞ்ஞானப் பகுதியின் தொடர்ச்சி நிகழ்வுகள் நடைபெற்றது. முதலில் சென்னை விவேகானந்தாக் கல்லூரி இரசாயனப் பேராசிரியர் என். அனந்தவைத்தியநாதன் அவர்கள் ''இரசாயனமும் வாழ்க்கையும்'' எனும் தலைப்பில் உரையாற்றினார். அடுத்தபடியாக புது டில்லியில் இருந்து வருகை தந்த டாக்டர் திருமதி ராஜாம்பாள் தேவதாஸ் அவர்கள் ''உணவு'' எனும் தலைப்பில் உரையாற்றினார். அடுத்ததாக பரமேஸ்வராக் கல்லூரி விஞ்ஞான விரிவுரையாளர் திரு.எஸ். சிதம்பரப்பிள்ளை அவர்கள் '' வானக வெளியில்'' எனும் தலைப்பில் உரையாற்றினார். ''மின்சாரமும் வாழ்க்கையும்'' எனும் தலைப்பில் நில ஆராய்ச்சிப் பகுதி உத்தியோகஸ்தர் பேராசிரியர் டி. என். சேசாத்திரி அவர்கள் உரையாற்றினார். இறுதியாக வர்தா ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தின் செயலாளர் திரு ஈ. டபிள்யூ அரியநாயகம் அவர்கள் ''பண்டைக் கிராமங்களிற் கல்விப் பயிற்சி'' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

இம்மூன்று நாட்களிலும் இரவு 8.30 மணிக்கு இசைக் கச்சேரிகள் நடைபெற்றன. முதல் நாள் இரவு குழிக்கரை பிச்சையப்பா குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி இடம் பெற்றது. திங்கள் இரவு பாவைக் கூத்து நடைபெற்றது. இறுதி நாள் திருமதி எம். எல். வசந்தகுமாரியின் இசையரங்கு நிகழ்ச்சி நடைபெற்று தமிழ் விழா இனிதே முடிவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழா நடைபெற்ற மூன்று நாள்களிலும் இலங்கையின் சகல பகுதிகளிலும் இருந்து வந்த ஏராளமானோர் பங்குபற்றினர் என பத்திரிகைக் குறிப்புக்கள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

22-04-1951 ஆம் ஆண்டு வெளிவந்த ஈழகேசரி பத்திரிக்கையில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.


தொகுப்பு
**ச. சிவலோகநாதன்,**
செயளாளர்,
பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
கொழும்புக் கிளை.


*(பிற் குறிப்பு: இவ்விழா தொடர்பாக 258 பக்கங்களுடைய ஓர் தமிழ் விழா மலர் வெளியிடப்பட்டது. இதில் தமிழ் மொழி சம்பந்தப்பட்ட பல்வேறு கட்டுரைகள் இந்திய மற்றும் இலங்கை அறிஞர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆர்வமுள்ளோர் இந்த முழு நூலையும்*

*நூலக எண்* 28160 | * [http://noolaham.net/project/282/28160/28160.pdf
*இலங்கைத் தமிழ் விழா மலர் 1951*

*எனும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் எனும் தகவலைப் பகிர்ந்து கொள்கின்றேன்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபகர் இராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலங் கருதாத தகைசால் வள்ளல்

பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுகின்ற இக்காலப்பகுதியில் அதன் ஸ்தாபகரான சேர். பொன். இராமநாதனின் நோக்குகள் மீள் நினைவுறுத்தப்பட வேண்டியவையாகின்றன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரினைத் தொடர்ந்து ஈழத்துச் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தின் காவலராக விளங்கிய பெருமைக்குரியவர் சேர். பொன் இராமநாதன் அவர்கள். நாவலரினால் சரியாக இனங்காணப்பட்டு, அவரினாலே அரசியல், சமூக வளர்ச்சிப் பாதையில் நெறிப்படுத்தப்பட்ட பெருமைக்குரியவர். ஆறுமுக நாவலரின் தமிழ்ச் சமூகம் தொடர்பான அர்ப்பணிப்பு மிகுந்த பணிகள் அவரது முதுமையால் ஓய்வடைகின்ற ஒரு சூழலில் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் பிரவேசம் வரப்பிர சாதமாக அமைகின்றது. நாவலருக்குப் பின்னதாக ஏற்பட இருந்த பெரிய இடைவெளியினை இட்டு நிரப்பிய பெருமை இவருடையதாகும். 1879 ஆம் ஆண்டு இலங்கை சட்ட நிரூபண சபைக்கு இவரினை அனுப்பி வைத்ததில் ஆறுமுக நாவலரின் பங்களிப்பு அதி உச்சமாக இருந்ததைப் பண்டிதமணி சி. கணபதிப்பிளை 'நாவலர் எழுந்தார்' என்ற கட்டுரையில் பதிவு செய்கின்றார். நாவலரின் சிந்தனைகள், செயற்பாடுகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றினை விளங்கிக் கொண்டு அவற்றினை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதில் சேர். பொன் இராமநாதன் காட்டிய முன்னெடுப்புக்கள் நோக்குதற்குரியவை. நாவலரின் வழித்தடத்தில் ஈழத்தின் அரசியல், சமூக, பண்பாடு, கல்விசார் விடயங்களில் அவர் ஏற்படுத்திய பாதிப்புக்கள் மிகக் கனதியானவை. தமிழரது எதிர்காலத்தின் திசை வழியினைத் தீர்மானிப்பனவாக அவை அமைந்திருந்தன.

சேர். பொன் இராமநாதன் சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர். தனது திறமையினால் சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவியுயர்ந்தவர். 1911 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கைச் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட இவர் இலங்கை மக்களின் உரிமைகளுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டார். சட்டசபையில் அவர் குரல் பலதடவைகள் நாட்டு மக்களுக்காக உரத்து ஒலித்திருக்கின்றது. அவரது துணிவும், செயற்றிறனும், தன்னலங்கருதாத தொண்டும், ஆளுமையும் பிரித்தானிய அரசைக் கவர்ந்ததால் போலும் 1921 இல் அவருக்கு 'சேர்'ப் பட்டத்தினை வழங்கி அவர்கள் கௌரவித்தார்கள். தனக்குக் கிடைத்த மதிப்பினையும் பெருமையினையும் மக்கள் நலன்களுக்காகவே பயன்படுத்தினார் சேர். பொன் இராமநாதன். இதுவே இனவேறுபாடுகளைக் கடந்து சிங்கள, தமிழ் மக்களால் ஒருங்கே மதிக்கப்படும் தலைவராக அவரை உயர்த்திற்று.

அரசியலில் முத்திரை பதித்ததைப் போலவே சமூக, சமயப் பணிகளில் சேர். பொன் இராமநாதன் நாவலரின் வழியில் செயற்பட்டார். நாவலரின் இலட்சியங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டி வந்தார். நாவலரின் பணிகளை முன்னெடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரின் மரபைக் கட்டிக்காத்தல் என்பன அவரை வழிநடத்திய பிரதான உந்துசக்திகளாக இருந்துள்ளன. நாவலர் எவற்றை விரும்பினாரோ எதனை நிறைவேற்ற எத்தனித்தாரோ அதனைத் தனது செல்வாக்கினாலும், திறமையாலும் செய்து காட்டினார் இராமநாதன். குறிப்பிட்ட சமூகம் ஒன்றின் வளர்ச்சி, மொழிவிருத்தி, பண்பாட்டு மறுமலர்ச்சி என்பன கல்வி விருத்தியிலேயே பெரிதும் தங்கியுள்ளன என்பதை விளங்கிக் கொண்ட இராமநாதன் அதனை வளர்த்தற்பொருட்டுப் பல சேவைகளை ஆற்றியிருக்கின்றார். சைவவித்யா விருத்திச் சங்கத்தின் மூலமும் தனித்தும் அவர் ஆற்றியிருக்கின்ற சேவைகள் இவ்விடத்தில் நினைவுகூரப்பாலன. சைவத் தமிழ்க் கல்வியினைப் பரவலாக்குதல், அனைவரும் கல்வி பயில்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல், பெண்களுக்கும் கல்வியில் சமசந்தரப்பம் வழங்குதல், சைவ பண்பாட்டு மரபினைக் கட்டிக்காக்கும் மாணவர் பரம்பரையினை உருவாக்குதல் என்ற இலட்சியங்களோடு அவரது கல்விப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் தனது சொந்தச் செலவில் ஏறத்தாழ உயர்கல்வி நிறுவனம் ஒன்றிற்கான வசதிகளுடன் அவரால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் சுட்டிக்காட்டத்தக்கவை. ஒன்று 1921 இல் திருநெல்வேலியிலே அமைக்கப்பெற்ற பரமேஸ்வராக் கல்லூரி. மற்றையது மருதனார் மடத்திலே அவரால் ஸ்தாபிக்கப்பட்ட இராமநாதன் மகளிர் கல்லூரி. இவ்விரு கல்லூரிகளிலும் மிகத் திறன் வாய்ந்த ஆசிரியர்கள் பணியாற்றியிருக்கின்றனர். சில ஆசிரியர்களைப் பிற நாடுகளில் இருந்து தருவித்தும் நியமனம் செய்திருக்கின்றார். இப்பாடசாலைகள் ஆசிரியர் பயிற்சி மையங்களாக, சித்தாந்த, வேதாந்த ஆய்வு நிறுவனங்களாக , பண்டிதர் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் படுத்தும் பயிற்சிக் கூடங்களாகப் பணியாற்றியமை கவனிக்கத்தக்கது. 1970 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வடக்கில் நிறுவப்படுவது குறித்து சிந்திக்கப்பட்ட போது உயர்கல்விக்குரிய வளங்களைக் கொண்டிருந்த பரமேஸ்வராக் கல்லூரி அதற்குப் பொருத்தமானது என இனங்காணப்பட்டு 1974 இல் அது பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்றது. சேர். பொன் இராமநாதன் உவந்தளித்த சொத்திலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் அதனோடிணைந்த இராமநாதன் நுண்கலைக் கழகமும் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சேர். பொன். இராமநாதன் சைவத் தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகத் தன் உடல், பொருள் ஆவி அனைத்தையும் உவந்தளித்திருக்கின்றார். தனது குடும்பத்தினரின் நல்வாழ்க்கைக்காக ஒதுக்கியவை போக ஏனைய சொத்துக்களை சமூக முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்தியிருக்கின்றார். இன்றும் அவர் அளித்த அச்சொத்துக்கள் சைவத் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்காகப் பல வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயமும் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வரமும் அவரின் மேலான சிவபக்தியின் சின்னங்களாக நிமிர்ந்து நிற்கின்றன. அவர் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக எழுதிய படைப்புக்கள் அவரின் தத்துவப் புலமையையும் நுண்மான் நுழைபுலத்தினையும் எடுத்துக்காட்டுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டினைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இக்காலத்தில் சேர். பொன் இராமநாதனின் பணிகளைப் பற்றியும் சிந்தித்துப் பார்ப்பது தவிர்க்க முடியாததாகின்றது. தமிழ்ச் சமூகம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்ற பல நன்மைகளுக்குப் பின்புலத்தில் அவரது தன்னலமற்ற தொண்டுகள் இருப்பதனை எவரும் மறுக்க முடியாது. அவரது வாழ்க்கை, சமூகத்துக்கு ஆற்றிய பணிகள், கொடைகள் யாவுமே முன்னுதாரணமாக எக்காலத்தும் அமையவல்லன.

நாவலரும் சைவப் பெருவள்ளல் சேர். பொன். இராமநாதனும் நம் இனம் தரிசித்த அவதாரபுருஷர்கள். தமிழ்த்தேசிய இனத்தின் தொன்மையை மேன்மையை உலகறியச் செய்த மகான்கள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமகனார் சேர். பொன். இராமநாதனின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் தொடர்ந்து முன்னெடுப்பதே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

**பேராசிரியர் *சி. க. சிற்றம்பலம்*** [M.A, Ph.D, D.Litt (Hon)]
தலைவர், பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தலைமுறையும் சேர். பொன் இராமநாதனும்

இலங்கையில் தமிழ் மக்களும் தமிழ் மொழியும் இந்து சமயமும் அவலத்திற் குள்ளாகியிருக்கும் இக்கால கட்டத்திலே மொழியும் மதமும் வரலாற்று ஓட்டத்திலே அழிந்து விடாது கட்டிக் காத்த பெரியார்களை நாம் நினைவுகூர வேண்டியது அவசியம் என்பது ஒருபுறம் இருக்க, நமது வருங்காலச் சந்ததியினருக்கு, எமது இளைய தலைமுறை யினருக்கு எமது இனம், மொழி, மதம், பண்பாடு ஆகியவற்றின் தொன்மையையும் செறிவையும் இவற்றுடன் பின்னிப் பிணைந்திருக்கும் எமது பாரம்பரியத்தையும் விழுமியங்களையும் நுகர வகை செய்வதோடு அவை அழிந்து போகாது காக்க வேண்டிய அவர்களது பாரிய கடமையைப் பொறுப்பை விளக்கிக் கூற வேண்டிய கட்டாய நிலையில் நாம் இருக்கிறோம். எமது பண்பாட்டைக் கட்டிக்காக்க எமது முன்னோர்கள் ஆற்றிய அரும் பணிகளையும் அவர்களது வரலாற்றையும் எடுத்துக் கூறுவதன் மூலம் இனத்திற்கும் மொழிக்கும் மதத்திற்கும் அவர்கள் ஆற்றவேண்டிய கடமையை நாம் அவர்களுக்கு வலியுறுத்தியே ஆகவேண்டும்.

இலங்கையில் பௌத்தம் தோன்றி அரசமதமாக அங்கீகாரம் பெற்று வளர்வதற்கு முன்னதாகவே, தமிழும் சைவமும் வளர்ச்சியுற்ற நிலையில் அங்கு விளங்கியதற்குத் திடமான வரலாற்றுச் சான்றுகள் ஆதாரங்கள் உள்ளன. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்தம் அரச மதமாக மாறிய பின்னரும் சைவசமயம் பௌத்தத்துடன் சம அந்தஸ்தை அனுபவித்து வந்தது. அந்தக் காலத்தில் சமயக் காய்ச்சல் இருந்திருக்கவில்லை. இதற்கு அக்காலத்து அரசர்கள், அரச செல்வாக்குப் பெற்ற பெரியார்கள், மதத் தலைவர்கள், மதத் தாபனங்களின் புரிந்துணர்வு, பரந்த மனப்பான்மை, சகிப்புத் தன்மை ஆகியவையே காரணங்கள் எனலாம். காலப்போக்கில் தமிழரின் மேம்பாடு சிங்களவரின் மனப்பான் மைக்குச் சோதனையாக அமைந்தது. பொறாமை தலை தூக்கியது. ''பௌத்தம்'' ஒன்றே உயர் மதமாகக் கருதப்பட வேண்டும் என்ற நிலை ஒன்று உருவாகியது. இது சிறிது சிறிதாக வளர்ந்து கைமுனு என்னும் இளவரசன் காலத்தில் தமிழரைச் சிங்களவர் பரம வைரிகளாகக் காணும் ஒருகால கட்டத்தை வரலாற்றிலே நாம் சந்திக்கின்றோம். சிறு வயதில், எனது பாடப்புத்தகத்தில் படித்த கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

பட்டத்து இளவரசன் கைமுனு சிறுவனாக இருந்த காலத்தில் ஒருநாள் கை கால்களை முடக்கிக் கொண்டு படுத்திருந்தானாம். அவனது தாயார், ஏன் இவ்வாறு உறங்குகிறாய், கை கால்களை நீட்டி உறங்கலாமே என்று கேட்டாராம். அதற்குச் சிறுவன் கைமுனு, வடக்கே தமிழரும் ஏனைய பக்கங்களில் கடலும் நெருக்கும்போது நான் எப்படிக் கை கால்களை நீட்டி நிம்மதியாக உறங்குவது என்று பதில் உரைத்தானாம். இந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவத்தின் உள் அர்த்தத்தை வலிந்து ஆராய வேண்டியதேவையில்லை. வடக்கே பலமுள்ள தமிழன் ஆள்கிறான். அவனை அழிக்கும் வரை நான் நிம்மதியாகத் தூங்க முடியாது என்பதாகும். பிற்காலத்தில் தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே ஏற்பட்ட இனக் கலவரங்கள் தற்செயலாக நடந்த விபத்துக்களன்று. காலங்காலமாக வளர்க்கப்பட்டு வந்த இனத் துவேசத்தின் வெளிப்பாடுகளே எனலாம். இக்கதை தமிழ் மாணவர்களின் பாடப் புத்தகங்களில் இடம் பெற்றிருக்குமேயானால் நிச்சயமாகச் சிங்களப் பாடப் புத்தகங்களிலும் இடம் பெறாதிருக்க முடியாது. அறியாத பாலப் பருவத்திலேயே சிறார் மனத்தில் இனத் துவேசம் விதைக்கப்படுகிறது. பிற்காலத்தில், இவை போன்ற கதைகள் பாடப்புத்தகங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன என்றாலும் காலம் கடந்த முயற்சி அது. வித்து விருட்சமான பின் மரத்தைச் சாய்ப்பது அப்படி ஒன்றும் இலகுவான காரியமல்ல. பண்டு தொட்டு இன்று வரை அரசியல் ஆதாயத்திற்காக அப்பாவிப் பொதுமக்கள் பலியாக்கப்பட்டதுதான் எமது வரலாறு.

மகாசேனன் என்னும் பௌத்த மன்னன் திருக்கோணேஸ்வரம் உள்ளிட்ட பல இந்து ஆலயங்களை அழித்தான் என்று கூறும் அதே வரலாறு, மானவர்மன், 1 ஆம் விஜயபாகு, 1ஆம் பராக்கிரமபாகு, 6 ஆம் பராக்கிரமபாகு, 1 ஆம் ராஜசிங்கன் உள்ளிட்ட பல பௌத்த மன்னர்கள் இந்து மதத்தை ஆதரித்த வரலாற்றையும் கூறுகிறது.

மேனாட்டார் வருகையால் அரசியல் கைமாறி மொழி, மதம், பண்பாடு எல்லாமே சிதைவுற்று புறக்கணிக்கப்பட்டன. கிறித்தவப் பாதிரிமார் வருகையால் சைவம் நலிவுற்றது. ஆங்கிலக் கல்வி தமிழைப் புறக்கணிக்க வைத்தது. ஆதாயம் கருதி மக்கள் மதம் மாறினர். சமூகப் புரட்சிக்கு இவை வழிகோலின. சைவமும் தமிழும் நலிந்த காலத்திலே காரைக்கால் அம்மையாரும், அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும், மாணிக்கவாசகரும் தமிழ் நாட்டிலே தோன்றித் தமிழையும் சைவத்தையும் அழிந்து விடாது காத்தது போல, ஆறுமுக நாவலர் போன்ற சைவப் பெரியார்கள் தோன்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர். இவ்வாறு உந்தப்பட்டு சேவை ஆற்றிய பெரியார்கள் வரிசையில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் முன்னிலையில் வைத்து எண்ணத்தக்கவர்.

16ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இலங்கை மேலை நாட்டார் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த காலம். தீமையிலும் ஒரு நன்மை விளையாமலில்லை. இன, மத, மொழி வேறுபாடுகளைக் களைந்து இலங்கையர் என்னும் ஒரு குடைக் கீழ் தமிழரும் சிங்களவரும் ஒருங்கிணைந்தனர். இந்த இடைப்பட்ட காலத் தில்தான் தமிழன் தனது திறமையைக் காட்டும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. காலத்தின் கட்டாயம் பெரும் தலைவர்களை உருவாக்கியது.

திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சைவ நெறியிலும் அனுட்டானத்திலும் பெரும் பற்றும் நம்பிக்கையும் கொண்ட குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை பொன்னம்பல முதலியார், மாமனார் சேர் முத்துக்குமாரசுவாமி, சகோதரர் அருணாசலம் அனைவருமே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியல், சமயம், மொழி, பண்பாடு போன்ற சகல துறைகளிலும் வரலாற்றுப் புகழ் ஈட்டியவர்கள். இராமநாதன் அவர்கள் இலங்கையில் குயின்ஸ் அகடமியிலும் (தற்போதய றோயல் கல்லூரி ) பின்னர் இந்தியாவில் பிரசிடென்சி கல்லூரியிலும் (Presidency College) கல்வி பயின்றார். இந்து மதம் மட்டுமன்றி பௌத்தம், கிறித்தவம், இஸ்லாம் முதலிய பல மதக் கோட்பாடுகளையும் கற்றறிந்தார். மதங்களுக்கிடையே இருந்த ஒருமைப்பாடுகளை ஆராய்ந்து கட்டுரைகளும் வெளியிட்டார். கிறித்து மதம் சம்பந்தமாக இவர் வெளியிட்ட கருத்துக்கள் மேல் நாட்டார் கவனத்தைக் கவர்ந்ததுடன், கிறித்தவ அறிஞர்களின் பாராட்டையும் பெற்றன. இவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றதுடன் லத்தீன், கிரேக்கம், சிங்களம் முதலிய மொழிகளிலும் பரிச்சயம் பெற்றிருந்தார். இவரது மொழியறிவும் சமய அறிவும் பிற்காலத்தில் அவரது சாதனைகளுக்குப் பெரும் அத்திவாரமாக அமைந்தன.

அவரது ஆழ்ந்த கல்வியறிவு சமயப் பற்று எல்லாவற்றிற்கும் மேலாக அவரிடம் காணப்பட்ட பேச்சுவன்மை பெரியார் ஆறுமுகநாவலருக்கு இவரிடம் பெரியதொரு ஈடுபாட்டை ஏற்படுத்தியது. தமிழையும் சைவத்தையும் காக்கவல்ல ''தமிழரின் பிரதிநிதியாக'' இவரை இனங்கண்டு தமக்கு வாரிசாகக் கொண்டதுடன் அமையாது அவரின் அரசியல் பிரவேசத்திற்கும் ஆறுமுகநாவலரே வழிவகுத்தார். 1879ஆம் ஆண்டு இலங்கைச் சட்ட சபையில் தமிழரின் பிரதிநிதியாக இருந்த, சேர். முத்துக்குமார சுவாமி அவர்கள் இறந்ததும் ஏற்பட்ட வெற்றிடம் ஆறுமுகநாவலரின் விதந்துரையின் பேரில் இராமநாதன் அவர்களால் நிரப்பப்பட்டது. 1912ஆம் ஆண்டு சட்ட சபையில் கல்வி கற்ற இலங்கையருக்கான ஒதுக்கீட்டில் பெரும்பான்மையினத்தவரிடையே பெருமதிப்புப் பெற்றிருந்த மாக்கஸ் பெனாண்டோ என்னும் சிங்களவரை எதிர்த்துப் போட்டியிட்டு வென்றார். வெள்ளையரிடையே இவர் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்தது.

அறிவால் ஆற்றலால் அரசியல் சாணக்கியத்தால் சிங்கள இனவாதிகள் மத்தியிலும் பெருமதிப்புப் பெற்றார். இலங்கை அரசியலில் தனக்கென ஓரிடத்தை நிலையாக்கிக் கொண்டார். தமிழையும் சைவத்தையும் வளர்க்கப் பாடுபட்ட அதேவேளையில் இலங்கையர் என்னும் தேசிய உணர்வால் கட்டுண்டு அனைத்து இலங்கையரினது மேம்பாட்டிற்காகவும் உழைத்தார்.

முதலாம் உலகப்போர் நடந்த காலத்திலே சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கு மிடையே இனக் கலவரம் மூண்டது. சிங்களத் தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள். சிங்களத் தலைவர்களின் விடுதலைக்காகப் போர்க்காலச் சூழலில் பயங்கரமான கடற் பயணத்தை மேற்கொண்டு லண்டன் மாநகர் சென்று ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துடன் வாதிட்டு வெற்றியோடு இலங்கை திரும்பினார். இவரது இப்பெரும் வெற்றி சிங்களத் தலைவர்களால் நன்றியுடன் பாராட்டப்பட்டது. சேர். பொன். இராமநாதன் அவர்களைச் சிங்களத் தலைவர்கள் குதிரை வண்டியில் ஏற்றி குதிரைகளுக்குப் பதிலாகத் தாமே இழுத்து ஊர்வலமாக அழைத்து வந்து கௌரவித்தார்கள். இச்சம்பவம் நிழல் படமாக அவர் வீட்டை அலங்கரித்ததை எம்மில் பலர் கண்ணாரக் கண்டிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேய ஆட்சியாளர்கள் மத்தியில் அவருக்கிருந்த பெரும் செல்வாக்கு நாட்டிற்குப் பல அரிய செயல்களைப் புரிவதற்கு அருந்துணையாயிற்று. வடக்கே யாழ்ப்பாணத்திற்குப் புகைவண்டி வசதி பகற்கனவாக இருந்த காலம் அது. மிக்க சிரமத்தின் பேரில் வடக்கிற்குப் புகையிரதவண்டி வசதி செய்தார். ஆங்கிலேயர் ஆட்சியில் பருத்தித்துறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணத்துறை, ஊர்காவற்றுறை ஆகிய நான்கு துறைமுகங்களும் மூடப்பட்டிருந்தன. இதனால் தமிழ் வர்த்தகர்கள் பெரும் பாதிப்படைந்தனர். மீண்டும் இத்துறைமுகங்களைத் திறக்க வழிசெய்தார் சேர். பொன். இராமநாதன் அவர்கள்

இலங்கையைச் சகல துறைகளிலும் தன் நிறைவு பெற்ற நாடாக மாற்றவேண்டிய பாரிய பொறுப்பு அக்காலத் தலைவர்களுக்குச் சவாலாக இருந்தது. 'எமது நாட்டிற்குரிய உணவை நாமே உற்பத்தி செய்ய வேண்டும், உற்பத்தியைப் பெருக்கி இறக்குமதியைக் குறைக்க வேண்டும். தூர்ந்து போன குளங்களை மறுபடியும் பாவனைக்குக் கொண்டு வரவேண்டும். காடழித்து நாடாக்க வேண்டும்'' என்ற கோசத்துடன் வெள்ளையரின் கொள்கைகளுக்கெதிராகக் குரல் கொடுத்தார். இவர் அக்கால அரசியலில் சாதித்தவை எண்ணிலடங்கா. இன்று எமது குறைகளை முறையே பிரஸ்தாபித்து நிவர்த்தி காண இவரை ஒத்த தலைவர் ஒருவர் நம்மிடையே இல்லையே என அங்கலாய்க்கிறோம்.

கல்வியுடன் சமயமும் இணைத்தே கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்து பிற்காலத்தில் தான் தாபித்த இரு கல்லூரிகளிலுமே பாடத்திட்டத்தில் சமயத்தையும் இணைத்துக் கொண்டார். தேசிய மட்டத்திலும் இக்கருத்தை வலியுறுத்தி அரசாங்கமே கல்விக் கொள்கையை வகுத்து அனைவருக்கும் கல்வி வசதி அளிக்க வேண்டும் என்று ''இலவசக் கல்வி'' கருத்தையும் முன் வைத்தவர் சேர் பொன் இராமநாதன் அவர்களே.

இந்து சமயம் தோன்றி பெருவிருட்சமாக வளர்ந்திருக்கும் இந்தியாவிலேயே இல்லாத நிலையில் இலங்கையிலே மதம் கட்டாயபாடமாகப் பாடசாலைகளிலே கற்பிக்கப்படுவதற்கான ஆரம்ப முயற்சியில் ஈடுபட்டிருந்தார் சேர். பொன். இராமநாதன் அவர்கள். அதன் பலனைத்தான் பிற்காலத்தில் நாம் அனுபவித்தோம்.

சைவச் சிறுவர்கள் சைவச் சூழலிலேதான் கல்வி கற்க வேண்டும் என்ற கருத்தில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தார். இவரது இந்த நம்பிக்கையின் பலனே 'இராமநாதன் கல்லூரி' யாக 1913ஆம் ஆண்டு உருப்பெற்றது. பெண்கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்த இவரது இம்முயற்சி ஆயிரக் கணக்கான இல்லத்தரசிகளை இன்று உருவாக்குவதில் வெற்றி கண்டிருக்கிறது. 'ஓர் ஆணைக் கற்பிப்பதிலே ஒரு தனிநபரே கற்பிக்கப்படுகிறான். ஒரு பெண்ணைக் கற்பிக்கும்போது ஒரு குடும்பம் முழுவதுமே அதன் மூலம் முழுச் சமுதாயமுமே கற்பிக்கப்படுகிறது'' என்னும் கருத்தை முற்றாக நம்பிச்செயற்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1921ஆம் ஆண்டு ஆண்பிள்ளைகள் கற்பதற்காக 'பரமேஸ்வராக் கல்லூரி'யை நிறுவினார். ''பரமேஸ்வராக் கல்லூரியின் இலட்சியங்கள்'' என்னும் நூலிலே இவரது கல்வி பற்றிய கொள்கை நன்கு புலனாகிறது. ''இந்திய ஞானிகளின் சிந்தனைப் பொக்கிஷங் களுடன் தமிழ், சமஸ்கிருத இலக்கியச் செல்வங்களும் இணைந்து பிரித்தானியரின் மிகச் சிறந்த கல்வி அம்சங்களுடனும் தமிழ்ச் சிறுவர் பயனடையும் வாய்ப்பினை ஏற்படுத்தவே பரமேஸ்வரக் கல்லூரி நிறுவப்பட்டது'' என விதந்து உரைக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் கீழைத் தேயக் கல்வி மட்டுமன்றி ஆங்கிலம், விஞ்ஞானம் முதலிய மேனாட்டார் கல்வியையும் பயில வேண்டும் என்பது இவரது நோக்கமாகும். பரமேஸ்வராக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுக்கூடம் நிறுவுவதற்காகக் கொழும்பிலிருந்த ''சுகஸ்தான்'' என்னும் தனது வீட்டை வங்கியிலே ஈடு வைத்தார் என்றும் பின்னர் அது மீட்கப்படாமலே போய் விட்டது என்றும் அறியப்படுகிறது. அவரது கல்வித் தொண்டின் மகத்துவத்திற்கு இதை விட உயர்ந்த சான்று வேண்டுமா?

இப்பரமேஸ்வரக் கல்லூரியை மையமாகக் கொண்டே 1978ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. சேர். பொன். இராமநாதனின் கனவு ஓரளவுக்கு நனவாகியது எனலாம். இந்த ஏற்றத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் துரைராஜா போன்ற பெரியார்களின் பங்கையும் மறப்பதற்கில்லை. வரலாறு தந்த இந்தப் பெரியாரால் பயனடைந்த நாம் குறைந்த பட்சம் இந்தப் பல்கலைக்கழகத்திற்கு சேர். பொன். இராமநாதன் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டி அவரை கௌரவித் திருக்கலாம். செய்யவில்லையே! இராமநாதன் நுண்கலைப் பிரிவைப் பற்றி யாராவது கூற எத்தனித்தால் அவர்களுக்கு ஒரு தகவல்: இக்கலைக் கல்லூரி இராமநாதன் வளவிலேயே அவரது மருகர் திரு. சு. நடேசபிள்ளை அவர்களால் அவர் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட மகாராஜபுரம் விசுவநாத ஐயர், சித்தூர் சுப்பரமண்யம் பிள்ளை, கல்யாணகிருஷ்ண பாகவதர் போன்ற இசை மேதைகளின் பங்களிப்பின் பேரில் நடாத்தப்பட்ட பெருமைக்குரியது. இக் கல்லூரியைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்துக் கொண்டார்களே ஒழிய புதிதாக ஆரம்பித்த கலைக்கூடத்திற்கு சேர். பொன். இராமநாதனது பெயர் சூட்டப்படவில்லை.

சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் அவர்களின் சேவையை நினைவுகூரும் முகமாக பேராதனைப் பல்கலைக்கழகத்திலுள்ள 9 விடுதிகளில் இரண்டிற்கு இராமநாதன் விடுதி, அருணாசலம் விடுதி என்று பெயர் சூட்டப்பட்டிருப்பது என்னவோ உண்மைதான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எதிர்காலத்தில் ''இராமநாதன் பல்கலைக் கழகம்'' என்ற பெயரில் வழங்குமா? இந்தக் கேள்விக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்தான் பதில் தரவேண்டும்.

இன்று இலங்கையில் கற்கோயில் ஒன்று உண்டென்றால் அது கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேசர் கோவில்தான். பண்டைக் காலத்தில் முடியுடை வேந்தருக்கு மட்டுமே சாத்தியமான இது 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாதாரண ஒரு தனிநபருக்குச் சாத்தியமாகிய மகத்துவத்தை எம்மால் வியக்காமலிருக்க முடியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மணவாழ்க்கை ஒரு சுவையான காவியம். இவரது ஆன்மீக ஆராய்ச்சியில் இவருக்குத் துணைபுரியும் மாணவியாக வந்து பின்னர் அவரது செயலாளராகக் கடமையாற்றி அதன் பின் அவர் துணைவியருமாகிய இவரது இயற்பெயர் செல்வி. எல். ஆர். ஹட்சன் என்பதாகும். நான் இராமநாதன் கல்லூரி விடுதியில் ஏழு ஆண்டுகள் தங்கிப் படித்திருக்கிறேன். கல்லூரியில் சேர்ந்த காலத்தில் எனக்கு ஏற்பட்ட சந்தேகங்களுள் முக்கியமானது 'யார் இந்த லீலாவதி'' என்பதாகும். விடுதி இல்லங்கள் மொத்தம் ஆறு. பெயர்கள் முறையே அருந்ததி, சகுந்தலா, ஜானகி, கண்ணகி, லீலாவதி, தமயந்தி. நான் அறிந்த வகையில் லீலாவதி என்ற பெயரில் எந்தவொரு புராண இதிகாச நாயகியும் இல்லை. பின்னர் தான் தெரியவந்தது அது லேடி இராமநாதனுக்குத் திருமணத்தில் சூட்டப்பட்ட பெயர் என்பது. சேர். பொன். இராமநாதனுக்குப் பின் அவரது கொள்கைகளை அணுவும் பிசகாது செயல்படுத்திய இந்த அம்மையார் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் மருகர் செனெற்றர். சு. நடேசபிள்ளை அவர்கள் இவரை ஆண்டாளுக்கு ஒப்பிட்டுள்ளார்,

*''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்*
*மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்*
*பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்*
*பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்*
*அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்*
*அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை*
*தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''*

என்னும் அப்பர் பாடலையும் நினைவு கூர்ந்தார்.

பிறந்தோம், வாழ்ந்தோம் மடிந்தோம் என்றிருக்கக் கூடாது. இளைய தலை முறைக்குப் பாரிய கடமை காத்திருக்கிறது. முதலில் நாம் தமிழர். எமது இனம், மொழி, கலாசாரம் பாரம்பரியம் மிகப் பழமை வாய்ந்தது. இதனை நாம் தொலைத்து விட்டு விலாசமற்ற தபாலாகி விடக்கூடாது. பெரியார் விட்டுச் சென்ற சுவடுகளைத் தொடர்வோம்.

'பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானில் நனி சிறந்ததுவே''

இராமநாதன் கல்லூரி மாணவிகள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் 'இராமநாதம்'' என்னும் பிணைப்பால் இணைக்கப்பட்டவர்களாக கற்ற கல்லூரியின் பெருமையைப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தே நிற்கிறார்கள். சேர். பொன். இராமநாதனின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கும் நங்கையராக விளங்குவது அவர்களது தனித்தன்மை. வேறு எந்தக் கல்லூரியும் சொல்லிக் கொள்ள முடியாத பல தனித் தன்மைகளைக் கொண்டவர்கள் இவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் திமிர்த்த ஞானச் செருக்கும் இருப்பதால் - செம்மை மாதர் திறம்புவதில்லையாம்'

என்னும் பாரதியாரின் கனவைக் கருத்திற் கொண்டு தன் கல்லூரியைக் கட்டமைத்துக் கொண்டதனால் தானோ என்னவோ இராமநாதன் கல்லூரி மாணவியர் இக்கவிதைக்கு இலக்கணமாக விளங்குகின்றனர். இராமநாதன் கல்லூரி என்னும் கலைச்சாலையிலே கல்வியால், கலையால், பண்பாட்டால் புடம் போடப்பட்ட நாங்கள் என்றென்றும் அந்தக் கல்லூரியை நினைவில் நிறுத்தி மற்றையோருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவோம்.

*திருமதி. செல்வநாயகி ஸ்ரீதாஸ்*
விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கனடா வளாகம்
தலைவர், இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடாக் கிளை,
முன்னாள் சிரேஷ்ட வரிமதிப்பாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை

*(இக்கட்டுரை 2013ஆம் ஆண்டு நடைபெற்ற இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு மலரில் இருந்து இங்கு மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)*

நன்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகவாதியான அரசியல்வாதி

இலங்கை மாதாவின் தவப்புதல்வர்களில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் ஒருவர். இவர் மானிப்பாயைச் சேர்ந்த - கொழும்பில் வாழ்ந்துவந்த பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்தவர். பிரித்தானியரின் ஆளுகைக்குட்பட்டிருந்த அன்றைய இலங்கையில் இவரும், இவரது உறவினர்களும் மிக உயர்வான அரச உத்தியோகங்களையும் சட்ட நிரூபண சபை உறுப்பினர் பதவிகளையும் வகித்தனர். மேலும் இலங்கையின் சுதந்திரத்துக்காகவும், இலங்கை மக்களின் தனித்துவம் வாய்ந்த பண்பாட்டினைக் கட்டிக் காப்பதற்காகவும் அரும்பாடுபட்டு உழைத்தனர். இதனாற்றான் சேர். பொன். இராமநாதன் அவர்கள் மிகப்பெரிய இலங்கையர்' என நாட்டின் முதற் பிரதமரான சேனநாயக்கா குறிப்பிட்டுள்ளார். சேர். பொன் இராமநாதன் இலங்கைத் தேசியத்துக்காகப் பாடுபட்ட அதே வேளையில் தமிழ்த்தேசிய நலன்களுக்காகவும், தமிழர் பண்பாட்டு நிலை நிறுத்தல்களுக்காகவும், அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். இலங்கையின் தேசிய வீரராக உயர்ந்து நிற்கையில் சிறந்ததொரு தமிழர் தலைவராகவும் போற்றப்படுகின்றார்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் அரசியல்வாதியாகவும், ஆன்மிகவாதியாகவும், ஆசிரியராகவும், எழுத்தாளராகவும், கலாரசிகராகவும், பொறுப்புணர்வு மிக்க சமூக வாதியாகவும், பன்முகப் பரிமாணங்களை வெளிக்காட்டியவர். இலங்கையில் சைவத் தமிழ் மறுமலர்ச்சி மூலவரான ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் அவர்களின் ஆதரவுடன் தமது 28 ஆவது வயதில் (1879இல்) சட்ட நிரூபண சபையில் தமிழர்களின் பிரதிநிதியாக விளங்கியவர். அன்றிலிருந்து அவரது இறுதிக் காலம்வரை (1930) இலங்கை அரசியலில் செல்வாக்கு மிக்க ஒருவராகவும் சட்டநிரூபணசபை உறுப்பினராகவும், தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராகவும் பணியாற்றியவர். முதன் முதல் படித்த இலங்கையர் பிரதிநிதியாகப் பெரும்பான்மை இனத்தவரான சாம். பி. பெர்னாண்டோ என்பவருடன் போட்டியிட்டு 1911இல் வெற்றிவாகை சூடியதன் மூலம் தான் ஒரு தேசியத் தலைவர் என நிரூபித்தவர். மறுமுறையும் படித்த இலங்கையர் பிரதிநிதியாக (1916) இல் தெரிவாகி 1911 - 1921 வரை பதவிவகித்தவர்.

1921இல் பிரித்தானிய மகாராணியால் 'சேர்' பட்டம் அளித்துக் கௌரவிக்கப் பட்டவர். இலங்கையின் சொலிசிற்றர் ஜெனரலாக 1892 - 1906 வரை பணியாற்றிய பெருமைக்குரியவர். 1922ஆம் ஆண்டிலிருந்து சட்ட நிரூபண சபைப் பிரதிநிதி பதவியை இறக்கும் வரை (1924 - 1930 வலிகாமம் வடக்குக்குரிய தமிழர் பிரதிநிதி) வகித்தவர். சேர். பொன். இராமநாதன் அவர்களின் ஐம்பத்தோராண்டு கால அரசியல் வாழ்வு சாதனைகள் பலவற்றையும், சோதனைகள் பலவற்றையும் தாண்டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. 1915ஆம் ஆண்டு இடம்பெற்ற கம்பளை செலபெரஹர ஊர்வலம் தொடர்பாகச் சிங்கள - முஸ்லீம் இனங்களுக்கிடையே ஏற்பட்ட கலவரம் காரணமாக அன்றைய சிங்களத் தலைவர்களான D. S சேனநாயக்கா, D. R விஜயவர்த்தனா டாக்டர் ஹாசியாஸ் பெரேரா, E. T டிசில்வா, F.R டயஸ் பண்டாரநாயக்கா, H அமரசூரிய, A, H மொலமூரே ஆகியோரும் வேறு பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களை விடுதலை செய்வதற்காக முதலாம் உலக யுத்தத்தின் ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் கப்பலின் பல நாட்கள் பிரயாணஞ் செய்து இலண்டன் மாநகரை அடைந்து அங்கு குடியேற்ற நாட்டு மந்திரியைச் சந்தித்து நிலைமையை விளக்கி சிங்களத் தலைவர்களின் விடுதலையை ஏற்படுத்தியவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். அவர் நாட்டுக்குத் திரும்பி வரும்போது கொழும்புத் துறைமுகத்திலிருந்து அவரது வீடுவரைக்கும் குதிரை வண்டியில் ஏற்றிக் குதிரைகளுக்குப்பதிலாகத் தாமே இழுத்து வந்து நன்றிக் கடனைக் காட்டினர் சிங்கள மக்கள். சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையின் தேசிய வீரர் வரிசையில் அவரையும், அவரது தம்பியார் சேர். பொன். அருணாசலம் அவர்களையும் கௌரவித்து, முந்தைய இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்றலில் சிலைகளும் வைக்கப்பட்டன. பிற்காலத்தில் சிலைகள் இடம் மாறிவிட்டன. இலங்கையின் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்காக 1919இல் நிறுவப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைவராக அருணாசலம் செயற்பட, இராமநாதன் அவர்களும் இணைந்து பாடுபட்டார். இருப்பினும் கொழும்பில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சைகளினாலும் சிங்களத் தலைவர்களின் மாறுபட்ட செயற்பாடுகளினாலும், சேர். பொன். அருணாசலமும் சேர். பொன். இராமநாதனும் தேசிய காங்கிரசிலிருந்து விலகித் தமிழருக்கான ஓர் அமைப்பை உருவாக்க வேண்டிய சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டனர். முதன் முதலில் இலங்கையின் தேசியம் குறிப்பிடத்தக்க - விதத்தில் பிளவுபட்டது.

சேர். பொன். இராமநாதன் காலத்தில் இலங்கையின் விடுதலைக்கான போராட்டங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டன. அவர் காலமாகிப் பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் பிரித்தானியரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது. இந்நிலையில் தமிழர்களின் உரிமைகளை நிலை நிறுத்துவதில் இராமநாதன் போன்றவர்கள் விட்ட தவறுதான், இன்றைக்குத் தமிழர்களின் இழி நிலைக்குக் காரணம் எனக் கூறுவோர் இருக்கிறார்கள். அந்நிய ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டத்தில் இலங்கையர் அனைவரும் ஒன்றுபட்டு இணைய வேண்டிய தேவை அப்போதிருந்தது. மேலும் பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய சூழலும் காணப்படவில்லை.

ஆங்கிலம் அரச கரும மொழியாக இருந்தது. ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத் தினராகிய தமிழர்கள் பலர் தங்கள் வீதாசாரத்திற்கும் அதிகமாக உயர்ந்த அரசாங்க உத்தி யோகங்களில் ஈடுபட்டிருந்தனர். இத்தருணத்தில் சட்ட நிரூபணசபை விகிதாசாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை பற்றிய முரண்பாடுகளே காணப்பட்டன. நிலமை இப்படியிருக்க சேர். பொன். இராமநாதன் மீது குற்றஞ்சாட்டுவதில் நீதியில்லை. இதே போன்றதாகவே பெண்கல்வி, சர்வசனவாக்குரிமை சம்பந்தமான இராமநாதன் அவர்களின் கருத்துக்களும் விமர்சிக்கப்படுகின்றன.

எத்தனையோ நாடுகளில் தாமதமாகவே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. பெண்ணடிமைத்தனம் செல்வாக்குப் பெற்றிருந்த காலகட்டத்தில் பெண்கள் ஆணாதிக்கத்தின் கீழ் வாழ்ந்திருந்த சூழ்நிலையில் பெண்கள் கல்வி பெறுவதில் பல்வேறு தடைகளையும் எதிர்கொண்ட வேளையில், பெண்கல்வி தாழ்நிலையில் காணப்பட்டபோது சிந்தனாபூர்வமாகச் செயற்பட முடியாத நிலையில் இத்தகைய குறைபாடுகள் ஓரளவுக்காவது நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு வாக்குரிமையளிப்பது பயனுடையதாயிருக்கும் என இராமநாதன் கருதினார். அதே போன்றே சர்வசன வாக்குரிமை பொது நன்மை பயப்பதாகவும், சனநாயகத்தன்மை வாய்ந்ததாகவும் சமூக ஏற்றத்தாழ்வினைக் குறைப்பதாகவும் இருந்தபோதிலும் சிறு குழந்தையின் கைகளில் கொடுக்கப்படும் கூர்மையான ஆயுதம் போன்று சுயாதிக்கமுடன் வாக்களிக்கும் பக்குவம் பெறாத பாமர மக்களுக்கு உடனடியாக வாக்குரிமை வழங்குவது சிந்தித்துச் செயற்பட வேண்டிய காரியம் எனவும் சேர். பொன். இராமநாதன் கூறினார். இதனைக் கருத்திற் கொண்டு தமிழர்களில் ஒரு பகுதியினர் அவரை உயர்வர்க்கச் சிந்தனையாளரென்றும் சாதீயத் தடிப்புள்ளவரென்றும், விமர்சித்தனர். இன்றும் அந்த மனப்பாங்குகளிலிருந்து மாறாமலும் உள்ளனர். அற்ப சொற்ப சலுகைகளுக்காகச் சோரம் போய்த் தமது வாக்குரிமையைச் சுயநலத்துக்காகவும், அறிவுபூர்வமற்ற முறையிலும் அளிக்கக் கூடிய பலரை எமது நாட்டில் இன்றுங் கூடக் காணமுடிகிறது. தமிழ் - சைவப் பண்பாடு தழுவிய கல்வியைப் பெண்கள் பெறுவதற்காக 1913ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரியை நிறுவி, தகுதி வாய்ந்தவர்களை வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் முதல்வர்களாகப் பணியாற்றச் செய்து விழுமியங்களைக் கடைப்பிடிக்கக்கூடிய கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி, ஆங்கிலக் கல்வியின் அவசியமுணர்ந்து அதனைக் கற்பிக்கச் செய்து பல்லாயிரக்கணக்கான பெண்கள் அறிவுக்கண் பெறச் செய்தவர் இராமநாத வள்ளல் என்பதையும் நாம் கவனத்தில் கொண்டால் அவரது சிந்தனைத் தூய்மையைப் புரிந்து கொள்ளவியலும்.

சேர். பொன். இராமநாதனின் அரசியல், கல்வி, சமூகப்பணிகளுக்கப்பால் அவரது ஆன்மீகப்பணி விரிவடைந்து காணப்படுகின்றது. 'தவமும் தவமுடையார்க்கு ஆகும். என்பதற்கிணங்க அவரது குடும்பச்சூழலிலிருந்தும் ஆன்மீக நாட்டமுடையவராக அவர் வளர்வதற்கான ஏதுக்கள் காணப்பட்டன. தமது இளம் வயதிலேயே மனைவியை இழந்த இராமநாதனின் தந்தையார் பொன்னம்பலம் அவர்களின் பிற்காலம் துறவு வாழ்க்கை போல் கழிந்தது. 1854ஆம் ஆண்டு, தமது 19ஆவது வயதில் தாயார் இறந்தபோது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் அவர்களுக்கு மூன்று வயது. தம்பியார் அருணாசலத்துக்கு ஒரு வயது. இந் நிலையில் பாட்டியார் விசாலாட்சியம்மையின் அரவணைப்பில் பேரக்குழந்தைகள் வளர்ந்தனர். வீட்டிலேயே நந்தவனம் - அமைத்துச் சிவபூசை செய்து வந்த தந்தையாரின் ஆன்மீகப் பாதையின் செல்வாக்குப் பிள்ளைகளிலும் பிரதிபலித்ததில் வியப்பில்லை. 1857இல் கொழும்பு கொச்சிக்கடையில் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை இராம நாதனின் தந்தையார் கட்டத் தொடங்கினார். சிறிய ஆலயமாயிருந்த அதனை இந்தியாவிலிருந்து பெறப்பட்ட கருங்கற்கள் கொண்டு பேராலயமாகப் பிற்காலத்தில் அமைத்தவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். இலங்கையிலேயே, முழுவதும் கருங்கல்லாற் கட்டப்பட்ட - சைவ ஆலயம் என்ற பெருமை இச்சிவன் கோவிலுக்கேயுரியது. தலைநகரில் தந்தை தொடக்கி வைத்த சைவப் பணியை முடித்து வைத்ததில் இராமநாதன் அவர்களின் உள்ளம் அமைதி கண்டது.

குருவடிவாய் எழுந்தருளியிருக்கும் திருவருளின் கடைக்கண் பார்வை இராமநாதன் அவர்கள் மீது படியும் காலமும் வந்து சேர்ந்தது. ஓய்வின்றி நாட்டுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் ஒருவரை நாடித் தஞ்சாவூர் இராணியின் வேண்டுகோளினைத் தெரியப் படுத்தும் தூதுவராக, இலக்கணம், இராம சாமிப்பிள்ளை எனும் சுவாமி அருட்பரானந்தர் கொழும்புக்கு வந்து இராமநாதன் அவர்களைச் சந்தித்தார். இராணியின் பேரனுக்கே பட்டம் கிடைக்க வேண்டுமென்ற வேண்டுகோள் இராமநாதன் மூலமாகப் பிரித்தானிய அரசிடம் தெரிவிக்குமாறு கோரப்பட்டது. 1888இல் முதன் முதலாக சுவாமி அருட்பரானந்தருடனான சந்திப்பு இராமநாதன் அவர்களுக்கு ஏற்பட்டதனால் அவரது உள்ளத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இகலோகவாழ்வின் நிச்சயமற்ற தன்மையைப் புரிந்து கொண்டு ஆத்மீக சுத்தியுடன் செயற்படக்கூடிய உளத்திண்மை உருவானது. தஞ்சை அரச வம்சத்தவர்களின் உறவினரான தில்லைநாத சுவாமிகளே சுவாமி அருட்பரானந்தரின் ஞான குருவாவார். சுவாமி அருட்பரானந்தரே இராமநாதனின் ஞானகுருவாய் விளங்கி நல்லுபதேசம் அருளியவர். தமது சகோதரர் அருணாசலத்தையும், நண்பர் எட்வேட் காப்பென்ரரையும் சுவாமிகளிடம் உபதேசம் பெறச் செய்து சீடர்களாக மாற்றியவர் இராமநாதன் அவர்களே. தமது 37ஆவது வயதில் ஏற்பட்ட சைவசமய நோக்கிலான இறை சிந்தனையும், அர்ப்பணிப்பும் தம்மை இதுவரை வாழ்ந்த நெறியிலிருந்து மாற்றியமைத்ததை இராமநாதன் அவர்கள் உணர்ந்து கொண்டார். மெல்ல மெல்லப் பிரபுத்துவ வாழ்வுக்குரிய அடையாளங்கள் அவரிடமிருந்து விலகிக் கொண்டன. மேனாட்டுப் பண்பாட்டு விருப்பம் தளர்ந்தது. புகைத்தலும் குடித்தலும் வெறுப்பானது ஆன்மீகப் பற்று அதிகரித்தது; உடலின் அநித்தியம் உணரப்பட்டது; சிந்தையும் செயலும் ஒன்றாகும். விருப்பு ஏற்பட்டது. இயந்திரம் போல லௌகீகக் கடமைகளைச் செய்துவந்தாலும், மனமானது தவறவிட்ட ஆட்டுக்குட்டியைத் தேடித் திரியும் இடையனைப்போலப் பரம்பொருள் நாடியே நின்றது. அருட்பரானந்தரின் மீதான அளவு கடந்த குரு பக்தியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி அவரைத் தேடிச் சென்று உபதேசம் பெற்றமையும் புதியதொரு உலகத்தினை நோக்கிய பாதையில் செல்வதற்கு இராமநாதன் அவர்களை நெறிப்படுத்தியது. அவரது வாழ்வியலில் எஞ்சியிருந்த 42வருட காலங்களிலும் அவர் மேற்கொண்ட அரசியல், சமயம், சமூகம், கல்வி, கலை முதலான அனைத்துப் பணிகளிலும் அவரது ஆன்மீக நாட்டம் புலப்பட்டது. கொழும்பில் சிவாலயம் அமைத்தமை, இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றை நிறுவி ஒழுக்க நியமங்களுடனான ஆன்மீக வளர்ச்சிக்கான கல்வியை வழங்கியமை, கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்காக ஐந்து ஏக்கர் காணி வழங்கியமை, சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை உருவாக்கியமை, தாமுருவாக்கிய கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சிநெறிகளை இணைத்தமை முதலான பன்முகப் பணிகளில் இதனைக் காணவியலும்.

18.07.1893இல் தமது ஞான குருவானவர் தஞ்சாவூரில் சமாதியடைந்த போது அச்சமாதியில் லிங்கமொன்றினைப் பிரதிஷ்டை செய்தும், தொடர்ந்து அவ்விடத்தில் நித்தியபூசைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்தும் தமது குருவுக்கான அஞ்சலியை நிறைவேற்றினார். தமது ஞானகுருவின் உறவினரான சுப்பையா நடேசபிள்ளை என்னும் தமிழறிஞரை இலங்கைக்கு வரவழைத்து முப்பது ஆண்டுகள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபராகப் பணியாற்றவும் தமது இரண்டாந்தாரமான லீலாவதி (Harri son) அம்மையாருக்குப் பிறந்த சிவகாம சுந்தரிக்குக் கணவராக ஆக்கிக் கொள்ளவும் முடிந்ததற்குக் காரணம் இராமநாதன் அவர்கள்பால் நிறைந்திருந்த குருபக்தியாகும்.

1906இற்குப் பிந்திய காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத் துறைமுகம் ஊடாக நாடு திரும்பிய சேர். பொன். இராமநாதன் அவர்கள், நல்லூர் முருகனைத் தரிசிக்க விரும்பி, படாடோபமான குதிரைவண்டியில் பரிவாரத்தினர் சூழ, நவீன ஆடைகளணிந்தவராய் (தலைப்பாகை, வேட்டி, கோட்டு, சப்பாத்து) வந்து சேர்ந்தார். அப்போது எதிர்பாராத விதமாக 'இறங்கடா! இன்னும் இருட்டிலதான் நிக்கிறாய்! துறவடா! என்னும் வார்த்தைகள் ஆங்காரமாக ஒலித்தன. அவ்வார்த்தைகளுக்குரியவர் அழுக்கேறிய ஆடையுடன் விசர்க் கோலங்கொண்டு நின்ற செல்லப்பா சுவாமிகள். இச்செயலானது இராமநாதனது உள்ளத்தை மேலும் ஒளிபெறச் செய்தது. யாழ்ப்பாணத்தில் அன்று தங்கிவிட்டு மறுநாள் சாதாரண மனிதராக வந்து செல்லப்பா சுவாமிகளைச் சந்தித்து உரையாடியதாகவும், அதனூடாக இராமநாதன் மேலும் பக்குவம் பெற்றதாகவும் பெரியவர்கள் சொல்லியிருக்கின்றனர். அத்துடன் இராமநாதன் கல்லூரிக்கான அத்திவாரக்கல் நாட்டுந் தினத்தன்று திடீரெனக் கோவணதாரியாகத் தோன்றிய செல்லப்பா சுவாமிகள் தமது கையிலிருந்த பனையோலை விசிறியினால் அத்திவாரக் கல்மீது வீசிக் காற்றெழச் செய்து விட்டு அவ்விசிறியை இராமநாதன் அவர்களிடம் கொடுத்து 'கப்பல் போலக்கட்டடா!' எனக் கூறிச் சென்றதும், இராமநாதன் அவர் கூறியது போல் பெரிய கட்டிடங்களுடன் கூடியதாகக் கல்லூரியை அமைத்ததும், செல்லப்பர் கொடுத்த விசிறியைப் பலகாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்து வைத்திருந்ததும், வரலாற்றுச் சம்பவங்களாகும். அவுஸ்ரேலிய மாதுவான ஹரிசன் ( லீலாவதி) அம்மையார் 1906ஆம் ஆண்டு இராமநாதன் அவர்களை மணஞ்செய்து கொண்டார். வழக்கறிஞர் நாயகமாகவும், சிலவேளைகளில் சட்டத்துறை நாயகமுமாகவும் பணியாற்றிய இராமநாதனுக்கு அமெரிக்க நாடு விடுத்த அழைப்பினையடுத்து, இலங்கையின் ஆள்பதியாக அப்போது இருந்த ஹென்றி பிளேக் ( 1903 - 1907) அவர்கள் ஓராண்டுகால ஓய்வினை வழங்கினார். அமெரிக்காவில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் கீழைத்தேய தத்துவத்தை மேல்நாட்டவர்க்கு உணர்த்தும் உன்னத உரைகளை நல்லாசிரியப் பாங்கில் ஆற்றிப் பெரும் மதிப்பினைப் பெற்றுக் கொண்டார். கிறீன் ஏக்கர் பல்கலைக்கழகப் பிரிவான மொன்சல்வாற் பாடசாலையில் இடம் பெற்ற சமய ஒப்பீட்டு மாநாட்டில் 1905 - 1906 ஆண்டுப்பகுதியில் கலந்து கொண்டு ஆத்மீக உரையாற்றினார். ஹாவாட், யேல், நியூயோக், கேணல், பல்கலைக்கழகங்களிலும் உரை நிகழ்த்தினார். அதேபோன்று இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உரையாற்றியிருக்கிறார். 1917இல் மைலாப்பூரில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

இராமநாதன் அவர்களது ஆன்மீக உபதேசங்களால் கவரப்பட்டவர்களில் மைறன் பெல்சஸ் (அமெரிக்கா) ஆர். எல். ஹரிசன் (அவுஸ்ரேலியா) எலிஸ்வொன் ரன்சில்மன் பிக்கற் (நியூசிலாந்து) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். இராமநாதன் அவர்களை மணமுடித்துக் கொண்ட ஹரிசன் (லீலாவதி அம்மையார்) அவர்கள் தமது கணவரின் பல்துறைப் பணிகளிலும் பங்கெடுத்துக் கொண்டவர். 1953இல் தாம் இறக்கும் வரை கணவரின் கல்வி - ஆன்மீகப்பணிகளை முன்னெடுத்தவர். இராமநாதன் கல்லூரியின் கட்டட அமைப்பானது ஹரிசன் அம்மையார் கல்வி கற்ற அவுஸ்ரேலிய நாட்டுக் கல்லூரியின் கட்டட அமைப்பை ஒத்ததாகும். இராமநாதன் அவர்களது வாழ்வியலில் ஹரிசன் அம்மையாரைப் போலவே மருமகனாய் வந்த சுப்பையா நடேசபிள்ளை அவர்களும் பெரும் பங்கு வகித்திருந்தார். இலக்கியவாதியாக, தமிழறிஞராக, அரசியலில் நாடாளுமன்ற உறுப்பினராக, கல்விப்பணியாளராக, முகாமையாளராக ஆசிரிய விரிவுரையாளராகப் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்தியவர். தமது மாமனாரின் எழுத்துப் பணிகளுக்குப் பெருந்துணையாக அமைந்தவர். அவரது இலட்சியங்களை நிறைவேற்றுவதே தமது கடனெனக் கொண்டு வாழ்ந்தவர். திருமண வாழ்வில் அடைந்திட்ட சுகங்களிலும் பார்க்க இராமநாதனின் கல்விசார் செயற்பாடுகளால் வெற்றி பெற்றிட்ட ஆத்ம சுகங்கள் நடேசபிள்ளை அவர்களை வாழ்வித்தன. 1966இல் தாம் இறக்கும் வரை இராமநாதன் அவர்களின் ஆன்மீக வேட்கையைப் புரிந்து கொண்ட பணிவுள்ள மனிதனாவே நடேசபிள்ளை அவர்கள் செயற்பட்டார். இராமநாதன் அக்கடமியையும் உருவாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர். பொன். இராமநாதன் அவர்களது ஆன்மீக உரைகள் யாவும் நூலாக வெளிவந்துள்ளன.

1. An eastern Exposition if the Gospel of Jesus According to st. Mathew (1898)
2. An Eastern Exposition of the Gospel & Jesus According to st.Jogn (1902)
3. The Culture of the Souh Amoung western Nation (1907)
4. The Spirit of the East Contrasted with the spirit of the west (1905)
5. On Faith of Love of God (1897)
6. Tamil Translation of Bhagavat Heethe பகவத்கீதை மொழிபெயர்ப்பு (1914)
7. Tirukkural ( 1919) திருக்குறள்பாயிரமும் இராமநாதீயமும்
8. Shri Ramanathan Dhamasasha (Lession) செந்தமிழ் இலக்கணம் (1927)
9. ஆத்திசூடி மந்திர விளக்கம்

ஆகியவை இராமநாதன் அவர்களியற்றிய முக்கிய நூல்களாகும்.

இவற்றுள் ஆத்திசூடி விளக்கம் பகவத் கீதை, திருக்குறள், செந்தமிழ் இலக்கணம் ஆகியவை தமிழிலானவை. - " Select Speeches of Ponnampalam Ramanathan" என்னுந் தலைப்பில் இராமநாதன் அவர்களது சொற்பொழிவுகளும் நூலாக ( 1929) வெளிவந்துள்ளது. சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஆன்மீகவாதியான ஓர் அரசியல்வாதியாவார். நாற்பது ஆண்டுகள் வரையிலான அவரது வாழ்க்கைப் பகுதியை ஆன்மீகமே வழிகாட்டிச் சென்றுள்ளது. தனது பல்விதப் பணிகளையும் ஒருவித ஆன்ம வேட்கையுடன் ஆற்றிய பெருந்தகை அவர். அவரது தனிமனித இலட்சியங்கள் மனிதகுல ஈடேற்றத்துக்கான தரிசனங்கள். அவரது வாழ்க்கை மனித குலத்துக்கு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. என்பதே சரியானதாகும்.

**கலாநிதி செ. திருநாவுக்கரசு**
ஓய்வுநிலை விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

*(இக்கட்டுரை 2013ஆம் ஆண்டு நடைபெற்ற இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு மலரில் இருந்து இங்கு மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)*

நன்றி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sir.P.Ramanathan – The Colossus

**Extracts from Sir Pon Ramanathan's speech in Legislative Council while presenting Parameshvara College Ordinance**

Submitted by Sir Pon Ramanathan on 18-June-1925 at Legislative Council-

The college was founded in 1921, **The kind of education that is being given** to their boys and girls in the English schools established by the Government, or conducted by private association with the help of Government grants, **is not at all satisfactory. They want something more than a knowledge of the perishable things of life,** too much of which is pressed on the attention of students as if there was nothing else worth considering and attaining. The results of this one-sided system of education are painfully manifest in all parts of the British empire and elsewhere. The meaning of pleasing or enjoying is to gratify every desire or passion that creeps into the mind. **They do not know the radical difference between virtue and vice, or right wrong nor for the reason of the existence of the grand spiritual forces called religion and morality. Something must be done at once to enable youngsters to learn and live the right life. "Right thought, right speech, and right action still exist among a limited number of men and women.** I have thought for many years that it was my duty to help Hindu parents in this country and India to attain heart's wish.

Thus, Parameshvara College means the house of learning of the highest. Any student who is admitted there will be given facilities to know something more of life than the perishable side of it. He would know that the spirit within the mortal body, and God within and beyond us, are the only imperishable things which we should labor hard to attain, **we have first to discover the individual sprit which is in the body, and then come to know God who is in the Spirit. Unless boys and girls are taught these truths early in life, and helped to prefer the principles and practices which related to the discovery of the spirit in the body, and God in the spirit, they would be engulfed in the vortices of selfishness and sensual desires.**

**"The chief aim of Parameshvara College is to save our boys in this way and make good citizens of them. By reminding them of our spiritual traditions, we hope to make them real assets to us.** This is Eternal life-knowledge of god of god and the spirit



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

that is in the body. It is the principles of such knowledge that should be imparted in everyday school and college.

More important side of Education is the training of the boys and girls to lofty ideals of character, perfection in work, heartfelt devotion to God, and loyalty. If the instruments of knowledge and action, given to the soul by god, be not carefully trained and strengthened in early life to prefer always the needs of the soul to the carvings of the body, they will not be able to resist the promptings of evil to do the very things they should not do in the interests of the soul. If these instruments fail to protect the little heaven of love and light that is in every man, and to develop them successfully, first into neighbourly love, and then into philanthropic love, and then to Godly love, they are said to be possessed of "bad character". Our instruments of knowledge, the chief of which are the five senses, the mind, attention, recollection of sound doctrine from the path of duty laid down for us by sanctified sages, we are said to be possessed of "high or lofty character".

**It will thus be seen that the formation of good character requires sense control, mind control, abundant study and thoughtful action.** Is god's design as to the uplifting of fallen people ever unfolded to them, at home or at school, in the early part of their lives, when alone ethical and religious lessons can take root, flourish, and fructify. Can this wise direction of the higher desires and this cultivation of character be affected under the present system of education which thrusts aside religion and ethics? **When our thoughts, divorced from the limitations of the body and its surroundings, are thus established in God, our sages declare that we have passed from kingdom of earth to the kingdom of God, from the things of perishable life to imperishable life or the life External.**

Sri Lanka is at the cross roads in every sense. Lot of sane, introspection is the need of the hour to cross over the impasse of negligence in every sense. Sir P.Ramanathan in 1921 thought and created establishment to prevent degradation of values, morals and wisdom, a food for thought very apt for the present moment for a new future is presented by him.

**(Highlighted and Compiled By Dr. Krishnanandasivam)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமாட்டி லீலாவதி இராமநாதன்

சேர். பொன்னம்பலம் இராமநாதன் சிறந்த அரசியல்வாதியாகவும், கல்விமானாகவும், சமயபற்றுள்ளவராகவும், கலை கலாசாரத்தைப் பேணி வளர்ப்பவராகவும் விளங்குவதற்கு மனையறத்தின் வேரணையராக விளங்கியவர், பெருமாட்டி லீவாவதி இராமநாதன் ஆவர். அவருடைய உயர்ந்த இலட்சியங்களும் கொள்கைகளும் அவருடைய துணைவியாரால் நிறைவு பெற்றன. ஒருவர் புகழுடனும், சகல சிறப்புக்களுடனும் விளங்குவதற்கு மாண்புமிக்க இல்லாள் காரணம் என்றால் மிகையில்லை. ஒரு நாட்டிற் பிறந்து வேறு ஒரு நாட்டில் வளர்ந்து இறுதியாக இலங்கை வாழ் சைவமக்களுடைய முன்னேற்றத்துக்காகப் பணியாற்றிய பெருமை அம்மையாருக்குரியது.

இங்கிலாந்தில் யோக்சயர் என்ற இடத்தைச் சேர்ந்த செல்வி R. L. ஹரிசனுடைய முன்னோர், 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவுஸ்திரேலியாவிற் குடியேறி வாழ்ந்தனர். அவருடைய பெற்றோர் மிகவும் உயர்ந்த பண்பாடும் செல்வச் சிறப்பும் மிக்கவர்கள். செல்வி R. L ஹரிசன் அவர்களுக்குப் பெரும் செல்வத்திலிலும் பார்க்க அருட்செல்வத்தில் அதிக நாட்டம் இருந்தது. சமயத்தை ஒப்பீட்டு முறையில் ஆராய்ந்து உண்மையை அறியும் ஆர்வத்தால் ஞானிகளைத் தேடி கீழைத் தேசங்களுக்கு வந்த செல்வி R. L ஹரிசன். சேர். பொன். இராமநாதனைச் சந்தித்தார். சேர். பொன். இராமநாதனிடம் குரு சீடர் முறையிற் சமயத்தைக் கற்க ஆரம்பித்து, முதலிலே விவிலிய நூலை ஆராய்ந்து சில நூல்களை வெளியிட்டார். வழமையாக மேற்கு நாட்டவர்களைக் கவரும் இந்து தத்துவம், சமய இலக்கியம், வட மொழி என்பன இவரையும் கவர்ந்ததில் வியப்பில்லை. நமது இந்து சமயக் கோட்பாடுகளைப் பிறநாட்டவர் போற்றிக் கைகொள்ளும் வண்ணம் சமய இலக்கியங்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்.

செல்வி R. L ஹரிசனுடைய அறிவு, ஆற்றல் காரணமாக சேர். பொன். இராமநாதன் அம்மையாரை தமது அந்தரங்கச் செயலாளராக நியமித்தார். சேர். பொன். இராமநாதன் அவர்கள் சமயச் சொற்பொழிவாற்ற அமெரிக்கா சென்றபொழுது அவருடன் சென்று செயலாளர் என்ற நிலையில் வெற்றியும் புகழும் ஏற்படப் பெரிதும் முயன்றார். அமெரிக்காவிலிருந்து திரும்பிய சேர். பொன். இராமநாதன் செல்வி R. L ஹரிசனைத் திருமணம் செய்தார். இனத்தால், மதத்தால், மொழியால் வேறுபட்ட செல்வி R. L ஹரிசன் சைவப்பெண்மணியாக எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்கித் தமது கணவனுடைய கோட்பாடுகளை மிக நுணுக்கமாகப் பின்பற்றி வாழ்ந்தார். அன்பு, பணிவு, கடமையுணர்வு, பொறுப்புணர்ச்சி என்பன அவரிடம் காணப்பட்ட சிறப்பியல்புகளாகும். சேர். பொன். இராமநாதனின் பாரிய திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், கல்வி நிலையங்களை நிர்வகிப்பதிலும், விருந்தினரை உபசரிப்பதிலும், கலைகளை வளர்ப்பதிலும், மக்களை அன்பாகவும் பண்பாகவும் நடத்தவதிலும் இவர் நிகரற்று விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர். பொன். இராமநாதனால் 1924ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற சைவ மங்கையர் சபையின் தலைவராக அவர் ஆற்றிய பணிகள் அளப்பில. சைவப் பெண்களுடைய உயர்ச்சிக்காக அமைக்கப்பட்ட இச்சபை இன்றும் நற்பணி ஆற்றி வருவது வரவேற்கத்தக்கது. லேடி இராமநாதனுடைய பலதரப்பட்ட பணிகளைப் பாராட்டி அவருக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அன்னாருடைய பணிகளை நினைவுபடுத்துமுகமாக சைவ மங்கையர் சபையினர் இரு அறக்கட்டளைகளை நிறுவியுள்ளனர். இந்து நாகரிகரித்தில் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்கள் பெறுவதற்கு திறமை அடிப்படையில் ஒரு புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. மேலும் வருடந்தோறும் இந்து நாகரிகம், சமய தத்துவம், கலை கலாசாரம் ஆகிய துறைகளில் ஒரு நினைவுப் பேருரை நடைபெற நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நினைவுப் பேருரை 1981ஆம் ஆண்டில் பேராசிரியர் கலாநிதி பா. நடராஜன் அவர்களாலும், 1984ஆம் ஆண்டு பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களாலும், 1985ஆம் ஆண்டு பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களாலும் நடாத்தப்பட்டது.

*(இக்கட்டுரை பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களால், 31-08-1987 அன்று ஆற்றிய லீலாவதி இராமநாதனின் நினைவுப் பேருரை உரையிலிருந்து சில பகுதிகளை எடுத்துப் போடப்பட்டுள்ளது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன். இராமநாதன்

1. பொன்ராம நாதன் ஈழம்
போற்றும் வீரத் தலைவன்
தன்காலத் தமிழர்க் கன்புத்
தாயைப் போன்ற தலைவன்.

2. கரும்பிலினிய தமிழைக் கற்றுக்
கருணை நிறைந்த தலைவன்
இரும்பு மனமும் இளகும் வண்ணம்
இனிய சொல்லும் தலைவன்.

3. தெய்வமெம்மைக் காக்கும் என்று
சிந்தை மகிழுந் தலைவன்
சைவநெறியின் மரபை உலகில்
தழைக்கச் செய்த தலைவன்.

4. இலங்கும்பர மேசு வரா
இராமநாதன் என்றே
துலங்கும்கல் லூரி இரண்டைத்
தோற்று வித்த தலைவன்.

5. மன்னுபுகழ்க் கொழும்பில் சைவ
வாழ்வு நின்று மலரப்
பொன்னம் பலவாணர் கோவில்
புனைந்து போற்றும் தலைவன்.

*(இக்கவிதை வேந்தனார் அவர்களின் கவிதைப் பூம்பொழில் 1964 நூலிலிருந்து பெறப்பட்டது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரப் பதிவு
# கௌரவ சேர். பொன். இராமநாதன்

உலகில் எத்திசையிலும் பெரும்புகழ் நிறுவிய பேரறிவாளரும், தேசாபிமானியும், உத்தண்ட கெம்பீர வாசால சிங்கமும், இலங்கையின் உத்தம ஊழியனும், சுதேசிகளின் வழிகாட்டியுமான ஸ்ரீமான் கௌரவ சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சில நாள் வியாதிப் படுக்கையில் இருந்து தமது வயோதிப திசையான 79ஆம் வயதில் இம்மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்குக் கொழும்பில் 'சுகஸ்தானம்' எனப் பெயர்பெறும் தமது இல்லத்தில் பிராணாப்தியான செய்தி இலங்கையாருக்கு இடி விழுந்தது போலாயிற்று.

சேர். இராமநாதன் அவர்கள் இராசவாசல் முதலியார் பொன்னம்பலம் அவர்களின் இரண்டாவது புதல்வனாக 1851ம் ஆண்டு சித்திரை மாதம் 16ஆம் திகதி பிறந்தார். இவர் கல்வி நிபுணராய்த் தற்பொழுது றோயல் கல்லூரி எனப்படும் கொழும்பு அக்கடமிக் கலாசாலையில் கற்று, அப்பால் சென்னைக் கலாசாலைக்கு ஏகினார்.

28ஆம் பராயத்தில், 1879இல் இலங்கை சட்டசபையில் தமிழ்ப் பிரதிநிதியாகி இடையில் அற்றோணி ஜெனரலாயும், சொலிசிற்றார் ஜெனரலாகவும் இருந்த காலம் போக, மிகுதிக் காலமெல்லாம் சட்டசபையில் இலங்கையின் தற்கால நிலைமைக்கு வழிகோலினார். யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதப் பாதை திறக்கப்பட்டது இவரின் அரும்பெரும் முயற்சிகளில் ஒன்று.

1886ஆம் ஆண்டில் முதன்முதல் இங்கிலாந்துக்குப் போனார். அங்கிருந்து திரும்பிய பின் சட்டசபையில் விசேஷ அங்கத்துவத்தைப் பெற்றார். 1889ஆம் ஆண்டில் இவருக்கு C.M.G. என்ற பெரிய பட்டம் அளிக்கப்பட்டது. 1905இல் அமெரிக்க ஐக்கிய மாகாணம் சென்று ஆங்கு செய்த பிரசாரங்களால் 'கீழைத்தேச கலைவினோதன்' என்று அழைக்கப் பட்டார்.

அங்கிருந்து திரும்பி மறுபடியுந் தமது சீவியத்தின் மற்றோர் அத்தியாயத்தைத் தொடங்கினார். 1911இல் இலங்கைக் கற்றோர் பிரதிநிதியெனும் வெற்றிப் பிரதேசமடைந்தார். 1915ஆம் ஆண்டு இலங்கைக் கல்வி விடயமாய் இவர் செய்த வேலைகள் இலங்கையார் மனதில் இவரையிட்டு பெரிய எண்ணத்தை உண்டாக்கின. 1921ஆம் ஆண்டில் 'சேர்' எனும் நைற் பட்டத்தைப் பெற்றார். இவரின் முதல் மனைவியரான நல்லதம்பி முதலியாரின் மகள் 1904இல் இறந்து போக, 1907ஆம் ஆண்டு Adelaide பட்டணத்து H.L.ஹரிசன் துரையின் மகளான ஐரோப்பிய மாதை மணம் புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஆங்கில மொழியில் வெகு நாவன்மை படைத்த கலைவினோதனாய் மாத்திரமன்றி, சைவசமயத்தைப் புதுப்பித்த ஓர் தண்ணருளாளருமாவர். இவர் தமிழ் மக்கட் கல்வியின் வேணவாவோடு கல்லூரிகள் அமைத்த ஞானசூரியன். இலங்கை சட்டசபையில் 52 ஆண்டுகளாக கெம்பீரமாய் வீற்று வெற்றி சிறந்த தனித் தமிழ் வீரன். தன் சுய இயக்கத்தால் கோயில்கள், மடங்கள் கட்டுவித்த, பெருந்தகையாளன்.

**மரணச் சடங்கு**

தமிழ்த் தலைவனாய் மாத்திரமல்ல இலங்கைத் தலைவனாய் இவர் விளங்கியபடியால் இவரின் பிரிவானது தமிழருக்கு மாத்திரமல்ல மற்றும் பல இனத்தவருக்கும் பல மதத்தினருக்கும் வெகு துயரத்தை அளித்தது. பத்திரிகைகள் யாவும் புலம்பத் தொடங்கின. கொழும்பின் வீதிகளெங்கும் துக்கக் கொடிகளுடன், துயரமயமாயிருந்தன.

இவரின் சடலம் மறுநாள் பிற்பகல் 4.30 மணியளவில், இவரின் மாளிகையினின்று கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்துக்குச் சமாதியிருத்திக் கொண்டு போகப்பட்டது. வீதிகளெங்கும் வெள்ளைக் கொடிகள் தொங்க, இருமருங்கும் ஆயிரக்கணக்கானோர் புடைசூழ, முதல் தமிழராலும், பின்பு சிங்களவராலும் மற்றவர்களாலும் இழுத்துக் கொண்டு போகப்பட்டது.

கோட்டையின் வீதிகளெங்கும் இலட்சக்கணக்கான சனங்கள் குவிந்திருக்க, மின்சார வண்டிகள் அசைவற்று நிற்க, நிசப்தமான கூட்டத்துள் சமாதி கொண்டு போகப்பட்டு இதற்கென பிரத்தியேகமாய் ஆயத்தப்படுத்தியிருந்த புகையிரதப் பெட்டியுள் வைக்கப்பட, சுற்றமித்திரருடன் புகைவண்டி யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது.

மறுநாட்காலை புகைவண்டி யாழ்ப்பாண புகையிரத நிலையம் சேர்ந்ததும் அங்கு குழுமிய படைசனங்களுடன் வெகு அமைதியாயும் விமரிசையுடன் திரேகம் இராமநாதன் கல்லூரிக்குக் கொண்டு போகப்பட்டு, அங்கு சாயந்தரம் நல்லடக்கம் செய்யப்பட்டது. சட்டசபை அங்கத்தவரில் அதிகமானோர் இதற்கென யாழ்ப்பாணத்திற்கு பிரேதச் சடங்குக்கு வந்திருந்தனர். தேசாதிபதியவர்களும் தன் பிரதிஸ்தராக ஒருவரை அனுப்பியிருந்தார்.

இலங்கைத் தமிழரின் பெயர் இவருடன் மங்கிற்றெனல் மிகையாகாது. இந்த மகானின் இடத்தை நிரப்ப இன்னோர் புதல்வனை இலங்காமாது எப்போ பெறுவாளோ யாமறியோம். பொருட்செல்வமும், அருட்செல்வமும் நிரம்பியவராய், லோகோபகாரியாய் இலங்கையின் தலையாக இன்னொரு தமிழன் சீவிக்க முடியவே முடியாதென்போம். யாழ்ப்பாணத்தவர் என்றும் சிலாகிக்கும் ஸ்தாபனங்களாகிய அவர் ஆக்கிய இரு கழகங்களும் அவரின் ஞாபகத் ஸ்தம்பங்கள் போல விளங்கி நிற்கின்றன.

*(கார்த்திகை 1930 ஜனதர்ம போதினி - மாதாந்த பத்திரிகை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் சீர்திருத்தச் செம்மல்
# சேர்.பொன்.இராமநாதன்

ஆறுமுகநாவலர் 1879 ஆம் அண்டு இறைபதம் அடைந்தார்.

அதற்கு முதல் ஆண்டு ஒரு மாபெருங் கூட்டம் நாவலர் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே நடந்தது.

இப்பொழுது நாவலர் வித்தியாசாலை, வண்ணார்பண்ணைச் சந்திக்கு வடகிழக்குக் கோணத்தில் இருக்கிறது. அந்தக் காலத்தில் அது மேற்படி சந்திக்குத் தென்மேற்குக் கோணத்தில் இருந்தது. அதிலேதான் அந்தக் கூட்டம் நடந்தது.

கல்விமான்கள், பிரபுக்கள், பிராமண சைவ குருமார்கள், உபாத்தியாயர்கள், இன்னும் பல்வேறு பிரபலஸ்தர்கள் திரள் திரளாய் வந்து பிரதிவாதங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

கொழும்பிலிருந்தும் மிகப் பிரசித்திபெற்ற சட்ட நிபுணர்கள் சமூகஞ் செய்திருக்கிறார்கள். முன்பின் காணாத, கேளாத கூட்டம் அது.

அன்று அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவேண்டியவர் ஆறுமுகநாவலர். ஆனால் அன்று அவர் தலைமை வகிக்கவில்லை. அந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு பக்கத்தில் திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்துகொண்டும், மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி, உள்ளங் கைகளினாற் கபோலங்களைத் தாங்கிக்கொண்டும், கூட்ட நடைமுறைகளை அவதானித்தபடி இருக்கிறார்கள். அவர்களுக்குத் தொய்வு வருத்தம். குளிர்காலத்திலே இடையிடையே வருகின்ற ஒருவகைக் கசம் அது.

மூச்சுவிடமுடியாது, பேசவியலாது, வயிற்றைக்கொய்து வாங்குகிற பொல்லாத வருத்தம், காச வருத்தம்.

சென்னைச் சர்வகலாசாலையார் முதன் முதல் நடத்திய பி.ஏ.பரீட்சையில் யாழ்ப்பாணத்தவர்கள் இருவர் இப்பரீட்சை எடுத்துச் சித்தி எய்தியவர்கள். ஒருவர் வை.விசுவநாதபிள்ளை மற்றவர் சி.வை.தாமோதரம்பிள்ளை. விசுவநாதபிள்ளை மகாவிவேகி, கணிதமேதை, தாமோதரம்பிள்ளைக்கு ஆசிரியர். வாதஞ்செய்வதில் பெரிய சாமர்த்தியவான். நாவலர் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் மூத்தவர். நாவலர் அவர்களும் பிள்ளையும் இளமை தொடக்கம் பத்திரிகை வாயிலாகப் பல விஷயங்களில் வாதஞ்செய்து வந்தவர்கள். நாவலர் அவர்களை எதிர்த்து நின்று பல கண்டனப் பத்திரிகைகள் பதித்து வெளியிட்டவர் இந்த விசுவநாதபிள்ளை. இவர் ஒருமுறை சிதம்பரத்திலே நாவலர் அவர்களோடு நேரில் வாதஞ்செய்து நாவலரின் கொள்கைகளுக்கிணங்கி அவர்களிடம் மதிப்பு வைத்து அன்றுதொடக்கம் நாவலர் அவர்களைக் குருவாகக் கொண்டவர்.

இந்நிலையில் வை.விசுவநாதபிள்ளையின் தலைமையில் அன்று அக் கூட்டம் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்.பொன்.இராமநாதன் துரைக்கு அப்போது இருபந்தைந்து வயது. சிரித்த முகம். தங்க சொரூபம். அப்போதுதான் சென்னைப்பட்டணத்திலிருந்து படித்துவிட்டு வந்தவர். யாழ்ப்பாணத்தவராயினும் யாழ்ப்பாணத்தவர்களுக்கு அவரைப்பற்றி ஒன்றுந்தெரியாது. யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்.

பிறிற்றோ என்பவர் பிரசித்திபெற்ற பழுத்த வழக்கறிஞர். அக்காலத்துச் சட்ட நிபுணர்களுள்ளே தலைசிறந்தவர் அவர். இலங்கையிலேயுள்ள எல்லோரும் அவரை அறிவர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்குப் பெரிய பெயர். பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம். அவருக்கு யாழ்ப்பாணத்தில் அளவுகடந்த செல்வாக்கு அந்த நாட்களில் இருந்தது. -

இந்த இருவரும் இலங்கைச் சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்குப் போட்டியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்வசன வாக்குரிமையைப் பற்றி அந்தக் காலத்திற் பேசுவதுங் கிடையாது. உரிமை உள்ளவர்களுங் குறித்த ஓரிடத்திற்குப் போய்த் தமது வாக்கை இன்னாருக்கென்று வழங்குவதும் இல்லை .

கல்விமான்கள், பிரபுக்கள் கூட்டங்கூடித் தங்கள் அபிப்பிராயத்தை அரசாங்கத்தாருக்குத் தெரிவிப்பது வழக்கம். இந்த இருவரில் தக்கவர் இன்னாரென்று வாதிப்பதற்குத்தான் அந்தப் பாரிய கூட்டம், விசுவநாதபிள்ளையின் தலைமையில் நடக்கின்றது. அந்தக் கூட்டத்திற்கு ''வாதமகாசபை' என்றும் பெயர் வைத்துக்கொள்ளலாம். நாவலர் கூட்ட நடைமுறைகளை அவதானித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும். வாதப் பிரதிவாத மின்னல்கள், முழக்கங்கள் நடக்கின்றன.

கைவேல் - எறிகிறவேல் இறகுள் அம்பு இல்லாத அம்பு வாள் - தண்டு - சக்ரம்- இவற்றிற்கு மேலே தெய்வப் படைகளிலுங் கைவைக்கிற சமயம் அந்தச் சமயம்.

பிறிற்றோ கட்சிக்குப் பேசவந்தவர்கள் எல்லாம் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள். வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள். நாவலர் அவர்களின் காச நோய் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்தது.

பிறிற்றோவை ஆகாயத்திலே தூக்கிக்கொண்டு போய்வைத்துவிட்டார்கள் அவர்கள். இராமநாதன் கட்சி சோர்ந்து போய்விட்டது. விசுவநாத பிள்ளையும் நிலைதளர்ந்து போனார். அவருடைய பார்வை நாவலர் அவர்கள் முகத்தில் விழுந்தது. சனங்களும் அங்கேதான் பார்க்கிறார்கள்.

தலையணைகள் அங்கும் இங்கும் சிதறின!

*''பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி*
*எழுந்த கொழுங்கண் லென்ன எழுந்தார்''*
*'மாகம டங்கலும் மால்விடை யும்பொன்*
*னாகமும் நாகமும் நாண நடந்தார்'*

புலவர்களுடைய பாட்டுகளில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகிறதுண்டு. கம்பருடைய சில அடிகளில் அன்றைக்கு அப்படிப்பட்ட பொருள் அமைந்து கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விலகு பிள்ளை' என்று வழக்கமாகச் சொல்லுவதைச் சொல்ல முன்னமே விசுவநாதபிள்ளை மேடையில் விலகி இடங்கொடுத்தார். நாவலர் அவர்களின் நிலை கம்பீரமான தோற்றம், வீறு கொண்ட பார்வை, எண்ணங்களின் வேகம் இவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. ''அது கிடக்க எடுத்துக்கொண்டு வா தந்தி தபாற் கட்டுகளை'' என்றார்கள் நாவலர். அவர்கள் எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

பிரசண்டமாருதத்திற்குப் பிறகு வருகின்ற அமைதி என்று சொல்லுகிறவாறு அந்தச் சபையில் அமைதி நிலவியது. பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்லக் கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்துவிட்டார்கள்.

தபால் தந்திக்கட்டுக்கள் நாவலர் அவர்கள் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. ''ஒருவர் ஒருவராகவோ, இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்'' என்றார் நாவலர்.

அந்த நாட்களில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது. கோயிலாருக்கு வழக்காடியவர் பிறிற்றே. பிராமணரை ஆதரிப்பவர் நாவலர் அவர்கள். அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருக்குஞ் செல்வாக்கைப் பிறிற்றோ அறிவார். பிறிற்றோ நாவலர் அவர்கள் தமக்குச் சார்பாயிருந்தால் தாம் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடத்திவைப்பார் என்று தமது அந்தரங்க நண்பர்கள் மூலம், நாவலர் அவர்களுக்குத் தெரிவித்துந் தாமே நேரிற் சில கடிதங்களில் - தந்திகளில் - ஒருவாறு குறிப்பிட்டும் இருந்தார் போலும், இந்த நேர்மையற்ற செயல் நாவலர்கள் இருதயத்திற் பெரு நெருப்பைக் கொளுத்திவிட்டது. அந்தக் கடிதங்களும் தந்திகளும் இந்தத்தபால் தந்திக் கட்டுக்களுக்குள் இருக்கும் என்று சொல்லவேண்டுவதில்லை.

வாதத்துக்கென்று வந்திருந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியிலே போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வந்து வழிவகையின்றித் தம்மையறியாமலே வாய்குழறி அகப்பட்டு அங்கு நின்றார்கள். அங்கு நின்றவர்கள் தமது உடல் நடுநடுங்க நாத்தழுதழுத்து 'பிறிற்றோ தக்கவர் அல்லர்'' என்று தாமே சொல்லிச் சமாதானப்படுத்திக்கொண்டார்கள். அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிறிற்றோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றுவிட்டது.

ஆறுமுகநாவலர் அவர்களின் ஆசீர்வாதத்தால் பொன். இராமநாதன்துரை அன்று தொடக்கம் அரை நூற்றாண்டுகளுக்கு மேல் இலங்கைச் சட்டசபையில் அங்கத்தவராக சிறப்பாயிருந்து விளங்கினார்.

அருணந்தி சிவாச்சாரியார் ஒரு பெரிய மகான். அவருக்கு ஒருவகை வயிற்றுவலி இருந்தது. அவர் அந்த வலியை மாற்றாமல் தமது பிரார்த்தம் என்று கருதி அதை அனுபவித்துக்கொண்டு வந்தார்.

மாணவர்களுக்கப் பாடஞ் சொல்லுகிற போது மாத்திரம் அவர் தமது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணிப் பக்கத்தில் வைத்துவிட்டுப் பாடஞ்சொல்லுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம். அந்த வஸ்திரம் அதுவரை துடிதுடித்துக்கொண்டிருக்கும். பாடஞ்சொன்ன பிறகு பழையபடி ' அந்தவலியை எடுத்து வயிற்றில் விட்டுவிடுவார் என்று ஒருகதை.

மேலே கூறிய சபை நடந்த அன்று நாவலர் அவர்களின் காச நோய் எத்தனையோ வைத்தியர்களுக்கு எடுபடாமலிருந்தது. இந்தக் காச நோய் நாவலர் அவர்கள் ஆவேசங்கொண்டு எழுந்த அந்தச் சந்தர்ப்பத்தில் வருகிறேன்'', 'போகிறேன்'' என்று சொல்லாமல் பறந்துவிட்டது.

*(இக்கட்டுரை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் 'இலக்கிய வழி' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்களின் அனுபவம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரியின் முதலாவது தலைமை ஆசிரியர் சைவப்பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள்



சிவபாதசுந்தரம்பிள்ளை 17-1-1878இல் பிறந்தார். அயலில் இருந்த ஆங்கிலப் பாடசாலையில் அறியவேண்டிய ஆங்கிலக் கல்வியை அறிந்த பின், பாரத நாட்டுக்குச் சென்று அங்கே திருவனந்தபுரத்தில் சிறிய தந்தையார் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களோடு தங்கியிருந்து சென்னைப் பல்கலைக்கழகத்து எப். ஏ என்னும் இடைநிலைத் தேர்வில் சித்திபெற்றார்.

பின்னர் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று அங்கே அக்காலத்துப் புகழ்பூத்து விளங்கிய சென். யோசேப் கல்லூரியிற் கற்று பீ. ஏ. என்னும் கலைமாணித் தேர்விற் சித்தி பெற்றுப் பட்டதாரியானார். அவர் தம் பட்டப்படிப்பிற்குக் கணிதம், தர்க்கம் ஆகிய இரு பாடங்களையும் சிறப்பாகக்கொண்டு தீர்க்க சித்தி பெற்றார். அன்றி ஆங்கிலம், விஞ்ஞானம், வடமொழி முதலியவற்றிலும் விவேக முறுக்கேறி ஈழத்துக்கு மீண்டார்.

1920ஆம் ஆண்டளவில், யாழ்ப்பாணச் சைவமகாசபையின் வருடாந்தக் கூட்டம் கீரிமலையில் நடைபெற்றது. அதில் தலைமை தாங்கிய சேர். பொன். இராமநாதன் அவர்கள் சைவ இளைஞர்களுக்கு வேண்டிய ஒரு பெருங் கல்லூரியை நிறுவுவதற்கு உடன்பட்டார். அதனால் 1921ஆம் ஆண்டில் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவுவதற்குச் சூழ்நிலை உருவாயிற்று. இருபத்தைந்து ஏக்கர் நிலத்தில் உருவான கல்லூரியைப் பொன் கொண்டு சமைத்த கட்டடம் என்று மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் புகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியை ஆரம்பித்த 22-8-1921 ஆய நன்னாளிலே சேர். இராமநாதனுக்கு அருகில் அமர்ந்து தலைமையாசிரியர் பொறுப்பினை சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் திரிகரணசுத்தியோடு தோள்மேற் கொண்டார். மாணவர் மத்தியில் ஆசிரியர்கள் வாழ்ந்து குருகுலக் கல்வி ஆரம்பிக்கப்பெற்றது. அடுத்த சில ஆண்டுகளில் மேல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பெற்று ஆங்கிலேயர், இந்தியர் முதலான ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். சேர் அருணாசலம் மகாதேவா கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்று நடத்தினார்.

இதற்குள் சுழிபுரத்திலே செல்லப்பாபிள்ளை என்பார் விக்டோரியா மகாராணியாரின் நினைவாக நிறுவிய கல்லூரியிலே முதல் அதிபராக இருக்குமாறு சைவப்பெரியாரை இதமாக வேண்டிக் கொண்டதைத் தவிர்க்கமுடியாது ஏற்று அங்கே அதிபரானார்.

அதிபராயிருந்த சைவப்பெரியார் தாமும் ஓர் ஆசிரியரென்பதை மறக்கவில்லை. பிள்ளைகளை மனிதராக்குவதே பெரிய தர்மமெனக் கண்ட அவர் அறநெறியில் வாழ்வை வளம்படுத்துவதற்கான முறையில் பிள்ளைகளுக்குக் கற்பித்து வந்தார். வெறும் வயிற்றுப் பிழைப்புக்கான கல்வியை அவர் கல்வியெனக் கருதவில்லை.

சைவப் பெரியார் எல்லாப் பாடங்களையும் இலகுவாகக் கற்பிக்கக்கூடிய திறமை பெற்றிருந்தமையோடு, உளநூலறிவு என்னும் மனோதத்துவ சாத்திரத்தையும் நன்கறிந்த வராகையால், அவர் பிள்ளைகளின் மனநிலையை நன்கறிந்து பாடஞ்சொல்லித் தந்தார். 'அவர் வா பிள்ளை இரு பிள்ளை' என்று கனிவோடு கூறும் இன்சொற்கள் எந்தத் துடியாட்டக்காரனையும் பணியவைக்கும். மாணவரிடையே பரவலாகக் காணப்படும் பகிடிகள், சேட்டைகள், விகடங்கள், தந்திரங்கள் எவையும் பெரியாரின் சமூகத்தில் நிகழ்வதில்லை. பிள்ளை அவர்கள் எவரையும் அடக்குமுறை கொண்டு அடக்கியதில்லை. பிள்ளைகள் தாமாகவே அடங்கியொடுங்கி கூசிக் குனிந்து பயபக்தியோடு பாடங் கேட்பதில் நாட்டங் கொள்வதியல்பு.

கல்லூரி அதிபராயிருந்த பெரியார் தம் கடமையில் கண்ணும் கருத்துமாயிருந்தார். எந்தெந்தவழிகளில் பிள்ளைகளின் மனவளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் உறுதியாக்க வேண்டுமோ அந்தந்த வழிகளையெல்லாம் அநுட்டித்தார். சமயகுரவர் நால்வர், சந்தானகுரவர் நால்வர் சைவப்பணி புரிந்த செம்மையை மாணவரறிதற்பொருட்டு அவர்தம் குருபூசைத் தினங்களைக் கோலாகலமாகக் கொண்டாடினார். கல்லூரி வளவுகளில் பயிர்களுக்குத் தாமே பட்டை பிடித்து நீர்பாய்ச்சினார் என்றால் அவரின் சேவைமனப்பான்மையை என்னென்பது. அவர் தண்ணீரிறைத்து நின்றபோது வெளிநாட்டவர் ஒருவர் அவரைக் கல்லூரிப் பணியாள் எனக்கருதிப் பின் மன்னிப்புக் கோரியதுமுண்டு. வித்தியாதரிசிகள் எனப்பட்ட கல்வியதிகாரிகள், கல்லூரிக்கு வருகைதரும்போது, அவர்களும் வெளியில் காத்திருந்து, பெரியார் பாடம் நடத்தி முடிந்தபின், வாருங்கள் என அழைத்தபின்பே, அலுவலகத்துள் நுழையும் வழக்கமுள்ளவராய் இருந்தார்கள்.

தமது ஐம்பத்தைந்தாம் ஆண்டுவரை விக்டோரியாக் கல்லூரி அதிபராயிருந்த பெரியாரவர்கள் ஓய்வெடுத்ததும் அவரிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள், பெரியாரை அன்புக்கரம் நீட்டி அழைத்துப் பரமேஸ்வராக் கல்லூரியின் கௌரவ மேற்பார்வையாளராய் அமருமாறு வேண்டினார்.

எம்மைப் போன்ற நூற்றுக்கணக்கான மாணவரை உருவாக்குவதற்கு அந்நியமனம் வாய்ப்பாகவும், வரப்பிரசாதமாகவும் இருந்தது. இங்ஙனம் இருக்கும் நாளில், கலாநிதி கு. சிவப்பிரகாசம் அவர்களை அதிபராகவும், அளவெட்டி சிதம்பரப்பிள்ளை அவர்களை உப- அதிபராகவும் கொண்டு ஆரம்பமான பரமேஸ்வரா பண்டித ஆசிரிய கலாசாலையின் முதனாள் பாடத்தையும் சைவப்பெரியார் நடாத்திவைத்தார். பட்டம் ஏற்றும் சிறுவர் படாத பாடெல்லாம் பட்டு அதனை மேலே ஏற்றுதல் போல, ஆசிரியரும் படாத பாடெல்லாம் பட்டு மாணவரை மேல் நிலைக்குக் கொண்டுவந்து மனிதராக்குதல் வேண்டும் என்று அவர் சொன்னவை உபநிடதச் சிந்தனை போல உள்ளங்களில் பதிய வேண்டியவை.

*(இக்கட்டுரை, 1978ஆம் ஆண்டு க.சி. குலரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட, காலஞ் சென்ற சிவபாதசுந்தரம்பிள்ளையின் நூற்றாண்டு விழா நினைவு மலரில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு தொகுத்து இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது. நன்றி : திரு.ச.சிவலோகநாதன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sir Arunachalam Mahadeva, KCMG
## First Principal of Parameshvara College



Mahadeva was born on 5 October 1885 in Matara in southern Ceylon. He was the son of P. Arunachalam, a leading civil servant and brother of Sir Pon. Ramanathan. He was educated at Royal College, Colombo where he won many prizes including the Turnour Prize. After school, he joined Christ's College, Cambridge, and graduated with honours degree in Mathematics.

Mahadeva was called to the bar at Lincoln's Inn and on returning to Ceylon, he qualified as a barrister-at-law. He joined the Attorney General's Department as a crown counsel. He also practised law as an advocate at the unofficial bar. He later served as principal of Parameshwara College, Jaffna, a boy's school founded by his paternal uncle P. Ramanathan.

He was a member of the Public Service Commission from 1950 to 1957. Mahadeva devoted his retirement to cultural and religious affairs. He was a senior trustee of the Sri Ponnambala Vaneswara Temple at Sea Street in Kochchikade, built by his paternal grandfather A. Ponnambalam and rebuilt by his uncle P. Ramanathan. He was the chief trustee of the Sri Arunachaleswarar Temple at Mutwal, built by his parents. He was patron of the Colombo Vivekananda Society, the Jaffna Saiva Paripalana Sabai and the Colombo North Hindu Paripalana Sabai. Mahadeva died on the 8th June 1969.

Note: The information shown above has been taken from Wikipedia.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை விற்பன்னரான பண்பாளர்
# சுப்பையா நடேசபிள்ளை

(21.05.1895 – 15.01.1965)



இருபதாம் நூற்றாண்டு இலங்கைத் திருநாட்டின் கல்வி, அரசியல், சைவசமயம், தத்துவம், வரலாறு நுண்கலைகள், சமஸ்கிருதம் முதலிய பல துறைகளிலே நன்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் செய்தவர்களில் இலக்கிய கலாநிதி சுப்பையா நடேசபிள்ளை நன்கு குறிப்பிடற்பாலர். இவர் தமிழகத்திலுள்ள தஞ்சாவூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமது ஆரம்ப, இடைநிலை, பல்கலைக்கழகக் கல்வியைத் தமிழகத்திலே பயின்ற பின்னர், சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வேண்டுகோளின்படி இலங்கைக்கு வந்து, இலங்கையராகி, இலங்கை மக்களுக்குப் பல்வேறு பணிகளும் செய்து புகழ் பெற்றார்.

தமிழகத்திலே தொன்மையும் சிறப்பும் வாய்ந்த முக்கியமான பண்பாட்டு மையங் களின் ஒன்று தஞ்சாவூர், சைவத்திற்கும், தமிழுக்கும் கலைகளுக்கும் பெயர்போன இவ் விடத்திலே 19ஆம் நூற்றாண்டு பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டு முற்பகுதியிலும் வாழ்ந்த அருள் பரானந்த சுவாமிகள் என்னும் இலக்கணம் முத்துக்குமார சுவாமிப்பிள்ளை நன்கு குறிப்பிடற்பாலர். இவர் தலைசிறந்த தமிழ், சைவ அறிஞராகவும், பெரிய ஆத்மீக ஞானியாகவும் விளங்கினார். இவர் ஓர் இல்லறஞானி; எட்வேர்ட் காப்பென்ரர் எனும் பிரபல ஆங்கிலேயப் பேராசிரியர் ஆத்மீக ஞானத்தைத் தேடி இவரிடம் வந்து அருள்ஞானம் பெற்றவர். இப்பெரியாரைப் பற்றி இவர் 'ஒரு ஞானியின் தரிசனம்' (A Visit to a Gnani) எனும் நூலிலே இவரைப் பற்றியும் தன்னைப் பற்றியும் பின்வருமாறு கூறியுள்ளார்.' ''யான் முதலில் குருநாகல் என்ற இடத்தில் தான் பிள்ளை அவர்களைச் சந்தித்தேன். அந்த இடத்தில் மழை வீழ்ச்சி அதிகம். சிறிய மலைக்குன்றுகள், அகன்ற நீர் நிலைகள், உயர்ந்த தென்னந் தோப்புகள், அடர்ந்த காடுகள் முதலியன ஒன்று சேர்ந்து அந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திற்கு இயற்கை அழகையும், பொலிவையும் கொடுத்துக் கொண்டிருந்தன. உயர் அநுபூதி பெற்ற சான்றோரின் உள்ளம் போல் செம்மையும், தூய்மையும், சாந்தமும் ஒருங்கே பொலிந்து விளங்குவது அப்பிரதேசம். அந்தச் சூழ்நிலையின் மத்தியில் அந்தச் சூழலை நிலைக்குத்தாக கொலுவீற்றிருந்து கொண்டிருக்கும் ஒரு தெய்வம் போலப் பிள்ளை அவர்கள் வீற்றிருந்த அந்த அற்புதமான முதற்பெருங் காட்சியைத் தான் யான் என்றும் மறக்கமுடியாதவனாய் இருக்கின்றேன். நான் ஒரு ஆங்கில மகன். கணிதத் துறையில் பெரிய பட்டதாரி கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியன். தாய்நாட்டிலிருந்து இலங்கைத் தீவுக்குப் பெரிய ஆத்ம விசாரியாக வந்தவன். அங்ஙனம் வந்த எனக்கு பிள்ளை அவர்களின் தோற்றமும் பொலிவும் என் விசாரத்தையெல்லாம் அகற்றி, யான் தேடித்திரிந்த பராநுபவநிலையைத் தத்ரூபமாகக் காட்டி, என் வாழ்க்கையின் போக்கையே முழுவதாக மாற்றிவிட்டது'' என்பதாகும். தஞ்சாவூரைச் சேர்ந்த இந்தப் பெரிய ஞானி இலங்கைக்கும் சிலவேளைகளில் வந்து செல்வது வழக்கமாகும். இவ்வாறு வந்து தங்கியிருந்த போதுதான் பேராசிரியர் மேற்குறிப்பிட்ட குருநாகலில் இவரைச் சந்தித்தார்.

இப் பெயரிடப்பட்ட பெரிய ஆத்ம ஞானியும் அறிஞருமான இலக்கணம் இராம சாமிப்பிள்ள திரு. சு. நடேசபிள்ளையின் தாய் வழிப்பாட்டனார். சேர். பொன். இராமநாதன் சேர். பொன்னம்பலம் அருணாசலம் சகோதரர்களின் ஆத்மீக ஞான குரு. இவர்கள் இருவரும் குருவிடம் செல்லும் போது சிறுபிள்ளையாக விளங்கிய நடேச பிள்ளையைக் கவனித்தனர். சிறுவனுடைய தோற்றமும், விளையாட்டும் சேர். பொன். இரமநாதனைக் கவர்ந்தன. எனவே ஒருமுறை அச்சிறுவனின் பெயரைக் கேட்டார். அதற்கு அவன் நடேசன்' எனக் கூறினானாம். ஆனால் பாட்டனார் நடேசன் அல்ல, நாக நாகதனே இவன் பெயர் என்றார். ஆனால் சேர் பொன் இராமநாதன் குருவிடம் மன்றாடிக் கேட்டுச் சிறுவனின் பெயர் அன்று தொடக்கம் 'நடேசன்' என விளங்குமாறு செய்வித்தார்.

திரு. சு. நடேசன் 19 வயதிலே கலை மாணிப் பட்டதாரியாகவும் 21 வயதில் சட்டமாணிப் பட்டதாரியாகவும் விளங்கினார். இதன் பின் சில காலம் வழக்கறிஞராகச் செயற்பட்டார். அப்போது இவருக்கு தமிழ் இலக்கியம், இலக்கணம், ஆங்கிலம், சட்டம், சமஸ்கிருதம், சைவசித்தாந்தம், வரலாறு, நுண்கலைகள் முதலிய பல அறிவியல்களிலே குறிப்பிடத்தக்க தேர்ச்சி ஏற்பட்டு விட்டது. தமிழ், சைவம் போன்றவற்றைக் குடும்பச் சூழ்நிலையாலும் பெற்றிருந்தார்.

இக்கால கட்டத்தில் தான் இவரைச் சிறு பிராயம் தொட்டு அவதானித்து இவரில் பெரு விருப்பம் கொண்டிருந்த சேர் பொன். இராமநாதன் 1923இல் இவரை இலங்கைக்கு வரவழைத்துத் தாம் நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரியில் ஓர் ஆசிரியராக நியமித்தார். இவருடைய தகைமைகளையும், ஆற்றலையும் நன்கு அவதானித்தார். குறுகிய காலப் பகுதியில் அக்கல்லூரியின் அதிபராக நியமித்தார். சேர் பொன். இராமநாதனின் அருமைப் புதல்வியாகிய சிவகாமசுந்தரியை நடேசன் திருமணம் செய்தார். இத்திருமணத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் உறவினர் எதிர்ப்புத் தெரிவித்தாகவும், பின்னர் திருச்செந்தூர் முருகப் பெருமானின் திருவருள் பெற்ற பின்னரே திருமணப் பதிவு கொடைக்கானலில் நிறைவேறியதாகவும் கூறப்படுகின்றது. எவ்வாறாயினும் இத்திருமணத்தின் பின்னர் திரு. நடேசன் பல வழிகளிலும் சேர். பொன். இராமநாதன் அவர்களின் வாரிசாக அவர் செய்து வந்த பல்வேறு நற்பணிகளைச் செய்தற்கான வாய்ப்புகள் எற்பட்டன. மேலும் சேர் பொன் இராமநாதனின் வாழ்க்கையின் இறுதிக் கட்டமும் ஏற்பட்டுவிட்டது. தம்முடைய ஓர் அந்தரங்கச் செயலர் போல் அவருக்குப் பல பயிற்சிகள் அளித்து வந்தார். இங்கிலாந்துக்குச் சென்ற போது அவரைக் கூட்டிக் கொண்டு சென்றார். திரு. நடேசன் மாமனாரிடம் பல திறம்பட்ட அறிவியல்களையும் பயிற்சிகளையும் பெற்று அவரின் வாரிசாக விளங்கத் தொடங்கினார். மாமனார் 1930 இல் இறந்த பின்னர் திரு. நடேசனின் ஆளுமைத் திறன், பல திறம்பட்ட கல்வி அறிவு, முதலியன நன்கு வெளிப்படலாயின. இவருடைய சில முக்கியமான பங்களிப்புகளே இச் சிறு கட்டுரையில் சுட்டிக் காட்டப்படும்.

1931ஆம் ஆண்டு டொன மூர் அரசியல் நடைமுறைக்கு வந்த போது யாழ்ப்பாணத் தமிழர் அத்தேர்தலைப் பகிஷ்கரித்தனர். பின்னர் தேர்தல் 1934இல் நடைபெற்ற போது காங்கேசன் துறைத் தேர்தல் தொகுதிக்கு உறுப்பினராக அரசாங்க சபைக்கு இவர் தெரிவு செய்யப்பட்டார். இத்துடன் இவரின் அரசியல் வாழ்வு தொடங்கியது. இவர் அரசியலில் ஈடுபடுவதற்கு முக்கியமான காரணமாக விளங்கியவர் இவரின் மாமியாராகிய சீமாட்டி இராமநாதன் ஆவார். கணவர் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக செய்து வந்த தொண்டினை மருமகனார் தொடர்ந்து செய்ய வேண்டுமென விரும்பினார் எனக் கூறப்படுகின்றது. அரசாங்க சபை உறுப்பினராகத் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாக 1947 வரை விளங்கினார். கல்வியோடு சம்பந்தமுள்ள பல குழுக்களில் ஒரு முக்கியமான உறுப்பினராக இலங்கினார். எடுத்துக் காட்டுகளாக கல்விச் சபை, கல்வியின் மத்திய ஆலோசனைக் குழு, பரீட்சைகள் சபை, கல்வி ஆராய்ச்சி சபை என்பன குறிப்பிடப்பாலன. 1934 தொடக்கம் 1947வரை அரசாங்க சபையில் கல்வியின் நிர்வாகக் குழு உறுப்பினராக விளங்கினார். இக் குழுவினரே இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் அமைக்கப்பட வேண்டுமென தெரிவு செய்தனர். பல்கலைக்கழக சட்ட மசோதாவையும் தயாரித்தனர். இலவசக் கல்வியை நியமனம் செய்தற்காக நியமிக்கப்பட்ட விசேட சபையில் ஓர் உறுப்பினராகவும் விளங்கிய இவர் இலவசக் கல்வியின் தந்தையாகக் கூறப்படும் சி.டபிள்யூ கன்னங்கரா அவர்களோடு சேர்த்து இலவசக் கல்விக்கு முழுமையான ஆதரவு வழங்கினார். மேலும் 1961ஆம் 1962ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட தேசியக் கல்விச் சபையின் ஓர் உறுப்பினராகவும் இவர் விளங்கினார்.

இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்துடன் மிக நீண்டகால தொடர்புள்ளவராக திகழ்ந்தார். 1938-1942வரை பல்கலைக்கழக கல்லூரியின் மேற்சபை ஓர் உறுப்பினராக செயற்பட்டார். 1942 தொடக்கம் இப் பல்கலைக்கழகத்தின் பேரவை (Court) உறுப்பினராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952 தொடக்கம் மூதவை உறுப்பினராகவும், 1952 தொடக்கம் இப் பல்கலைக்கழக கீழைத்தேசக் கற்கை நெறிகளின் பீட உறுப்பினராக பல ஆண்டுகள் நன்கு செயற்பட்டார். இலங்கை வரலாற்றை எழுதுவதற்குப் பல்கலைக்கழகம் அமைத்த ஆசிரியர் குழுவிலும் ஓர் உறுப்பினராகக் குறிப்பாக, வட புல அரசு எனும் தலைப்பிலே, யாழ்ப்பாண அரசின் வரலாற்றினை நன்கு எழுதியுள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த கால கட்டத்திலே கௌரவ டி. எஸ். சேனநாயக்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கியவர்களிலொருவராகவும், அதன் துணைத் தலைவராகவும் இவர் செயற்பட்டார். முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் இவர் வெற்றி பெற்றவர். பின்னர் 1952இல் நடைபெற்ற தேர்தலிலே காங்கேசன்துறை ஐக்கியத் தேசியக் கட்சி தொகுதி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு அமைச்சரவையிலே தபால் தந்தி தொடர்பு ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சராக நியமிக்கப் பட்டார். இப்பதவியிலே நற்பணிகள் செய்து கொண்டிருக்கும் கால கட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையிலே சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியாக இருக்க வேண்டும் எனத் தீர்மானித்தது. இவர் அக்கட்சிக்கு மிகுந்த விசுவாசமுள்ளவராக இருந்த போதிலும் அதனைத் தடுக்க முடியவில்லை. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து அத்தியாவசிமென்பதை பாராளு மன்றத்திலே வலியுறுத்தினார். தான் இக்கட்சிக்கு விசுவாசமாக இருந்தபடியால் ஏனைய தமிழ்த் தலைவர்களுக்கு துரோகம் செய்துவிட்டதாகக் கவலைப்பட்டார். காலந்தோறும் தமிழர்கள் சிங்களவர்களுக்கும் பௌத்த சமயத்துக்கும் செய்து வந்த நற்பணிகளைச் சுட்டிக் காட்டினார். இலங்கை வரலாறு சிங்கள மக்களுக்கும் வரலாறு போலத் தமிழ் மக்களுடைய வரலாறுமாகும் எனவும், இது ஜனநாயகமின்றி, பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை, மொழி வெறி எனவும் கூறினார். பெரும் பண்பாட்டுச் சிறப்புடைய தொன்மையான தமிழ் மொழிக்கு சுய மரியாதை உடைய எந்தத் தமிழனும் குறைவான அந்தஸ்து வழங்கப்படுதலை ஏற்றுக்கொள்ள மாட்டான். எனவும் குறிப்பிட்டு மிக மனவருத்தத்துடன் அமைச்சர் பதவியைத்துறந்து தனது மிகுந்த தமிழ்ப் பற்றினை எவரும் மனம் நோகாதவகையில் வெளிக் காட்டினார். அன்று பாராளுமன்றத்தில் இவர் ஆற்றிய உரை நன்கு பிரசித்திபெற்றது.

இதன் பின்னர் இவர் அரசியலைத் துறந்து யாழ்ப்பாணத்திலே தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைத்தல், தமிழ், சைவசித்தாந்தம், நுண்கலைகள் போன்றவற்றில் கூடுதலாக ஈடுபட்டார். சேர் பொன். இராமநாதன் யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழகம் நிறுவப்படுதலை விரும்பினார். 1956இல் காலம் சென்ற முன்னாள் பிரதம மந்திரி கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டீ, பண்டார நாயக்கா வித்தியோதியா, வித்தியாலங்கார எனும் இருபிரிவெனாக்களை கலாசார பல்கலைக்கழகங்களாக உயர்த்தினார். இதனைப் பின்பற்றி இவரும் சேர் பொன். இராமநாதன் நினைவாக ஒரு தமிழ் கலாசார அல்லது இந்து பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு பெரிதும் பாடுபட்டார். அப்பல்கலைக்கழகம் சேர். பொன். இராமநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகிய இரண்டையும் மையமாக வைத்து, இராமநாதன் பல்கலைக்கழகம் என அழைக்கப்படலாம் எனவும் அவர் கூறினார். இவர் விரும்பியவாறு பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு அன்றைய இலங்கை அரசாங்கம் அனுமதித்து அடையாள மான்யமும் 1960இல் வழங்கிற்று. ஆனால் சில காரணங்களால் இவரின் நோக்கம் நிறைவேறவில்லை. எனினும் இவர் மனம் தளர்ந்திலர். என்றோ ஒரு காலம் தனது நோக்கம் நிறைவேறும் என நம்பினார். அதற்கு முன்னோடியாக 1960ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி விஜயதசமித்தினத்தன்று மாமனாருடைய பெயரிலே இராமநாதன் இசைக் கல்லூரியை தனது செலவிலே சமகாலப்பிரபல கர்நாடக இசைக் கலைஞர் மஹாராஜபுரம் சந்தானம் அவர்களை அதிபராக நியமித்துத் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டிலுள்ள பிரபல பல்கலைக்கழகங்களில் ஒன்றான அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு முன்னோடியாக அங்குள்ள இசைக் கல்லூரி அமைந்துள்ளதோ, அது போலவே, இவ்விசைக் கல்லூரியும் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள பல்கலைக் கழகத்துக்கு முன்னோடியாக அமையும் எனத் தீர்க்க தரிசனமாகக் கூறினார். அவர் எதிர்பார்த்தவாறே 14 ஆண்டுகளின் பின் 1974இலே யாழ்ப்பாண வளாகம் நிறுவப்பட்டது. திரு. நடேசன் அமரராகிவிட்ட போதிலும் அவருடைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கனவு நனவாகியமை நன்கு குறிப்பிடற்பாலது. சமகாலக் கல்வி அமைச்சின் செயலாளரான திரு. ஆர் பாஸ்கரலிங்கம், வளாகத் தலைவர் பேராசிரியர் கைலாசபதி, மனிதப் பண்பியல் பீடாதிபதி பேராசிரியராக இந்திரபாலா ஆகியோரின் நன்முயற்சியால் இராமநாதன் இசைக் கல்லூரி, இராமநாதன் நுண்கலைக்கழகம் எனும் பெயருடன் 1975இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒன்றிணைந்த பகுதியாயிற்று. இராமநாதன் இசைக் கல்லூரி நிறுவராக மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்) முன்னோடியாக திரு நடேசன் திகழ்ந்தமை நன்கு நினைவு கூரற்பாலனது. முன்னர் திரு. நடேசன் அவர்களுடைய வேண்டுகோளின்படி நிறுவப்படவிருந்த பல்கலைக்கழக அமைப்பையே பெரும்பாலும் 1974இல் யாழ்ப்பாண வளாகமாக அவர் கருதியதாலே, பரமேஸ்வராக் கல்லூரியை மையமாகக் கொண்டு நிறுவப்பட்டமை குறிப்பிடற்பாலானது.

திரு. நடேசன் அவர்களின் பிறபங்களிப்புகளும் நன்கு குறிப்பிடத்தக்கவை. அவர் 1923இல் இங்கு வந்த காலம், அமரராகும் வரை (1965) செய்த மிகச் சிறப்பான பிற பணிகளும் நினைவுகூரற்பாலன. இக்கால கட்டத்திலே குறிப்பாக 1920 - 1948 வரை இந்தியாவிலும், இலங்கையிலும் சுதந்திரப் போராட்டங்கள் வலுவாக நடைபெற்றன. இதனால் மக்களின் பாரம்பரிய சமய, மொழி, பண்பாட்டுக்கூறுகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. இதன் விளைவாகப் பல சங்கங்கள் தோன்றின. யாழ்ப்பாணத்தில் தோன்றிய கலாநிலையம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம், வட இலங்கைச் சங்கீத சபை, வட இலங்கை சமஸ்கிருதக் கழகம், யாழ்ப்பாண வரலாற்றுக் கழகம் முதலியன குறிப்பிடத் தக்கன. இவற்றில் இவர் ஒரு முக்கிய பிரமுகராக விளங்கினார். இவற்றுள்ளே கலைப்புலவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம், திருமதி ம. நவரத்தினம் ஆகியோருடன் சேர்ந்து கலா நிலையத்திலே அவர் பல்லாண்டுகாலம் கலைத் தொண்டுகள் செய்தார். இலங்கை அறிஞர், கலைஞர் மட்டுமன்றிப் பிரபல இந்தியக் கலைஞர், அறிஞர்களும் இந்நிலையத்திலே மிகப் பயனுள்ள பங்களிப்புகள் செய்தனர். இவர் வட இலங்கைச் சங்கீத சபைக்கும் பங்களிப்புகள் செய்தார். இலங்கையில் தமிழர் மத்தியில் தொன்று தொட்டு நிலவி வந்துள்ள இசைப் பாரம்பரியம் பற்றி மேற்குறிப்பிடப்பட்ட சபையின் கூட்டங்களிலே வலியுறுத்தி அதை வளர்ப்பதற்கு ஒரு நிறுவனம் அவசியம் எனவும் கூறியுள்ளார். அரசாங்கம் இவரின் இசை நிறுவனம் பற்றிய கோரிக்கையை அரசாங்க சபைக் காலத்தில் ஏற்கவில்லை. எனவே 1960இல் மேற்குறிப்பிடப்பட்ட இசைக் கல்லூரியை தனது செலவிலே தொடங்கினார். ஆரிய திராவிட விருத்திச் பாஷா சங்கம் மூலம் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலும் நன்கு பயிலப்பட்டவராகவும் செயலாற்றினார். இதனைப் போலவே யாழ்ப்பாண வரலாற்றுச் சங்கம் தொடங்குவதற்கும், செயற்படுவதற்கும் உறுதுணையாகவும் அதன் தலைவராக விளங்கினார். கொழும்பிலுள்ள விவேகானந்தா சபையின் தலைவராகவும் பல ஆண்டுகளாக நற்பணிகள் செய்துள்ளார். இவ்வாறு பல நிறுவனங்கள் ஊடாகவும் சமய, சமூக பண்பாட்டுப் பணிகள் செய்துவந்துள்ளார்.

தமிழிலும், சைவசித்தாந்தத்திலும் இந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள அறிஞர்களாலும் பெரியோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவராகவும் இவர் விளங்கினார். தமிழகத்திலே மதுரைத் தமிழ்ச் சங்கத்தினதும் சென்னை சைவசித்தாந்த சமாசத்தினதும் பொன் விழாக்களிலே தலைமை வகித்து சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாவிற்கு மாணிக்கவாசகரின் காலம் பற்றி இவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையும், அதே பல்கலைக்கழகத்தில் திருக்குறள் பற்றி இவர் ஆற்றியுள்ள சொர்ணாம்பாள் மானிய விரிவுரைகளும் பிறவும் இவரின் ஆராய்ச்சித் திறனுக்கு உரைகற்களாக விளங்குகின்றன.

தாயகத்திலும் புகுந்த இடத்திலும் இவர் தமிழ், சைவசித்தாந்தம், வரலாறு, கலைகள் முதலியவற்றில் பல விரிவுரைகளும், சொற்பொழிவுகளும் நிகழ்த்தியுள்ளார். இவற்றுள் 1951ஆம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவிற்கு, வரவேற்புச் சபைத் தலைவராயிருந்து, விழாவை சிறப்புற நடாத்துவதற்கு இவர் பேருதவி புரிந்தார். இவ்விழாவிலே இலங்கையிலிருந்தும் பல அறிஞர்களும், பிறரும் பங்குபற்றினர். இவ்விழாவின் சிறப்புகளை கல்கி அவர்கள் தெய்வதரிசனம் எனும் நூலில் விரிவாகக் கூறியுள்ளார். திரு. நடேசபிள்ளையின் வரவேற்புரை பற்றி, ''செந்தமிழ்ச் சொற்களைக் கொண்டு இலக்கண வழுவில்லாத வாக்கியங்களை அமைத்து அவர் ஆற்றியுள்ள வரவேற்புரை அழகிய நல்முத்துக் கொண்டு யாத்துத் தமிழ் அன்னைக்குச் சூட்டிய ஆரமாக மிளிர்ந்தது.'' எனக் கூறியிருப்பது நன்கு கவனிக்கற்பாலது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவர் ஒரு ஆக்கக் கவிஞர் ஆவர். 1930ஆம் ஆண்டு இவர் இயற்றிய இராமநாதன் கல்லூரிப் பாட்டு குறிப்பிடற்பாலது. இலட்சியங்கள், மாணவர்களின் சிறப்பு, முதலியன இதில் நன்கு புலப்படுகின்றன.

*'பொன் இலங்கைத் திருநுதலாய் பொலிவது யாழ்ப்பாணம்'*

*'பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம் பாடி*
*விண்களிக்கச் செயும் கீர்த்தி விர குடைத்திக் கல்லூரி'*

*ஈழத்தைக் காத்திவ்விரு நிலத்தைத் தன் புகழாற் சூழ்ராமநாதன் கல்லூரி - வாழியவே*
*தாவிலு மித்தண்ணளி மாவலி கங்கை மணலினும் மிகவே'*

எனவரும் பகுதிகள் கல்லூரியின் சிறப்புக்களை மண்வாசனையுடன் புலப்படுத்தப்படுகின்றன. இதுபோன்ற தனிப்பாடல்களை விடச் சகுந்தலை வெண்பா பல சிறப்புக்களும் பொருந்தியதாகும். வட மொழியிலே சிறந்த புலவரும், நாடகாசிரியருமான காளிதாசர் எழுதியுள்ள மிகச் சிறந்த அபிஜ்ஞான சகுந்தலை நாடகத்தை எளிமையான தமிழ் வடிவிலே வெண்பா யாப்பிலே காப்பியமாக எழுதியுள்ளார். இது பொதுவாக ஒரு மூல நூல் போலவே விளங்குகின்றது. இந்நூலிலே நூலாசிரியர் தமது மாமனாராகிய சேர். பொன். இராமநாதனை ''திரையோ தஞ்சூழ்ந்தொலிக்குந் தென்னிலங்கை காக்கும் துரை ராமநாதன் கீர்த்தி - பரவும் புலமல்லாம் சென்றதே பூமடந்தை போற்றும் குல மன்னன் தண்ணளிச் செங்கோல்'' எனப் புகழ்ந்துள்ளார். இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அதன் துணைவேந்தர் சேர். சி. பி. இராமசுவாமி ஐயர் தலைமையில் வெளியிடப்பட்டது. 'தமிழ்க் கவிதையில் காணப்படும் மிகச் சிறந்த அம்சங்களும், சமஸ்கிருத கவிதையிலும் புலப்படும் சொல் நயம். தவனியும் குறிப்பாக புலப்படுத்தலும் இதில் நன்கு இணைந்து விளங்குகின்றன  என அவர் தனது தலைமையுரையில் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

தமிழகத்தில் வெளிவந்துள்ள பல களஞ்சியக் குழுவில் ஓர் உறுப்பினராகவும் எழுத்தாளராகவும் திரு. நடேசபிள்ளை செயற்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் முன்னர் வெளிவந்த ஞாயிறு எனும் சஞ்சிகையில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். வேறு சில சஞ்சிகைகள் பிரசுரங்களிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இராமநாதன் கல்லூரி வளாகத்திலே சேர். பொன். இராமநாதன் அமைத்து வாழ்ந்து வந்த அதே இல்லத்தில் மருகராகிய இவரும் வாழ்ந்து குறிப்பாக தமிழ் இலக்கியம், சைவ சித்தாந்தம், நுண்கலைகள் பற்றிய கலந்துரையாடல்களையும், சொற்பொழிவுகளையும் இலங்கை, இந்தியா அறிஞர்கள் ஒருசாராரோடு சேர்ந்து நடத்தியுள்ளார். இதில் ஈடுபாடுள்ள பலர் அங்கு சென்று நன்கு பயன் அடைந்தனர். இவர் சிறப்பாக தமிழ் இலக்கியம், சைவசித்தாந்தம் முதலிய துறைகளிலே மிகப் புலமைவாய்ந்தவர். இலங்கைப் பல்கலைக்கழகத்திலே முதலாவது தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய சுவாமி விபுலாநந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாகிய பின் அவருடைய வாரிசாக இவரை நியமிக்க ஒருசாரார் விரும்பியதாகவும், ஆனால் அம்முயற்சி வெற்றி அளிக்கவில்லை எனவும் அறியப்படுகின்றது.

இவர் பரமேஸ்வராக் கல்லூரியிலே ஆசிரியராகவும், சிறப்பான அதிபராகவும் பல்லாண்டுகள் நற்பணிகள் செய்துள்ளார். இக்கல்லூரியினதும், இராமநாதன் கல்லூரியினதும் முகாமையாளராகப் பல்லாண்டுகளாக விளங்கி, அந்நிறுவனங்களின் மேம்பாட்டுக்காகச் செயற்பட்டார். வடமாகாண அதிபர்களின் சங்கத்தலைவராகவும் திகழ்ந்தார்.

இவர் கல்விக்கே கூடுதலான பெரும் பணிகள் செய்துள்ளார் என ஒரு சாரார் கருதினாலும், அரசியல், குறிப்பாக தமிழ், சைவசித்தாந்தம், வரலாறு, நுண்கலைகள் முதலியவற்றிக்கு இவர் ஆற்றியுள்ள பணிகளைக் குறைத்து மதிப்பிட முடியாது.

தனிப்பட்ட வகையில் இவர் அனைவருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கு கொண்டவர். எப்பொழுதும் தூய வெண்ணிற ஆடையும், தலைப்பாகையும் தரித்து ஓர் உதாரண தமிழ்ப் பெருமகனாக விளங்கினார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த பேச்சாளர். இவர் அரசாங்க சபையிலும், பாராளுமன்றம், மேல் சபையிலும் ஆற்றிய பேச்சுக்களை சமகாலச் சிங்களம், தமிழ் அரசியல்வாதிகளும், அறிஞர்களும் பாராட்டியுள்ளனர். எவ்வகையான அசைவுமின்றி தமிழிலும், ஆங்கிலத்திலும் தெளிவான நீரோட்டம் போல இவரின் பேச்சுக்கள், சொற்பொழிவுகள் அமைந்து காணப்படும் இவ்விரு மொழிகளிலும் மிகவும் செம்மையான எழுத்தாற்றலும் இவரிடம் நன்கு காணப்பட்டது.

இவ்வாறு பல துறைகளிலும் தனித் சிறப்பான தகைமை வாய்ந்து விளங்கிய இவர் சேர். பொன். இராமநாதனின் வாரிசாக மூன்று தசாப்பதங்களுக்கு மேலாக நன்கு போற்றத்தக்க பயனுள்ள சேவைகள் புரிந்துள்ளார்.

*''தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலர்*
*தோன்றிலிற் தோன்றாமை நன்று''*

எனும் திருவள்ளுவர் திருவாக்கிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இவர் இலங்கினார். இவருடைய பல்வேறு சேவைகளைப் பாராட்டிப் பல நிறுவனங்கள் இவரைக் கௌரவித்தன. இவற்றிலே தமிழகத்திலுள்ள திருவாவடுதுறை ஆதீனம் முதலியன குறிப்பிடப்பாலன. எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கைப் பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கி இவரை நன்கு கௌரவித்தது.

இவருடைய இல்லற வாழ்வும் சிறப்பாக விளங்கிற்று. சேர். பொன். இராமநாதன் அவர்களின் தவப்புதல்வி சிவகாம சுந்தரியைத் திருமணம் செய்தார். தம்முடைய அருமை மனைவியார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இசை கற்க வாய்ப்புகள் செய்தார். அப் பல்கலைக்கழகத்தில் இசைப்பட்டங்கள் பெற்ற முதலாவது இலங்கையர் இவரே. பொதுவாகத் தாம் செல்லும் இடங்கள் தோறும் பாரியாரையும் கூட்டிக் கொண்டு செல்வார். இறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக அவர் நோய்வாய்ப்பட்ட போது அவர் அருகிருந்து இறுதிவரை அவரை நன்கு கவனித்துவந்தார். அவர் அமரராகி நான்கு மாதங்களில் இவரும் அவருடன் அமரரானார்.

இவருடைய சைவசமயப் பற்றும் அனுஷ்டானங்களும் நன்கு குறிப்பிடத்தக்கவை. ஏற்கனவே குறிப்பிட்டவாறு தமிழகத்தைச் சேர்ந்த பிரபல தமிழ், சைவக் குடும்பத்திலே பிறந்த இவருக்கு இயல்பாகவே தமிழிலும், சைவசமயம், சைவசித்தாந்தம் ஆகியவற்றிலே மிகுந்த புலமையும், பற்றும் கொண்டிருந்தார். மேலும் அவர் திருமணம் செய்த குடும்பமும் இவற்றிலே மிகுந்த பற்றுள்ளவர்கள். நாடோறும் காலையிலே துயிலெழுந்து பின்னர் நீராடி சிவபூசை செய்த பின்னரே அன்றாடச் செயற்பாடுகளை இறுதிவரை கவனித்து வந்தார்.

இவ்வாறு திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் பலவழிகளில் நினைவுகூரத்தக்க பெரியாராகத் திகழ்கிறார். கண்ணும், கருத்துமாக அவர் போதித்து வளர்த்த இராமநாதன் கல்லூரியும், அவர் நிறுவிய இராமநாதன் நுண்கலைக்கழகமும், இவருடைய முன்னோடிச் செயற்பாடுகளைத் தொடர்ந்து நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும் இவரை நினைவு கூருதல் சாலவும் நன்று.


**பேராசிரியர் வி. சிவசாமி**

*(இக்கட்டுரை 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு மலரில் இருந்து பெறப்பட்டு, இங்கு மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Principal Mr. Sivapathasundram



Late Mr. Sivapathasundram was born on 1st May 1916 at Alaveddy in the Jaffna Peninsula. He started life in an agricultural home. He had his early education at Arunodaya College, Alaveddy till he was 9 years old. His elder brother took him to Malaysia where he continued his Primary Education at Maxwell English School in Malaysia. He was able to secure his Honours there and admitted to "VICTORIA INSTITUTE", which is equivalent to "Royal College of London". From that school he passed the University of Cambridge Local Examination in Malaysia with Honours in all the individual subjects. As he was not a citizen of Malaysia he could not get University admission in Malaysia. He came back to Sri Lanka in 1932 and entered the University College, Colombo where he graduated with Honours in English. He was a favourite student of Prof. Ludowyke for criticism in English Literature. He won a five years Scholarship to Cambridge University, London and was awarded M. A. English (Tripos) in 1939. He also studied International Law and sat for the Ceylon Civil Service Examination.

Due to the commencement of World War II, he was forced to return to Sri Lanka without completing his Scholarship and getting further qualifications. In 1942, he joined the staff at Parameshvara College. At Parameshvara College ( he was handpicked by Late S. S. Natesapillai, who incidentally was the son in law of Sir P. Ramanathan, the FOUNDER of J/Parameshvara College), he devoted much of his time and energy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to fulfil Sir Pon Ramanathan's vision of bringing up a student population with a religious and cultural background. He encouraged food production as his agricultural upbringing made him very enthusiastic. He cultivated "KAMBU" and with harvested grains, vegetable "KANJI" or porridge was prepared and served as mid-day meals.

He left Parameshvara College and joined the staff of Skanthavarothaya College, Chunnakam. He left teaching and accepted the post of School Inspector. He had a fancy for jingling double bullock cart . He used it for official travelling in those days. Routine duties did not please him. His scholastic attainment did not allow him to enjoy new duties. He re-joined Parameshvara College as Vice Principal in 1945 as he had an urge to fulfil Sir Pon Ramanathan's ideals, who was his role model. Free Education was implemented in 1945. New students were admitted , new classes were started and new teachers were recruited. He admitted students of depressed class whose admission was rejected in other Hindu Schools. While all other schools had admission tests to admit children, to their schools, he did not want to deprive the children from Education. That year he started shramadana work in school and the second playground was started. Trees were cut, lime stone rocks were removed and ground was levelled. In May 1946, he organized another Shramadana in preparation for the Silver Jubilee of the founding of Parameshvara College in August 1946. In that year Parameshvara College first eleven soccer team became champions in the tournament organized by Jaffna Schools Sports Association (JSSA) by defeating Jaffna Hindu College, who were the Champions for the previous TEN years. He promoted sports because he believed that " healthy mind in healthy body".

He organized Hindu festivals like "Gurupoosai" of Hindu Saints, Sivarathiri, Navarathiri etc. Students attended prayers in Parameswaran Sivan Temple built in the premises of the College every morning before normal classes were started. He arranged religious lectures for the students to guide them in their Spiritual path to make them better Citizens. He guided students in their studies. As by knowing the home condition of the students, he guided them to middle level jobs and higher education. He was a good Guru and disciplinarian.

He was fully devoted to Parameshvara College. Frontage of College was white washed by Shramadana work. He was a good administrator and believed in "administration



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

is an art and science of achieving the objectives in the most efficient way possible". He identified talents in students and teachers and encouraged the development of those talents. He developed self-realization, initiative and leadership of students. He groomed students to become good citizens. He told an interview at the Ministry of Education, that his main duty was to make good men out of his students. He believed in the sayings "Do not fear when you are on the right path" and "do not lend or borrow" . He helped deserving people.

He encouraged talents of musicians by organizing "ISAI VILLA" during Navarathriri Festival, staged drama with students and teachers. Organized bicycle tours to Anuradhapura and Kathirgamamam.

He was a very strict disciplinarian and stuck to principles. This can be mention as an example, When the Sri Lankan Education Ministry celebrated its Centenary, "SIYAVASA" , the Minister of Education at that time, Hon. I.M.R.A.Iriayagolla, wanted ALL schools in the Island to sell sweep tickets to the students and teachers. But our Principal Late Mr. Sivapathasundram refused to sell these tickets and returned all the tickets to Director of Education, Northern Province, who was alarmed and pleaded with him to re-think his decision as he thought the Education Authorities might take some disciplinary action against those who couldn't carry out Hon. Minister's instructions. But our Principal stuck to his principle of not allowing the students to gamble and everything went very well and no disciplinary action was taken against him.

It should also be mentioned that he took a very BOLD step in admitting students who were under privileged and who were in the vicinity of Parameshvara College despite strong opposition from other parents. His argument was that if they can be taught discipline, the very high crime rate found in that locality can be fully eradicated. That was a very commendable step.

When he was promoted to the Supra Grade Principal in 1968, he was transferred to Videeswara Vidyalayam where he was the Principal until he retired in the year 1972.

He was also devoted very much to Sivayoga Swamigal of Kolumbuthurai from whom he got the Blessings for carrying out the duties as the Principal without fear or favour. After his retirement he was appointed as an advisor to the Jaffna Public Library. At the Jaffna Public Library he pioneered some revolutionary changes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Later on he was appointed to the SENATE of the University of Jaffna, the position he served for 12 consecutive years with due respect for the position. The University of Jaffna conferred ' HONORARY DOCTORATE" title to him posthumously in 2005.

He was deeply attracted by the policies of Sir P. Ramanathan. Later on, his aim was to fulfil the dreams of Sir Pon Ramanathan ,by working hard , without paying much attention to what others said in establishing the Jaffna University..

He passed away peacefully, after a brief illness , on 15th September 2002 .

*Compiled from articles written by Old students and Staff members of Parameshvara College after his demise.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுத்தறிவாளனாக வாழ்ந்த
# அதிபர் சிவபாதசுந்தரம்

*'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.'*

என்ற பொய்யாமொழியின் கருத்துப்படி வாழ்ந்த அறிவுச்சுடர், பகுத்தறிவாளன், பண்பின் சிகரமாக வாழ்ந்து இறையெய்திய அமரர் சின்னத்தம்பர் சிவபாதசுந்தரம் அவர்கள்.

1916-05-01ஆம் திகதி அழகு தமிழும் அமுத இசையும் மிளிரும் அளவெட்டியில் பிறந்தார். அவர் சிறு வயதிலேயே கல்வியில் திறமைசாலியாகத் திகழ்ந்தார். அதன் பயனாக ஆங்கிலத்தில் முதிர்ச்சி பெற்று முதுமாணிப் (MA) பட்டம்பெற முதன் முதலாக புலமைப்பரிசில் பெற்று சீமைக்குச் சென்று கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் வெகு சிறப்பாகப் படித்து முதன்மையாக முதுமாணிப் பட்டம் பெற்று ஈழத் தமிழகத்திற்கு பெருமை தேடித்தந்தார். வல்லான் வகுத்த வாய்க்காலாக தன் வாழ்வில் படிப்பிற்கும் தொழிலை ஆரம்பிக்க எண்ணி ஆசிரியத்தொழிலைத் தொடங்கினார். ஆங்கிலம் போலவே தமிழிலும் பாண்டித்தியம் பெற்றார் என்பதும் உண்மை.

தீரமும் திடமும் அழகும் ஆளுமையும் கொண்ட அமரர் சிவபாதசுந்தரத்திற்கு பலர் பெண்கொடுக்க முயன்ற பொழுதும் செல்வி செல்வரத்தினம் அம்மா பதியாக அமைந்தார். அவரின் அனுசரணையும் அன்னாருக்கு சகல வித செயற்பாடுகளுக்கும் மெருகூட்டியது.

அமரர் சிவபாதசுந்தரத்தின் அறிவு, ஆளுமை அனைத்தையும் அறிந்த அமரர் சேர் பொன். இராமநாதனின் மருமகன் அமரர் சு.நடேசபிள்ளை (முன்னாள் தபால், தந்தி, தகவல் அமைச்சர்) அவர்கள் யாழ். பரமேஸ்வராவுக்கு அதிபராக்கினார். நீதியும், நேர் மையும் கடவுள் பக்தியும் கொண்டு திகழ்வதற்கு இக்கல்லூரி வழிகாட்டியாக அமைந்தது. கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து சமூக, சமய, கல்வி, விளையாட் டுகளின் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்ட மேதை. கல்லூரியில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் தினமும், பூசை விழாக்களை சிறப்பாக நடத்தி வந்தார். தினமும் மாணவர்கள் காலை வழிபட்டு வந்துதான் கல்வியை கற்கத் தொடங்குவார்கள். எல்லா விழாக்களுடன் நவராத்திரி விழாவை 9 நாள்களும் இசைவிழாவுடன் சிறப்பாக நடத்தினார் என்றால் அது உண்மையே.

அவர் தன்னுடைய இளமைப் பருவத்தில் மாட்டுச்சவாரியில் பெரும் ஈடுபாடு கொண்டார் என்பதையும் அறிந்தேன். அவர் தன் வாழ்வை வண்ணார் பண்ணை - நாச்சிமார்கோவில், தலையாழி ஒழுங்கையில் மனை அமைத்து வாழ்ந்தார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமையான வாழ்வு வாழ்ந்தார். அவரது நண்பர்களான அதிபர்கள் கந்தசாமி, முத்துவேற் பிள்ளை ஆகியோருடன் கலந்தாலோசித்து கடமைகளைச் செய்தார் என்பதும் உண்மை .

*'உள்ளத்தில் உள்ளதும் தீதே பிறன்பொருளைக்*
*கள்ளத்தால் கள்வோம் எனல்'*

என்ற வேதவாக்கை கடைப்பிடித்தார்.

அமரர் யோகர் சுவாமியின் சிஷ்யன். அவரை தரிசிக்காமல் இருக்கமாட்டார். அன்றியும் சுவாமியின் ஆணைப்படி தினமும் காலை நான்கு மணிக்கு நல்லைக் கந்தன் தேரடியில் வந்து நின்று கற்பூர தரிசனத்தைக் கண்டு செல்வது வழக்கம். அவர் ஒரு தேசியவாதி. தமிழர்களின் நிலையறிந்து அவர்களின் வாழ்வு பரிமளிக்க வேண்டும் என்று எண்ணி, அரசாங்கம் பாடசாலைகளை எடுக்கமுன் அரசியலில் ஈடுபட்டார். ஈற்றில் அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் தலைவர் அமரர் நியாயவாதி ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் வலது கரமாக திகழ்ந்தார். அன்று தொட்டு வேட்டி அணியத் தொடங்கினார். கொழும்பில் மகனுடன் இருந்த காலத்திலும் எங்கு போனாலும் வேட்டி சட்டையுடன் போவார். அன்னாரின் பிள்ளைகள் எல்லோரும் உயர் பதவிகளில் இருக்கின்றனர்.

அமரர் ஓர் கர்மவீரன்; அஞ்சா நெஞ்சம் கொண்டவர். எதற்கும் அஞ்சுவது கிடையாது. எதிர் நீச்சல் அடித்து வந்தபடியால் மாணவர்களால் அன்பாக 'சாக்கர்' என்று அழைக்கப் பட்டார். அவரின் நெஞ்சம் நேர்மையானது! உறுதியான தியாகமானது. திடகாத்திரமான பல நிகழ்வுகளுக்கும் முகம் கொடுத்துள்ளார் என்பதை நான் அறிவேன். அவரிடம் பொய்பேசியவர்கள் தப்பியது கிடையாது. வாய்மையின் இலக்கணமாகத் திகழ்ந்தார்.

அமரர் நடந்து வந்த பாதையை திருமபிப் பார்ப்போமானால் அங்கு அவர் நேர்மையை காணமுடிகின்றது. ஆலம் விழுது போல் பலரை உருவாக்கிய அண்ணல், 15-09-2002இல் பரமேஸ்வரன் கழல் சேர்ந்தார். ஆண்டு ஒன்றுகழிந்தது. அவரின் ஆத்மாவிற்கு சாந்தி.

*''தாமின் புறுவது உலகின்புறக் கண்டு*
*காமுறுவர் கற்றறிந்தார்''*

என்று உணரமுடியும்.

**செ.சண்முகலிங்கம்**
யாழ்.பரமேஸ்வரக் கல்லூரி
ஓய்வுபெற்ற லிகிதர்

*(இது அதிபர் சிவபாதசுந்தரம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுக் கட்டுரை பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். ஞானப்பிரகாச மாஸ்டர்



அமரர் எம். ஞானப்பிரகாச மாஸ்டர், பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றார். பமேஸ்வராக் கல்லூரியில் அவர் ஓர் விஞ்ஞான ஆசிரியராக மட்டுமல்லாமல் சமய நெறியினை ஒழுங்காகப் பேணுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்ததை சகலரும் அறிந்திருந்தனர். அந்நாளில் திருகேதீஸ்வரம் கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் எமது கல்லூரி ஆசிரிய மாணவர்களுடன் ஓர் பாத யாத்திரை மேற்கொள்வது வழமை.

பரமேஸ்வராக் கல்லூரி யாழ் பல்கலைக்கழகமாக மாற்றம் அடைந்த 1974ஆம் ஆண்டு இவர் பரமேஸ்வராக் கல்லூரி அதிபராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் பரமேஸ்வரன் ஆலயம் விடயமாக இவர் பல உறுதியான தீர்மானங்களை எடுத்தது சகலரையும் வியப்பில் ஆழ்த்தியது. இதற்காக நாம் என்றென்றும் அவருக்கு நன்றியுடயவராக இருப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

அன்னாரின் மறைவிற்குப் பின்னர் அவர் குறித்து வெளியிடப்பட்ட இரங்கல் செய்திகளின் தொகுப்பு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன, **(ச.சிவலோகநாதன்)**

**ஒரு மாணவரின் கூற்றும் பார்வையும்**

தேவஸ்தான கொடியேற்றக் கிரியைகளை நிறைவேற்றிவிட்டு நிற்கும் சமயம்' குருக்கள் ஐயா என்னை ஞாபகம் இருக்கோ' என்று வினவுகிறார் ஒரு பக்தர். வேட்டி அங்கவஸ்திரம் தரித்து உடலிலே திருநீறணிந்து மெலிந்த மேனியராய்க் காணப்படுகின்றார். அவரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தவுடன் ஞாபகம் வரவே 'ஓம் வாத்தியார் ஞாபகம் உள்ளது. சிறு பராயத்தில் மயிலிணி சைவ வித்தியாலயத்தில் படித்த காலத்தில் எனக்கு பாடஞ் சொல்லித் தந்துள்ளீர்கள் என்று கூறி, நீங்கள் பரமேஸ்வரா அதிபர் திரு. ஞானப்பிரகாசம் அல்லவோ என்றேன். சிரித்து விட்டு ஆசிரியர் தொழிலின் மகத்துவம் இதுதான் ஐயா. உங்களை 30 வருடங்களுக்கு மேலாக நான் காணவில்லை. இன்று பொன்னம்பலவாணேஸ்வரர் உங்களை மஹோற்சவ சிவாச்சாரியாக எனக்கு காட்டி அருள் தந்துள்ளார். எனக்குச் சிவ சகஸ்ரநாம புத்தகம் தேவை. அதன் பொருளை எழுதி நூலாக வெளியிட உத்தேசம் என்றார். நான் சிவ சகஸ்ரநாம நூலை அவரிடம் கொடுத்தேன். பின் ஒரு மாதத்தின் பின் பாடஞ் சொல்லித் தந்த அவர் சிவபதம் எய்தினார் என்ற செய்தி எனக்கு கிட்டியது.

***சி. குஞ்சிதபாதக் குருக்கள்***<br>
ஆலோசகர், கல்வி உயர் கல்வி அமைச்சு<br>
இந்து கலாச்சார திணைக்களம்.

# Tributes from Colleague and Peers

Mr. Gnanaprakasam was a clean being, pure and bright, like the glowing embers of the sacrificial fire. In founding Parameshvara College, Sir. P. Ramanathan thought that he was doing something new and in dire need. The aim was to enable students of Parameshvara College in all possible ways to know and to realise in their lives the best that has been thought, felt and said in Sanskrit, Tamil and English. Gnanaprakasam was student, teacher and principal for many years. If anyone came anywhere near realization of the Ramanathan ideal, it was Gnanaprakasam. It goes without saying that he was at all times a very good friend and colleague. It is my good fortune to have known him.

**S.Sivapathasundram**<br>
Former Principal of Parameshvara College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

While speaking about Mr. Gnanaprakasam it has to be mentioned that his knowledge of humanities and modern science was simply encyclopaedic . His twofold qualifications bear out this fact. His knowledge of Hinduism and Vedanta was so vast and deep that it is well-nigh impossible to find his equals in this respect. He was also a peer among the modern educationists of this country having contributed in his own way to the creation of the Jaffna University and the Ramanathan School of Aesthetic Studies. His philosophy of life could be summed up from what is in Sanskrit Stanza 'All the world is one family'.

**M. E. H. Jayasuriya**
Emeritus Professor of Sanskrit



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேசுவராக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசான் பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியாரின் தமிழ்ப்பணி



"பரமேசுவராக் கல்லூரி, இந்திய ஞானிகளின் ஞானத்தோடு தமிழ், வடமொழி இலக்கியச் செல்வங்களும் இணைந்து, பிரித்தானியரின் மிகச்சிறந்த கல்வி அம்சங்களையும், தமிழ்ச்சிறுவர்கள் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் நிறுவப்பட்டது."

என, 'பரமேசுவராக் கல்லூரியின் மாணவரின் இலட்சியங்கள்' என்ற சிறு ஆங்கில வெளியீட்டில் சேர். பொன். இராமநாதன் குறிப்பிட்டிருப்பது அவரின் கல்விக் கொள்கையைத் தெளிவுபடுத்துகிறது. மாணவர்கள் கீழைத் தேசக் கல்வியை மட்டுமன்றி மேலை நாட்டுக் கல்வியையும் பயிலவேண்டும் ஆன்மீக அறிவும் தமிழ்ப் பாரம்பரிய அறிவும் பெற்றவர்களாக வளர வேண்டும் என்ற நோக்கங்களுடன் இராமநாதன் கல்லூரியையும், பரமேசுவராக் கல்லூரியையும் சேர் பொன். இராமநாதன் நிறுவினார். தனது நோக்கங்களைச் செயற்படுத்துவதற்காகத் திறமை வாய்ந்த மேலை நாட்டு ஆங்கில அறிஞர்களையும், இந்திய அறிஞர்களையும், இலங்கை அறிஞர்களையும் அதிபர்களாக, ஆசிரியர்களாக நியமித்தார். இந்த வகையில் இராமநாதன் கல்லூரியிலே தலைமைத் தமிழ்ப் பண்டிதராகக் கடமையாற்றத் தமிழ்நாட்டிலிருந்து அழைக்கப்பட்டவரே **நவநீத கிருஷ்ண பாரதியார்.** இவர் தமிழ்நாட்டில் கிருஷ்ணபுரத்தைச் (கண்ணபுரம்) சேர்ந்த கரவட்டங்குடி என்னும் ஊரில் புலவர் பரம்பரையில் 01-03-1889இல் பிறந்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கல்விமான்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் வடமொழியையும் கற்றுத் தேர்ந்து இளமையிலேயே கவித்துவ ஆற்றலும், பேச்சுவன்மையும் மிக்கவராக விளங்கினார். பாலக்காடு விக்ரோறியாக் கல்லூரியிலே தமிழ்ப் பண்டிதராக மூன்று ஆண்டுகள் பணியாற்றி அதன் பின்னர் திருவாவடுதுறை ஆதீனத்தில் ஆராய்ச்சித் துணைவராகத் திருமுறை ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இக்காலகட்டத்திலேயே இவரின் தமிழ்ப் புலமையை அறிந்த சேர் பொன். இராமநாதன் இவரை ஈழநாட்டுக்கு அழைத்தார். 1917ஆம் ஆண்டு சேர் பொன். இராமநாதனின் வேண்டுகோளை ஏற்று ஈழ நாட்டுக்கு வந்து ஆசிரியப்பணியைத் தொடங்கிய இவர் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்திலே தங்கி ஈழத்தவராகவே தன்னை நிலைப்படுத்திக் கொண்டார். இவரது பெயர், எனது சிறுவயதில் - பத்து வயதுக்கு முன்பே - என் மனதில் பரமேசுவராக் கல்லூரியுடன் தொடர்புடையதாகப் பதிந்த பெயர். சிறு வயதில் என் மனதில் ஆழமாகப் பதிந்த நினைவே பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலரில் நவநீத கிருஷ்ண பாரதியாரின் தமிழ்ப்பணியைப் பதிவு செய்ய வேண்டும் என்ற விருப்பினைத் தந்தது. எனக்குக் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் அமையும் இக்கட்டுரை ஆய்வுக்கட்டுரையன்று. ஆய்வுக்கு வழிவகுக்க வேண்டும் என்பது எனது விருப்பம்.

நவநீத கிருஷ்ண பாரதியாரின் தமிழ்ப்பணிகளுக்கு அடிப்படையாக அமைந்தது இவரது ஆசிரியப்பணியே. 29ஆவது வயதில் ஈழத்துக்கு வந்து 27-12-1954 வரை 37 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த இவர், ஆசிரியராகக் கடமையாற்றிய ஆண்டுகள் 34. இராமநாதன் கல்லூரியில் ஐந்து ஆண்டுகளும் (1918-1922) பின்னர், பரமேசுவராக் கல்லூரியில் ஏறத்தாழ 29 ஆண்டுகளும் (1951வரை), தமிழ்ப் பேராசானாகப் பணியாற்றியமையை அறிய முடிகின்றது. பிரித்தானியர் ஆட்சி நிலவிய காலத்தில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தினால், தமிழ்க் கல்வியின் அவசியமும், தமிழ்க் கல்வியில் மாணவர்களின் பெற்றோர்களின் ஆர்வமும் குறையத் தொடங்கிய நிலையில், சிறுவர்களுக்குத் தமிழ் அறிவை ஊட்ட வேண்டும் என்ற உணர்வுடன் தமது வாழ்வின் பெரும் பகுதியைச் செலவிட்டார். தான் கற்பித்த இரு கல்லூரிகளிலும் சிறுவர்களுக்குத் தமிழ் மொழியின்பால் ஈடுபாட்டை உருவாக்க முயன்றார். எனினும், அக்காலத்திலே தமிழைக் கற்பித்தலில் எதிர் நோக்கிய பிரச்சனைகள் இவர் மனதை மிகவும் பாதித்திருக்கவேண்டும். 1935ஆம் ஆண்டு 'ஈழகேசரி' ஆண்டு மலரில் 'ஆங்கிலக் கல்லூரியும் செந்தமிழ்க் கல்வியும்' என்ற தலைப்பில் இவர் (வெண்ணெய்க் கண்ணனார் என்ற பெயரில்) எழுதிய கட்டுரையிலே தமது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தியுள்ளார்.

> ''இலங்கையிலே தமிழ் மாணவர் பயின்றுவரும் ஆங்கிலக் கல்லூரிகளின் இயல்பு களைச் சற்றேறத்தாழப் பதினெட்டு வருடங்களாகப் பயின்றுவந்த பயிற்சி எனக்குப் பெரிதும் உண்டு. பொருள் அளவிலே ஒப்புமை இல்லாது போனாலும் படிப்பிக்கும் நேரத்தளவிலேனும் ஒப்புமை உதவலாகாதா? ஆங்கிலத்துக்கு அளிக்கும் நேரத்திலும் தமிழுக்கு அளித்துவரும் நேரம் காற்பங்கே தான். புள்ளியிலும் அப்பங்கே தான் அதன் தலையில் எழுதப்பட்டுள்ளது. இச்சிறு நேரத்துக்குள்ளே பரீட்சையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியதொரு புள்ளி பெறுவதற்காக இலக்கிய இலக்கணங்களை எல்லாம் அரைத்துக் கரைத்துக் 'குழம்பாக்கி' அல்லது 'மிளகு ரசமாக்கி' அல்லது 'சாம்பார்' ஆக்கி மாணவர் வாயிலே ஊற்றி விடவேண்டுமாம்''

''ஊசியினால் மருந்தேற்றிக் காக்கைவலி முதலிய கொடுவலிகளை நீக்கலாம்; தமிழ்க்கல்வியில் மாணவர்களின் பராமுகப் போக்கு வலிகளை எந்த மருத்துவராலும் ஊசியேற்றி மாற்றிவிட முடியாது. அம்மாணவர் தமிழ்ப்பாடத்தில் தேர்ச்சி பெறாது பெரியதோர் கோழிமுட்டை பெறினும் ஆங்கிலத்தில் அடுத்த வகுப்பிற்கு ஏற்றப் பட்டேவிடுவர். இதுவே இக்காலத்துக் கல்விக் கழகத்துக்குரிய விதியே போலும்! வகுப்பேற்றிய பின்னும் தமிழ்ப் பரீட்சை நடைபெறும். அங்ஙனம் நடத்துவதிலும் தமிழாசிரியரைத் தூக்கிலிட்டுக் கோறல் தனிப் பேரறமாக முடியுமல்லவா?''

என்பன அக்கட்டுரையில் வரும் சில பகுதிகள். இறுதியில்,

''உள்ளதை உள்ளவாறு உணர்ச்சி வாய்ப்பட்டு வெளிப்படுத்துவதே புலவர் இயற்கை நான் ஒருகால் தவற எண்ணினும் புலவர் இயல்பு என்னைத் தவறவிடாது நிலைப் படுத்துகின்றது. என் செய்வேன்!!''

என்று கட்டுரை முடிகின்றது.

1935ஆம் ஆண்டு தமிழ் மொழிக் கல்வியின் நிலையை எண்ணி ''என் செய்வேன்'' என ஏங்கி நின்ற இவருக்குத் தனது தமிழ் அறிவை ஆசிரியர்களுடன் பகிர்ந்து கற்பிக்கும் வாய்ப்பு அடுத்த ஆண்டில் ஏற்பட்டது. பரமேசுவராக் கல்லூரி அதிபராக இருந்த திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் பெருமுயற்சியால் 'பரமேசுவரா பண்டித ஆசிரிய பயிற்சிக்கலாசாலை' பரமேசுவராக் கல்லூரியின் ஒரு பகுதியாக 1936ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. பண்டித பரீட்சையிலும் ஆசிரிய தராதரப் பரீட்சையிலும் சித்தியடைய மூன்று ஆண்டுகள் கலாசாலையில் பயிற்சி பெறவேண்டும் என்பதுடன், பண்டித பரீட்சையில் சித்தி பெறாதவர்கள் ஆசிரிய பயிற்சிச் சான்றிதழைப் பெறமுடியாது என்பதும் கலாசாலை விதியாக இருந்தது. பரமேசுவராக் கல்லூரியில் பேராசனாக இருந்த நவநீத கிருஷ்ண பாரதியார், பண்டித ஆசிரிய கலாசாலையிலும் ஆசிரியர்களுக்குப் பண்டித பரீட்சைக்குப் பாடங்கள் எடுக்கத் தொடங்கினார். ஆண்டுதோறும் முப்பதுக்குக் குறையாத தொகையினர் பரமேசுவரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலிருந்து பண்டிதர்களாக வெளியேறினர் என வரலாற்று ஆய்வாளர் க. சி. குலரத்தினம் குறிப்பிட் டுள்ளார். இந்த வகையில் நூற்றுக்கணக்கான மரபுசார் பண்டிதர்களை உருவாக்கிய பெருமை நவநீத கிருஷ்ண பாரதியாரையே சாரும். 1941இல் வெளியேறிய பண்டிதர்கள் 'பரமேசுவரா பண்டிதர் கழகம்' என்ற ஒரு கழகத்தினை, தமிழ் ஆய்வில் ஈடுபடும் நோக்கில் நிறுவினர் (இந்துசாதனம் 24.04 1941) என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1941-1942இல் பரமேசுவரா பண்டித ஆசிரிய கலாசாலையிலிருந்து மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்களாக வெளியேறிய மாவைப் பண்டிதர் க. சச்சிதானந்தன், அளவெட்டிப் பண்டிதர் க. நாகலிங்கம் ஆகியோர் நவநீத கிருஷ்ண பாரதியாரிடம் தமிழ் இலக்கண,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களை முறையாகக் கற்று இவரையே தமது குருவாகப் போற்றியுள்ளனர். பண்டிதர் சச்சிதானந்தன் தனது மாவை முருகன் (1952) என்ற நூலுக்கான முகவுரையிலே பின்வருமாறு எழுதியுள்ளார்.

> ''புலவர்களையோ, பேராசிரியர்களையோ, மந்திரிகளையோ, பண்டிதர்களையோ சென்றடைந்து முன்னுரை தரும்படி நான் பின் திரியவில்லை. எனது தமிழாசிரியரும், சங்கப்புலவரில் ஒருவராய் வைத்தெண்ணக்கூடியவருமான பண்டிதமணி பிரமஸ்ரீ க.சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கட்கு ஒருமுறை வாசித்துக்காட்டினேன். 'குற்றமில்லை' என்றார். அது ஒரு உண்மையான நல்ல முன்னுரை அதுவே போதும்.''

பண்டித மாணவர்களினால் மட்டுமல்லாது பரமேசுவராக் கல்லூரி மாணவர்களுக்கும் மிகவும் விருப்பமானவராக, மாணவர்களை ஊக்குவிப்பவராக நவநீத கிருஷ்ண பாரதியார் விளங்கினார் என்பதற்கான குறிப்புகள் ஆங்காங்கு உள்ளன. 1950-1951இல் பரமேசுவராக் கல்லூரியில் படித்த பேராசிரியர் சுசீந்திரராஜா அவர்கள் தனது 'கல்விசார் தொடர்புகள், நினைவுகள், சிந்தனைகள்' என்ற நூலில் நவநீத கிருஷ்ண பாரதியார் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> ''அவர் தமக்குப் பழக்கமான உயர் வகுப்பு மாணவர்களைச் சந்திக்கும் போது அவர்களுடன் சிறிது நேரம் உரையாடிய பின்னர் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாக ஓரிரு திருக்குறளைக் கூறிவிட்டுச் செல்வது அவரது வழக்கம். யான் அவரிடம் வகுப்பில் கற்றதில்லை. கல்லூரியிலும் ஊரிலும் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கள் பல கிடைத்தன. அவரிடம் நல்லறிவு பெற்றேன். தமிழார்வம் ஏற்படுத்தியவர்களுள் அவரும் ஒருவர்.''

ஆசிரியப்பணியுடன் தமிழ்க்கல்வி - தமிழ்க்கலை சார்ந்த சங்கங்களுடன் இணைந்தும் நவநீத கிருஷ்ண பாரதியாரின் தமிழ்ப்பணி விரிவடைந்துள்ளது. 1921இல் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் **ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின்** பணிகள் யாவற்றிலும் முன் நின்று உழைத்ததுடன் சங்கத்தின் நிர்வாக அங்கத்தவராகவும், சங்கம் நடாத்திய பரீட்சை களுக்குப் பரீட்சகராகவும் பணியாற்றியுள்ளார். இவரது பணிகளையும் புலமையையும் போற்றி, 1952இல் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 'புலவர்மணி' என்னும் பட்டத்தை அளித்தது. 1931இல் தமிழ் மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக உருவாக்கப்பட்ட **'கலாநிலையம்'** என்ற அமைப்புடன் இணைந்து அவ்வமைப்பின் வெளியீடான 'ஞாயிறு' இதழின் ஆலோசகர் குழுவிலும் இருந்துள்ளார். ஈழத்தில் தமிழ் வளர்ச்சிக்கு உதவும் வகை யிலும் புலவர்களைப் பாராட்டும் நோக்கிலும் **'ஈழநாட்டு தமிழ்ப் புலவர் மன்றம்'** என்ற அமைப்பினைத் தொடங்கிய சிறப்புக்கும் உரியவர் இவரே. இம் மன்றம் இவருக்குப் 'பண்டிதமணி' என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டியது. 1944ஆம் ஆண்டு இம்மன்றத் தின் ஆண்டுவிழா யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்திலே இரண்டு நாட்கள் நடைபெற்ற செய்தி இந்துசாதனத்தில் (21.12.1944) பதிவாகியுள்ளது. இத்தகைய செயற்பாடுகளுக்கு வழிவகுத்த பெருமை நவநீத கிருஷ்ண பாரதியாருக்கே உரியது. மறைமலை அடிகளாரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தமிழ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட பண்டிதர் சோ. இளமுருகனார் ஈழத்தில் **'தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்'** என்ற பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கிச் செயற்பட்டபொழுது அவ்வமைப்புக்குக் காவலராக இருந்து ஊக்கம் கொடுத்தவராகவும் நவநீத கிருஷ்ண பாரதியார் போற்றப்பட்டுளார்.

இவ்விதம் தமிழ் மொழியைக் கற்பித்தும், தமிழ் மொழி வளர்ச்சிக்குச் சங்கங்களுடன் இணைந்து உழைத்தும் தமிழ்ப்பணியாற்றிய இவர் தனது எழுத்துக்களால் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கும் பங்களிப்புகள் செய்துள்ளார். அதனால், 20ஆம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய வரலாற்றில், புகழ் பெற்ற புலவர்களில் ஒருவராகப் போற்றப்பட்டதுடன் இலக்கண நூலாசிரியர், உரையாசிரியர், கட்டுரையாசிரியர் எனப் பல நிலைகளிலும் அறியப்பட்டும் உள்ளார். தனித் தமிழ் ஈடுபாட்டினாலே தனது பெயரை - வெண்ணெய்க் கண்ணனார் - என மாற்றி அப்பெயரிலும் ஆக்கங்களை வெளியிட்டுள்ளார். மேலும் விபுலாநந்தரால் ''கண்ணபுரத்துக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார்'' எனப் போற்றப்பட்ட இவர் மாவிட்டபுரத்தில் வசித்தமையால் ''மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார்'' எனவும் எழுத்துலகில் அறியப்பட்டார். இவரது எழுத்தாக்கங்களை விரிவாக ஆராய்வதற்கு இது இடமன்று. எனினும் இக்கட்டுரையின் முழுமை கருதி சிறிது குறிப்பிட விரும்புகின்றேன்.

இவர் இயற்றிய நூல்களாகப் பலராலும் கூறப்படுபவை உலகியல் விளக்கம், புத்திளஞ் செங்கதிர், செழுங்கதிர்ச்செல்வம், பறம்புமலைப் பாரி, காந்தி வெண்பா என்பனவாகும். இவற்றுள் உலகியல் விளக்கம் தவிர ஏனையவை நூல் வடிவம் பெற்றதாகத் தெரியவில்லை.

**'உலகியல் விளக்கம்'** அறநெறியியல், பொருணெறியியல், இன்பநெறியியல் என்ற மூன்று பகுதிகளாக எழுபது பாடல்களைக் கொண்டது. பாடல்கள் அனைத்தும் சங்கச் செய்யுட்களின் நடையினை ஒத்து ஆசிரியப்பாவில் பாடப்படுள்ளன. விபுலாநந்த அடிகள் (பண்டித மயில்வாகனனார்) இந்நூலுக்குப் பதிகமும் கடவுள் வாழ்த்தும் பாடி ஆங்கிலத்தில் ஒரு முன்னுரையும் எழுதி, மட்டக்களப்புப் பண்டிதர் பூபாலபிள்ளை அவர்களின் உரையுடன் 1922ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். நூல் அமைப்பும் பாடல்களும் பழந்தமிழ் இலக்கியப்போக்கில் அமைந்தாலும், ஆசிரியர் சமகாலச் சிந்தனையுடையவராகத் தமது காலச் சமூகக் குறைபாடுகளை எடுத்துக் கூறி அவை நீங்கவேண்டும் எனவும் கூறியமையைச் சில பாடல்களிலே காணலாம். தமிழ்ச் சமூகம் தனது மொழி, பண்பாடு என்பனவற்றை வெறுத்து ஆங்கில மொழியிலும், ஆங்கிலேயரின் பண்பாட்டிலும் மோகம் கொண்டு அந்நியரை நம்பி வாழ்ந்த நிலையையும் அதிலிருந்து தமிழர் விடுதலை பெறவேண்டும் என்பதையும் விளக்குவதாகப் பின்வரும் பாடற் பகுதிகள் அமைந்துள்ளன.

*''நம்முறு மொழியு நம்முறு பொருளு*
*நம்முறு தொழிலு நாம்போற் றிலமே*
*பிறமொழி பொருடொழில் பேணிவளர்க் குநமே*
*நாமே,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணு முணாவே உரைக்கு முரையே
யுடுக்கு முடையே யடுப்பன பிறவே
யென்னுமிவை முதலா வியைந்தன விரவல்
பிறநாட் டவற்றைப் பேணி நம்முறு
வாழ்க்கை வளர்ப்பது வாய்க்குங் கொல்லோ...

ஆதலின்
நம்முறு மொழிமுத னண்ணிய வெவற்றையு
நாமினிது போற்றி நயத்தல் வேண்டுமால்...
அதனால்
காலங் கழித்தனங் கடமையு மன்று
ஞாலம் பழிக்கு நாமது பெறாவிடிற்
செய்வன செய்மின்.... '' *(54)*

இப்பகுதிகள் மறுமலர்ச்சிக் கவிஞன் பாரதி மற்றும் பாவலர் துரையப்பாபிள்ளை ஆகியோர் முன்வைத்த கருத்துக்களை அவர்களின் சமகாலத்தவரான நவநீத கிருஷ்ண பாரதியாரும் கூறியுள்ளமைக் காட்டுகின்றன. மேலும் புறச்சமயப் பாதிப்பு, சமுதாய ஒற்றுமையின்மை, தமிழ்ப்புலவர்கள் நிலை, அந்தணர் நிலை எனப் பலவற்றையும் உலகியல் விளக்கப் பாடல்கள் வெளிக்கொணர்ந்துள்ளன. அதனால் சிறந்த செய்யுள் நூலாகப் பண்டிதர்களால் பாராட்டப்பட்ட, பண்டித பரீட்சைக்குப் பாட நூலாகத் தெரிவுசெய்யப்பட்ட இந்நூல் சமுதாய நோக்கிலும் ஆராயப்பட வேண்டிய நூலாகும்.

**'புத்திளஞ் செங்கதிர்'** என்ற செய்யுள் நூல் 1929இல் எழுதப்பட்டது என்பர். காந்திய இயக்கம் வலுப்பெற்ற காலத்திலே காந்தியடிகளின் குண இயல்புகளை விளக்கி 522 நேரிசை வெண்பாக்களில் இந்நூல் இயற்றப்பட்டது என திரு. முத்துக்குமரசாமி தனது **"Some Eminent Tamils"** என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார். மேலும் **'காந்தி வெண்பா'** என்னும் அச்சேறாத நூலும் காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றி எழுதப்பட்டது என இரசிகமணி கனக. செந்திநாதன் பதிவு செய்துள்ளார். இந்த இரண்டு நூல்கள் பற்றிய மேலதிக தகவல் கிடைக்காத நிலையில், ஒரே நூல் தான் இரண்டு பெயர்களால் அறியப்பட்டுள்ளதா என்று எண்ணவும் இடமுண்டு.

**'செழுங்கதிர்ச் செல்வம்'** 1937ஆம் ஆண்டு 'ஞாயிறு' இதழ்களில் வந்துள்ளது. 55 ஆசிரிய விருத்தங்களில் சூரியனது இயல்பும், சூரியனால் மக்களும் ஏனைய உயிரினங்களும் அடையும் பயன்களும் பாடப்பட்டுள்ளன. இதற்குப் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளர்.

**'பறம்புமலைப் பாரி'** என்ற நாடக நூல் 1934-1935 காலப்பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம். இது பரமேசுவராக் கல்லூரி வெளியீட்டில் வந்ததற்கான குறிப்பினை இந்து சாதனப் பத்திரிகையிலே (03-12-1935) காணலாம். இந்துசாதனத்தின் மதிப்புரைப் பகுதியில் 'பரமேசுவராக் கல்லூரி வெளியீடு' பற்றி மதிப்பிடுமிடத்து ''இதன்கட் காணப்படும் 'பறம்புமலைப் பாரி' என்னும் நாடகத்தின் பாகம் பெரிதும் பாராட்டத்தக்கதாகும். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த நடையில் செய்யுள்கள் விரவியதாய் கவிஞராகிய பிரமஸ்ரீ நவநீத கிருஷ்ண பாரதியவர்களால் இயற்றப் பெற்றது'' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**'ஆதிமருதி'** என்ற இலக்கிய நாடகத்தினையும் இவர் எழுதியுள்ளார். 1936ஆம் ஆண்டு ஈழகேசரி ஆண்டு மலரில் இந் நாடகத்தின் முதலாம் உறுப்பு வெளிவந்துள்ளது. தொடர்ந்து இந்நாடகம் ஈழகேசரியில் வந்து இருக்கவேண்டும்.

இங்கு குறிப்பிட்ட செய்யுள் நூல்களைத் தவிரத் 'திருமாவளவன்', 'திருவடிக்கதம்பம்', 'தாயும் சேயும்', 'பாலை' முதலான செய்யுள் நூல்களும் இவரால் இயற்றப்பட்டன எனக் குறிப்புகள் உள்ளன. இவற்றுடன் 'பொன்மாலிமயம்', 'இன்பம்', 'திருவாசக ஆக்கம்' முதலான பல தனிப்பாடல்களையும் சேர் பொன். இராமநாதன், கலாயோகி ஆனந்த குமாரசுவாமி முதலான அறிஞர்கள் பற்றிய பாடல்களையும் பாடியுள்ளார். இவ்விதம் பலவற்றையும் பாடுபொருளாகக் கொண்ட இவரது செய்யுள் நூல்களும், ஏனைய பாடல்களும் கிடைக்காமை பேரிழப்பாகும். இந்நிலையால் இவரது தனிப் பண்புகளை வெளிக்கொணரவும் முடியாதுள்ளது.

இவர் தனது சமகால அறிஞர்கள், புலவர்கள் ஆகியோரின் நூல்களுக்குச் சிறப்புப் பாயிரங்களை வழங்கியும் இதழ்களுக்கு வாழ்த்துப்பாக்களை எழுதியும் சிறப்பித்து ள்ளார். சேர் பொன். இராமநாதனின் 'திருக்குறள் பாயிரமும், இராமநாதீயமும்' (1919), 'செந்தமிழ் இலக்கணம்' (1927), சாவகச்சேரி சு. பொன்னம்பல பிள்ளையின் 'ஸ்ரீ ராமநாத மான்மியம்' (1930), அல்வைப் பண்டிதர் கணபதிப்பிள்ளையின் 'ஈழமண்டல சதகம்' (1930), நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் 'தந்தையார் பதிற்றுப் பத்து'(1933), 'நாமகள் புகழ் மாலை' (1951) என்பன இவரது சிறப்புப் பாயிரத்துடன் வெளிவந்த நூல்களிற் சில. 'ஈழகேசரி, 'ஞாயிறு', 'இளங்கதிர்' ஆகிய இதழ்களை இவரது வாழ்த்துப்பாக்கள் அணி செய்துள்ளன. எனது தந்தையார் வித்துவான் வேந்தனாரின் திருமண மங்கலப்பாட்டை, பரமேசுவராக் கல்லூரி ஆசிரியர்கள் சார்பில் பாடியவரும் இவரே. அந்த மங்கலப் பாட்டே நவநீத கிருஷ்ண பாரதியாரின் பெயரைச் சிறுவயதிலே என்மனதிற் பதித்தது.

இவர் **'பாரதீயம்'** என்ற இலக்கண நூலையும் எழுதியுள்ளார். இந்நூல் மூன்று பாகங்களாக 1946 -1947 காலப் பகுதியில் வெளிவந்துள்ளது. பல ஆண்டுகள் கற்பித்த அனுபவத்தின் அடிப்படையில் மாணவர்களுக்காக எழுதப்பட்ட நூல் இது, என்பதனை முதலாம் பாகத்தின் முன்னுரையில் ஆசிரியர் தெளிவாகக் கூறியுள்ளார். ஆறுமுக நாவலரின் 'இலக்கணச் சுருக்கம்', சேர் பொன். இராமநாதனின் 'செந்தமிழ் இலக்கணம்' என்பனவற்றைத் தொடர்ந்து காலத்தின் தேவை நோக்கி எழுதப்பட்ட நூலாகப் 'பாரதீயம்' விளங்குகிறது.

நவநீத கிருஷ்ண பாரதியாரின் அரியதொரு முயற்சியாக - சிறந்த தமிழ்ப்பணியாக - அமைவது இவரின் **'திருவாசக ஆராய்ச்சிப் பேருரை'** ஆகும். இந்நூல் 1954ஆம் ஆண்டில் இவர் அமரராவதற்குச் சில மாதங்களின் முன்னர் வெளிவந்துள்ளது. திருவாசகத்திற்கான உரைகளை 1897ஆம் ஆண்டிலிருந்து பலர் எழுதியுள்ளனர் எனினும், இவரது உரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முதலாக திருவாசகம் முழுவதற்கும் எழுதப்பட்ட ஆராய்ச்சிப் பேருரையாகச் சிறப்புப் பெறுகின்றது. பதிக விளக்கம், பொழிப்புரை, ஆராய்ச்சி உரை என்ற ஒழுங்கில் இவ்வுரை அமைந்துள்ளது. திருவாசகத்திற்கான உரையை எழுதுவதை நீண்டகால ஆசையாகக் கொண்டிருந்த இவர் தான் எழுதவிருக்கும் உரை பற்றித் தனது அன்பர்களுடன் உரையாடும் பொழுது "நான் அன்பின் ஐந்திணை மரபை அடிப்படையாகக் கொண்டு திருவாசகத்திற்குப் பேருரை எழுதி வருகின்றேன். தமிழ்ப் பேரறிஞராகிய மறைமலை அடிகளாரும் இந்த உண்மையைக் காட்டாது திருவாசக உரையை எழுதி இருக்கின்றார்கள்" எனக் கூறியதாக வித்துவான் வேந்தனார் தனது கட்டுரையில் (தினகரன் 02-01-1955) பதிவு செய்துள்ளார். இந்த வகையில் புதிய நோக்கிலும் திருவாசக உரையை நவநீத கிருஷ்ண பாரதியார் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இவர் பல கட்டுரைகளையும் 'செந்தமிழ்', 'ஈழகேசரி', 'ஞாயிறு' ஆகிய இதழ்களில் எழுதி உள்ளார். செந்தமிழில் வெளிவந்த 'தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்' 'தொல்காப்பியர் சைனராம் முதலான கட்டுரைகள் இவரது இலக்கணப் புலமைக்கும், ஆய்வுக்கும் சான்றாக உள்ளன. சிறந்த பேச்சாளராகவும் இவர் மதிக்கப்பட்டார்.

இவ்விதம் பலதுறைகளிலும் தமிழ் உணர்வுடன் தமிழ்ப்பணி ஆற்றிய நவநீத கிருஷ்ண பாரதியாருக்கு, இவர் ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற காலத்தினை ஒட்டி, சிறந்த பாராட்டு விழா ஒன்றினை தமிழ் அன்பர்கள் நடாத்திப் பொற்கிழிப் பரிசிலும் வழங்கியுள்ளனர். இப்பாராட்டு நிகழ்வு 22-04-1952இல் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் முன்னாள் பரமேசுவராக் கல்லூரி ஆசிரியரும், அதிபருமான, தபால் தந்தி தொடர்பு அமைச்சர் திரு சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பாராட்டு விழாவில் இவரின் கற்பித்தற் திறன், கவித்திறன், நாவன்மை, வித்துவத்தன்மை என்பன பல அறிஞர்களாலே புகழ்ந்து பேசப்பட்டு வாழ்த்துப்பாக்களும் பாடப்பட்டன. இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை **"பண்டிதமணி ஈழநாட்டிற்கோர் பெறற்கரும் பேறு"** எனக் கூறி பொற்கிழிப் பரிசிலினை வழங்கியுள்ளார். பண்டிதர் சோ. இளமுருகனார் பொற்கிழி நிதி சேகரிப்புச் சபை சார்பாகப் பாடியளித்த நன் மொழி வாழ்த்தில் நவநீத கிருஷ்ண பாரதியாரைத் தமிழின் வடிவமாகப் போற்றியுள்ளார்.

*"இருந்தமிழ்ப் பழிக்கு மேதிலர் நடுங்கத்*
*திருந்திய பேரவைச் செங்கள மேறித்*
*துணிவுவில் வாங்கித் தெளிவுநா ணேற்றிக்*
*குறிநிலை பிழையா தறிவுகோல் துரந்து*
*செஞ்சொற் போர்புரி வெஞ்சின வீர !!*
*நின்*
*நினைவுஞ் செந்தமிழ் புனைவுஞ் செந்தமிழ்*
*உணர்வுஞ் செந்தமிழ் உயிர்ப்புஞ் செந்தமிழ்*
*எல்லா மாகி யியன்றனை நிற்றலின்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழொரு வடிவந் தாங்கிய தெனவே*
*இமிழ்திரை ஞால மிசைத்திடு மம்ம !!"*

என இளமுருகனார் கூறியுள்ளது போல் தமிழே எல்லாமாகக் கொண்டு தமிழ்ப்பணி ஆற்றியவர் நவநீத கிருஷ்ண பாரதியார்.


சேர் பொன். இராமநாதனின் நோக்கத்தை நிறைவேற்றி, பரமேசுவராக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்து, தமது பெயரையும் ஈழத்து இலக்கிய உலகில் பதித்துச் சென்ற தமிழ்ப் பேராசான் பண்டிதமணி புலவர்மணி நவநீத கிருஷ்ண பாரதியாரின் எழுத்துக்களைத் தேடித் தொகுத்து நூலாக்குவது தமிழ் அறிஞர்களின் கடமையாகும்.

***திருமதி கலையரசி சின்னையா***
முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைகழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்திர சீலர் சீதாராம சாஸ்திரிகள்



சைவத் தமிழ் பண்பாட்டுக்கு வித்தாகத் திகழ்ந்த பரமேஸ்வராக் கல்லூரியில் பணிபுரிந்த மகான்களில் எமது பெருமதிப்புக்குரியவர் ஸ்ரீ சீதாராமஸாஸத்திரிகள். ஏறத்தாழ இருபத்தொரு வருடங்கள் (1944- 1965) பரமேஸ்வராக் கல்லூரியில் பணிபுரிந்தார். அடியேன் அவரிடம் சைவமும் சமஸ்கிருதமும் சில காலம் ( 1952-58) பயில்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததே பெரும் பாக்கியம். எனக்கு முன்னரே அவரது பற்பல மாணவர்கள் அவரிடம் பயின்று சமூகத்துக்குப் பெரும் பணியாற்றினர் என்பதையும் அறிவேன். எனவேதான் அவரிடம் நேரிலேயே சைவமும் சமஸ்கிருதமும் பயில வாய்ப்புக் கிட்டியது தெய்வபாக்கியம் எனக் கருதுகிறேன்.

வேதகாமங்களை ஆழ அறிந்து செயலில் காட்டியவர் கருணையாளன் பெருமைமிக்க ஆசான் அவர். அத்தோடு நில்லாது, அன்னார் அறிவுரைதேடி அண்டியோர்க்கெல்லாம் சலியாது அவர்தம் பணியை பயனுள்ளதாக்கினார் என்பதையும் அறிந்திருந்தேன். இவ்வரும் பண்புகள் நிறைந்த அவரிடத்தில் கருணை - கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு அனைத்துமே காணப்பட்டன. வகுப்பில் தனது மாணாக்கர்களை மிகு கவனிப்புடன் உன்னிப்பாக உற்றுநோக்கி அவர்கள் கற்றவற்றை உணர்ந்து அறிகிறார்களா என்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்வது அவரது தனிப்பண்பு. முக்கியமாக, சமஸ்கிருதத்தில் உச்சாடனம் அதிமுக்கியமானது. ஒவ்வொரு சொல்லும் சரியாக உச்சரிக்கப்படும் வரை அயராது அரவணைப்புடன் அறிவுதருவதில் அவருக்கு அவரேதான் இணை எனலாம்.

கற்பவற்றை கசடறக் கற்று அதற்குத்தக ஒழுகவேண்டும் என்பதே அன்னாரது நோக்கு- அதுவே பரமேஸ்வராவின் பாரம்பரியம். பரமேஸ்வராக் கோவிலில் நடைபெற்ற ஒவ்வொரு பெருவிழாவுக்கும் அன்னார் அளித்த பெரும் பங்கு இன்றும் நினைவுகளில் பதிந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு விழாவிலும், உரியவாறு மந்திரங்கள், சுலோகங்கள் ஆகியவற்றை அவருக்கே உரித்தான கணீரென்ற குரலில் சமஸ்கிருத உச்சரிப்புக்களை உசிதமாக ஏற்றி இறக்கி உருக்கமாக உபாசனைகள் செய்ததெல்லாம் பசுமரத்தாணிபோல் மனதில் பதிந்துள்ளன. இது தொடர்பில், குறிப்பாக அவரது லலிதா சகஸ்ரநாம பாராயணம் பலராலும் கேட்டு அனுபவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எப்பொழுதும் மறக்கமுடியாத அன்னாரது தோற்றம் ஆசிரியப்பெருமானின் சீடரொருவரால் நன்கு விபரிக்கப்பட்டமை வருமாறு:

*'' அள்ளிச் செருகிய குடுமியும் நெற்றி நிறைந்த விபூதிக்*
*கீறல்களின் நடுவே நெற்றிக் கண்ணாய்*
*சந்தனப் பொட்டும், வெண்ணிறச் சால்வை போர்த்திய*
*தீருநீற்று மேனியரும் சதாகாலம்- முருகா முருகா -*
*என்று உச்சரித்துக் கொண்டே இருப்பவருமான*
*அன்னாரது தெய்வீகத்தோற்றம், இன்றும் பசுமையாக*
*நினைவில் கொள்ளமுடிகிறது''*

யாழ்ப்பாணத்தில் குருபாரம்பரியத்துக்கும் மாபெரும் ஆணிவேராக விளங்கியவர் ஆசான் ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள். கோவில்களின் நடைமுறையாகட்டும், பூஜை நெறிகளாகட்டும், சமஸ்கிருத சந்தேகங்களாகட்டும் அனைத்துக்குமே சந்தேகம் தெளிவிக்கும் கற்பக விருசஷமாக விளங்கினார் விற்பன்னர் வேதாகம நாயகன் ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள். இற்றைக்கு எழுபது வருடங்களுக்குப் பின்னரும் அந்த ஆசான் இட்ட அறிவுப் பிச்சை அடியேனுக்கு (சம்ஸ்கிருதம் கற்றுக் கொடுக்கும் ஆற்றல் பெற) உதவுகின்றதென்றால் அவரது பெருமை சொல்லித் தாளாது.

கற்பதற்குத் காலம் கிடையாது என்பதற்கு ஆசான் உதாரணம்- கல்விக் கூடங்கள் அரசுடமையாக்கலின்போது, ஆசிரியர்களுக்குப் பொதுத் தராதரப் பத்திரமாதல் (S.S.C certificate) அவசியம் என சட்டம் இருந்தது. அந்தச் சட்டதுக்கமைய, அம்முதிய வயதில்கூட சளையாது ஆங்கிலம் படித்துத் தேர்ச்சி பெற்றமை (அன்று சற்றுக் கேலியாகப் பட்டாலும்), அன்னாரது இடையறா முயற்சி, என்றென்றும் அனைவர்க்கும் பெரும் ஊக்கம் கொடுக்கக்கூடியதொன்றல்லவா?

இத்தனை பெருமையுடைய பாரதம் தந்த பேரறிவாளனால்- பரமேஸ்வராவின் பெருமைக்கு மாபெரும் பங்களித்த ஆசிரியப் பெருமகன் ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளால்- பன்னாடும் புகழும் அரும்பெரும் நூல்கள் பல எழுதி வெளியிட்ட யாழ். பல்கலைக்கழக (அன்றைய பரமேஸ்வராக் கல்லூரி) முன்னாள் சமஸ்கிருத பேராசிரியர் கைலாசநாத குருக்கள், அதே பல்கலைக்கழக முன்னாள் இந்து நாகரீகத் துறை பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் போன்றோர், அன்னார் இட்ட நூற்றுக்கணக்கான வித்துக்கள், விருசஷங்களாக வளர்ந்து உதாரணமாக விளங்கியோர் என்பதில் பெருமையடைவோம்.

**லண்டன் அம்பி**


டாக்டர் பரமேஸ்வரர் ஐயர் அம்பிகாபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T.S. Sellathurai Master (1948 -1967)

## Written By an Old Student of Parameshvara College




T.S.Sellathurai Master was affectionately referred as "Sellathurai AMMAN" by his students for his kindness and care for them. The students have never seen him punishing or caning- which was very common in those days. He did not believe in the saying "SPARE THE ROD AND SPOIL THE CHILD" He had his own way of advising them to correct their wrong doing. His aim was always in the progress of his students. He held special classes on Saturdays- free of charge- to help them and coach them. He took extra care for the students (Boys) who were under privileged boys and helped them to bring out their talents. He was taking classes at his home for all his friends, neighbours and his relation children of is relatives who needed help, absolutely free of charge. Even he served them with Tea ect. At the normal Tea time, who were at the class. There were few boys who achieved very high qualifications and held important positions because of him. His method of teaching Mathematics, English are still remembered by his old students of Parameshvara College.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் வேந்தனார்

## பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவரின் நினைவலைகள்



திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் வித்துவான் வேந்தனார் 1946ஆம் ஆண்டு தொடக்கம் 1966ஆம் ஆண்டு அமரராகும் வரை தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றி யுள்ளார். அவரது நூற்றாண்டு நினைவை ஒட்டி, சில பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்கள் ஒன்று கூடிக் கலந்துரையாடிய பொழுது நான் அறிந்த செய்திகளைத் தொகுத்து வழங்க முன்வந்துள்ளேன். அவரது தமிழ் ஆற்றலையும், அவரது பெருமைகளையும் சொல்லக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எம் சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவரான திரு. கணநாதலிங்கம் 1943 தொடக்கம் 1953 வரை இக்கல்லூரியில் பயின்றபோது அவர் பெற்ற அனுபவங்களையும் இக்கட்டுரையில் சேர்த்துள்ளேன்.

**தமிழ் இலக்கிய ஆசான் வேந்தனார்:**

1949 முதல் 1959 வரை நான் இக் கல்லூரியில் கல்வி பயின்றேன். எஸ். எஸ். சீ வகுப்பில் இரு வருடங்கள் படிக்க நேரிட்டது. விஞ்ஞானப் பிரிவில் கல்வியைத் தொடர்ந்த நான், எட்டுப் பாடங்களில் தமிழ் மொழி, மற்றும் தமிழ் இலக்கியம் ஆகியவற்றையும் கற்றேன். இவ்விரண்டு பாடங்களையும் கற்பித்த பெருமை காலம் சென்ற வித்துவான் வேந்தனாரையே சாரும். அப்போதைய பாட விதானத்தில் தமிழ் இலக்கியத்திற்காக வழங்கப்பட்ட நூல் **'கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்'** ஆகும். இப்பாடத்தை எமது தமிழ் ஆசிரியர் வேந்தனார் போல மிக அற்புதமாக வேறு எவராலும் கற்பித்திருக்க முடியாதென்பதே எனது தாழ்மையான கருத்தாகும். அவர் ஒவ்வொரு பாடலையும் அவருக்கே உரிய பாணியில் மிகவும் உற்சாகமாகவும், கச்சிதமாகவும் பாடிக் காட்டி, அவற்றின் பொழிப்பையும் எங்களுக்குப் புகட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கற்பித்த சில பாடல்கள் இப்போதும் (64 ஆண்டுகள் கடந்த பின்பும்) எனது செவிகளில் ரீங்காரம் செய்கின்றன. அதில் ஒரு பாடல்

*''ஆழ நெடுந் திரை ஆறு கடந்து இவர் போவாரோ?*
*வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?*
*'தோழமை'' என்று, அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?*
*ஏழைமை வேடன் இறந்திலன்'' என்று எனை ஏசாரோ?*

என்பது.

வானகம் சென்ற தனது தமையன் இராமனைத் தேடிப் பரதன் சென்ற போது, படகோட்டி குகனைச் சந்திக்க நேர்ந்தது. முழு விபரங்களையும் ஏற்கனவே அறிந்திருந்த குகன் பரதனின் நல்ல எண்ணத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் பரதனைச் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தி இவ்விதம் கூறுகின்றான் என ஆசிரியர் வேந்தனார் முதலில் விளக்கினார்.

பின்னர், பாடலை அவர் மிக அருமையாகப் பாடி எங்கள் அனைவரையும் வியக்க வைத்தார். அவருடைய அபிநயம், அப்பாடலைப் பாடிய விதம், அவரது கம்பீரமான குரல் அனைத்தும் அக்காட்சிகளை நாம் நேரில் பார்ப்பது போல் அமைந்திருந்தது.

**தமிழ் மொழி இலக்கண ஆசான் வேந்தனார்:**

ஓர் ஆசிரியர் எனும் முறையில் அவரது கற்பிக்கும் திறன் போற்றுதற்குரியது. மாணவர் உணரும் வகையில் உணர்த்தி, அவர்கள் உணந்தார்களா என அறிவதற்கு அன்றாட வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளை உதாரணப்படுத்திச் சொல்லித் தருவார். உதாரணமாக, தமிழ் இலக்கணத்தில் 'வேற்றுமை'' எனும் பகுதியை விளக்கும் பொழுது, சில மாணவர்கள் இலக்கணச் சுருக்கத்தில் அல்லது நன்னூற் காண்டிகை உரையில் உள்ள காப்பிய இதிகாச நிகழ்வுகளை அப்படியே ஒப்புவிப்பார்கள். ஓர் உதாரணம்: இரண்டாம் வேற்றுமை ''ஐ'' உருபில், 'அடைந்தார்' என்பதை வைத்து வசனம் அமைத்தல் - 'இராமர் கானகத்தை அடைந்தார்'' எனக் கூறினால், வேந்தனார் இப்படியான உதாரணங்களை ஏற்காமல், அன்றாட வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகளை உதாரணமாகக் காட்டச் சொல்லி அறிவுறுத்துவார். அன்றைய நிகழ்வொன்று: 'பிரதமர் டி. எஸ். சேனநாயக்க அவர்கள் சாம்ராஜ்ய மாநாட்டில் பங்குபற்றுதற்காக இலண்டனை அடைந்தார்'' இப்படி யாராவது எழுதியிருந்தால், ''மிக நன்று'' எனப் புள்ளியிடுவார்.

**கல்லூரிக் கீதம்:**

வித்துவான் வேந்தனார் பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்த வருடமான 1946ல், இக்கல்லூரியின் வெள்ளி விழாவும் கொண்டாடப்பட்டது. எமது கல்லூரிக்கு ஒரு கீதம் அவசியமென்ற எமது மதிப்பிக்குரிய அதிபர் சிவபாதசுந்தரனாரின் வேண்டுகோளுக்கு இணங்கி, வித்துவான் வேந்தனார் மிகவும் குறுகிய காலத்தில் அருமையான கருத்துக்களைக் கொண்ட எமது கல்லூரி கீதத்தைப் புனைந்து கொடுத்தார். அக்கீதம் பின்வருமாறு அமைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"திருவள ரறிவின் திருந்தொளி நிரம்புந்*
*திறலின் செயலினன் எனவே*
*தருபுகழ் ராமநாதனின் தவத்தால்*
*தண்தமிழ் ஆங்கிலம் முதலாய்*
*வருமொழி பலவும் சிவநெறி மரபும்*
*வழிவழி நிலவியே மலரப்*
*பரவிடும் அருளால் திசைமுழுதாளும்*
*பரமேஸ்வரமெனப் பணிவோம்."*

**விளையாட்டுப் பிரியர் வேந்தனார்:**

வித்துவான் வேந்தனார் ஒரு கால்பந்து (Football) விளையாட்டுப் பிரியர் என்பது யாவரும் அறிந்ததே. யாழ்ப்பாணப் பாடசாலைகளின் கால்பந்து விளையாட்டுப் போட்டிகளில், அதி உன்னத நிலையில், 1946ஆம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரி சகல போட்டிகளிலும் வெற்றி பெற்று, 10 வருடமாக வெற்றிவாகை சூடிய யாழ் இந்துக் கல்லூரியைத் தோற்கடித்து, கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இவ்வெற்றிப் போட்டியில் பங்கேற்று விளையாடிய ஒவ்வொரு வீரருக்கும் அம்மைதானத்தில் வைத்தே கவி புனைந்தார் வேந்தனார். உதாரணமாக, அணித் தலைவர் ஸ்ரீநிவாசன் அவர்களின் திறமையைப் பாராட்டிப் பாடிய கவி பின்வருமாறு இருந்தது:

*'வீரன் எங்கள் ஸ்ரீநிவாசன் சிறந்த கப்டின் ஆகினால்,*
*வீரன் என்று இன்னொருவன் வெற்றி கொள்ள முடியுமோ?"*

சகல போட்டிகளையும் பார்க்க ஆசிரியர் வேந்தனார் தவறுவது இல்லை. அவரது ஆர்வ மிகுதியால், ஒரு சில தருணங்களில் எமது கல்லூரி "கோல்" போடத் தயாராகும் வேளைகளில், தன்னை அறியாமலே தான் 'கோல்' போடுவதாக நினைத்து, தன் காலால் உதைப்பதைப் பலர் அவதானித்துள்ளனர்!!!. அவர் அதைப் பற்றி பெரிதாகப் பொருட்படுத்துவது இல்லை.

**சொற்பொழிவாளர் வேந்தனார்:**

1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்த போது வடக்கே ரவீந்திரநாத் தாகூரையும், தெற்கே மகாகவி சுப்பிரமணிய பாரதியையும் போற்றி, அவர்களின் சுதந்திர ஆர்வத்தை உணர்த்தி, அவர்களின் கவிதைகள் ஊடாக மக்களின் சுதந்திர உணர்ச்சியையும் தட்டி எழுப்பினார். பாரதியாரைத் தனது மானசீகக் குருவாக ஏற்றாரோ என்னவோ தெரியாது, வித்துவான் வேந்தனார் பாரதியார் மேல் பாடிய புகழாரப் பாமாலை அப்படி எண்ண வைக்கின்றது. 1951ஆம் ஆண்டு, தமிழ் விழா கல்லூரியின் மைதானத்தில், சேர் பொன். ராமநாதனின் மருமகன் சுப்பையா நடேசபிள்ளை முதன்மை தாங்க வெகு விமரிசையாக நடாத்தப் பட்டது. தமிழ் நாட்டின் சிறந்த தமிழ் அறிஞர்களான ஆர்.பி. சேதுப்பிள்ளை, ம.பொ.சி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.வி. கல்யாணசுந்தரனார், சுவாமி தனிநாயக அடிகள் ஆகியவர்கள் அவையை அலங்கரித்துப் பேருரை ஆற்றினர். இலங்கையில் இருந்து பங்குபற்றிய பேரறிஞர்களில் ஒருவரான, வித்துவான் வேந்தனார் மேடையில் கம்பீரமாகப் பேசிய பேச்சைக் கேட்ட தமிழ் நாட்டு அறிஞர்கள் வேந்தனாருக்குப் பெரும் புகழாரம் சூட்டினார்கள். இதே போல், அடுத்து வந்த ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும், ''பரமேஸ்வரா இலட்சிய ஜயந்தி'' எனும் நிகழ்வை எமது கல்லூரி வெகு விமரிசையாக நடாத்தி வந்துள்ளது. தென் இந்தியாவில் இருந்து புகழ் பெற்ற அறிஞர்களை வரவழைத்து பெரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இங்கு வருகை தந்த அனேகமான அறிஞர்கள் வித்துவான் வேந்தனாரின் தமிழ் அறிவு குறித்துப் பாராட்டியது எனக்கு ஞாபகம் உள்ளது.

**முடிவுரை:**

சென்ற நூற்றாண்டிலே, ஈழத் தமிழர்கள் மட்டுமன்றி, உலகத் தமிழ் மக்களும் போற்றும் புலவராய், சைவநெறிப் பாதுகாவலனாய், ஆசிரியருமாய் வேந்தனார் அவர்கள் திகழ்ந்தார். இக்கல்லூரி பழைய மாணவர்களாகிய நாம், அவருடைய ஆக்கங்கள், மேலும் மேலும் அறிஞர்களை உருவாக்க எல்லாம் பரமேஸ்வரனின் பாதங்களைப் பணிந்து நிற்கின்றோம்.

இந்நினைவலைகளை, எமது ஆசிரியர் வித்துவான் வேந்தனாரின் நூற்றாண்டு விழா மலரில் பதிவு செய்து மகிழ்ச்சி அடைவதுடன், விழா சிறப்பாக நடைபெற பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

***சரவணமுத்து சிவலோகநாதன்***
கௌரவ செயலாளர்,
பரமேஸ்வராக் கல்லூரி.
பழைய மாணவர் சங்கம்,
கொழும்பு.

*(இக்கட்டுரை வேந்தனார் நூற்றாண்டு மலரான 'செந்தமிழ்வேந்தன்' (2019) நூலிலிருந்து பெறப்பட்டு இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் வேந்தனாரின்
# தமிழ் இலக்கிய ஆளுமை

வித்துவான் வேந்தனாரிடம் தமிழ் கற்ற காலம் ஒரு பொற்காலம் என்று சொல்லவேண்டும். அவர் தமிழ் மீது பெரும் பற்றுள்ளவராக இருந்தார். இதன்காரணமாக அவர் தமிழ்ப் பாடல்களை கவனமாகப் படித்து ரசித்து மனனம் செய்து எமக்கு இனிய இராகத்தில் பாடி விளக்கங்கள் கூறிக் கற்பிப்பார். இராமாயணத்தில் உள்ள அனேக பாடல்கள் அவருக்கு பாடமாக இருந்தன. அவர் வகுப்பறைக்குள் வரும்போது எவ்வித குறிப்புகளும் கொண்டுவருவதில்லை. முதல்நாளே அடுத்தநாள் என்ன படிக்கப்போகின்றோம் என்று கூறிவிட்டு செல்வது அவரது வழக்கமாகும். வீட்டில் தான் சொன்ன பாடத்தை அதிக கரிசனை எடுத்து தயார் செய்து கொண்டு வருவது அவரது சிறப்பு. அன்று நடக்கப்போகும் பாடத்தின் தலைப்பை கரும்பலகையில் எழுதி உதாரணமாக, இராமனின் தன்னலமற்ற அன்பு என்று எழுதிவிட்டு எம்மை தான் சொல்வதை எழுதச்சொல்வார். இராமன் குகனைச் சந்திப்பதும், இருவரும் அளவளாவதுவும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதும், பின்பு இராமர் குகனை கட்டியணைத்துக்கொண்டு கூறுகிறார். இதுவரை நாம் நால்வராக இருந்தோம் இன்றில் இருந்து ஐவரானோம் என்று குகனையும் தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டார். இந்த அன்பு பிணைப்பை வலியுறுத்த அவர் இராமாயணத்தில் வேறு இடங்களில் அன்பு பற்றி சொல்லப்பட்டவற்றை மேற்கோள் காட்டி விளக்குவது அவரது தனித்தன்மையான சிறப்பாகும்.வகுப்பு முடிவுறும் தருணத்தில் அவர் எழுந்து மாணவர்களின் பின்புறமாக வந்து யாவரும் எழுதியிருக்கிறார்களா என்று அவதானிப்பார். அழகான எழுத்தில் எழுதியிருக்கும் மாணவனிடம், அவன் எழுதியிருப்பதை ஒரு கடதாசியில் எழுதித் தரும்படி கூறுவார். மாணவன் எழுதிகொடுத்ததை அவர் தனது சட்டைப்பையில் வைத்துக் கொண்டு செல்வார். வார இறுதியில் வீரகேசரிப் பத்திரிகையிலும், தினகரன் பத்திரிகையிலும் அன்று படிப்பித்தது பிரசுரமாகி, மற்றைய பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்களுக்கும் பிரயோசனப் படக்கூடியதாக இருக்கும்.

பெரியபுராணத்தைப் படிப்பிக்கும் போது திருஞானசம்பந்தரின் திருநீற்றுப் பதிகத்தை அழகாகப் பாடிக்காட்டுவார். **'இராவணன் மேலது நீறு'** என்ற வரிகள் வந்ததும் நிறுத்தி, எம்மைப் பார்த்து, 'இராவணன் நல்லவனா கெட்டவனா?' என்று கேட்டார். யாராவது 'அழுக்கடையான் மேலது நீறு' என்று பாடி, விபூதியின் பெருமையைச் சொல்வார்களா என்றும் கேட்டார். (அழுக்கடையான் என்று அழைக்கப்பட்டவன் அந்த நாட்களில் கொட்டடியில் வாழ்ந்த சண்டியன். மதுபோதையில் வருவோர் போவோரை மிரட்டிப் பணம் பறிப்பவன். சிறுவர்களைக் கண்டால் அடித்துத் துரத்துவான். இதுதான் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில். இதன் காரணமாக யாவரும் அவனுக்கு பயந்திருந்தார்கள்.) அன்று வித்துவான் எழுப்பிய கேள்வி இன்றும் பட்டிமன்றங்களில் கருப்பொருளாக இருப்பதைக் காணலாம்.

வேந்தனார் தான் வித்துவான் என்ற பெருமை இல்லாதவர். மாணவர்களான எம்மை எங்கு கண்டாலும் புன்சிரிப்புடன் சில வார்த்தைகள் பேசிவிட்டுத்தான் செல்வார். அவர் பாடசாலைக்கு முன் உள்ள குமாரசாமி வீதியில் குடியிருந்தபடியால், அவரை அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது. எனது தந்தையாரையும் அவர் தெரிந்து வைத்திருந்ததால் சந்திக்கும்போது எனது தந்தையின் சுகதுக்கங்களை கேட்க அவர் தவறுவதில்லை. ''நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே, நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே, நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே'' என்ற நீதிவெண்பாவுக்கு ஏற்ப, அவருடன் பழகிய யாவருடைய மனத்திலும் அவர் அணையா விளக்காக என்றும் ஒளிர்ந்து கொண்டிருப்பார் என்பது திண்ணம்.


**சு.சர்வானந்தன்**
(பரமேஸ்வராக் கல்லூரி, பழைய மாணவன் : 1947-1960)

*(இக்கட்டுரை வேந்தனார் நூற்றாண்டு மலரான 'செந்தமிழ்வேந்தன்' (2019) நூலிலிருந்து பெறப்பட்டு இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mr. Eliyappa Ketheeswaranathan

### School Master at Parameshvara College



He was the eldest sibling in a family of seven. He was born in Mannar hospital on 13th March 1913. Mr Keetheeswaranathan was attending teacher's training in Maharagama teacher's training College. He had to abruptly give up his training due the demise of his wife in a car accident in April 1949. With the demise of his wife, he gave up wearing western clothes and started wearing National Dress. He continued to wear National Dress till his death on 17 January 1975.

Mr. Ketheeswaranathan was father and mother to all of us. He continued to teach at Parameshwara College till his retirement.

I have heard that he was responsible for bringing the very FIRST Tamil Typewriter into Sri Lanka and he was the agent for that Company. In fact, he only introduced the ink "MILTON" which was used to make corrections on the typed documents while typing. Subsequently TIPEX was introduced.

From what he shared with me was his affection to Sir P. Ramanathan. He had been heavily involved with the funeral arrangements of Sir P, for two or three days. He told me that Sir P was very particular that anyone who spoke to him, speak in one language, either in Tamil or English – so much so that Sir P chided a carpenter who referred to a round table as round table aiya till he eventually said "aiya antha vatta messai" and Sir P sighed at the end and said, "oh you meant the round table".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He was also instrumental in putting up huge "PANDALS" duding the Silver Jubilee celebrations of Parameshavara College in 1946 and also during the Thamil Vilazhz held in 1951. I remember going on a cycle trip to Thiruketheeswaram and to Trincomalee with Kanagasabai master and about 25 students. In Trinco David, who used to be a prefect at school hosted us for breakfast at ABCD hotel. I think ABCD stood for American British Chinese Diet. His punishment to students was different from other Masters. He would hold the NOSE of the student with CLENCHED FINGERS tightly and shake the head !!!.

He also showed me a land in Vattakachchi, which he said belonged to Sir P.Ramanathan. The income from that land was used to cater for the expenses of both Parameshwara College and Ramanathan College. In my recent travel to that area, I was trying to locate the said land. As the entire outlook has changed over the years, I couldn't locate the land.

He was very much interested in agriculture and every Friday after school he would go to the coconut plantation in Masar, Pallai or to the paddy field in Kalmadu in Kilinochchi District. He would return to Jaffna on Sunday afternoon. He used to go to these places with me in the green Ford Thames van (EL 9551). Subsequently after retirement he used to go to Masar in his Fordson tractor and bring coconuts mainly to supply the two schools and few domestic customers.

He had good relationship with some of his students even after they finished school. The students I remember are :

Mr. Logathas, Mr. Perinpanayagam's elder brother, who was in the Sri Lankan Air Force. I remember him as a handsome person. His last visit was just before he left for UK.

Mr. Maharajah, Mr. Thadi Bala's elder brother, who worked in Education Department. When he was in Anuradhapura Education Office, he was able to locate a paddy field owned by my maternal grandfather for which the deed was available, and the location of the land was unknown.

Mr Pathmanathan from Kokuvil, who worked with Lipton's Tea Ltd.

There were few ex-students of Parameshwara who didn't pursue further studies and opted to take up to agriculture. The government of that day was more down to earth and granted lands to educated youth in Kilinochchi. We would go there on our trips to Kilinochchi, and my father would share his knowledge on matters that he thought would be of use to then. I realized the hardships they were putting up with to make a living with lanterns to light up without electricity.

**Mahendran Katheeswaranathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகசபை மாஸ்டர்
## முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியர் (1946–1974)
### ஒரு பழைய மாணவனின் மடல்



கனகசபை மாஸ்டர் என்று கூறுவதிலும் பார்க்க ''பண் இசை மாஸ்டர்'' என்று சொல்வது மிக பொருத்தமானதாகும். அவரின் பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியப் பணி முழுவதும் பண் இசைக்காகவே அமைந்திருந்தது. இக்காலகட்டத்தில் எமது கல்லூரியில் அவரது பண் இசை இல்லாத நாட்களே இல்லை எனலாம். ஒவ்வொரு நாட் காலையும் பரமேஸ்வரன் ஆலயத்தில் மாஸ்டரும் அவரது மாணவர்களும் சேர்ந்து தேவாரம் பாடிய பின்னர் தான் மாணவர்கள் தங்கள் வகுப்பறைக்குச் செல்வார்கள். கனகசபை மாஸ்டர் தன் கணீர் என்ற குரலால் மாணவர்களுடன் சேர்ந்து பாடும் பண்கள் சகல மாணவர்களுக்கும் ஒரு புத்துணர்ச்சியை அளிப்பதாக இருக்கும்.

பரமேஸ்வராக் கல்லூரியின் கலை விழாவா? அன்றி தமிழ் விழாவா? எந்த ஒரு நிகழ்வும் அவரது தேவாரத்துடன் தான் ஆரம்பமாகும். அவர் பண்டிதர் என்றபடியால், தேவாரங்களில் அவரது தமிழ் உச்சரிப்பு, எல்லாவற்றுக்கும் மேலாக அவரது கம்பீரமான பக்தி ததும்பும் குரல் இன்னும் எம்முள் ஒலித்துக் கொண்டிருப்பதை உணர்கின்றோம்.

அவரை ஒரு ''சகலகலாவல்லவர்'' என்று சொன்னாலும் மிகவும் பொருத்தமாக இருக்கும். கல்லூரியில் மின்சாரம் சம்பத்தப்பட்டவேலையா, ஒலி ஒளி சம்பத்தப்பட்ட வேலையா, எதுவானாலும் தானே செய்து கொடுப்பார். அத்துடன், 1952ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகப் போட்டியிட்ட எமது கல்லூரி அதிபர் மாண்புமிகு நடேசபிள்ளை அவர்கள் வெற்றியீட்டியதும், அரசாங்கம் அவரை ''தபால் தந்தி'' அமைச்சராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்தார்கள். அதன் பின்னர் அவர் பரமேஸ்வராக் கல்லூரிக்கென ஓர் ''சினிமா புறஜெக்டர்'' (பேசும் படம் காண்பிக்கும் உபகரணம்) அன்பளிப்புச் செய்தார். அதை இயக்குவதற்கு மிகவும் பொருத்தமானவர் கனகசபை மாஸ்டர் தான் எனக் கல்லூரி நிர்வாகம் தீர்மானித்து அவரிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர் அப்பொறுப்பை மிகவும் கனகச்சிதமாக நிறைவேற்றினார் என நான் நன்கறிவேன். பாடசாலை நாட்களில் இரு வாரங்களுக்கு ஒருமுறை பி. ப. 3.00 மணிக்கு ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கும், மாலை 6.00 மணிக்கு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் அறிவை வளர்ப்பதற்கான படக் காட்சிகள், மேல் மாடியில் அமைந்துள்ள நூலரங்கத்தில் காண்பிக்கப்பட்டன. 1952ஆம் ஆண்டு எலிசபெத் மகாராணியாரின் முடிசூட்டு வைபவம் முழுவதையும், அது நடைபெற்ற மிகக் குறுகிய காலத்தில் எமக்குக் காண்பித்தது இன்னமும் எனது நினைவில் உள்ளது.

இதற்கும் மேலாகப் பரமேஸ்வராக் கல்லூரியில் எத்தனையோ வகையான மரங்கள் நாட்டி பராமரித்தவர் கனகசபை மாஸ்டரே என்று சகல மாணவர்களும் நன்கறிவார்கள். இன்றைக்கும் அவர் நாட்டிய மரங்கள் பயன் தருவதை அவதானிக்கலாம். அக்கால கட்டத்தில் கல்விகற்ற மாணவர்கள் ஆசிரியர்களுக்கும் சக மாணவர்களுக்கும் '' பட்டப் பெயர்'' சூட்டுவது வழக்கம். அவர்கள் கனகசபை மாஸ்டரை '' மரப் பண்டிதர்'' என்ற பட்டப்பெயரால் அழைத்தனர் என நான் அறிவேன். அப்பட்டத்தை அவர் பெரிதாக அலட்டிக் கொள்ளாது விட்டது அவரது பெருந்தன்மையை உணர்த்துகின்றது.

இத்தகைய சிறந்த ஆசிரியர்கள் பலரைக் கொண்ட கல்லூரியாக ஒரு காலத்தில் விளங்கிய பரமேஸ்வராக் கல்லூரியில் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமையை எண்ணி மனம் மகிழ்கின்றேன்.

***திரு.ச.சிவலோகநாதன்***
பழைய மாணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரி விளையாட்டுத்துறை ஆசிரியர் என் சிந்தனையை விட்டகலாத R. S. மாஸ்டர்



திரு சின்னையா குமாரசாமி என்று கூறும் போது ஒரு தடுமாற்றத்தின் பின் இவர்தான் என்று புரிந்து கொள்பவன் யான். இதற்குக் காரணம் என் சிந்தையிலும், நாவிலும் குடி கொண்ட பெயர் R.S. என்பதாகும்.

இளம் பராயத்தில் அவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரர். ஓர் இலட்சியப் புருசருங் கூட. 1946 தொடக்கம் 1950 வரையான காலப்பகுதியில் அவரை விளையாட்டுத் துறையிலும், பாடசாலை பொது ஆக்க வேலையிலும், சிறந்த குருவாகப் பெற்ற நான் பெரும் பாக்கியவான் என்பதனைப் பெருமையுடன் கூறி வருவதுண்டு. நான் அவரிடம் பெற்ற வித்தைகள் அளப்பரியன. நான் ஒருவன் மட்டுமன்றி, என்னைப்போல ஆயிரக்கணக்கான சீடர்கள் அந்தச் செல்வத்தைப் பெற்று இன்றுவரை பயன்படுத்திக் கொண்டுள்ளனர். அவரின் தனிப் பெருந்தன்மை குரு சீட முறையை உணர்ந்து வாழ வழி வகுத்தது. பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்கட்கு இதனைக் கூறவேண்டிய அவசியமே இல்லை. அத்துடன் அதிபரதும், சக ஆசிரியர்களினதும் அன்பையும் மதிப்பையும் பெற்றுள்ளார்.

1955 தொடக்கம் 1967 வரை அதே கல்லூரியில் அவருடன் சக ஆசிரியராகச் சேவை ஆற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எனது சேவைகளுக்கு அவர் என்றும் ஒத்துழைப்பு வழங்கியதுடன், என்னை வழிநடாத்தும் ஒரு குருவாகவும் விளங்கியமையால் இவரை ஒரு சக ஆசிரியராகவோ அல்லது நண்பனாகவோ நான் கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த அன்புப் பரிமாற்றங்களுக்கு இடையிலும் நான் அவரை குரு நிலையில் இருந்து அணுவும் அசையவில்லை. ஆனால் அவர் என்னை ஒரு தம்பியாகக் கருதியிருந்தார் என்ற உணர்வைக் காலப்போக்கில் ஊகித்துக்கொள்ள என்னால் முடிந்தது. அன்புப் பிணைப்பின் உச்சக்கட்டம் ஒரு சகோதரனாக என்னை வைத்ததில் வியப்பொன்றுமில்லை.

R.S.மாஸ்டர் ஒன்றும் தன்னைப் பெருமைபடுத்திக் கொண்டதே இல்லை. உயர்ந்த பதவிகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற மோகமும் அவரிடம் இல்லை. வெளிப்பகட்டு இல்லாத இவர், யாவர்க்கும் உதவி செய்வதனையே நோக்கமாகக் கொண்டவர். இவரிடம் உள்ள சிறந்த இன்னுமொரு பண்பு, அடுத்தவர்க்கும் தெரியாமல் உதவி செய்கின்றமையாகும்.


**ஆசிரியர் இரத்தினசிங்கம்**

*(பரமேஸ்வராக் கல்லூரி விளையாட்டுத் துறை ஆசிரியராகப் பல ஆண்டுகள் கடமை ஆற்றியவரும் R.S. மாஸ்டர் என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவருமான திரு R.S.குமாரசுவாமி அவர்கள் பற்றிய இக்கட்டுரையை எழுதியவர் ஆசிரியர் திரு. இரத்தினசிங்கம் அவர்கள். இவர் R.S.மாஸ்டர் பரமேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் மாணவனாகவும், பின்னர் அதே கல்லூரியில் உடன் ஆசிரியராகவும் கடமையாற்றினார். 1983ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இக்கட்டுரை, R.S.மாஸ்டரின் நினைவு மலரில் இருந்து எடுக்கபட்டது - நூற்றாண்டு விழா மலர்க் குழுவினர்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வரா ஆசிரியர்
# அமரர் வைத்தியநாத ஐயர்



சுன்னாகம் மயிலணி, தமிழ் சைவப் பாரம்பரியங்களையும் கலாசாரங்களையும், பேணிப் பாதுகாத்து வளர்க்குமிடமாக விளங்குகிறது. இந்தச் சூழலில் நற்குடும்பத்தில் திரு கா. வைத்தியநாத ஐயர் அவர்கள் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டில் பிறந்தார். பரமேஸ்வராக் கல்லூரியில் நன்றே கல்வி பயின்று முடித்து, ஆங்கில மொழி, சமஸ்கிருதம், இலத்தீன், தமிழ் மொழி ஆகியவற்றில் இலண்டன் பல்கலைக் கழகப் பட்டதாரிப் பரீட்சைக்குத் தோற்றி, அதில் தேர்ச்சியடைந்து கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து ஏறத்தாழ இருபது ஆண்டுகள் பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். இதன் மேல், கிளிநொச்சி மகா வித்தியாலம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயா, மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலியவற்றிலும் ஆசிரியராகப் பணியாற்றினர். மேலும், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, இணுவில் சைவ மஹாஜனா மற்றும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் அதிபராகப் பணி புரிந்தார்.

இவர் அதிபராக இருந்த ஒவ்வொரு பாடசாலையிலும் அபிவிருத்திச் செயல்பாடுகள் இருந்தன. இவரது வழிநடத்தலில் அப்பாடசாலைகள் மிகவும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்தவையாகக் காணப்பட்டன. தன்னுடன் பணியாற்றிய சக ஆசிரியர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக இருந்து, அவர்களை முன்னேற்றி, அவர்களுக்குக் கடமைக்கூறுகளை வழங்கி, நிர்வாகத்தில் பங்கேற்கச் செய்து, ஒழிவு மறைவற்ற வெளிப்படைத்தன்மையான நிர்வாக முறையை மேற்கொண்டு நன்மதிப்பைப் பெற்றவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் மோட்டார் வாகனத்தை தானே தனக்குரிய பாணியில் எல்லோராலும் விரும்பப்படும் பாணியில் செலுத்திக் கொண்டு பாடசாலைக்கு வருவார். தூயவெள்ளைத் தேசிய உடையுடன் உற்சாகமான நடையுடன் வருவார். உறுதியான, தெளிவான, இனிமையான பேச்சு மற்றவர்களை மகிழ்விக்கும். அவர் ஒரு நடமாடும் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்தார். தான் பெற்ற அறிவை மாணவர்களுக்கு சிறந்த முறையில் ஊட்டினார். இலத்தீன் மொழியைக் கற்பதற்கு பட்டதாரிகளும் சட்டக் கல்லூரி மாணவர்களும் இவரை நாடி வருவார்கள். இவர்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு வி. தர்மலிங்கம், திரு. வீ. ஆனந்தசங்கரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சமஸ்கிருதம் தொடர்பான சந்தேகங்கள், சமயக்கிரியைகள் தொடர்பான சந்தேகங்கள் இவற்றைத் தீர்ப்பதற்குப் பலர் இவரைத் தேடி வந்ததுண்டு.

நல்ல ஆசிரியராக, சிறந்த அதிபராக, சிறந்த வழிகாட்டியாக, தலைவனாக விளங்கி திரு. வைத்தியநாத ஐயர் பல சிறப்புகளையும் பெற்றார்.

**(அன்னாரின் நினைவு மலரிலிருந்து பெறப்பட்டது - ச.சிவலோகநாதன்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Principals of Parameshvara College 1921-1974




Sir Arunachalam Mahadeva
First Principal 1921-1924



Mr.S.Natesapillai
1924-1952



Mr.S.Sivapathasundram
1952-1968



Mr. M. Gnanaprakasam
1968-1973




Mr. S. Paranirupasingam
Principal- 1974




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Head Masters of Parameshvara Collge Primary School 1921-1974



Saivapariyar Sivapathasuntharanar
First Headmaster - 1921




Mr. Muthu Sivalingam
Headmaster

## Teachers of Parameshvara College



Shri Navaneetha Krishna
Bharathiyar



Shri Seetharama Sasthirikal



Mr. V. Arumugarajah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mrs. Arumugarajah



Mr. S. Saravanamuttu



Mrs. Luckshmy Devi Saravanamuttu



Mr. N. Shanmugaratnam



Vidwan Venthanar




Pandithar Ramachandran



Mr. T. Sellathurai



Mr. R.S. Kumaraswamy



Shri Vathiyanatha Iyer


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mrs. Gnanapoorani
Sivaramalingam



Mrs. Vijeyalaxmy
Rajasekaram



Mr. T. Balasubramaniam



Mr. P. Baskaradevan




Mrs. Puwaneswary
Ambalavanar



Mr. Thedchanamoorthy



Mrs. T.Thedchanamoorthy



Mr. Kanagasabai



Mr. E.Ketheeswaranathan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Mrs. Jegasothy Thavaraja



Mr.T.Thavaraja



Mr.A.S.Balasupramaniam



Mr.S. Rajanayagam



Mr.P.Sivagnanasundram

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள அதிபர் ஆசிரியர்களின் படங்கள் எமது தேடலில் கிடைத்தவை. பரமேஸ்வராக் கல்லூரி 1921 தொடக்கம் 1974 வரை பாடசாலையாக இயங்கி வந்தது. இந்த 53 வருட கால இடைவெளியில் பல அதிபர்கள், ஆசிரியர்கள் இந்தப் பாடசாலையில் பணியாற்றியுள்ளார்கள். கடந்த சில மாதங்களாக நாம் மிகவும் சிரமப்பட்டு எடுத்த 33 படங்கள் (அதிபர்/ ஆசிரியர்) மட்டுமே இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

பரமேஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரு மாணவியின் பரமேசுவராக் கல்லூரி நினைவலைகள்

வள்ளல் பெருந்தகை சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் 1913ஆம் ஆண்டு மருதனார்மடத்தில் பெண்களுக்கான ஓர் கல்லூரியையும் பின்னர் 1921ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் ஆண்களுக்கான ஓர் கல்லூரியையும் அமைத்துக் கொடுத்தார் என்பதே வரலாறு. ஆனாலும் இராமநாதன் கல்லூரியில் பெண்கள் மட்டுமே பயிலுவதற்கு அனுமதிக்கப்பட்ட போதிலும், பரமேசுவராக் கல்லூரியில் ஆண், பெண் இருசாராரும் பயிலுவதற்கு அனுமதிக்கப்பட்டது, என் போன்றோருக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்தது. அக்கல்லூரியில் அடியேன் பெற்ற அனுபவங்களை, இக்கட்டுரை மூலம் பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகின்றேன். எனது அப்பாவும், ஓரிரு வருடங்கள் என் அம்மாவும் பரமேசுவராக் கல்லூரியில் ஆசிரியர்களாக பணிபுரிந்த காரணத்தினால், நானும் எனது நான்கு சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் இக்கல்லூரியில் பயிலுவதற்கு பாக்கியம் செய்தோம். நான் 1949ஆம் ஆண்டில் பரமேசுவராக் கல்லூரி 6ஆம் தரத்தில் சேர்க்கப்பட்டேன். பின்னர் 1951ஆம் ஆண்டில் நான் இராமநாதன் கல்லூரியில் 8ஆம் வகுப்பு முதல் எஸ். எஸ்.சீ மட்டும் கல்வி கற்றேன். மீண்டும் 1957ஆம் ஆண்டு பரமேசுவரக் கல்லூரியில் சேர்ந்து 1959ஆம் ஆண்டு எச். எஸ். சீ (H. S. C.) வரை கல்வி கற்றேன். இக்கல்லூரியில் எனது சின்னம்மா (விஜயலக்சுமி ஆசிரியையும்), இன்னும் பல நெருங்கிய உறவினர்களான ஜெகசோதி ரீச்சர், புவனேஸ்வரி ரீச்சர் ஆகியோரும் இருந்தது எனக்கு பேருதவியாக அமைந்திருந்தது. எனது வகுப்பில் 25 ஆண்பிள்ளைகளும் 5 பெண்பிள்ளைகளுமே இருந்தனர். அவ்வருடம் எமது ''கிளாஸ் மாஸ்டர்'' திரு. ஆறுமுகராஜா மாஸ்ரர். அவர் ஆங்கிலம் கற்பித்தார். கணித ஆசிரியராக சீ. சிதம்பரப்பிள்ளை மாஸ்ரரும், தமிழுக்கு வித்துவான் வேந்தனாரும், சமூகக் கல்விக்காக எனது அப்பா சரவணமுத்து மாஸ்ரரும் இருந்தனர். அத்துடன் வரைதல் பாடத்திற்கு திரு. பொன்னையா மாஸ்ரரும், சீதாராம ஸாத்திரிகள் சமஸ்கிருதப் பாடமும் போதித்தார்கள்.

நான் அக்கல்லூரியில் படித்த நாட்களில் எமது பாடசாலை காலை 8.30 முதல் பிற்பகல் 4.30 வரை இயங்கியது. உண்மையில் பி.ப. 3.45 மட்டுமே கற்றல் நடைபெற்றது. 4.30 வரை விளையாட்டு பயிற்சிகளுக்காக ஒதுக்கப்பட்டது. காலை 8.30 முதல் 9.00 வரை சகல மாணவரும் பரமேஸ்வரன் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெறும் நிகழ்வில் பங்குபற்றுவது கட்டாயமாக்கப்பட்டது. மாணவர்கள் வரிசையாகக் கோவிலின் முன் வாயிலாலும், மாணவிகள் வலது பக்கத்தில் உள்ள வாயிலாலும், கோவிலுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசிப்பர். தேவாரம், சிவபுராணம் ஆகியவை பயபக்தியுடன் இசைப்பதற்கு பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள் பொறுப்புடன் செயல்பட்டனர். ஒரு சில நாட்களில் அதிபர் ஏதாவது முக்கிய அறிவித்தல்களை பூசைகள் முடிந்ததும் எம்மை அமரச்செய்து ஓர் பிரசங்கமாக நிகழ்துவது வழமை. எமக்கு நேரகாலத்தின் (Punctuality) முக்கியத்துவத்தை உணரச்செய்வதற்காக தாமதமாக வரும் மாணவர்களை, பாடசாலை மூடிய பின்னர் விளையாட்டு மைதானத்தில் ஒரு மணி நேரமாகப் புல்லுப் பிடுங்க வைப்பார்கள். இந்த தண்டனையில் இருந்து தப்புவதற்காக உரிய நேரகாலத்துடன் பாடசாலைக்கு வருகை தர சகல மாணவரும் முயற்சிப்பர்.

எமது கல்லூரி ஸ்தாபகர் சேர். பொன். இராமநாதனின் விருப்பத்திற்கமைய ஆன்மிகக் கல்வியையும், சைவ சமய கலை கலாசாரத்தையும் மாணவர்களுக்குக் கற்பித்தனர். கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்ட பரமேசுவரன் ஆலயத்தை மையமாக வைத்து, சைவ சமய நாயன்மார்களின் குருபூசைகள், சிவராத்திரி, நவராத்திரி விழாக்கள் மிகவும் பக்தி சிரத்தையுடன் மாணவர்கள் நடாத்துவதற்கு சகல ஒத்தாசைகளும் கல்லூரி நிர்வாகம் வழங்கியது. இதன் மூலமாக மாணவர்களின் தலைமைத்துவமும், கூட்டு முயற்சிகளும் ஊக்குவிக்கப்பட்டன. எமது கல்லூரி இலச்சினை ''திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்'' எனும் வாக்கியத்திற்கு ஏற்ப, சகல கைங்கரியங்களும் நிறைவேற்றப் பட்டதையே நான் அந்நாளில் உணர்ந்து கொண்டேன். ஆண் மாணாக்கருக்கு சரிநிகராகவே மாணவிகளும் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு பற்ற சகல வசதிகளும் வழங்கப்பட்டது உண்மையிலேயே எங்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகவே அமைந்தது. மாணவிகளுக்காக சரஸ்வதி, லக்சுமி மற்றும் பார்வதி இல்லங்கள் என மூன்று இல்லங்களில் சகல மாணவியரும் உள்வாங்கப்பட்டனர். சகல விளையாட்டுப் போட்டிகளும் மிக உற்சாகத்துடன் நடாத்தப்பட்டது. அத்துடன் பேச்சுப் போட்டி, சங்கீதப் போட்டிகள் எனப் பல்வகையான போட்டிகளிலும் மாணவிகள் பெருமளவில் பங்கேற்றனர். பாடவிதானத் திற்கு மேலதிகமாக தமிழ் கலை கலாசார நிகழ்வுகள் யாவும் மாணவ மாணவியர்களின் பங்குபற்றுதலுடன் நடந்தேறியது. சிறப்பாக நவராத்திரி விழாக்களின் போதும், சங்கீத இசைப் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவ மாணவியர்களை, மேடையில் அமர்ந்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி உற்சாகப்படுத்தினர். கல்லூரியில் சங்கீத பூசணம் சண்முகரட்ணம் அவர்கள், இந்த இசை விழாக்களை முன்நின்று நடாத் தினார். இலங்கையில் அக்காலகட்டத்தில் வாழ்ந்த இசை மேதைகளான ராம் குமாரசாமி, பரம் தில்லைராஜா, திருமதி பூமணி வேலுப்பிள்ளை, திருமதி சரஸ்வதி பாக்கியராஜா போன்றோர் பங்கு பற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர். பொன். இராமநாதனின் பிறந்த நாளை நினைவு கூரும் விழாவாக ''பரமேசுவரா இலட்சிய ஜயந்தி'' வருடம் தோறும் நடாத்தப்பட்டன. இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள பேரறிஞர்கள் இவ்விழாக்களில் பங்குபற்றி சிறந்த சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். அவர்களில் திரு அ. ச. ஞானசம்பந்தன், ரா. பி. சேதுப்பிள்ளை, வித்துவான் மீனாட்சிசுந்தரனார், வித்துவான் வேந்தனார் சிறந்து விளங்கினர். 1951ஆம் ஆண்டு தமிழ் விழாவையும் வெகு சிறப்பாக எமது கல்லூரி நடாத்தியது. இந்தியாவிலிருந்து திருமதி. எம். எல். வசந்தகுமாரியும் வருகை தந்து இன்னிசை வழங்கினார். பரமேசுவராக் கல்லூரியிலும், இராமநாதன் கல்லூரியிலும் நான் கற்ற அனுபவம் எனக்கு சமய மற்றும் தமிழ் அறிவை ஊட்டியது மட்டுமல்லாமல் என் குடும்ப வாழ்க்கையிலும் என் ஆன்மிக முன்னேற்றத்திலும் உதவியதாக இருப்பதை மன நிறைவுடன் சிந்திக்கிறேன். அத்துடன் எனது கணவரும் இக்கல்லூரி விழாக்களில் பங்குபற்றியதைப் பெருமையுடன் சொல்லுவார். ஆனாலும் அவருக்கு பரமேசுவராக் கல்லூரியில் படிக்க சந்தர்ப்பம் கிடைக்காத போதிலும் இவ்விழாக்கள் அவருக்கும் இந்து சமய கலாசார அனுபவங்களைக் கொடுத்துதவியதை நன்றியுடன் நினைவு கூறுவார். என்னுடன் கல்வி பயின்ற மாணவிகள் எல்லோருமே நல்ல நிலையில் உள்ளனர் என நினைக்கும் போது மிகவும் பெருமையாக உள்ளது.

**திருமதி லோகநாயகி பத்மநாபன்**

(ஐக்கிய இராஜ்ஜியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகள்

யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் என் ஆரம்பக் கால கல்வியை நிறைவுசெய்த பின்னர், ஐந்தாம் வகுப்பில் (1951) பரமேஸ்வராக்கல்லூரியில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தேன். அன்றிலிருந்து எட்டாம் வகுப்புவரை அங்கேயே எனது கல்வி தொடர்ந்தது. அச்சமயம் எனது இரு மூத்த சகோதரரும் அங்கேயே கல்வி பயின்றுவந்தனர். அந்த சில வருடங்களில் பல்வேறு வகையான நினைவில் நிலைத்துநிற்கும் நல்ல சுவையான அனுபவங்கள் சிலவற்றைப் பகிர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஒரு முன்மாதிரியான கல்விக்கூடம். மாணவர்களுக்கு புத்தகப் படிப்பு மட்டுமன்றி வாழ்வதற்கு வழிகாட்டியான பல்வேறு உத்திகளை உருவாக்கிக்கொடுப்பதில் முன்னின்றது.

கல்லூரியின் நல்ல செயற்பாடுகள் பல உள

கல்லூரியின் குறிக்கோள் ''திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்'' - இன்றும் என் மனதில் பதிந்துள்ளது. இதில் எத்தனை உண்மை அடங்கியிருக்கிறது! இந்த அருள்வாக்கை உறுதிப்படுத்தியே கல்லூரியின் செயற்பாடுகள் நடைபெற்றன.

ஒருவரது வாழ்வில் ஆன்மீகம் முதற்கண் தேவை என்பது கல்லூரியின் கொள்கை. வள்ளுவர் ''கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்'' எனக் கூறியவண்ணமே, ஆரம்பகாலம் முதலே இந்த நோக்கு கல்லூரி ஸ்தாபகர் எண்ணங்களில் ஓடியிருந்தது என ஊகிக்கலாம். எனவேதான் கல்லூரியின் வளாகத்தினுள்ளேயே சிவன் கோவில் அமைத்து தினமும் மாணவர் வகுப்புகளில் கல்வியை ஆரம்பிக்கும் முதலே இறை வணக்கம் செலுத்தும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டது.

தினமும் மாணவர் அனைவரும் வரிசையாகக் கோவிலுக்குச் சென்று, பூஜை, தீபாராதனை முடிந்ததும், ஒழுங்காக சிவனை வலம் வந்து வகுப்புக்குச் செல்வர். அவ்வாறே வெளியே அவரவர் வகுப்புகளுக்குச் செல்லும்போது திரு கனகசபை மாஸ்டரும் அவரது பண்ணிசைக் குழுவும் நின்று ''பரா பரா பரமேஸ்வரா...'' என அடியெடுத்துக் கல்லூரி வணக்கப் பாடல் பாடுவது, இன்னும் மனதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

நவராத்திரி தினங்களில் தினமும் ஒவ்வொரு வகுப்பினர் பொறுப்பெடுத்து நடத்தினர். கனகசபை மாஸ்டரின் ''வெண்டாமரைக்கன்றி வெள்ளையுள்ளம்...'' என ஆரம்பிக்கும் நவராத்திரி ஸ்தோத்திரங்கள் இன்னும் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன, அக்காலங்களில், சில சமயங்களில் நைவேத்தியம் செய்யும் அன்ன வகைகளை ''தளிகை'' போட மாணவர்களின் துவிச்சக்கர வண்டியிலிருக்கும் மணிகள் (மூடிகள்) பலதடவைகள் உபயோகித்தது நல்ல ஞாபகம்.

ஆன்மீக ஒழுக்கம் மட்டுமல்ல - மேலும் சில அமைப்பு முறைகளிலும் பரமேஸ்வராக் கல்லூரி எடுத்துக்காட்டாக இருந்தது எனக் கருதலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்குத் தேவையான கல்வி நூல்கள், உபகரணங்கள் ஆகியன கிடைக்கப்பெறும் வகையில் ஒரு புத்தகசாலை கல்லூரிக் கட்டடத்துக்குள்ளேயே அமைக்கப் பட்டு பொறுப்பாளராக திரு. சங்கரப்பிள்ளை என்பவர் கடமையாற்றினார். பதில் தலைமை ஆசிரியராயிருந்த திரு. ராஜசேகர மாஸ்டரே புத்தகசாலைக்கு மேற்பார்வையாளராயிருந்தார்.

புத்தகப்படிப்பு மட்டுமன்றி வேறு பல வழிகளிலும் மாணவர்களுக்கு அனுபவம் பெறும் வாய்ப்பிருந்தது. அவற்றுள் நினைவில் உள்ளது, வாராவாரம் நல்ல தரமான பேசும் படங்கள் காண்பித்தல். திரு. சுப்பிரமணிய அய்யர் மாஸ்டரே பொறுப்பாயிருந்து ஒவ்வொரு படத்திலும் அழகான தமிழில் உடனுக்குடன் மொழிபெயர்பு செய்தல் அவருக்கே விசேடமான கலை எனலாம். கல்லூரி வளவிற்குள்ளேயே நல்ல தோட்டம் அமைத்து மாணவர்களுக்கு அதிலும் அனுபவம் பெறுதற்கான சந்தர்ப்பம் வழங்கப் பட்டிருந்தது. நடன விற்பன்னரான வசந்தகுலசிங்கம் மாஸ்டர் எனக்குப் பிடித்தமான ''ராரவேணு கோபபால'' என அடியெடுக்கும் பாடலுக்கு நடனம் கற்றுக்கொடுத்தும் நல்ல ஞாபகம்.

அதேபோல, இலங்கையிலேயே சிறந்து விளங்கிய சங்கீத பூஷணம் என். சண்முகரத்தினம் இன்னிசை கற்றுக்கொடுத்தார். அவரது இசையில் கவரப்பட்டு சிலவேளைகளில் அவரது வகுப்புக்குச் சென்று பார்த்துக்கொண்டிருப்பேன். ஒருசமயம் நான் அவரது கண்களில் பட்டதும், அழைத்து ஒரு பாட்டு பாடச் சொன்னார். அச்சமயம் மனதிலிருந்த ''ரகுபதி ராகவ ராஜாராம்'' என்ற பாடலைப் பாடி அவரது போற்றலால் பெருமகிழ் வெய்தினேன்.

உடற்பயிற்சியிலும் பரமேஸ்வரா சிறந்து விளங்கியது. நான் சிறுவர் பிரிவில் பங்குபற்றியபோது, முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் எமது கல்லூரி முதன்மையிடத்தில் வந்தது நினைவில் நன்கு பதிந்துள்ளது. மூத்த மாணவர் திரு. இரத்தினசிங்கம் என்பவர் எமது குழுவிற்கு தலைவராயிருந்தார். உதைப்பந்தாட்டத்தில் மாவீரர்கள் அரிசந்திரன், லோகநாதன், பேரின்பநாயகம் ஆகியோரும் திறம்பட விளையாடி பரமேஸ்வராவின் புகழுக்கு அணிகலன்களாயிருந்தனர்.

பெருமதிப்புக்குரிய ஆசிரியப் பெருமக்கள் சிலரின் உயர்ந்த குணாதிசயங்கள் கவரக்கூடிய வகையில் அமைந்திருந்தன. அவற்றில் சிலவும் குறிப்பிடப்படும்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலால் அது உயிரினும் ஓம்பப்படும்'' - இது அன்றைய தலைமை ஆசிரியர் திரு. சிவபாதசுந்தரத்தின் ஆழப்படிந்திருந்த உண்மை.

ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல ஆன்மிகம் தலையாயதொரு செயற்பாடாக இருந்தது. இதில் தலைமை ஆசிரியராயிருந்த திரு. சிவபாதசுந்தரம் அவர்களை யாரும் மறக்கமுடியாது, மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்கள் கூட கல்லூரியின் சட்டதிட்டங்களைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாயிருத்தல் திரு. சிவபாதசுந்தரத்தின் தலையாயதொரு கடமையாகக் காணப்பட்டது. அவ்வொழுக்கத்திலிருந்து தவறிய எவரையும் அவ்வப்போது கவனித்து உரிய நடவடிக்கை எடுப்பது, திரு. சிவபாதசுந்தரத்தின் அதிமேலான குணாதிசயமாயிருந்தது. அதற்கு அவரே இணையானவர். இந்த விடயத்தில் பலர் கருத்துவேறுபட்டிருந்ததையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கமுடிந்தது. அவரது மிகையான கடும்போக்கே பிற்காலத்தில் அவருக்குப் பாதகமாயிருந்ததெனலாம்.

திரு. குமாரசேகரம் மாஸ்டர் 5ஆம் வகுப்புகள் வரையுள்ள வகுப்புகளுக்கு பொறுப்பாயிருந்தார். அக்காலத்தில் எனது வகுப்பில் கற்பித்த ஆசிரியர்களுள் பரநிருப சிங்கம் மாஸ்டர் காந்தியவாதி, கதர் உடைகளையே அணிவார். முகப்பவுடரை - ''இங்கிலாந்துப் புழுதி'' என்பார். சாதாரணமாக உபயோகிக்கும் சோப் துண்டுகள் பலவற்றை வீணாக்காமல் அவற்றை ஒரு துணியில் கட்டி நன்றாக முறுக்கினால் அந்த துண்டுகள் நல்ல பெரிய கட்டியாகும். தொடர்ந்து வீணடிக்காமல் உபயோகிக்கலாம் எனக் கூறியதை நானே நிரூபித்தேன். வீட்டிலேயே வாழைப்பழ ''ஜாம்'' செய்தல் பற்றி இலகுவான முறையில் சொல்லித்தந்ததும், அதை நானே வீட்டில் வெற்றிகரமாகச் செய்ததும் மனதில் பசுமையாகப் பதிந்துள்ளன.

வரைதல் மாஸ்டர் பொன்னையாவின் சாந்தமான முகம் மறக்க முடியாதது. எவ்வளவு பொறுமையாக மாம்பழம் வரைவதை கற்றுக்கொடுத்தார், அவருடன் இணையாக சின்னத்துரை மாஸ்டர், தனியானதொரு கொட்டிலில் மரவேலை, களிமண் வேலை, வரைதல் எனப் பல துறைகளிலும் விற்பன்னராயிருந்து எங்களுக்கு கற்றுத்தந்தார். அது மட்டுமல்ல, அவரது ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்புத் திறன் அபாரம். பாடவேலை இறுதியில் ஷேக்ஸ்பியரின் கதைகள் பலவற்றை அழகாக நாடகபாணியில் மாணவர்களுக்கு அதி உற்சாகமாகச் சொல்லுவார். அந்தக் கதைகள் இன்றும் மனதில் பதிந்துள்ளன.

6ஆம் வகுப்பில் கனகசிங்கம் மாஸ்டர் ஆங்கிலம் கற்பித்தார். மிகவும் கண்டிப்பானவர். வகுப்பில் ஆங்கிலம் மட்டுமே பேசவேண்டும் எனக் கண்டிப்பாயிருப்பார். தமிழில் பேசினால் ஒரு சதம் குற்றப் பணமாக வகுப்பு ''மொனிற்றரிடம்'' செலுத்தவேண்டும். அந்த காசைச் சேர்த்து, வார இறுதி நாள் வெள்ளிக்கிழமைகளில் நடக்கும் ஆங்கிலச் சொல்வதெழுதல் போட்டியில் வெல்வோருக்கு கொடுக்க ''சொக்லேட்'' வாங்கிவருவார். மேலதிகப் புள்ளிகள் பெறுவோருக்கு ஒரு ''சொக்லேட்'' கொடுப்பார். பல தடவைகளில் அவரிடமிருந்து ''சொக்லேட்'' பெற்று பெருமிதம் அடைந்ததை மறக்கமுடியுமா? எவ்வளவுதான் கடும்போக்குள்ளவராயிருந்தாலும் கனகசிங்க மாஸ்டரின் கற்பிக்கும் ஆற்றலுக்கு அவரே இணையாவார்.

எட்டாம் வகுப்பில் ஆங்கில ஆசிரியராயிருந்தவர் செல்லத்துரை மாஸ்டர். அவரும் கனகசிங்க மாஸ்டரைப் போல திறமை வாய்ந்தவராகவே இருந்தார். ஆனாலும் தண்டிப்பதில் மிக கடுமைதான்.

நாகலிங்க மாஸ்டர் எட்டாம் வகுப்பில் கணித அசிரியர். சுவையும் கடுமையும் கலந்தவர். மிகவும் கண்ணியமாக கற்றுக்கொடுப்பார். அவரே மாலை வேளைகளில் தோட்டப் பயிற்சிக்கும் பொறுப்பாயிருந்தார். அதிலும் நான் மிகவும் விரும்பி சேர்ந்திருந்தபடியால், மிகவும் அவருடன் நெருக்கமான பழக்கம் இருந்தது. நல்ல உணவுப் பயிர்கள் வளர்ப்பதிலும் நாகலிங்க மாஸ்டர் கைதேர்ந்தவர் என்பதில் ஐயமில்லை. இது தோட்டப் பயிற்சி நேரங்களில் நான் நன்கு அறிந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே (8ஆம்) வகுப்பில் பூமிசாத்திரம் கற்பித்தவர் வெள்ளை வாத்தியார் என வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட பண்டிதர் ராமச்சந்திரன் (புத்தக சாலை சங்கரப் பிள்ளையவர்களின் மைந்தர்) மிகவும் கனிவானவர்.

சமய பாடத்துக்கும் ஸமஸ்கிருத பாடத்துக்கும் விற்பன்னரான சீதாராம சாஸ்திரிகள், சிங்களம் கற்பிப்பதற்கு, விற்பன்னரான ஒரு பௌத்த பிக்குவும் நியமிக்கப்பட்டிருந்தனர். அந்தந்தத் துறைகளில் பரமேஸ்வரா கல்லூரி திறமைசாலிகளை கொண்டிருந்தது என்பதற்கு இவர்கள் சிறந்த உதாரணங்கள்.

இவர்கள் மட்டுமன்றி, மகா வித்துவான் வேந்தனார், திரு முத்துஸ்வாமி அய்யர், திரு. வைத்தியநாத அய்யர், ராஜதுரை மாஸ்டர், ஞானப்பிரகாச மாஸ்டர், C . சிதம்பரப்பிள்ளை (CC) மாஸ்டர், சு.சிதம்பரப்பிள்ளை (SC) மாஸ்டர், இராசநாயக மாஸ்டர், சரவணமுத்து மாஸ்டர், பரராசசிங்க மாஸ்டர், உடற்பயிற்சி ஆசிரியர் ஆர். எஸ். குமாரசாமி இப்படிப் பற்பல விற்பன்னர்களையும் கொண்டிருந்தது எமது பெருமைக்குரிய பரமேஸ்வரா கல்லூரி.

ஒவ்வொருவரும் அவரவர்குரிய சிறப்பு லக்ஷணங்களை கொண்டிருந்தனர். அனைத்தும் எழுத்தில் படைக்க தனியொரு நூல் தேவை.

இவ்வாறாக பல்துறைகளிலும் திறமைமிகு ஆசிரியப் பெருமக்களை கொண்டிருந்தது பரமேஸ்வராக் கல்லூரி.

கல்லூரி ஸ்தாபகரின் கனவை நனவாக்கியது 1974ஆம் வருடம் கல்லூரி வடமாகாணத்தின் முதலாவது பல்கலைக்கழகமாக மலர்ந்ததே.

1978இல் அந்த முதலாவது பல்கலைக்கழகத்தின் முதலாவது மருத்துவக் கல்லூரியின் முதலாவது உடற்கூற்றுத்துறை தலைமை, அடியேனால் பெறப்பட்டது எனது இப்பிறப்பின் பாக்கியமன்றோ!

இன்று மிளிரும் யாழ். மருத்துவபீடத்துக்கு, முதலாவது உபவேந்தராயிருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுடன் கூட நின்று 1979இல் அடிக்கல் நாட்டியதும் நன்றே நினைவில் மலர்ந்து திகழ்கின்றது. யாழ். மருத்துவ வைத்தியர்கள் பலர் உலகளாவிய ரீதியில் சிறந்து விளங்குவது சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் கண்ட கனவின் பலாபலனே!

அத்தகைய இன்னோரன்ன சிறப்புகளை தன்னிடம் கொண்டுள்ள பரமேஸ்வராக் கல்லூரி - பல்கலைக் கழகமாக (பரமேஸ்வரா பல்கலைக் கழகம் என அழைக்கலாமே!!!) - என்றென்றும் வாழ்க வாழ்க வாழ்க!

**''லண்டன் அம்பி'' (டாக்டர் பரமேஸ்வர ஐயர் அம்பிகாபதி)**

*(பிற்குறிப்பு: மேற்கண்ட சிறிய குறிப்புகளில் ஏதேனும் தவறோ அல்லது முக்கிய சில குறிப்புகள் விடப்பட்டிருந்தாலோ மன்னித்தருளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனது நினைவுகளில் சிதறிப் பதிந்த சிலவற்றை மட்டுமே தெளித்துள்ளேன். - அம்பி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Experiences of Parameshvara College Old Boys

1. We had a cadet team given to Parameshwara college around 1960/61. It consisted of 25 members. I and Satcthithanandasivam were in it. Mr Tharmalingam was our cadet master. We went by train to Polgahawela and got a connection to another train that took us to Diyatalawa army camp. That train was for cadets. In all there were students from 37 schools with their cadet masters. It was my first train journey to Diyatalawa.

   We were given military training for one week. We were forced to wake up at 5 am in the very cold mornings. If someone didn't get up in 5 minutes another military officer would cane us. We had to do all types of odd jobs they told us to do, including scavenger job. After breakfast we had some exercise and ran about 2 miles.

   The life was difficult but enjoyable as we were all friends.

   **Mahendran Ketheeswaran**

2. I was in the hostel one day. One of the hostel mates wanted to go and watch a film in the town. His name was Rajanathan. He went to the boarding master whose name was J.C.Sivaganasundram and told" I am having a serious stomach problem I want to go to hospital". So the warden said okay but he knew he was telling a lie. So this guy went and watched the film and came with a bottle of serbet. When he came back, the warden asked about the hospital trip and the medication. He showed the bottle and the warden took the bottle and said "I will drink this at one go and I won't die", and he drank it and gave him a good thrashing

   **Mr. P. Premkumar, Uk**

3. Parameshwara College was responsible for a festival in Thirukethwaran temple. Every year a group of students, roughly about 25,under the leadership of a teacher used to take a cycle trip to the temple. I was in one of the trips under the leadership of Mr Kanagasabai Master. We were at the temple for a festival and then left for Vavuniya. From there we went to Trincomale. I think we stayed in a school. We had breakfast at a hotel called ABCD hotel. (ABCD stands for American British Chinese Diet.) The breakfast was sponsored by David who was the school prefect. We were riding in the nights without lights. I cound't recall everything that we did on the trip. We had cycle tyres punctured, repaired with the solution that we carried. I can't remember paying any money for our meals- maybe Kanagasabai master paid off out of his pocket. Very memorable trip. I don't think that I can do it again.

   **Mahendran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வரன் ஆலயத்தில்

ஆன்மீகமும் கடவுள் வழிபாடும், மக்களது இரண்டு கண்கள். இன்றைய மாணவர்கள் நாளைய மக்கள். இன்றைய மாணவரின் உடல், உள வளர்ச்சியே நாளைய மக்களின் வாழ்க்கை வளம். எனவே '**தம் கல்லூரியிற் பயிலும் மாணவன் ஏனைய கல்லூரியிற் பயிலும் மாணவனைப்போல் ஒற்றைக் கலாச்சாரக் கல்வியில் மட்டுமே தேர்ந்தவர்களாக விளங்கக்கூடாது**' என்று சேர். பொன். இராமநாதன் அவர்கள் விரும்பியதில், அந்த விருப்பு எமது கல்லூரிக்கெனப் பிரத்தியேகமாக அவர் நிர்மாணித்த பரமேஸ்வரன் ஆலயமாக பரிணமித்ததில் வியப்பில்லையல்லவா?. அவரெமக்களித்த அவ்வாலயத்தை இயன்றவரை பயன்படுத்த நாம் தவறவில்லை என்பதனை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தினமும், கல்லூரி ஆரம்பமாகுமுன் மாணவர் ஒழுங்காக ஆலயம் சென்று அமர்ந்தபின் விநாயக வணக்கத்தத்தைக் குறிக்கும் '' திகடசக்கரச் செழுமைந்துளான்'' என்னும் தொடக்கத்தினையுடைய கந்தபுராணத்துச் செய்யுள் ஓதப்படும். அதன் பின் மாணவர் அனைவரும் இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டித்து, இறைவனை மானஸீகமாகத் துதிப்பர். பின் இந்து பக்தர்களின் முதலிலும் முடிவிலும் ஓதப்படுவதும், ''பொய்மையிருந்து மெய்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், அநித்தியத்திலிருந்து நித்தியத்திற்கும் எம்மை இட்டுச் செல்க'' என்ற பொருளை அடக்கியதுமான வடமொழி ஸ்லோகப்பகுதியை, ஆலய அர்ச்சகர் ஓதுவார். பின்னர் கல்லூரிப் பஜனைக் கோஷ்டியினர், பண்முறையோடு பக்தி ரஸம் ததும்பும் தேவாரப்பாக்களிரண்டை ஓதியதும், பெரியபுராணத்துச் செய்யுளென்று வாசித்துப் பயன் சொல்லப்படும். இவ்வாண்டிற் குங்குலியக்கலையநாயனார், மானக் கஞ்சாற நாயனார் ஆகிய இருவரினதும் செய்யுள்கள் படித்துப் பயன் சொல்லப்பட்டன. இறுதியாகக் கல்லூரிப் பஜனை கோஷ்டியினர், சிவபுராணத்து முதலிரண்டடிகளையும் ஓதத் தீபாராதனை காட்டல் முடிவுற்றதும் மாணவர் ஆலயத்தை வலம் வந்து வகுப்புக்களுக்குச் செல்வர். மாணவர் வெளியேறும் வரையும் பஜனைக் கோஷ்டியினர் அக்ஷரமாலிகையை ஒரு வாரமும், கல்லூரிக் கீதத்தினை ஒருவாரமுமாகப் பாடுவர்.

மண்ணுலகில் அவதரித்த மகான்களுள் ஒருவரான மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினம், மாணவர்களால் மனோகரமாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை ஆலயத்தில் விசேஷ ஆராதனையும் அபிஷேகமும் நிகழ்ந்தன. கல்லூரி மாணவ தலைவர் குழுவினரால் மகாசிவராத்திரி தினம், வெகு விமரிசையாகக் கல்லூரி ஆலயத்திற் கொண்டாடப்பட்டது. நான்கு ஜாமப் பூசைகளும் விசேஷ அபிஷேகங்களும், பூசைகளும் புராணபடனமும் நிகழ்ந்தன. அன்றைய தினம் ஆசிரியர் திரு. செ. செல்லத்துரை அவர்கள் அடிமுடி தேடிய படலத்தை ஆதாரமாகக் கொண்டு ''அரனின் பெருமை'' என்ற பொருள் பற்றி அரியதோர் சங்கீதக் கதாப்பிரசங்கம் செய்தனர். வழமை போல் அவிச்சின்னதாராபிஷேகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்சோதி தரிசனம், திரதளவில் வார்ச்சனை என்பனவும் நிகழ்ந்தன. கல்லூரி மாணவர்கள் அனைவரும் அன்றையதினம் ஆலயத்திற் குழுமி, பிரார்த்தனைகளில் தம் நேரத்தைக் கழித்தனர்.

ஈழத்தமிழினத்திற்கு எதிர்பாராமல் ஏற்பட்ட இன்னல்களின் விளைவால் நம் கல்லூரி ஸ்தாபகரின் பிறந்த தினத்தை ஒட்டி நாம் கொண்டாடும் "**இலட்சிய ஜெயந்தி**" விழாவை இம்முறை கொண்டாட முடியவில்லையென்பதனை வருத்தத்துடன் குறிப்பிடுகின்றோம்.

நாயன்மார் நால்வரினதும் குருபூஜைத் தினங்கள் முன்னெப்போதையும் விட இம்முறை பிரமாதமாகக் கொண்டாடப்பட்டன. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தினத்தை உருத்திர இல்லத்தினரும், திருநாவுக்கரசர் தினத்தை பரமேஸ்வர இல்லத்தாரும், மணிவாசகர் தினத்தை மகேஸ்வர இல்லத்தாரும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தினத்தை விஷ்ணு இல்லத்தாரும் பிரமிக்கத்தகுந்தவகையிற் கொண்டாடினர். திருஞானசம்பந்தர் தினத்தில் மறை. திருநாவுக்கரசு அவர்களும், திருநாவுக்கரசர் தினத்தில் பண்டிதர் ச. இராமச்சந்திரன் அவர்களும், மணிவாசகர் தினத்தில் ஆசிரியர் செ. செல்லத்துரை அவர்களும் சொற் பொழிவாற்றினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தினத்தன்று மகேஸ்வரபூசையும் அலங்காரத் திருவிழாவும் ஊர்வலமும் நிகழ்ந்தன.

மாணவர் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் பக்தி, கலையார்வம் என்பனவற்றைத் தூண்டும் வகையில் இவ்வருடத்திய "நவராத்திரி" தினங்கள் கொண்டாடப்பட்டன. கோவில் கழுவுதல், தோரணம் கட்டுதல், கொலுவிருக்கும் அம்பாளுக்கும், எழுந்தருளும் மூர்த்திகளுக்கும் அலங்காரங்கள் செய்தல், பிரசாதம் தயாரித்தல் ஆகிய பணிகளையெல்லாம் மாணவர்கள் மிக்க ஆர்வத்துடன் செய்தார்கள். பத்தாவது தினமாகிய விஜயதசமியன்று காலை ஒன்பது மணி முதல் நடுப்பகல் பன்னிரண்டு மணிவரை விசேஷ அபிஷேகமும் ஆராதனையும் நிகழ்ந்தன. பின் மாலை ஆறு மணியளவில் ஊர்வலம் புறப்பட்டுத் திருநெல்வேலிச் சிவன் கோவிலில் மகிஷாட சூரசம்ஹாரத்தின் சின்னமாக வாழை வெட்டுதல் முடிந்ததும் நல்லூர் கந்தசாமி கோவில் சிவன் கோவில் வழியாக கல்லூரிக்கு மீண்டது.

சைவத்தையும் தமிழையும் ஒரு சேரவளர்த்தவரும், ஐந்தாங்குரவராக ஸ்தாபிக்கப்பட்டவருமான ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை பிரம்மா இல்லத்தினரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நடேசர் அபிஷேக தினங்களும், திருக்கார்த்திகை தினமும், விடுதிச்சார்ந்த மாணவர் களாலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. கார்த்திகை தினத்தன்று ஆலயமெங்கும் தீபங்களேற்றி அரனை வழுத்தி மனமகிழ்ந்தனர். ஆதியந்தமுமற்ற அரனின் ஜோதிப் பிழம்பான "சொக்கப்பனை" கொழுத்தப்பட்டது.

சென்றாண்டு போலவே இந்தவாண்டும் கல்லூரி ஸ்தாபகர் நினைவு கொண்டாடப் பட்டது. அன்றைய தினம் ஸ்தாபகரின் திருவுருவப் படம் மங்கலப் பொருட்களுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கல வாத்தியங்களுடனும் சுன்னாகத்திலுள்ள அவரது சமாதிக்கு எடுத்துச் சென்று, அங்கு நடந்த விஷேச பூசைகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

ஐக்கியத்தைத் தகர்க்கவென தனிச் சிங்கள மசோதா பாரபட்சமாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆனி மாதத்திய ஐந்தாம் தினம், கூட்டுப் பிரார்த்தனை தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் ஆசிரியர்களும் மாணவர்களும் உண்ணாவிரதம் காத்து, எதிர்ப்புச் சக்தியை அருள வேண்டுமென்று பரமேஸ்வரனைப் பிரார்த்தித்தோம்.


இந்நிகழ்வுகள் செவ்வனே நடப்பதற்குப் பெரிதுமுதவிய மாணவர் ஆசிரயர்களுக்கும், அர்ச்சகர் சடேசனுக்கும் பணிவோர்க்கருளும் பரமேஸ்வரன் அருள் கிட்டுமாறு பிரார்த்திக்கிறேன்.

**மு. சி. சிவபாதசுந்தரம்**
ஆலயப்பணி நிர்வாகஸ்தர்.

*(குறிப்பு: இக்கட்டுரை பரமேஸ்வராக் கல்லூரியின் 1956 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட ஆண்டு மலரில் இருந்து எடுத்து இங்கு மீளவும் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதனை நன்றியுடன் தெரிவிக்கின்றோம்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**PARAMESHVARA COLLEGE STAFF - 1952**

**Parameshwara College - Thirunelveli - Jaffna - Srilanka**

**College Motto - திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்**

**Teaching staff - April - 1952 From left to right**

**Seated** – Rev. Thero - Miss. Kanthiyapillai - Miss.Mathiyaparanam - Mrs. Balasubramaniam - Mrs. Arumugarajah - Mrs.Thavarajah - Mrs. Thedchanamoorthi - Miss. P. Ramalingam (Mrs.P.Ampalavanar) - Miss.Selvamanickam(Mrs.Ponnuthurai)

**Standing 1st row** Principal Mr.S.Sivapathasundaram - Mr.M.Gnanapiragasam - Mr.S.Kumarasekaram – Mr. P.Muthuswami iyer - Mr.Balasubramaniam – Mr. Arumugarajah - Mr.T.Thavarajah Mr.Pararajasingam - Mr.S.Sithamparapillai – Mr.T.K Rajasekaram - Mr.Thedchanamoorthi – Mr.Saravanamuthu

**Standing 2nd row** Mr.Selvathurai - Mr.Vasanthakulasingam - Mr.C.Sithamparapillai – Mr.Rajadurai - Mr.Keetheeswaran - Mr.Karunakaran - Mr.Supramaniam - Mr.S.Sivagnanasundaram - Mr.Kanakasingam – Mr.Nadarajah - Mr.Pathmanathan - Mr.Ponniah - Mr.Sivarajah

**Standing 3rd row** Mr. Kanapathipillai - Mr.Paranirupasingham Mr.Radhakrishnan - Mr.Venthanar - Mr.Rajanayakam - Mr.Sinnathurai – Mr.R.S. Kumarasamy - Mr.Ampalavanar - Mr.Vaithianatha iyer - Mr.Balasubramaniam - Mr.Seetharama shasthri - Mr.Kanagasabai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Prefects - 1956



Standing Left to right 1. Panchalingam 2. Sripathy 3. Panchalingam 4. Elayathamby 4. Paramalingam 5. Shunmugalingam 6. Sarvanandan 7. Sivapatham

Seated Left to Right 1. Ponnampalam 2. Nadarajah 3. Principal Mr.S.Sivapathasuntharam 4. Umamaheswaran 5. Sivapathasundaram

## Prefects - 1958



Standing Left to right 1. Alfred 2. Yogaratnam 3. Kungethapatham 4. Parameswaran 5. Rajeswaran 6. Yogasundram 7. Cumarasamy 8. Jeyaseelan

Seated Left to Right 1. Subramaniam 2. Shunmugalingam 3. Principal Mr.Sivapathasuntharam 4. Sarvanandan 5. Paramaguru




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Prefects - 1959



Standing Left to right 1. Nagalingam 2. Yogaratnam 3. Cumarasamy 4.Rajeswaran 5. Jeyadeva 6. Ratnarajah 7. Kuncithapatham
Seated Left to Right 1. Paramaguru 2. Sarvanandan 3. Principal Mr.S.Sivapathasuntharam 4. Shanmugalingam 5. Yogasundaram

## J/Parameshwara College Board of Prefecte - 1967



Seated Left to right :- K.Manoharan, S.Subramaniam, Principal, A.Ananesan and W.Premkumar




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Seated Left to right :- S.Saroja, Principal & A.Rajeswary

## Football Team 1949




Manager Mr.Arumugaraja, Captain Mr.Shanmuganathan, Principal Prof.S.Sivapathasundaram, Vice Captain Mr.Subramaniams, Coach Mr.Subramania Iyer



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Jaffna Inter Schools 1952 Football Champions




Standing Left to right

1.Mahesananthan 2. Selvakumar 3. Shunmugalingam 4. Mahenderan 4. Rajeswaran 5. Shunmugalingam 6. Sampanthan 7. Perampalam 8. Ponnampalamm 9. Shunmugam

Seated Left to Right

1. Mr.R.S.Kumarasamy 2. T. Perinpanayagam 3. Sundralingam 4. Principal Mr. S. Sivapathundaram 5. S.Sarvanabavan 6. Logathasan 7. Mr.Subramania Iyer, James - ground boy



The College Second Team for Football - 1956



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The College Cricket Team - 1959



Standing from Left 1. Kanagaratnam 2. Mahadeva 3. yogaratnam 4. Mahalingam 5. Senthinathan 6. Thiaseelan 7. Alfred 8. Nagalingam 9. David

Seated from Left 1. Mr.R.S. Kumarasamy 2. Shunmuganathan 3.Principal Mr.Sivapathasuntharam 4. Jeyadeva 5. Mr.Wilvarajah

## The Winners of the Music and Oratorical Competitions (Girls)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Primary School Girls Singing at Navarathiri**

First Row - Ambikanithi, Pushpalochani, Kosaladevi, Chandradevi, Parvathavarthini
Second Row - Logambigai, Kirija, Puwaneswary, Akila



**J/Parameswara College Hostel Union 1967**

Seated L.to R.K.Yamunasingam Prefect, W.Premkumar Prefect, K.Ratnasingam Agri. Inspector J.C.Sivagnanasundaram, Warden, Principal, N.Thavanesan Senior Prefect, S.Jeganathan Res.Warden, A.Kanagasabai Agri.Advisor, S.Pirapananthan Prefect



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Football Team 1956



Standing 1.Mr.Selvakumaran 2. Mr.Yogeswaran 3. Mr.Shanmugalingam,
4. Mr.T.Perinpanayagam 5. Maheswaran 6. Subramaniam 7. Mahesananthan
Seated 1. Selvarajah 2. Muthulingam 3. Panchalingam 4. Ponnampalam 5. Sivalingam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி பல்கலைக்கழகமாகுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ceremonial Inauguration of the Jaffna Campus of the University of Sri Lanka on 6th October 1974

1) The SIXTH Campus of the University of Sri Lanka was made by the declaration on 15th July by Dr. Al Haj Badiudeen Mohamed, Minister of Education and the Pro Chancellor of the University of Sri Lanka, within the Parameshwara College Premises, Jaffna as the nucleus.

   Dr. K. Kailasapathy, Head of Tamil and Hindu Studies was appointed as the FIRST President of the Jaffna Campus.

2) The Pro Chancellor Dr. Al Haj Badiudeen Mohamed, the Minister of Education extended an invitation to the then Prime Minister of the Republic of Sri Lanka Mrs. Srimavo Ratwatte Dias Bandaranayake to ceremonially declare open the University of Jaffna in the premises of Parameshwara College, Thirunelvely, Jaffna in October 1974 and to give a suitable date. Hon. Prime Minister was very much keen to visit Jaffna and to meet the Jaffna Farmers.

3) Hon. Prime Minister summoned the Security Council members through the Secretary, Defence for an urgent meeting consisting of the Chiefs of Army, Navy, Air force, the Police, CID officers and the Intelligent officers and declared that she intended to visiting Northern Province as it was scheduled to open the Jaffna University on behalf of the University Grants Commission by her during the first week of October 1974. She requested Security Council members to make all security arrangements and her travel arrangements and to convey all details within 10 days' time. The Security Council members obtained all reports from the relevant officers, met the Hon. Prime Minister at the Security Council meeting along with the Secretary Defence and after a lengthy discussion conveyed to her that LTTE militants were very active in Jaffna and to put off her visit by a few months. The Hon. Prime Minister was disappointed and she was very particular in opening a college called Parameshwara College the in the Northern Province



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mainly for the education of Hindu boys and the invitation was from the University Grants Commission and from the late mayor Alfred Duraiappah. Through the dissussions she had with the members of the Security Council to Senior Supdt of Police and Director, Prime Ministers Security Division, late Mr. Rajasuriya, a Senior Officer, we knew that the Hon. Prime Minister was unhappy and disappointed. She was very particular in visiting Jaffna. Her Prime Minister Security Division Director, late Mr. Rajasuriya (SSP) sought permission from the Hon. PM to send a reliable, independent officer secretly to Jaffna to obtain an independent report and he had recommended the name of Mr. T. Perinpanayagam, Inspector of Police, and an old boy of Parameshwara College to visit Jaffna and to submit a report within 10 days. Hon. PM approved the visit of Mr. T. Perinpanayagam. On 23.09.1974 he was summoned by late Mr. Rajasuriya (SSP) to the Hon. PM's office, a briefing was given revisit, the programme of late Hon. PM was handed over to him and was told to visit Jaffna and to collect realistic information and submit and independent report within 10 days.

The programme was:

**05.10.1974**

1. Arrive at Palaly Airport
2. Visit Naga Vihara Temple
3. Visit Nallur Temple
4. Reception at Town Hall

**06.10.1974**

1. Meeting with Farmers
2. Opening of the University
3. Public Meeting
4. Cultural Show

4) He left to Jaffna on 23.09.1974 and arrived on 24.09.1974 and remained till 28.09.1974. He disguised himself in different form to gather intelligence – as a villager, beggar, and a carter during these 5 days. He visited the places according to the programme. He travelled by bus, train, taxi, carts and bicycles to the said places, and slept at Bus stands, pavements, Trains and gathered vital information from the public. He arrived on 29.09.1974 and submitted a written report to Director/Prime Ministers Security Division late Mr. Rajasuriya, recommending the visit of Hon. Late PM to Jaffna. There would be train and taxi strike with black flags all along the road from Palaly to Jaffna and to visit Jaffna by Helicopter and not to detail armed officers along the route up to Jaffna from Palaly.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) On receipt of the report, Hon. Late PM was very happy. She summoned the Security Council Officers and conveyed that she had an Independent Report and that she had confirmed her visit between 05.10.1974 and 07.10.1974 and to make all security arrangements and handed her programme to the members of the Security Council.

6) Late Hon. PM requested Mr. Perinpanayagam to accompany her to Jaffna in the helicopter. He told her that he would be at Palaly Airport in advance and to check the security arrangements and she agreed. She also cautioned him that she was visiting Jaffna against the advice of the Security Council members and purely trusting on the report submitted by him.

7) He gave the following details regarding programme and public participation:

**05.10.1974**

1. Arrive at the Palaly Airport - There would be about 5,000 - 6,000 people to receive her
2. Visit Naga Vihara, Jaffna - Private visit - Only Officials
3. Visit Nallur Temple - Private visit - Only Officials
4. Reception at Town Hall - Hosted by late Mayor of Jaffna
   Mr. Alfred Duraiappa, Special Invitees and Council members

06.10.1974

1. Meeting with Farmers in Thirunelvely Area – 5,000 to 6,000 people
2. Opening of the University - 2.25 p.m. – 6,000 to 7,000 public, Students, Lecturers & Invitees
3. Public Meeting - Duraiappah Stadium - 10,000 to 12,000 Public and Special Invitees. Public Meeting organized by His Worship the Mayor
4. Cultural Show- Same Venue

8) Mr. T. Perinpanayagam accompanied the late Hon. PM during her visits from the Palaly Airport to Naga Vihara, Nallur Temple and to the Town Hall and on 06.10.1974 to meet the Farmers, and for the opening of the University, Public meeting at Duraiappah Stadium and finally to the Cultural show.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Photograph - Visting Nallur Temple
2. Photograph at the Opening of the University

**Conclusion:**


9) Jaffna University was ceremoniously inaugurated by late Hon. Prime Minister on 06.10.1974 at 2.25 p.m. in the presence of large gathering. The visit was very successful as she was determined to open the University. She thanked Mr. T. Perinpanayagam for the honest, genuine and truthful report. His report outweighed the Report of the Security Council. He being an Old boy of Parameshwara College and who was educated for nearly 10 years in the College, where he excelled in Sports activities and served as a Head Prefect of the College was happy the dream of late Sir Ponnambalam Ramanathan was full filled. Finally a university was opened in Northern Province for the Hindu Students for which Mr.T.Perinpanayagam Contributed and had played a very important role.

**T.Perinpanayagam**
President - Parameshvara College
Old Boy's Association, Colombo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Hon Prime Minister's Visit to Jaffna for the Ceremonial Opening of the Jaffna University 05-10-1974 and 06-10-1974



Jaffna Campus - Students awaiting for the arrival of the Hon. Prime Minister



Hon Prime Minister arriving at the University accompanied by the Vice Ohancellor and Security Officer Inspector T.Perinpanayagam at 2.25p m



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Hon P.M. Addresing the Invitees Staff and Students after declaring the Opening of the University Campus at 2.25pm



Returning after a special Pooja Escorted by Inspector T.Perinpanayagam (Behind the Hon.P.M)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘பரமேஸ்வரா வித்தியாலயம்’ – பெயர் மாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரி, பரமேஸ்வரா வித்தியாலயம் என பெயர் சூட்டப்பெற்றது (19-11-2012)

'நம(ச்)சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க' எனப் பார்வதி சமேத பரமேஸ்வரன் பாதம் பணிந்தும், திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய் எனப் பரம்பொருளையே நெஞ்சில் நிறுத்தி, அரும்பெரும் தொண்டாற்றிய வள்ளல் அதிமேன்மை மிகு சேர்.பொன். இராமநாதன் அவர்களையும் புந்தியில் வைத்தடி போற்றி, சமூகமளித்தலில் பழைய மாணவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, இதுவரை நடைபெற்ற நிகழ்வுகளைத் திரட்டி அறிக்கையாக சமர்ப்பிக்கிறோம்.

எங்கள் அனைவரது அடிமனத்திலும் உறங்கிக்கொண்டிருந்த பரமேஸ்வரா கல்லூரி, அதன் மகிமைகள், அது உருவாக்கிய கதாநாயகர்கள், சாதனையாளர்களை எம்மால் மறந்துவிட முடியாதுள்ளது. மீண்டும் நினைவுகளைத் தந்துகொண்டேயிருக்கிறது. 1974இல் பரமேஸ்வரா இல்லாமல் போய்விட்டதே என்ற ஆதங்கத்தில் இருக்கும் எமக்கு மீண்டும் ஒரு பரமேஸ்வரா என்ற கனவைக் கண்ணுற்றோம்.

சாதனைக் கதாநாயகர்களுள் ஒருவராகிய முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் திரு.தம்பையா பேரின்பநாயகம் மூலமாக வெளிவந்த செய்தியை அறிந்து, சக மாணவர் சகோதரர்களாகிய நாம் எழுச்சியடைந்தோம். கூடவே இது சாத்தியமா என்ற அச்சமும் எமக்கு எழாமல் இருக்கவில்லை. வேடிக்கையான செய்தியா அல்லது கனவா என்றும் எம்மால் எண்ணத் தோன்றியது.

சகோதரர் திரு. த. பேரின்பநாயகமும் அவருக்கு உத்வேகத்தை அளித்து துணைநின்ற ஏனைய சகோதரர்களும், இதேவேளை மறக்க முடியாத நன்றிக்கு உரித்தானவர்கள் எனத் தெரிவிக்கின்றோம். இவர்கள் தலைநகரிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களாவர். தலைநகரில் 02-04-2006 அன்று முதலில் பழைய மாணவர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து, அதன் ஸ்தாபக அங்கத்தவர்கள், முதல் தலைவராக திரு. த.பேரின்பநாயகம் அவர்களைத் தெரிவு செய்தனர். அவரது தலைமையும், திடசங்கற்பமும் எம்மை ஈர்த்துள்ளது. எமது கனவை நனவாக்க ஆவன செய்தும், வழிநடத்தியும் வருகின்ற பெருந்தகைக்கும், என்றென்றும் நன்றியுடையவராயிருப்பது எம் கடனாகும்.

இவ் உருவாக்க முயற்சியினால் 22.08.2009-ல் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் திரு. த. பேரின்பநாயகம் தலைமையில் யாழ்ப்பாண பரமேஸ்வரா கல்லூரி பழைய மாணவர்கள் ஒன்று கூடல் நடைபெற்றது. இதில் சுமார் முப்பந்தைந்து பழைய மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். அவரது உரையில் மீண்டும் ஒரு பரமேஸ்வரா உருவாவதற்குரிய வேண்டுகோள் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. சபையோரும் பல கோணங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கல்லூரியை இழந்த ஆதங்கங்களை வெளிப்படுத்தினர். இயன்றளவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்தனர். முடிவில் யாழ்ப்பாணத்தில் செயலாற்றுவதற்கு ஒரு செயற்குழு உருவாக வேண்டும் என்பதை உணர்ந்து திரு.த. பேரின்பநாயகம் ஆலோசனைக்கு அமைவாக, சட்டத்தரணி திரு. கனக. நமநாதன் தலைவராகவும், முன்னாள் மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு.சு.ஏகாம்பரநாதன் செயலாளராகவும், முன்னாள் பேராசிரியர் திரு.ச.யோகராசா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இம்முயற்சி ஒவ்வொரு அங்கமாக வளர்ச்சி காணத்தொடங்கியது. கொழும்பு - யாழ்ப்பாண சங்கம் இணைந்து பரமேஸ்வராக் கல்லூரி ஆரம்பதின - நினைவுநாள் விழா 13.08.2010ல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் உபவேந்தர் N.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்றது. உயர்கல்வி அமைச்சர் S.B. திசாநாயக்கா பிரதம விருந்தினராகவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்ததும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விழாவில் பழைய மாணவர்களால் மீண்டும் ஓர் பரமேஸ்வரா உருவாக வேண்டும் என்ற அவா நிலையானதாக அமைந்தது.

அடுத்த கட்டமாக திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையை பெயர் மாற்றி மீண்டும் ஒரு பரமேஸ்வரா உருவாக வாய்ப்புள்ளதாகக் கருதப்பட்டது. இக்கருத்தை சாத்தியமாக்க ஆலோசனைகள் பெறப்பட்டன. அப்பாடசாலை சமூகத்தினரிடமிருந்து மறுப்புகள் இல்லாமல் ஆதரவும் கிடைத்தது.

தொடர்ந்து சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் ஆலோசனைகள் பெற்றதன் விளைவாக வடமாகாண கல்வித் திணைக்களக் கட்டமைப்பு குழுவின் தீர்மானத்திற்கு அமைய 'பரமேஸ்வரா ஆரம்ப பாடசாலை' என 25.04.2012 திகதியன்று மாற்றியமைத்து அனுமதியும் அளிக்கப்பட்டு விட்டது என்ற தகவல், மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியதாகி விட்டது. இதற்கு அப்பாடசாலை அதிபர் திரு. விஜயசுந்தரம் அவர்களது ஆதரவும் பங்களிப்பும் மிக நன்றிக் கடனுக்குரியதாகும்.

இம்மகிழ்ச்சியை பெயர் மாற்ற விழாவாக நடாத்த, கொழும்பு ப.மா.ச தலைவர் விரும்பினார். அதற்கமைய அவரது வழிநடத்தலின்படி, இவ்விழாவை சேர். பொன் இராமநாத வள்ளலின் குருபூசை தினமாகிய 19.11.2012 திங்கட்கிழமை காலை பரமேஸ்வரன் ஆலயத்தில் அபிடேக ஆதாரனையுடனும், வள்ளலின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை அஞ்சலியும், பல்கலை மண்டபத்தில் சிறப்புரைகளும், பல்கலைக்கழகத்தின் அனுசரணைகளுடன் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் கலந்துகொண்ட பின், பகல் 11 மணியளவில் பாடசாலையின் தென் திசையிலிருந்து அருள்பாலித்து வருகின்ற திருமிகு வைரவமூர்த்தி ஆலயத்தில் - வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன குருமகா சந்நிதானம், வலயக் கல்விப் பணிப்பாளர், அதிகாரிகள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், கொழும்பு-யாழ்ப்பாண பழைய மாணவர்கள் சமூகமாக, தீபாராதனை, பூசை வழிபாடுகளின் பின்னர், ஆதீன சுவாமிகள் மற்றும் பிரமுகர்கள் மாலை மரியாதையுடன் மங்கள வாத்திய சகிதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றி, பாடசாலைக் கொடியேற்றப்பட்டு, மாணவர்கள் திருமுறை ஓதிய பின்னர், பணிப்பாளர் அவர்களால் கரகோஷமும் மங்கள வாத்திய இசையோடும், **'பரமேஸ்வரா வித்தியாலயம்'** பெயர் திரை நீக்கம் செய்யப்பட்டு மகிழ்வடைந்தோம்.

இம்மங்கள நிகழ்வின் பின்னர் யாவரும் பிரார்த்தனை மண்டபம் அடைந்து அதிபர் ந.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர். சிறப்புரையாற்றியவர்களது. உரைகள் உணர்வுபூர்வமானதாகவும் வரவேற்கத்தக்கதாகவும் அமைந்ததும், இதில் திரு. ஆறுதிருமுருகன் அவர்கள் ஆற்றிய உரை அனைவருக்கும் எழுச்சியை ஏற்படுத்தியது எனலாம். அவருக்கு திரு.த. பேரின்பநாயகம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இவ்விழா முடிவுற்றதும் அதிபரது அலுவலகம் சென்று அதிபரிடம் கொழும்பு ப.மா.ச. தலைவர் ஒரு முழு அளவிலான பரமேஸ்வரா கல்லூரியின் படமும், திரு.சு. இரத்தினகோபால் தான் தயாரித்த செப்புத் தகட்டில் படைப்புச் சித்திரமாகப் பதிக்கப்பட்ட சேர்.பொன். இராமனாதனின் உருவமும் அன்பளிக்கப்பட்டது. வளரட்டும் பரமேஸ்வரா வித்தியாலயம் மேலும், கொழும்பு ப.மா.சங்கத்தினால் இப்பாடசாலைக்கு ரூபா. இரண்டரை லட்சம் பணமும், இரண்டு கணனிகளும், மற்றும் உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அன்று முதல் இன்று வரை செய்யப்பட்ட செலவுகள் முழுவதையும், அச்சங்கமே செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இப்பாடசாலையில் 5ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில், அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற 16 மாணவ மாணவியர்களுக்கு, எமது சங்கத்தின் சார்பாக கல்விச் சாதனங்கள் அடங்கிய பரிசுப் பொதிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, பரமேஸ்வரா வித்திலாலய பெயர் மாற்றும் நிகழ்வை வெற்றிகரமாய் நடாத்துவதற்கு அயராது உழைத்த வித்தியாலய அதிபரையும், ஆசிரியர்கள் சிலரையும், கௌரவிக்கும் முகமாக 9-07-2013 அன்று, வித்திலாயத்தில் ஓர் வைபவம் ஒழுங்குசெய்யப்பட்டு, அவர்களுக்கான கௌரவ சான்றிதழ் வழங்கல், மற்றும் பரிசுப் பொதி அன்பளித்தல், ஆகிய நிகழ்வுகள் எமது சங்கத் தலைவரின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது.

அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்களினால் இப்பாடசாலை உபகரணங்களை பாதுகாக்கும் பொருட்டு, காவலாளி ஒருவரை நியமித்து, அவரது மாதாந்தத் ஊதியத்தைக் கொடுப்பனவு செய்யவும் ப. மா. சங்கம் பொறுப்பேற்றது.

வரும் காலத்தில் இப்பாடசாலையில் படிப்படியாக வகுப்புக்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இது விடயமாக பாடசாலை அருகில் உள்ள காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பாடசாலையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்கு, சகல பரமேஸ்வரா கல்லூரி பழைய மாணவர்களின் பூரண ஒத்துழைப்பு, கூட்டங்களில் பங்குபற்றுதல் ஆகியவை வரவேற்கத்தக்கதும் அவசியமும் ஆகும்.

பழைய மாணவர் சங்கம் - கொழும்புக்கிளை (2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளல் சேர். பொன். இராமநாதனின் எண்ணம் மீண்டும் செயற்பாடடைய முயற்சி

## படிப்பித்தலுடன் சைவப்பண்பாட்டையும் ஒருங்கிணைத்து வழங்கிய பரமேஸ்வராக் கல்லூரி

1974ஆம் ஆண்டுவரை திருநெல்வேலியில் 20 ஏக்கர் விசால நிலத்தில் நிமிர்ந்து உயர்ந்த பாரிய கட்டடங்களுடன் அமைந்திருந்த பரமேஸ்வராக் கல்லூரி, திருநெல்வேலியிலும் அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் வாழ்ந்துவந்த மாணவர்களுக்கு ஒரு சிறந்த கல்விக்கூடமாக விளங்கியது. கந்தர்மடம், நல்லூர், முடமாவடி, கல்வியங்காடு, இருபாலை கோண்டாவில், உரும்பிராய், இணுவில், கொக்குவில், கலட்டி, போன்ற இடங்களிலிருந்து மாணவர்கள் இங்கு வருகை தந்து படித்து வந்தார்கள். தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம் போன்ற தூர இடங்களிலிருந்தும் புகையிரதம் மூலம் மாணவர்கள் வருகை தந்திருந்தார்கள். பல தீவுப்பகுதி, வவுனியா முல்லைத்தீவு மாணவர்கள் கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றுவந்தார்கள். 1921ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி கடுகதியென வளர்ந்து, 1940இல் இருந்து 1974இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிப்பதற்காக அன்றைய அரசினால் இக்கல்லூரியை பாரம் ஏற்கும்வரை, கல்வியின் பல துறைகளிலும் சிறந்த ஒரு ஆங்கிலப் பாடசாலையாக பரமேஸ்வரா கல்லூரி விளங்கியது. இக்கல்லூரி கல்வியுடன் விளையாட்டிலும் கலை கலாசாரத்திலும் ஆன்மிக ஒழுக்கத்திலும் மாணவர்களை ஊக்குவிப்பதில் சிறந்து விளங்கியது. வள்ளலார் சேர். பொன். இராமநாதன் அவர்களின் மருமகனான சு. நடேசபிள்ளை அவர்கள் கல்லூரியின் அதிபராக ஆரம்ப காலம் தொட்டு பணியாற்றி வந்திருந்தார். 1940இன் நடுப்பகுதியிலிருந்து சிறந்த கல்விமானான சிவபாதசுந்தரம் அவர்களும் பின்னர் ஞனப்பிரகாசம் அவர்களும் கல்லூரியின் அதிபர்களாக விளங்கினார்கள்.

இக்கல்லூரியின் விசேட அம்சம் என்னவெனில், படித்தலுடன் சைவப்பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் ஊட்டி மாணவர்கள் போதிக்கப்பட்ட விதமும், படித்துவிட்டு மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேறும்போது, பகுத்தறிவு கொண்டவர்களாகவும் ஒழுக்கத்தையும் ஆளுமையையும் கொண்டவர்களாகவும் ஆக்கப்பட்டிருந்தார்கள் என்பதாகும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற சான்றோர் மொழிக்கு அமைய பெற்றோரை பேணுதல், பெரியோர்களை மதித்தல், ஆசிரியர்களை கௌரவித்தல், தெய்வங்களை வணங்குதல், போன்ற சிறப்பியல்புகளை சிறுவயதிலிருந்தே மனதில் பதிய வைப்பதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற கல்வியறிவை புகட்டியது இக்கல்லூரி என்றால் அது மிகையாகாது. இக்கல்லூரியை உருவாக்கிய சேர்.பொன். இராமநாதன் அவர்கள் சைவமாணவர்களின் உயர்ச்சிக்கு உதவிட அதற்கான ஆரம்பப் பணிகளை சட்டத்தின் மூலம் உருவாக்கி இருந்தார்.

1925ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21ஆம் திகதி அன்றிருந்த இலங்கைச் சட்டவாக்க சபையில் 1925ஆம் ஆண்டைய 7ஆம் இலக்க நியதிச்சட்டமாக, பரமேஸ்வராக் கல்லூரி நியதிச் சட்டம் சேர்.பொன். இராமநாதன் அவர்களால் முன்மொழியப்பட்டது. இச்சட்டம் பரமேஸ்வராக் கல்லூரியின் அமைப்புப் பற்றியும், பணிப்பாளர் சபையை உருவாக்கல் பற்றியும், மற்றும் நோக்கம் சம்பந்தமாகவும், சட்ட ஏற்பாடுகளைக் கொண்டதாகவுள்ளது.

பெரிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்டிருந்த இக்கல்லூரியில், 1ஆம் ஆண்டு தொடக்கம் முன்னர் காலத்தில் எச். எஸ். சி. (H.S.C) (ஹயர் ஸ்கூல் சேர்ட்டிபிக்கேற்) உயர் கல்விக்கூட சான்றிதழ், அதன்பின்னர் ஜீ. சி. ஈ. (அட்வான்ஸ் லெவல்) (G.C.E Advance Level)) கல்விப் பொதுத்தராதர (உயர்தரம்) சான்றிதழ் வரை வகுப்புக்கள் இருந்தன.

**சிவன் கோவில்**

படித்தலுடன் சைவப்பண்பாட்டையும் ஒருங்கிணைத்து கற்பிக்கப் பாடுபட்டவர் பெருமகன் வள்ளல் சேர். பொன். இராமநாதன் ஆவார். யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பரமேஸ்வரா கல்விக் கூடத்தை ஆரம்பித்த சேர்.பொன். இராமநாதன் அவர்கள், அந்தக் கல்லூரி நிலப்பரப்பின் மத்தியில் ஒரு சிவன் கோயிலை, முழு அளவிலான கோபுரத்துடன் ஸ்தாபித்து, சைவவிதி முறைப்படி பூசை அபிசேகம் பிராமணக்குரு ஒருவரால் கிரமமாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததானது, சைவத்தின் பால் ஸ்தாபகர் கொண்டிருந்த அளப்பரிய பக்தியைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. கல்லூரி மாணவர்களில் சைவசமயத்தை அனுசரிப்பவர்கள், காலையில் படிப்பித்தல் ஆரம்பிக்க முன்னர் கட்டுக்கோப்புடன் இரண்டு வரிசையில் கோவிலுக்குள் நுழைந்து செல்வார்கள். அச்சமயம் கோயிலின் ஆலயமணி அசைக்கப்பட்டு, மணியோசையை எழுப்பிக் கொண்டிருக்கும். கோவிலுக்குள் சுத்தமான சீமெந்துத் தரையில் மாணவர்கள் ஒழுங்காக வரிசைக் கிரமமாக சப்பாணி கட்டி சுகாசனத்தில் அமர்ந்து கொள்வார்கள். சைவசமயத் தேவாரங்கள் திருவாசகம் இசைக்கப்பட்டு, இரண்டு நிமிட தியானத்தின் பின் பூசை கற்பூர ஆராத்தியுடன் முடிவடையும். கனகசபை ஆசிரியர் என அன்றிருந்த கடவுள் பக்திமிக்க ஆசிரியர், தேவாரப்பாடல்களை மாணவர்களையும் இணைத்து இசைத்து வந்தார். அதன் பின் இரண்டு நிமிட மௌன அஞ்சலியில் எல்லோரும் நிசப்தமாக இருந்து, பின்னர் பிராமண அர்ச்சகரினால் வேதம் ஓதுதல் செய்து, கற்பூரத் தீப ஆராத்தி காட்டியபின், மாணவர்கள் திருநீறு சந்தன பிரசாதத்தை பெற்று, அவற்றை தரித்துக்கொண்டே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறைகளுக்குச் சென்று கல்வி பயிலத் தொடங்குவார்கள். கிருஸ்துவ மாணவர்களும் எவ்வித பாகுபாடுமின்றி இங்கு கல்வி கற்று வந்திருந்தார்கள்.

இவற்றை விட நான்கு நாயன்மார்களின் குருபூசை, அவரவர்களுக்குரிய தினங்களில் வெகுவிமர்சையாக கொண்டாடப்படும். இவ்வாறான குருபூசை நாட்களிலும் படித்தலுக்கு எதுவித பங்கமும் தடங்கலும் ஏற்படாதவாறு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான சைவ சம்பிரதாயங்களுடன் படித்தலையும் கற்பித்ததினால், மாணவர்கள் சைவப்பண்பாடு உள்ளவர்களாக, பெற்றோரையும் பெரியோரையும் ஆசிரியர்களையும் பணிவுடன் மதிப்பவர்களாக, சமுதாயம் போற்றும் நல்ல பண்புகளை கொண்டவர்களாக, கல்லூரியிலிருந்து வெளியேறும்போது திகழ்ந்தார்கள்.

**இயல் இசை நாடக வளர்ச்சி**

சைவசமய விழுமியங்களை மட்டுமன்றி இயல், இசை, நாடக வளர்ச்சிக்கும் இக்கல்லூரி ஆற்றிய தொண்டை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். வருடந்தோறும் குறிப்பிட்ட ஒரு மாதத்தில் இசை விழாக்கள் நடைபெறுவதும், இசைக் கச்சேரிகள் மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை நடாத்தப்படுவதும் வழமையாகவிருந்தது. இசைக் கச்சேரி மங்கல வாத்தியமான நாதஸ்வர இசைத்தலுடன் ஆரம்பிக்கப்படும். அதன் பின்னர் யாழ்குடாவில் அன்றிருந்த கர்நாடக இசைக் கலைஞர்கள், இசைவிற்பனர்கள் ஆகியோரினது சங்கீதக் கச்சேரிகள் தொடர்ச்சியாக இடம்பெறும். மேலும் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதெல்லாம், தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் கர்நாடக இசைப்பாடகர்களை கல்லூரிக்கு வருவித்து, இசைக்கச்சேரி நடாத்தவைத்து, இசைக்கு மேலும் மெருகூட்டப்பட்டது. இவ்வாறு சங்கீத அறிவையும் இசை ஞானத்தையும் மாணவர்களுக்கு ஊட்டி, அவர்களின் இரசிப்புத் தன்மையையும் கலையார்வத்தையும் பெருக்கிட இக்கல்லூரி வித்திட்டது எனலாம். இதனால் இங்கு கல்விகற்ற சிலர், பிற்காலத்தில் இசைத் துறையை தங்களின் வாழ்வாதாரமாகக் கைக்கொள்ளவும் இது வழிவகுத்திருந்தது.

1950களில் தென்னிந்திய சினிமாவில் பிரபல்யம் வாய்ந்த நடிகர்களாக விளங்கிய எம்.கே. தியாகராஜ பாகவதர், ரி.கே. சண்முகம், ரி.கே. பகவதி சகோதரர்கள் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்தபோது, அவர்களை பரமேஸ்வராக் கல்லூரிக்கு அழைத்துவந்து மாணவர்களுக்கு அறிமுகமாக்கிய பெருமைவாய்ந்த அதிபராக சிவபாதசுந்தரம் விளங்கினார். இவை கலையார்வத்தை மாணவர்களிடையே தூண்டச்செய்தது எனலாம். அக்கால பிரபல பாடகி எம்.எஸ். சுப்புலெட்சுமி வந்தபோது, அவரை அழைத்து வந்து கல்லூரி வளாகத்தில் ஒரு இசைக் கச்சேரியையே செய்ய வைத்தவர் அந்த அதிபர். இது 1946ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இவ்வளவு நற்காரியங்களை மாணவர்களின் உடல், உள,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக திறம்படச் செயற்படுத்திய பரமேஸ்வராக் கல்லூரியை, மீண்டும் திருநெல்வேலியில் உருவாக்கி நிலைபெறச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அங்கு படித்த மாணவர் சிலரின் மனதில் தோன்றியது வியப்பல்ல.

இக்கல்லூரி நாடகங்களை உருவாக்கிப் பழக்குவதிலும் அவற்றை அரங்கேற்றுவதிலும் கூட பின் நிற்கவில்லை. பின்னரான காலப்பகுதியில் **''லண்டன் கந்தையா''** என்ற நாடகம் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றிருந்ததை அக்கால சந்ததியினர் அறியாதிருந்திருக்க மாட்டார்கள். இந்த ''லண்டன் கந்தையா'' என்ற நாடகத்தை உருவாக்கியவர் ''சானா'' எனும் புனைப்பெயரைத் தாங்கிய ஆசிரியர் சண்முகநாதன் என்பவரே. அவர் ஆரம்பத்தில் பரமேஸ்வராக் கல்லூரியின் வரைதல் ஆசிரியராக பணியாற்றி வந்திருந்தார். பின்னர் அவர் நாடகத்துறைக்கு தலைமை தாங்கி பல மாணவர்களை நாடகத்துறைக்குள் உள்வாங்கி, பிற்காலத்தில் அவர்களை சிறந்த நடிகர்களாக்கியுள்ளார். நடிப்பில் அவர் உருவாக்கிய பலர், இன்றும் நாடகத்துறைக்கு அளப்பரிய பணிகளை ஆற்றிவருகின்றார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட 'லண்டன் கந்தையா' நாடகத்தில் நடித்து புகழ் பெற்றவர்களில் பலர் பரமேஸ்வராக் கல்லூரியில் பயிற்றப்பட்டவர்களே என்பது, கல்லூரியின் புகழை என்றும் வெளியுலகிற்கு பரப்பிநிற்கும் விடயமாகும். இதில் 'சானா'வுடன் அப்புக்குட்டி இராஜகோபால், தர்மலிங்கம், கனகலிங்கம் என்பவர்களுடன் லண்டன் கந்தையாவாக ''சானா'' சண்முகநாதனே நடித்திருந்தார். அதில் ஒரு பிராமணர் பாத்திரத்தில் தற்போதைய பிரபல பேச்சாளர் பி.எச் அப்துல் ஹமீட் அவர்களும் நடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் வேற்றுப் பாஷைக் கலப்பு எதுவுமில்லாது சுத்தமான தமிழைப் பேசி, இஸ்லாமியராக இருந்தாலும் யாழ்ப்பாணத்து தமிழர் என்ற பெயரைக் காப்பாற்றி வருகின்றார்.

இலங்கை வானொலியின் நாடகங்களில் பங்கு பற்றி நடித்தவர்களில் பலர், பரமேஸ்வராக் கல்லூரியில் 'சானா' மாஸ்டரிடம் நாடகத்துறையில் பயின்றவர்களேயாவர். அவர்களில் அப்புக்குட்டி இராஜகோபால், தர்மலிங்கம், கனகலிங்கம் போன்றவர்கள் இலங்கை வானொலியில் பிரபல்யமாக விளங்கியவர்கள்.

### விளையாட்டுத்துறை

விளையாட்டிலும் பரமேஸ்வராக் கல்லூரி முன்நிலை வகித்தது எனலாம். உதைபந்தாட்டத்திற்கும் மட்டைப் பந்தடிக்கும் ஏற்ற 10 ஏக்கருக்கும் கூடிய விசாலமான விளையாட்டு மைதானம் கல்லூரியின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்தமை, அதற்கு நல்ல வசதி வாய்ப்பாக இருந்தது. உதைபந்தாட்டத்தில் பரமேஸ்வராக் கல்லூரியின் முதலாவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணி யாழ் மாவட்ட சம்பியனாகவும் ஒரு காலத்தில் (1946ம் ஆண்டு) திகழ்ந்திருந்தது. அத்தோடு கல்லூரியின் இரண்டாவது அணி 1953, 1954, 1955 ஆகிய மூன்று வருடங்களும் தொடர்ந்து சம்பியனாகி சாதனை படைத்திருந்தது. திரு.ஆர்.எஸ்.குமாரசாமி மாஸ்டரின் கட்டுப்பாட்டின் கீழ், விளையாட்டுத்துறை திறம்பட செயற்பட்டது. கைப்பந்தாட்டம், மட்டைப்பந்தடி போன்ற விளையாட்டிலும் உயரம் பாய்தல், நீளம் பாய்தல், மைல் ஓட்டங்களிலும் பல சாதனைகளை கல்லூரி மாணவர்கள் புரிந்துள்ளார்கள். மாணவர்களை ஆறு வீட்டுக் குழுக்களாக பிரித்து, அவை பிரம்மா, விஷ்ணு, உருத்திரா, மகேஸ்வரா, சதாசிவா, பரமேஸ்வரா என்னும் பெயர்களில் வருடந்தோறும் விளையாட்டு போட்டிகள், உடற்பயிற்சிப் போட்டிகள் அக்குழுக்களுக்கிடையே நடைபெற்று வந்தமை, விளையாட்டுத்துறையின் வளர்ச்சியில் கல்லூரியின் அக்கறையை வெளிக்காட்டியது.

இவ்வாறு படிப்பித்தலுடன் சைவத்தையும், தமிழர் பண்பாட்டையும், ஒழுக்கத்தையும், இசையையும், நாடகத்தையும், விளையாட்டையும் ஒன்றிணைத்து, மாணவர்களுக்கு பல்துறைப் பயிற்சி அளித்ததினால், படிப்பு முடிந்து கல்லூரியை விட்டு மாணவர்கள் வெளியேறும் போது, அவர்களை பத்தும் பலதும் கற்ற வித்தகர்களாக்கியது இக்கல்விக் கூடத்தின் சிறப்பம்சமாகும்.

**ஆசிரியர் குழாம்**

பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராக ஆரம்பத்தில் **சு. நடேசபிள்ளை** அவர்கள் 1940ஆம் ஆண்டு நடுப்பகுதிவரையில் கடமையாற்றி வந்திருந்தார். இவர் சேர். பொன். இராமநாதன் அவர்களின் மருமகன் ஆவார். (மகளின் கணவர்). பின்னால் அவர் 1952ஆம் ஆண்டில் காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினராகி அரசின் தபால் தந்தி அமைச்சருமாகச் செயற்பட்டவர். அவருக்குப் பின்னர் **சி.சிவபாதசுந்தரம்** எம். ஏ. (கன்ராப்) அவர்கள் அதிபராகவும் அவருக்குப்பின் **ஞானப்பிரகாசம்** அவர்கள் அதிபராகவும் பதவி வகித்திருந்தார்கள். அக்காலத்தில் தமிழைக் கற்பிக்க யாழ்ப்பாணத்திலே சிறந்த தமிழ் அறிஞர், ஆசிரியர், மேடைப் பேச்சாளர், பல நூல்களையும் கவிதைகளையும் சிறிய பிள்ளைகளுக்காகவும் பெரியோருக்காகவும் எழுதியும் தொகுத்தும் வெளியிட்டிருந்தவர் என பெயர்பெற்ற **வித்துவான் வேந்தனார்** அவர்கள் இருந்தார். கம்பராமாயணம் கற்பிக்கும்போது கம்பனின் கற்பனைகளை விஞ்சும் வகையில், மேலும் மெருகூட்டி வெளிக்கொணரும் அவரின் ஆழ்ந்த நயக்கருத்துக்கள், மாணவர்களை பிரமிக்கச் செய்தன. வகுப்பில் அவரின் ஆசிபெற்ற ஒரு தமிழ் மாணவனாகத் திகழ்ந்ததினாலேயே இன்று ஒரு எழுத்தாளனாக என்னால் வரமுடிந்தது என்பது நான் செய்த பாக்கியம். இவ்வாறு சகல துறைகளிலும் ஒரு சிறந்த கல்வி அறிவைப் புகட்டிய இக்கல்லூரி 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாகுவதற்கு வேண்டிய இடமாக இனங்காணப்பட்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க உயர்கல்வி அமைச்சினால் பாரமேற்கப்பட்டபின், இக்கல்லூரி எவ்வாறு வருங்காலத்தில் செயற்படவேண்டுமென்று, திட்டமிட்டு செயற்பட்ட பெருந்தகை சேர். பொன். இராமநாதனின் எண்ணத்திற்கும், கனவுக்கும், ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதாக அமைந்துவிட்டது.

**கல்லூரியின் வளங்கள்**

வள்ளல் சேர் பொன். இராமநாதன் அவர்களால் வழங்கப்பட்டு பரமேஸ்வரா கல்லூரிக்கு என சொந்தமாகியிருந்த சொத்துக்களின் விபரங்கள்:

1. கல்லூரி அமைந்திருந்த காணியின் விஸ்தீரணம் - 20 ஏக்கர் இதன் தற்போதைய பெறுமதி : ரூபா. 442 மில்லியன்
2. கல்லூரியின் பிரதான வகுப்பறை மண்டபம் விஸ்தீரணம் 3300 சதுர அடி இதன் தற்போதைய பெறுமதி : ரூபா. 30 மில்லியன்
3. கல்லூரியின் வகுப்பறைகள் நிரை மூன்று தொகுதி 12,700 சதுர.அடி இதன் தற்போதைய பெறுமதி : ரூபா. 2.2 மில்லியன்
4. சமையல் தளம் 1700 சதுர .அடி இதன் தற்போதைய பெறுமதி : ரூபா. 300,000/=
5. விடுதிப் பகுதி 6700 சதுர அடி இதன் தற்போதைய பெறுமதி : ரூபா. 07 மில்லியன்
6. கிணறும் நீர் இறைக்கும் அறையும் ரூபா. 100,000/=

இந்த சொத்து விபரங்கள் பல்கலைக்கழக பதிவாளர் தலைமையிலான தொழில்நுட்பக் குழுவினால் கணிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டவையாகும்.

மேலே கூறப்பட்டவை பரமேஸ்வராக் கல்லூரிக்காக ஆரம்பகாலத்தில் அமைக்கப்பட்ட மண்டபங்களும் கட்டிடங்களும் சொத்துக்களுமாகும். இவை 1923ஆம் ஆண்டிலிருந்து கல்லூரி நிர்வாகத்தினால் பராமரிக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வந்தவைகளாகும். அவை இன்று அரச சொத்துக்களாக பகிரங்க கூட்டுத்தாபத்தினால் பராமரிக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. ஆனால் கல்லூரி காணியின் மத்தியில் அமைக்கப் பட்டிருக்கும் சிவனாலயம் இன்றும் இராமநாதன் நம்பிக்கை நிதியத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இக்கோவில் அரசாங்கத்திற்கு கையளிக்கப்படவில்லை. இது நல்லாட்சி அரசு காலத்தில் அமைச்சராக இருந்த சுவாமிநாதனின் தலைமையிலுள்ள இராமநாதன் நம்பிக்கை நிதியத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோயிலும் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலை கல்லூரிக்கு அண்மையிலுள்ள சமாதி சிறு கோயில்களும் இதே நம்பிக்கை நிதியத்தினால் இன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரமேஸ்வர வித்தியாலயம் ஆரம்பித்த வரலாறு

வள்ளல் இராமநாதன் கண்ட கனவை நினைவாக்க பரமேஸ்வரா கல்லூரிப் பழைய மாணவர் சங்கமும், திருநெல்வேலி இந்து இளைஞர் மன்றமும், திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் அதிபரும், ஆசிரியர் குழாமும், வட மாகாணக் கல்விச் சமூகமும் ஒன்றிணைந்து முன்வந்து, திருநெல்வேலியிலுள்ள இந்து தமிழ் கலவன் பாடசாலையினை **'பரமேஸ்வரா வித்தியாலயம்'** எனப் பெயர்ச் சூட்டினர். பரம்பரையாக சைவப்பள்ளிக்கூடம் என திருநெல்வேலி மக்களிடையே விளங்கிய இப்பாடசாலைக்கு சைவப் பண்புகளை புகட்டிய பரமேஸ்வராவின் பெயரை சூட்டியது முழு அர்த்தத்தையும் கொடுத்துள்ளது என்பதினால் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

மீண்டும் பரமேஸ்வரா என்ற பெயரில் கல்லூரி ஒன்று திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற அங்கலாய்ப்பு பரமேஸ்வராக் கல்லூரியில் படித் திருந்த பழைய மாணவர்களிடையே வேரூன்றியிருந்தது. கொழும்பில் இயங்கும் பரமேஸ்வரா பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி. பேரின்பநாயகம், இந்த செயற்பாட்டில் தன்னை முழுமையாக இணைத்திருந்தார். 2010ம் ஆண்டில் இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு அதிபராக வந்திருந்தவர் பிரபல வலம்புரி பத்திரிகையின் ஆசிரியராகவுமுள்ள எஸ். விஜயசுந்தரம் என்ற தமிழ்பற்றுக் கொண்ட பெருமகன். அவரும், அவருடன் இணைந்து அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும், பெற்றோர் ஆசிரியர் அபிவிருத்தி சங்கமும், பரமேஸ்வராக் கல்லூரியை அமைப்பதில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார்கள். அத்தோடு இன்னுமொரு பழைய மாணவரான கணநாதபிள்ளை என்பவரும் இணைந்து, 2012ஆம் ஆண்டு, அன்றிருந்த கல்வி அமைச்சர் கௌரவ. எஸ். பி. திஸ்ஸாநாயக்காவையும், பாரம்பரிய கைத்தொழில் அமைச்சராகவிருந்த கௌரவ டக்ளஸ் தேவானந்தாவையும், யாழ் பல்கலைக்கழகத்தில் சேர். பொன். இராமநாதன் அவர்களின் நினைவு நாளையிட்டு கைலாசபதி மண்டபத்திலே ஒரு கூட்டத்தில் பங்கேற்க அழைக்கப்பட்டிருந்தனர். அது பல்கலைக்கழக இந்துமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்காலத்தில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக செயற்பட்ட எஸ். சண்முகலிங்கன் தலைமையில் நடந்த அக்கூட்டத்தில், இரு அமைசர்களும் திருநெல்வேலியில் பரமேஸ்வரா கல்லூரி உருவாக்கப்பட வேண்டிய தேவையை ஏற்றுக் கொண்டு ஒரு வேண்டுகோளை விடுத்தனர். அதாவது பரமேஸ்வராக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு முதற்படியாக அதை உருவாக்குவதற்கு பயன்படுத்த தீர்மானித்துள்ள பாடசாலைக்கு ''பரமேஸ்வரா'' என்ற பெயரை சூட்டும்படி ஆலோசனை கூறினார்கள். அவர்களின் ஆலோசனைக்கேற்ப இந்து தமிழ் கலவன் பாடசாலை என்றிருந்த பெயரை பரமேஸ்வரா வித்தியாலயம் என கல்விப் பகுதியின் ஒத்தாசைகளுடன் மாற்றம் செய்ய அதிபர் விஜயசுந்தரம் எடுத்த முயற்சி சிறப்பாக வெற்றியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வராக் கல்லூரியை மீளவும் உருவாக்கும் வேலைத் திட்டத்தை நல்லாட்சி அரசு இருந்தபோது முன்னெடுத்த முயற்சிகள் எதுவும் பலிதமாகவில்லை. அமைச்சர் சுவாமிநாதனை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் செயற்படுத்த எடுத்த முன்னெடுப்புக்களும் சாத்தியப்படவில்லை.

## தற்போதைய நிலைமை

தற்போதைய அரசாங்கம் உருவாகியபோது ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. ஏற்கெனவே இது விடயமாக தொடர்பிலிருந்த இருவர் முன்னால் அமைச்சர்களாக இருந்தவர்கள் ஆட்சி அதிகாரத்தில் வந்திருக்கிறார்கள். அவர்கள் இக்கல்லூரியை உருவாக்குதல் பற்றிய ஆரம்ப கருந்துரையாடலில் பங்குபற்றியவர்கள். அதனால் பரமேஸ்வரா கல்லூரிப் பிரச்சினையை தீர்க்க உதவுவார்கள் என்ற நம்பிக்கை வலுப்பெற்றது. எஸ். பி. திஸ்ஸநாயக்கா அமைச்சராகவில்லை. ஆனால் டக்லஸ் தேவானந்தா ஆரம்ப வேலைகளில் பங்கேற்றியவர், மீன்பிடித்துறை அமைச்சராக பதவி ஏற்றதால் அவர் மூலம் காரியத்தை தொடரலாம் என்ற முடிவுக்கு வந்தோம். ஒரு கடிதம் தயாரித்து அதன் பிரதிகளை கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ், கல்விச் சேவைகள் அமைச்சர் பியால் நிசந்த டி சில்வா, மற்றும் யாழ். பாராளுமன்ற உறப்பினரும் அமைச்சருமான டக்லஸ் தேவானந்தா ஆகியோருக்கு அனுப்பி வைத்து, புதிதாக ஒரு முயற்சியை ஆரம்பித்தோம்.

அக்கடிதத்தில், பரமேஸ்வராக் கல்லூரியின் செயற்பாட்டை 1974ஆம் ஆண்டு நிறுத்தி, பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தபோது, கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவ மாணவியருக்கு, அவர்களின் கல்வியை தொடர்வதற்கு எந்தவொரு மாற்றுத் திட்டத்தையும் அன்றைய அரசாங்கம் செய்து கொடுக்கவில்லை என்றும், அந்நேரம் இருந்த கல்விமான்களும் அரசியல்வாதிகளும் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி மக்களும், அக்கறை செலுத்தாதுவிட்ட குறையைச் சுட்டிக்காட்டி, அந்நிலைமை மேலும் தொடரவிடாது, இந்தப் பிந்திய காலத்திலாவது இழந்த பரமேஸ்வரா கல்லூரிக்கு ஈடான ஒரு கல்லூரியை உருவாக்க வேண்டிய அவசியத்தேவை ஏற்பட்டுள்ளது எனவும் விளக்கியிருந்தோம். அதற்கான முயற்சியை இப்போது செய்யாதுவிட்டால் திருநெல்வேலிக்கு ஒரு தரமான கல்லூரி என்றைக்குமே அமையமாட்டாது. திருநெல்வேலியிலும் அதன் அண்டைய ஊர்களிலுமுள்ள மாணவ மாணவிகள் தற்போது யாழ் நகரிலுள்ள இந்துக் கல்லூரி, மத்திய கல்லூரி, கொக்குவில் இந்து போன்ற தூரமாகவுள்ள பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் இதனால் போக்குவரத்து பிரச்சினையும் பெற்றோர்களுக்கு வீண் பணவிரையமும் ஏற்பட்டுள்ளது என்றும் கடிதத்தில் சுட்டிக் காட்டி இருந்தோம். அதற்காக, பரமேஸ்வரா வித்தியாலயம் என பெயரிடப்பட்ட பாடசாலையை சுற்றிவரவுள்ள காணிகள் சிலவற்றை சுவீகரித்தல், வருங்கால கல்லூரிக்கேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக் கட்டட நிர்மாண வேலைகளுக்கு தேவையென்றும், அதற்காக ரூபா ஐந்து கோடி பணத்தை கல்வி அமைச்சுக்கு ஒதுக்கித் தருமாறு கேட்டிருந்தோம். அத்துடன் தென்னிலங்கை மற்றும் பல மாவட்டங்களிலிருந்தும் பல இன, மத, மொழி மாணவர்கள், திருநெல்வேலி கிராமத்திற்கு வந்து தங்களின் மேற்படிப்புக்களை மேற்கொள்ளுவதற்கு, தங்களின் காணிகளையும் கட்டடங்களையும் விட்டுக்கொடுத்துள்ள திருநெல்வேலி மக்கள், தங்கள் பிள்ளைகள் க.பொ.த .உயர்தர வகுப்பு வரை படிப்பிப்பதற்கு ஏற்றவொரு தரமான கல்லூரி இல்லாததை விளக்கி, அமைச்சர்களுக்கான கடிதத்தில் குறிப்பிட்டிருந்தோம். கடிதத்தை வாசித்த அமைச்சர் டக்லஸ் தேவானந்தா 2012ஆம் ஆண்டு தானும் எஸ்.பி. திஸ்ஸநாயக்காவும் கலந்து கொண்ட கைலாசபதி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத் தின் பழைய நினைவுகளை மீட்டு அக்கறைக் கொண்டு, எதிர்பார்த்திராத வகையில் 2020.12.15ந் திகதி தொலைபேசியில் நேரடியாக தொடர்பு கொண்டு, தான் அந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் வருவதாகவும், பரமேஸ்வராக் கல்லூரியாக ஆக்கப்படவிருக்கும் பாடசாலையையும் அருகேயுள்ள காணிகளையும் பார்வையிட வேண்டுமென்றும், அதற்கு முன்னர் தன்னைச் சந்திக்குமாறும் கூறியிருந்தார். அமைச்சரின் வேண்டுகோளின்படி நான் அவரை 2020.12.18ந் திகதி ஸ்ரீதர் தியேட்டர் ஈபிடிபி அலுவலகத்தில் சந்தித்து, பாடசாலையின் அருகாமைக் காணிகள் பற்றியும், கல்லூரியாக்குவதற்கு அவற்றின் தேவைபற்றியும் விளக்கினேன். அவர் மறுநாள் பார்வையிட வருவதாக கூறி என்னை அனுப்பிவைத்தார். அவர் கூறியபடி அடுத்த நாள் 19ந் திகதி தனது உதவியாளர்களுடன் பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு வருகை தந்து, சுவீகரிக்கத் தேவையான அந்த பாடசாலைக்கு அருகாமைக் காணிகளையும் பார்வையிட்டு சென்றுள்ளார். அவரின் விஜயம் நல்ல பலனை வெகுவிரைவில் பெற்றுத்தரும் என்ற மனநிறைவோடு எதிர்பார்த் திருக்கின்றோம்.

திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரி மீளவும் உருவாக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டுள்ள அனைவரும் தங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வெளிக்காட்டி திருநெல்வேலி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி செயற்பட வேண்டும் என அன்பாக வேண்டுகின்றோம்.

கனக நமநாதன் L.L.B - சட்டத்தரணி
தலைவர்,
பரமேஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வரா வித்தியாலயம் உருவான கதை

சைவப்பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு நிறைவில் தனது வரலாற்றைப் பதிவு செய்கிறது.

புகழ்பூத்த கல்லூரியாக விளங்கிய பரமேஸ்வராக் கல்லூரி தமிழ் மக்களுக்கு பல்கலைக்கழகத்தை ஈந்தளித்ததன் மூலம் அதன் புகழ் நித்தியம் பெற்றது.

1921ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக பிரகடனப்படுத்தப்பட்டது. அந்தக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குத் தன்னை ஈகை செய்ய மறுத்திருக்குமாயின், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எம் தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்காமல் போயிருக்கும்.

ஆம், தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகப் படிப்பில் பரமேஸ்வராக் கல்லூரி செய்த தியாகத்தைத் தமிழ்ச் சமூகம் ஒருபோதும் மறந்துவிடமுடியாது.

அதேநேரம் அந்தக் கல்லூரியின் நாமம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

தங்கள் பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டமை ஒருபுறம் மகிழ்வாயினும், தாங்கள் கற்ற அந்தக் கல்லூரி தன்னை ஈகை செய்து தன்னை இழந்ததெனும்போது, அதனால் ஏற்படக்கூடிய நெருடல் இன்றுவரை, அந்தக் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஆழ்மனதை அதட்டுகிறது.

இது ஒருபுறமிருக்க, சிவபூமி என்று போற்றப்படும் ஈழத் திருநாட்டின் தலைநகரான யாழ்ப்பாணத்தில், சிவப்பரம்பொருளின் பெயரால் நம்முன்னோர்கள் கல்லூரி அமைத்த வரலாறு, இவ்விடத்தில் நினைவுபடுத்தற்குரியது. காங்கேசன்துறையில் **நடேஸ்வராக் கல்லூரி**, கீரிமலையில் **நகுலேஸ்வராக் கல்லூரி**, வண்ணார்பண்ணையில் **வைத்தீஸ்வராக் கல்லூரி**, வல்வெட்டித்துறையில் **சிதம்பராக் கல்லூரி**, திருநெல்வேலியில் **பரமேஸ்வராக் கல்லூரி** என ஐந்து கல்லூரிகள் அமையப்பெற்றன.

இங்குதான் பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்ட போது, பரமேஸ்வரப் பெருமானின் பெயரில் அமைந்த அக்கல்லூரி இல்லையே என்ற ஏக்கம் நீண்டு நிலைத்தது. மீளவும் பரமேஸ்வராக் கல்லூரியை அமைக்க வேண்டும் என்ற ஆவல், அந்தக் கல்லூரியின் பழைய மாணவர்களிடம் தீரா நதியாக ஓடிக் கொண்டிருந்தது.

தவிர, பரமேஸ்வராக் கல்லூரியை மீள ஆரம்பிக்கக்கூடிய சட்ட ஏற்பாடுகள் இருந்தபோதிலும், அது நிறைவேறாமல் போனமை துரதிர்ஷ்டமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில்தான் திருநெல்வேலி **இந்துத் தமிழ்க் கலவன்** பாடசாலையை **பரமேஸ்வரா வித்தியாலயம்** எனப் பெயர் மாற்ற வேண்டும் என்ற சிந்தனை எழுகிறது.

1999ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி, திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராக நான் நியமிக்கப்பட்டேன். இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை (இ.த.க) என்ற பெயர் பல பாடசாலைகளை ஆக்கிரமித்திருந்தன.

பொதுவாக பாடசாலைகளின் பெயர்கள் குறுகியதாக இருக்க வேண்டும் என்பதும், அவற்றின் பெயர்கள் நேர் அதிர்வை ஏற்படுத்த வல்லன என்பதும் பொதுவான கருத்து.

தவிர, திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை 1911ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டபோது அதற்கு திருநெல்வேலி சைவப் பாடசாலை என்றே பெயர் சூட்டப்பட்டிருந்தது. இப்பாடசாலையை ஸ்ரீமான் வ.பொன்னம்பலம் உபாத்தியாயர் ஸ்தாபித்திருந்தார். பாடசாலைக்கான காணியை ஸ்ரீமான் கே.பொன்னையா அவர்கள் வழங்கியிருந்தார்கள்.

எனினும் 1962களில் தனியார் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபோது திருநெல்வேலி சைவப்பாடசாலை, திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையாயிற்று.

இந்த நிலையில்தான் திருநெல்வேலியில் அமைந்திருந்த பரமேஸ்வராக் கல்லூரியின் நாமத்தை, திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சூட்டினால் என்ன? என்ற எண்ணக் கரு ஏற்பட்டது.

பாடசாலையின் பெயரை மாற்றுவதற்கு ஏற்பாடுகள் உண்டாயினும் அதனை நிறைவேற்றி முடிப்பதென்பது சாதாரணமான விடயமன்று. எனினும் சைவ சமயத்தின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி சைவப் பாடசாலைக்கு, சைவப் பெருவள்ளல் சேர்.பொன்.இராமநாதன் ஆரம்பித்த பரமேஸ்வராக் கல்லூரியின் நாமத்தைச் சூட்டுவது சாலப் பொருத்தம் எனக் கருதப்பட்டது. கூடவே திருநெல்வேலியில் அமையப்பெற்ற பரமேஸ்வராக் கல்லூரியின் பெயரை, திருநெல்வேலி சைவப் பெருமண்ணில் மீளநிறுத்துவதும் நிராகரிக்க முடியாத நியாயம் என்பதால், அந்த முயற்சி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது.

பரமேஸ்வராக் கல்லூரியின் பெயரை திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சூட்டினால் நல்லது என்ற செய்தியை, அந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவரும், ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபருமான திரு.த.பேரின்பநாயகம், சங்கத்தின் உபதலைவரும், ஓய்வுபெற்ற சுங்கத் திணைக்கள அத் தியட்சகருமான திரு.கணநாதலிங்கம், செயலாளர் திரு.சிவலோகநாதன் மற்றும் சட்டத்தரணி திரு. கனக நமநாதன் ஆகியோருக்குத் தொலைபேசி மூலமாகத் தெரிவித்தோம்.

திரு.த.பேரின்பநாயகம் அவர்கள் அந்த விருப்பத்தை ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டார். திரு.கணநாதலிங்கம் அவர்கள் திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வராவின் பெயரை சூட்டுவதற்கான காரணங்கள் என்ன? என்று வினவியபோது, ஏலவே நம் முன்வைத்த விளக்கங்களை எடுத்துக்கூறினோம். அதனை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டர்.

ஒரு பாடசாலையின் பெயரை மாற்றுவதென்பது, அந்தப் பாடசாலை அமைந்த சமூகத்தில் குழப்பங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தக்கூடியதே. எனவே அதனை மிக நிதானமாகக் கையாள வேண்டும். அந்த வகையில் திருநெல்வேலி மக்களையும், சமூகத் தலைவர்களையும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அழைத்து, கலந்துரையாடல்களை நடத்துவது அவசியம் எனத் தீர்மானித்தோம்.

அந்த அடிப்படையில் திருநெல்வேலியில் உள்ள பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகளை அழைத்து, திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் ஒரு கலந்துரையாடலை நடத்தினோம். இக்கலந்துரையாடல் யூலை 2011இல் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் அப்போதைய தலைவராக இருந்த திரு.கு.மோகன் அவர்களின் தலைமையில் அந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதில் திரு.த.பேரின்பநாயகம், திரு.கனக.நமநாதன், திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் வை.குலத்துங்கன், பாடசாலையின் நலன்விரும்பி திரு.ஆனந்தநடராஜா, அபிராமி முன்பள்ளி ஆசிரியை செல்வி சகுந்தலா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். பெயர்மாற்றம் தொடர்பில் திரு.த.பேரின்பநாயகம் அவர்கள் கருத்துரை வழங்கியிருந்தார். அவருடன் சேர்ந்து பாடசாலையின் அதிபர் என்ற வகையில் எனது கருத்துக்களையும் முன்வைத்தேன். அந்தக் கூட்டத்தில் பெயர் மாற்றத்துக்கு அனுமதி கிடைக்கப் பெற்றது.

திருநெல்வேலியிலுள்ள பொது அமைப்புச் சார்ந்த பிரதிநிதிகளின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர், பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களை உள்ளடக்கியதான கலந்துரையாடலுக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. பாடசாலை மண்டபத்தில் நடந்த கருத்தறியும் கூட்டத்தில், அதிகளவான மக்கள் கலந்து கொண்டனர். இதன்போது சட்டத்தரணி கனக.நமநாதன் அவர்களும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் திரு.ச.முத்துலிங்கம் அவர்களும், சில கேள்விகளை முன்வைத்தனர். அந்தக் கேள்விகள் பரமேஸ்வரா என்ற பெயர் மாற்றத்தைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டதல்ல. மாறாக சட்டத்தரணி கனக.நமநாதனுக்கும் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்துக்குமிடையிலான சில கருத்து வித்தியாசத்தின் அடிப்படையில் ஏற்பட்டதென்பதை எம்மால் உணர முடிந்தது. எனினும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பரமேஸ்வரா என்ற பெயரைமாற்றுவதற்குத் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இந்தநிலையில் மேற்படி கூட்டத்தில் நடந்த விடயங்களைக் கொழும்பில் இருந்த திரு.த.பேரின்பநாயகம் அவர்களுக்கும், திரு.கணநாதலிங்கம் அவர்களுக்கும் எடுத்துரைத்தேன். திரு.த.பேரின்பநாயகம் அவர்கள் உடனடியாகவே, திரு.ச.முத்துலிங்கம் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நிலைமையைத் தெளிவுபடுத்தினார். அதன் பின்னர் பெயர்மாற்றும் விடயத்தில் அனைவரது ஒத்துழைப்பும் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெயர்மாற்றும் விடயத்தில் திருநெல்வேலி மக்களின் ஒத்துழைப்பைப் பெறும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேற, முன்னதாக அப்போது உயர்கல்வி அமைச்சராக இருந்த எஸ்.பி திசநாயக்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்து கைலாசபதி கலையரங்கில் விசேட கூட்டமொன்றை நடத்தினர்.

அந்தக் கூட்டத்தில் பலர் கலந்து கொண்டிருந்தனர். முன்வரிசையில் அமர்ந்திருந்த திரு.கணநாதலிங்கம் அவர்கள் எழுந்து, பரமேஸ்வராக் கல்லூரி மீள அமைக்கப்பட வேண்டும் என்றும், திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அந்தப் பெயரைச் சூட்ட முடியும் என்றும் ஆங்கிலத்தில் உரையாற்றினார். சுமார் 15 நிமிடங்கள் அவர் ஆங்கிலத்தில் ஆற்றிய விளக்கவுரையை, அமைச்சர்கள் உள்ளிட்ட அப்பெரும் சபை மிக அமைதியாக இருந்து செவிமடுத்தபோது, அதற்குள் ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்கிய பரமேஸ்வராக் கல்லூரியின் பெருமையும் உணரப்பட்டது.

திரு.கணநாதலிங்கம் அவர்களின் உரைக்குப் பதிலளித்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க, பரமேஸ்வராக் கல்லூரி அமைவதற்குத் தான் பரிபூரண ஒத்துழைப்பு வழங்குவதாக உறுயளித்தார்.

## ஆவணங்கள் தயாரிப்பு

ஒரு பாடசாலையின் பெயரை மாற்றம் செய்வதாக இருந்தால், அதற்குரிய படிவங்களைப் பூர்த்தி செய்வதும், கோரப்பட்ட ஆவணங்களை இணைப்பதும் அவசியமாகும். இது விடயத்தில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் திட்டமிடலுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த திரு.ச.ரவீந்திரநாதன் அவர்களும், யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சி. உதயகுமார் அவர்களும், எமக்குப் பக்கபலமாக இருந்தனர். இதற்கும் மேலாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக இருந்த திரு.ப.விக்னேஸ்வரன், மற்றும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக இருந்த திரு.வ.செல்வராஜா அவர்களும் பரமேஸ்வரா என்று பெயர்மாற்றம் செய்வதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினர்.

இவற்றையும் கடந்து பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவர், ஓய்வுநிலை பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு.பேரின்பநாயகம் அவர்கள், யாழ்ப்பாணக் கல்வி வலயம், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பெயர்மாற்றும் விடயத்தில் பெரும் துணை புரிந்தார்.

**சுருங்கக்கூறின் பரமேஸ்வரா வித்தியாலயம் என்று பெயர் சூட்டுகின்ற விடயத்தில் திரு.பேரின்பநாயகம் அவர்களின் பங்கும் பணியும் காத்திரமானதென்பதை இவ்விடத்தில் தெரிவித்தாக வேண்டும்.**

பரமேஸ்வரா வித்தியாலயம் என்பதாகப் பெயர் மாற்றம் செய்யும் விண்ணப்பம் எம்மால் முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், வடக்கு மாகாணக் கல்வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களம் பரமேஸ்வரா ஆரம்பப் பாடசாலை என்றே மாற்றம் செய்வதற்குப் பரிந்துரைத்திருந்தது.

எனினும் ஆரம்பப் பாடசாலை என்ற பதம், பரமேஸ்வராக் கல்லூரிக்கு ஈடாக முடியாது என்றும், பரமேஸ்வராக் கல்லூரிக்கு இணையாக பரமேஸ்வரா வித்தியாலயம் என்று பெயரிடுவதுதான் பொருத்தம் என்றும், வடக்கு மாகாண கல்வி அதிகாரிகளிடமும், குறிப்பாக பிரதிச் செயலாளர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களிடமும் எடுத்துக் கூறியிருந்தோம். அவர்கள் எமது நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் NPL03L06LĐNF இலக்கமும் 17.07.2012 திகதியும் கொண்ட கடிதத்தின் பிரகாரம் திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம் என 25.04.2012ஆம் திகதி முதல் மாற்றியமைக்க அனுமதி வழங்கப்பட்டது.

## பெயர் சூட்டல் நிகழ்வு

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கடிதம் கிடைக்கப்பெற்றதையடுத்து, சம்பிரதாயபூர்வமாகப் பெயர் சூட்டும் நிகழ்வுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன்போது பாடசாலைக் கட்டடங்களுக்கு வர்ணம் பூசுதல், பரமேஸ்வரா வித்தியாலயம் எனப் பெயர் பொறிப்பது, ஆகிய வேலைத்திட்டங்களுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாவை, பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தந்துதவியது.

பெயர் சூட்டும் நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டன. பாடசாலை மாடிக் கட்டிடத்தின் மேற்திசையிலும் தென்திசையிலும் திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம் என்ற பெயரும், சிவப்பரம்பொருளின் திருக்கரத்தில் இருக்கக்கூடிய சூலாயுதத்தையும், பரமேஸ்வராக் கல்லூரிக்குரித்தான திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் என்ற மகுடவாசகத்தையும் உள்ளடக்கியதான பாடசாலை இலட்சனையும் பொறிக்கப்பட்டது.

பெயர் சூட்டும் வைபவம் சைவப்பெருவள்ளல் சேர். பொன்.இராமநாதன் அவர்களின் குருபூசைத் தினமாகிய 19.11.2012 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில், சேர் பொன். இராமநாதன் அவர்களின் குருபூசை வழிபாடு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பரமேஸ்வரா வித்தியாலயம் எனப் பெயர் சூட்டும் நிகழ்வு ஏற்பாடாகியிருந்தது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக, அன்றைய வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு.வ.செல்வராசா, யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.உதயகுமார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், நல்லூர்க் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு.சி.மாணிக்கராஜா, பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு.த.பேரின்பநாயகம், சங்கத்தின் உப தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கணநாதலிங்கம், திரு.ஏகாம்பரநாதன், திரு.ச.முத்துலிங்கம், திரு.கனக.நாமநாதன் உள்ளிட்ட பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். தவிர, சேர்.பொன்.இராமநாதன் அறக்கட்டளையின் சார்பில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களும் கலந்து கொண்டார்.

பாடசாலை மாடிக் கட்டடத்தின் தெற்குச் சுவரில் பரமேஸ்வரா வித்தியாலயம் எனப் பொறிக்கப்பட்ட பெயர் மங்கள வாத்தியம் இசைக்க, திருமுறைப் பாராயணத் துடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வில் ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன. நல்லை ஆதீன குருமுதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், திரு.த.பேரின்பநாயகம், திரு.கணநாதலிங்கம், சட்டத்தரணி கனக.நமநாதன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு.வ.செல்வராசா, யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.உதயகுமார், நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.மாணிக்கராஜா உள்ளிட்ட பலரும் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்வாறு திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பரமேஸ்வரா வித்தியாலயம் எனப் பெயர்சூட்டியபோது, நீண்ட நெடுங்காலம் வெற்றிடமாக இருந்த பரமேஸ்வராக் கல்லூரியின் நாமம், மீண்டும் திருநெல்வேலி திருமண்ணில் ஓங்கி ஒலிக்கலாயிற்று. இனி பரமேஸ்வரா வித்தியாலயம் எழுச்சியும் உயர்ச்சியும் பெற்று அதன் புகழ் பாரெங்கும் பரவட்டும். பரமேஸ்வரப் பெருமானின் பெருங்கருணை துணைநிற்கட்டும்.

**நல்லையா விஜயசுந்தரம்**<br>
முன்னாள் அதிபர்<br>
யா/பரமேஸ்வரா வித்தியாலயம்,<br>
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி யா/ பரமேஸ்வரா வித்தியாலயம்

ஒரு பாடசாலையின் வரலாறு என்பது யாதெனில், பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்று வரை காணப்படும் மாற்றங்கள் தொடர்பான தகவல்களாகும். அந்த வகையில் பல அறிஞர்கள் உருவாக அடித்தளம் அமைத்துக் கொடுத்த அறிவாலயம் யா/பரமேஸ்வரா வித்தியாலயம் என்றால் அது மிகையாகாது.

அக்காலத்தில் திருநெல்வேலி மக்களுக்குத் தொடர்ச்சியாக சிறப்பான சேவையை ஆற்றி வந்த இந்து இளைஞர் மன்றம், திருநெல்வேலியில் ஒரு சைவப்பள்ளிக்கூடத்தைப் பதிவுசெய்வதற்கு முயற்சி எடுத்ததன் பயனாக, வள்ளல் திரு.ஏ.கே.பொன்னையா என்பவரினால் பாடசாலைக் கட்டடத்திற்கு நன்கொடையாகக் காணி வழங்கப்பட்டு, இந்து இளைஞர் மன்றத்தினால் கட்டடம் கட்டப்பட்டது. திருநெல்வேலி மக்களின் உதவியினால் மரத்தளபாடங்கள் கொடுக்கப்பட்டு, சைவப்பள்ளிக்கூடம் எனும் திருநாமத்துடன் உதயமாகியது.

1911ஆம் ஆண்டு தை 16ஆம் திகதி சைவப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை, திருநெல்வேலி மண்ணில் சைவத்தையும் தமிழையும் நல்லொழுக்கத்தையும் அம்மண்ணின் மைந்தர்களுக்கு கல்வியறிவோடு சேர்த்து ஊட்டி வளர்ந்து வந்தது. சைவ பாரம்பரியத்தை தக்கவைத்து, பெருந்தொகையான மாணவர்களை சிறந்த கல்வியாளர்களாக ஆக்கியதாக, பாடசாலையின் வரலாற்று ஆவணங்கள் மூலம் வெளிப்படுத்தி நிற்கின்றதைக் காணமுடிகின்றது.

திருநெல்வேலி மண்ணில் உதித்த முதல் கல்விச்சாலை என்ற பெருமைக்குரிய இவ்வித்தியாலயம், அரச பாடசாலையாக சுவீகரிக்கப்பட்டபோது, திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை எனும் திருநாமத்தை தனதாக்கிக் கொண்டது. இக்கல்விச்சாலை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு சிறப்பான கல்வி, ஆளுமைத் திறன்களையும், கற்றல் இணைப்பாட அடைவுகளின் வளர்ச்சி காட்டி வந்தது.

ஆரம்பகாலத்தில் பாடசாலைச் சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் பெருந்தொகையான பிள்ளைகள் இங்கு தான் கற்றனர் என்பதை, இப்பாடசாலையின் வரலாற்று ஆவணங்கள் மூலம் அறியப்படுகின்றது. 1979ஆம் ஆண்டு அறிக்கையின் படி, சுமார் எழுநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கற்று வந்துள்ளனர். இப்பாடசாலையில் கற்ற மாணவர்கள் பலர் வைத்தியராகவும், பொறியியலாளராகவும், சட்டத்துறை வல்லுநர்கள், இசைமேதைகள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், வர்த்தக முகாமையாளர்கள், அறிவுமேதைகள் என்று உலகின் விருட்சங்களாக பலரை இவ்வித்தியாலயம் செதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழர் பண்பாட்டைப் பேணிக்காத்து வளர்க்கும் நோக்கோடு, திருநெல்வேலியில் இயங்கி வந்த சைவப்பள்ளிகளில், மற்றொரு பாடசாலை சேர்.பொன்.இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக்கல்லூரி. இக்கல்லூரி. ஏறக்குறைய இருபத்தைந்து ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில், கிட்டத்தட்ட நூறு மாணவர்கள் படிப்பதற்குரிய விடுதி வசதிகளுடன் தங்கியிருந்து கற்பதற்கு ஏற்றவாறு, பல கட்டட வசதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. 1921ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில் சைவப்பண்பாட்டுடன், இறுக்கமான சைவ கலாசாரப் பண்பாடு ஒழுக்கத்தோடு மாணவர் கற்று வந்தனர் என்பதை ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன.

சகல வசதிகளுடன் கூடிய இக்கல்லூரி ஒரு பல்கலைக்கழகம் போலவே அக்காலத்தில் இயங்கி வந்தது. இங்கு சித்த ஆயுள்வேதம் பயிற்றுவிக்கப்பட்டதுடன், இலண்டன் பரீட்சை களுக்கான வழிகாட்டல் வகுப்புக்களும் நடைபெற்றன. அது மட்டுமன்றி பண்டிதர்களை உருவாக்கும் கல்லூரியாகவும் மிளிர்ந்து, குருகுலக்கல்வி முறையில் பெருவிருட்சமாக விளங்கிய இக்கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகமாக தெரிவு செய்யப்பட்ட போது, கல்லூரியின் வாழ்வும் வளமும் சீர்குலைந்தன.

1974ஆம் ஆண்டு கல்லூரி இடம்பெயர்ந்து திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் அடைக்கலம் பெற்றது. கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் சிதறிச்செல்லும் துர்ப்பாக்கிய நிலை உருவாகியது. நூலகத்து நூல்களும், ஆய்வுகூடப் பொருள்களும் தளபாடங்களும் கூடச் சிதறின. திருநெல்வேலி முத்துத்தம்பிப் பாடசாலைக்கு ஒரு தொகை கையளிக்கப்பட்டன. இதில் மிகச் சிறிய அளவிலான தளபாடங்கள், இந்து தமிழ்கலவன் பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்தன என அறியப்படுகின்றது.

முத்துத்தம்பி வித்தியாலயத்தோடு பரமேஸ்வராக் கல்லூரியை இணைத்து விட்டோம். என்று நிர்வாகம் நினைத்துக்கொண்டது. ஆயினும் கல்லூரியின் வரலாறும் பெருமையும், பாரம்பரியமும் ஆழப்புதைக்கப்பட்ட நிலையை யாரும் கருத்திற்கொள்ளாதது மனவேதனைக்குரிய துர்ப்பாக்கியமாகும். பரமேஸ்வராக் கல்லூரியின் பெயரும் மக்கள் மனதில் இருந்து மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது. எனினும் பரமேஸ்வராக் கல்லூரியின் பெயரை, முத்துத்தம்பி வித்தியாலயப் பெயருடன் இணைத்து வழங்க வேண்டும் என எண்ணிப் பல முயற்சிகள் நடைபெற்ற போதும், கல்வி நிர்வாகம் அதற்குரிய வாய்ப்பை வழங்காமையால் அம்முயற்சி தோல்வியடைந்தது.

பின்னர் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்களும், நலன்விரும்பிகளும் எடுத்த பெரும் முயற்சியின் பயனாகவும், காலத்தின் கட்டாயத்தின் பிரகாரம், 2012ஆம் ஆண்டு திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் பெயர் மாற்றப்பட்டு, யா/திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம் என அமைந்த போது, பரமேஸ்வராக் கல்லூரியின் பெயர் மீண்டும் தலைநிமிரத் தொடங்கியது பெருமைக்குரிய விடயமாகும்.

ஆனால் இம்முயற்சி பரமேஸ்வராக் கல்லூரியின் மீள உருவாக்கத்தின் சிறுதுளியே எனலாம். அப்போது அக்கல்லூரி ஒரு தமிழ் சைவப்பண்பாட்டுப் பொலிவுடன் பல்கலைக்கழகமாக மிளிர்ந்தது. ''சிறுதுளி பெரு வெள்ளமாக' வேண்டுமெனில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கல்லூரி மீண்டெழ வேண்டுமாயின், மீண்டும் உயிர் பெற்று தன்புகழைத் தக்கவைக்க வேண்டுமாயின், யா/பரமேஸ்வராக் கல்லூரி என்ற பெயருடன் தலைநிமிர்ந்து நின்று பணிசெய்ய வேண்டுமெனில், இக்கல்லூரியின் அன்னை ஊட்டி வளர்த்து, அவள் மடிதனில் தவழ்ந்த பிள்ளைகள் இன்று வையகம் எங்கும் பரந்து வாழுகின்றனர். அவர்களோடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர்களும், பெற்றோர்களும், நலன்விரும்பிகளும், கல்விமான்களும், இனிவரும் காலங்களிலாவது ஒன்றிணைந்து யா/பரமேஸ்வராக் கல்லூரியின் பெயரை உலகெங்கும் ஒலிக்கச் செய்ய முன்வர வேண்டும்.

இன்று யா/பரமேஸ்வரா வித்தியாலயம் ஒரு சிறு விழுது போலவே செயற்பட்டு வருகிறது. அதுவே மூலவேரில் முகிழ்ந்து நிற்கின்றது. காலப்போக்கில் இவ்வேரை வெட்டி மரத்தை அடியோடு சாய்த்து விடாமல், அந்த விழுது பல விழுதுகளைத் தாங்கிப் பெருவிருட்சமாக பரந்து நிழல் தர, சைவ, இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் பிள்ளைகளும், யா/பரமேஸ்வராக் கல்லூரியின் பிள்ளைகளும், பெரும் முயற்சி செய்து, கல்லூரியின் வாழ்வையும், வளத்தையும் மீட்டெடுத்து, எமது எதிர்காலத் தலைமுறையினருக்கு கையளிப்போமாக.

**யோகராசா தயாளன்**
(BA.PGDE SLPS)
அதிபர், பரமேஸ்வரா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු සහ ක්‍රීඩා අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs & Sports
வட மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
සෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com


எமது இல / මගේ අංකය / My No. NP/03/06/SNC
உமது இல / ඔබේ අංකය / Your No.
திகதி / දිනය / Date 17.07.2012

வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்

**பாடசாலை பெயர் மாற்றம்**
**யா / திருநெல்வேலி இ.த.க. பாடசாலை**

மேற்படி விடயம் தொடர்பான மாகாண கல்விப் பணிப்பாளரது NP/20/PR/85-D இலக்க 26.06.2012 ம் திகதிய கடிதம் தொடர்பானதும் மற்றும் எமது சமஇலக்கம் கொண்ட 18.05.2012 ம் திகதிய கடிதத்திற்கு மேலதிகமானதும்

வட மாகாண கல்வித் திணைக்கள கட்டமைப்பு குழுவின் தீர்மானத்திற்கு அமைய தங்கள் வலயத்திற்கு உட்பட்ட யா/ திருநெல்வேலி இ.த.க பாடசாலையின் பெயரை யா/ பரமேஸ்வரா வித்தியாலயம் என 25.04.2012 ம் திகதி முதல் மாற்றியமைக்க இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றது.

ப. விக்னேஸ்வரன்
பிரதிச் செயலாளர்
செயலாளருக்காக


பிரதி

1. செயலாளர், கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம், வமா
3. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பத்தரமுல்ல
4. அதிபர், யா/ திருநெல்வேலி இ.த.க பாடசாலை


செயலாளர் / ලේකම් / Secretary 021-3202704
அலுவலகம் / කාර්යාලය / Office 021-3202704 (Admn.) 021-3202568 (DSW) 021-3202281 (Plan) 021-3202309 (Acct)
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021-2220794




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெயர் சூட்டும் விழா

## அழைப்பிதழ்

JITHIRUNELVELY HINDU TAMIL MIXED SCHOOL

யா/ திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு

**யா/பரமேஸ்வரா வித்தியாலயம்**

எனப் பெயர் சூட்டும் நிகழ்வு

காலம் : 19.11.2012 (திங்கட்கிழமை)

நேரம் : முற்பகல் 11 மணி

இடம் : யா/திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைவர் :**
திரு.ந.விஜயசுந்தரம் (அதிபர்)

**பிரதம விருந்தினர்:**
**திரு. எஸ். சத்தியசீலன்**
(செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)

**சிறப்பு விருந்தினர்கள் :**
- திரு.ப.விக்கினேஸ்வரன்
(பிரதிச் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)
- திரு.வை.செல்வராசா
(மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
- திரு.எஸ்.உதயகுமார்
(வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- திரு.த.பேரின்பநாயகம்
(ஓய்வுபெற்ற பிரதிப்பொலிஸ்மா அதிபர், தலைவர் - ப.மா.சங்கம், யா/பரமேஸ்வராக் கல்லூரி, கொழும்பு)

**கௌரவ விருந்தினர்கள் :**
- திரு.எஸ்.மாணிக்கராசா
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
- திரு.கனக.நமநாதன்
(சட்டத்தரணி, தலைவர் - ப.மா.சங்கம், யா/பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
- திரு.ச.முத்துலிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், தலைவர்- இந்து வாலிபர் சங்கம், திருநெல்வேலி)
- திரு.வ.குலத்துங்கன்
(செயலாளர் - ப.மா.சங்கம் , திருநெல்வேலி இ.த.க.பாடசாலை)

## நிகழ்ச்சிகள்

- இறைவணக்கம்
- மங்கள விளக்கேற்றல்
- மங்கள இசை
- பெயர் சூட்டல் : பிரதம விருந்தினர்
- வரவேற்புரை :
**திரு.த.கணநாதலிங்கம்**
(ஓய்வு பெற்ற பணிப்பாளர் சுங்கத் திணைக்களம்)
சிரேஷ்ட உபதலைவர், ப.மா.சங்கம் -
யா/பரமேஸ்வராக் கல்லூரி ,கொழும்பு
- ஆசியுரை : நல்லை ஆதீன குருமுதல்வர்
- தலைமையுரை
- விருந்தினர் உரை
- நன்றியுரை
**திரு.த.ஆனந்தநடராஜா**
(பா.அ.சங்கம் - யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை)

### அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Opening Ceremony of the Parameshvara Vidyalayam Held on 19-11-2012



Invitees and VIP Arriving at the Vidyalayam



Invitees and VIP arriving



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Principal gardlanding the Chief Guest Mr.Ilangovan




Unveiling of the Vidyalayam Banner by the Chief Guest



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Parameshwara Vidyalayam Banner Unveiled




Crest of the Vidyalayam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Invitees Watching the Unveiling of the Banner and Crest



Invitees moving towards the Vidyalayam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Principal Mr Vijayasundram Hoisting the Vidyalayam Flag



Nallai Aadheenam Swamigal Lighting the traditional Lamp



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Vice Chancellor of the University Prof.Shanmugalingam Lighting Lamp



O.B.A. Colombo President Lighting the Lamp



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



O.B.A. Jaffna President Mr. K. Namanathan Lighting the Lamp



Principal Mr. Vijeyasundaram Lighting the Lamp



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Vice Chancellor of the University Prof.Shanmugalingam
Addressing the Invitees and School Staff



Dr.Aruthirumurugan Addressing the Guest



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Naming of the School



Principal Wijayasundaram Addressing



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Senior Vice President Mr.T.Gananathalingam Addressing



OBA President Mr.T.Perinnbanayagam being Honored by an O.B.A. Member



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



A Student Addressing the Invitees




OBA Colombo President Donating Two T.V Sets to the Vidyalayam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Students Were Given Gifts by the OBA and they are enjoying



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ் பல்கலைக்கழகம்**



பரமேஸ்வராக் கல்லூரி – யாழ் பல்கலைக்கழகத்தின் கரு
ஸ்தாபகம்–ஆகஸ்ட் 1921

**யாழ் பரமேஸ்வரா கல்லூரி**
**ஸ்தாபகர் தினம்**



சேர். பொன்னம்பலம் இராமநாதன்
யாழ் பரமேஸ்வரா கல்லூரி
ஸ்தாபகர்

**13 ஆகஸ்ட் 2010**
**யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில்**

.................................................................

## வைபவம்

| | | |
|---|---|---|
| இடம் | - | யாழ் பல்கலைக் கழகம்<br>கைலாசபதி அரங்கம் |
| நேரம் | - | 09.45 மணி – 12.00 பகல் |
| தலைமை | - | பேரா. என்.சண்முகலிங்கம்<br>உப வேந்தர்,<br>யாழ். பல்கலைக் கழகம். |
| பிரதம அதிதி | – | கௌரவ எஸ்.பீ. திஸாநாயகா<br>உயர் கல்வி அமைச்சர் |
| கௌரவ அதிதிகள் | - | கௌரவ டக்லஸ் தேவானந்த<br>பாரம்பரிய கைத்தொழில்,<br>சிறு முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் |
| | | கௌரவ ஜீ.ஏ. சந்திரசிறி<br>ஆளுனர், வட மாகாணம் |
| | | கௌரவ டீ.எம். சுவாமிநாதன்<br>அறங்காவலர், ஸ்ரீ பொன்னம்பலவானேசர்<br>கோவிலும், பாராளுமன்ற உறுப்பினரும். |
| | | திரு.எல். இளங்கோவன்,<br>செயளாளர் , கல்வி அமைச்சு,<br>வட மாகாணம். |

## நிகழ்ச்சிநிரல்

| | |
|---|---|
| 0945 மணி | யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரன் கோயிலில் வழிபாடு |
| 1000 மணி | சேர் பொன்னம்பலம் இராமநாதனின் சிலைக்கு மலர்மாலை அணிதல் |
| 1015 – 1200 மணி | நிகழ்வுகள் |

- மங்கள விளக்கேற்றல்
- தேவாரம்
- திரு.கே.நமநாதன், சட்டத்தரணியும் ப.மா.ச(யாழ்) தலைவரின் வரவேற்புரை
- கௌரவ அதிதிகளின் உரைகள்
- பிரதம அதிதியின் உரை
- ப.மா.ச( கொழும்பு) உப தலைவர் திரு.ஆர். நடராசா அவர்களின் நன்றியுரை
- தேவாரம்.

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினாலும் யாழ் பல்கலைக்கழக இந்து மாமன்றத்தினாலும் இணைந்து நடாத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rememberance Day Celeberations 13-08-2010




V.C.University Prof.N.Shanmugalingam Garlanding the Statue of Sir Pon.Ramanathan



Placing a Thilakam at the Statue of Sir Pon Ramanathan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




V.C. Prof. N. Shanmugalingam of Invitees Arriving on the Kailasapathy Auditorium



Mr. T.Perinpanayagam Garlanding the Chief Events on Minister of Education
Mr.S.B.Disanayake



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



A Photograph the Life Size 61"x41" of Sir Pon Ramanathan was Presented to the Vice Chancellor to be Kept in the Hall



V.C. of the University Lighting the Oil Lamp



Secretary Ministry of Education Mr.Ilangovan is lighting the Oil Lamp




K.Namanathan O.B.A.President, Jaffna is lighting the Oil Lamp



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



OBA President Mr.T.Perinpanayagam is delivery the Welcoming Address to the VIP Guests




Hon Minister S.B.Dissanayake is with the Minister Mr.Douglas Devanantha and a Member of Parliment Mr.Azwar (Interpretator)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Education Secretary Mr.Ilangovan is being Garlanded by Mr.T.Perinpanayagam



V.C. Mr. Shanmugalingam is Addressing the Audience



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Hon Minister of Education Mr.S.B.Dissanayake Addressing the Auddience



VIP at the Head Table



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The Invitees for the Function


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக படங்கள்

## OBA Meetings Held in Colombo



Meeting held at Presidents residence



Members attending a meeting at Presidents resident



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Members attending a meeting



Prof. S.R.Sittampalam, President Board of Directors of Parameshwara College
addressing a Monthly meeting of OBA at Presidents Residence



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Founders Day



OBA President Garlanding the Photograph of Sir Pon Ramanathan at Ramanathan Temple, Kotahena on the Founders Day



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம் தொடர்பில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் நடந்த கூட்டம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர்

## Parameshvara College Centenary Souvenir



PARAMESHVARA COLLEGE

பரமேஸ்வராக் கல்லூரி

திருநெல்வேலி, யாழ்ப்பாணம் - 2022

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org